


கலைஞர் 100
1924 - 2023

வாய்மையே வெல்லும்

# கலைஞரின்
## திரையுலக நினைவலைகள்


தமிழ் வெல்லும்
மு.க.

கலைஞர் 100
1924 - 2023



# கலைஞரின்
## திரையுலக நினைவலைகள்

## தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தித் துறையின் வெளியீடு
திருவள்ளுவர் ஆண்டு 2056
ஆடி - ஆவணி
ஆகஸ்ட் 2025

# கலைஞரின்
## திரையுலக நினைவலைகள்

### சிறப்பு மலர் - தொகுப்பாசிரியர்

முனைவர் ம.சு. சண்முகம், இ.ஆ.ப.,
முதலமைச்சரின் செயலாளர் - II
(உறுப்பினர் - செயலர், கலைஞர் - கலைஞர் குழு)

### உதவி

திரு. சி. முருகன்,
அரசு இணைச் செயலாளர்,
முதலமைச்சர் அலுவலகம்.

### நூல் வடிவமைப்பு

திரு. இல. இராமச்சந்திரன்,
தரன்சியா பிரைவேட் லிமிடெட்,
சென்னை - 600 026.

### அச்சிட்டோர்

தமிழரசு அச்சகம்
வெளியிடுபவர்
மரு. இரா. வைத்திநாதன், இ.ஆ.ப.,
இயக்குநர்,
செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால்
அரசு இணைச் செயலாளர்,
எண் - 5, ராஜீவ் காந்தி சாலை, கானகம், தரமணி, சென்னை - 600 113.
தொலைபேசி 044- 254 2221 / 2254 2224
மின்னஞ்சல் : tamilarasujournal@gmail.com
இணையதளம்: www.tndipr.gov.in

# பதிப்புரை

தமிழும் தென்றலும் தவழ்ந்து விளையாடும் பொதிகை மலையை இரண்டு கைகளிலும் ஏந்திக் கொள்ள வேண்டுமென்று எப்போதேனும் நினைத்ததுண்டா?

அகிலமெங்கும் விரிந்திருக்கும் அலை கடலை விரல்களால் புரட்டிப் பார்க்க வேண்டுமென்று விரும்பியதுண்டா? - பிரபஞ்சத்தின் மீது பிரம்மாண்டமாக வெளிர் நீலத்தில் விரிக்கப்பட்டிருக்கும் ஆகாயத்தாளில் நட்சத்திரங்கள் எழுதியிருப்பதை கண்களால் வாசிக்க வேண்டுமென்ற கனவு உண்டா?

அந்த நினைப்பு ... அந்த விருப்பம் ... அந்தக் கனவு ... அவற்றின் தொகுப்புத்தான் உங்கள் கைகளில் தவழும் இந்த கலைஞரின் திரையுலக நினைவலைகள். 1947 முதல் 2011 முடிய 64 ஆண்டுகள் கலைஞர் என்கிற விருட்சம் கலைத்துறையின் பக்கம் விரித்துப்போன விழுதுகளின் குறுக்குத் தோற்றம்தான் இந்த மலர்...

தலைவாழை இலையில் பறிமாறப்படும் அறுசுவை பந்திபோல் இது கலை வாழை இலையில் பறிமாறப்பட்டுள்ள திரைச் சுவை பந்தி.

வசனம் என்கிற உரையாடல் பகுதியில் அரை நூற்றாண்டுக்கும் மேலாக ஆட்சி நடத்திய ஒரு கலைச் சூரியனோடு தாங்கள் பதியம்போட்ட பகல் பொழுதுகளை ஒளிவட்டம் போட்டு உணர்த்தியிருக்கிறார்கள் சில திரை உலக பிரபலங்கள். அதை வாசிக்கும்போது வசப்படுகிற மனமே சொல்லி விடுகிறது. அவை வெறும் புகழ்ச்சியில்லாத உண்மை என்பதை...

ஏ.வி.எம். நிறுவனத்தோடு கலைஞருக்கிருந்த நெருக்கத்தை சொல்லி ஏ.வி.எம். சரவணன் நம்மை வியக்க வைக்கிறார். என் தமிழாசான்கள் பட்டியலில் கலைஞர் ஏன் முதல் ஆளாக நிற்கிறார் என்பதற்கான காரணங்களைப் பட்டியலிட்டு பத்மஸ்ரீ கமல்ஹாசன் நம்மை திகைக்க வைக்கிறார். - கலைஞரோடு தானிருந்த மகிழ்வான பொழுதுகளை இளையதிலகம் பிரபுவும், தனக்கிருந்த நெகிழ்வான தருணங்களை தயாரிப்பாளர் கலைப்புலி தாணுவும் பகிர்ந்து கொள்கிறார்கள். கலைஞர் திறமையை இயக்குநர் அமிர்தம் படம் பிடிக்கிறார். அவரின் பொறுமையைச் சொல்லி சித்ரா லட்சுமணன் இடம் பிடிக்கிறார் - கலைஞர்கள் அறிவுமதியும், பழனிபாரதியும், நெல்லை ஜெயந்தாவும் கவிதை மொழியால் ஆரத்தி எடுக்கிறார்கள் என்றால் வசனகர்த்தாக்கள் பிரபாகரனும், பிருந்தா சாரதியும் கலைஞரின் திறமையைக் கண்டு அதிசயித்து நிற்கிறார்கள்.

மொத்தத்தில் கலை உலகில் சாதித்த கலைஞர் பெருமானுக்கு திரை உலகினர் கூடி நின்று கட்டியிருக்கிற கோபுரம்தான் இது.

தாள் தவறாமல் தரிசிக்கலாம்! வாருங்கள்! ■

# பொருளடக்கம்


- கலைஞர்களுக்கெல்லாம் கலைஞர்........................................ 032
  -திரு. அமிர்தம், இயக்குநர்
- எங்கள் மூத்த சகோதரர் கலைஞர் ........................................ 036
  -திரு. A.V.M.சரவணன், தயாரிப்பாளர்
- தமிழ்க் கலைஞர் - தமிழ்த் திரைஞர்........................................ 038
  -திரு. கமல்ஹாசன்
- தமிழோடு வாழ்ந்த காலம்! ........................................................ 042
  -கவிப்பேரரசு வைரமுத்து
- திரைத்துறையைத் திருப்பிப் போட்ட போராளி.............................. 044
  -திரு. S.P.முத்துராமன், இயக்குநர்
- பாசமுள்ள பெரியப்பா.............................................................. 046
  -திரு. பிரபு, நடிகர்
- எழுதியதையா திரும்ப எழுத முடியும்?........................................ 048
  - திரு. நாசர், நடிகர்
- கலைஞர் ஒரு கலைக் கடல்....................................................... 051
  -திரு.K.R.கோதண்டராமையா, தயாரிப்பாளர்
- கலைஞர் எனும் கலைக்கூடம் ................................................... 052
  -திரு. ஏ.எல்.அழகப்பன், தயாரிப்பாளர்
- பராசக்தி ஒரு பரமசக்தி............................................................ 055
  -திரு. A.V.M.குமரன், தயாரிப்பாளர்
- கால நேரம் தெரிஞ்சுதான் எழுதனும்யா......................................... 056
  - திரு. சிவகுமார், நடிகர்
- கலைஞர் மேடையில் எம்.ஜி.ஆர். வசனம் பேசினேன்!................. 059
  - திரு. சத்யராஜ், நடிகர்
- நெஞ்சில் நிறைந்த நீதி............................................................. 062
  -திரு. R.B. சௌத்ரி, தயாரிப்பாளர்
- கலைஞர் எனும் மாலுமியுடன் என் கலைப்பயணம்........................ 063
  -திரு. வாகை சந்திரசேகர், நடிகர்
- பல்லவி அவரே; சரணமும் அவரே!............................................. 066
  -திரு.எஸ்.ஏ.ராஜ்குமார், இசையமைப்பாளர்

- நரிக்குறவர்களின் கல்விக்கண் திறந்த கலைஞர்........................ 069
  -திரு. கலைஞானம், தயாரிப்பாளர்
- தமிழின் மூத்த திரைப்படக் கலைஞர்........................................ 070
  -அமரர் முக்தா V.சீனிவாசன், தயாரிப்பாளர்
- காவிரியின் தெம்மாங்கு........................................................ 073
  -கவிஞர் கலா பிரியா
- வசனம் எனும் வரம்.............................................................. 077
  -திரு. பிரசாந்த், நடிகர்
- அங்கீகாரத்தைத் தொடங்கி வைத்தவர்!...................................... 078
  -கவிஞர் யுகபாரதி
- கலைஞருடன் பொன்னர்-சங்கர், நான்....................................... 081
  -திரு. தியாகராஜன், நடிகர்
- லீடர்ஷிப் இருந்தா வலிக்காது!................................................. 082
  -கவிஞர் பா.விஜய்
- ஓய்வறியா பேனாக்காரர்........................................................ 084
  -திரு. வி.சி.குகநாதன், தயாரிப்பாளர்
- அந்தச் சொல்லின் முழுமையான பொருள் அவர்!......................... 090
  -திரு. பொன்வண்ணன், நடிகர்
- காலத்தை வென்ற கலைஞர்..................................................... 092
  -திரு.கோ.தனஞ்செயன், தயாரிப்பாளர் (ம) எழுத்தாளர்
- தூரத்து இடி முழக்கம்.......................................................... 094
  -திரு. எஸ்.ஜெயராம், நடிகர்
- கலைஞர் எனும் பொக்கிஷம்.................................................. 094
  -திருமதி குட்டிபத்மினி, நடிகை
- சரித்திரம் - சாதனை - சகாப்தம்.............................................. 096
  -கலைப்புலி திரு.எஸ்.தாணு, தயாரிப்பாளர்
- ஆண் சிங்கத்தின் பெண் சிங்கம்............................................... 098
  -திரு. எஸ்.பி.முருகேசன், தயாரிப்பாளர்
- மறக்க முடியாத மாமனிதர்..................................................... 100
  -அமரர் வி.ராஜேஷ், நடிகர்
- கலைஞர்களுக்கு முன்னுரிமை கொடுத்த மாமனிதர்.................... 103
  -திரு. சித்ரா லட்சுமணன், நடிகர்
- நீ அப்பா பெயரைக் காப்பாத்தனும்.......................................... 105
  -திரு.முரளி இராமநாராயணன் (எ) முரளி இராமசாமி, தயாரிப்பாளர்

- திரை ஞாயிறு கலைஞர்............................................................ 106
  -கவிஞர் அறிவுமதி
- நாளைய வரலாறு பேசும் கலைஞரின் "பெண் சிங்கம்"................. 108
  -டாக்டர் பாலி ஸ்ரீரங்கம், இயக்குநர்
- Those Magical Moments With Aiya .......................................... 110
  -திரு. சுரேஷ் கிருஷ்ணா, இயக்குநர்
- இப்போதும் எழுதிக் கொண்டுதானிருக்கிறாய்............................ 112
  -கவிஞர் பழநிபாரதி
- வசனத்தின் வரலாறு................................................................ 114
  -திரு.பிருந்தா சாரதி, வசனகர்த்தா
- கலைஞரெனும் கருவூலம்.......................................................... 119
  -திரு. மங்கை அரிராஜன், இயக்குநர்
- கலைகளின் கதிரவன் கலைஞர்.................................................. 121
  -திரு.டி.ஜி. சத்யஜோதி தியாகராஜன், தயாரிப்பாளர்
- மானம் அவன் கேட்ட தாலாட்டு.................................................. 122
  -திரு. மகிழ் திருமேனி, இயக்குநர்
- கைக்கெட்டும் தூரத்தில் கலைஞர்............................................... 123
  -திரு. சசிகுமார், நடிகர்
- அவர் மறைவுக்குப் பிறகு, நான் அனாதை...................................... 124
  - திரு. எம்.எஸ்.பாஸ்கர், நடிகர்
- கலைஞர் ஒரு காரல்மார்க்ஸ்..................................................... 126
  -கலைமாமணி V. பிரபாகர், கதாசிரியர்
- மாபெரும் ஆளுமை கலைஞர்..................................................... 128
  -திரு. கார்த்தி, நடிகர்
- பாட்டுடைத் தலைவர்................................................................ 129
  -திரு. வித்யாசாகர், இசையமைப்பாளர்
- சுடரழகர்.................................................................................. 131
  - கவிஞர் நெல்லை ஜெயந்தா
- வாழ்த்துச் செய்தி..................................................................... 133
  -திரு. அமிதாப்பச்சன், நடிகர்


ALPH



**மு.க. ஸ்டாலின்**
தமிழ்நாடு முதலமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை-600 009.



## வாழ்த்துச் செய்தி

தாம் சொல்ல நினைத்த சமூகச் சீர்திருத்தக் கருத்துகளை மக்களிடையே கொண்டு சென்று சமூகப் புரட்சியினை ஏற்படுத்திட நாடகங்கள், திரைப்படங்களை ஒரு சிறந்த கருவியாகப் பயன்படுத்தியதில் முத்தாய்ப்பாகத் திகழ்ந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். தமது இருபதாவது வயதிலிருந்தே திரைப்படத்துறையில் பணியாற்றத் தொடங்கிய கலைஞர், செழுமையான திரைத்தமிழால் தான் வடித்த கதை–திரைக்கதை–வசனங்கள் என பல பரிமாணங்களில் முத்திரை பதித்து தமிழக மக்களின் நெஞ்சங்களில் இன்றளவும் நீங்கா இடம் பிடித்தவர் என்பது அனைவரும் அறிந்த ஒன்றே.

ஒருமுறை கலைஞரிடம் “உங்கள் கலை உலகச் சாதனை என்ன?” என்று கேட்ட போது, “ ‘பராசக்தி’, ‘மனோகரா’, ‘திரும்பிப்பார்’ – கலையுலகத்தில் மூன்று, நான்கு தலைமுறையினரைத் தொடர்புபடுத்தும் இழையாக இருந்திருக்கிறேன். 50–இல் பராசக்தி, கிட்டத்தட்ட ஐம்பதாண்டுகாலக் கலையுலக வாழ்க்கையிலே மூன்று, நான்கு தலைமுறை கலைஞர்களோடு எனக்குப் பழக்கம் உண்டு. அவர்களுக்கேற்றாற்போல என்னுடைய கருத்துகளை மாற்றிக்கொள்ளவில்லை. அந்தக் கருத்துகளைச் சொல்வதற்கான எழுத்து நடையை மாற்றிக்கொண்டு எழுதியிருக்கிறேன்” என்று சொல்லியிருக்கிறார்.

அவ்வகையில், தலைவர் கலைஞரின் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாட அமைக்கப்பட்ட 12 குழுக்களில், தலைவரை **‘கலைஞர்’** என்று அனைவரும் வாஞ்சையோடு அழைக்க வித்திட்ட திரைத்துறையில் அவர் ஆற்றிய மகத்தான பங்களிப்புகளை மக்களுக்கு எடுத்தியம்ப அமைக்கப்பட்டதுதான் ‘கலைஞர்–கலைஞர்’ குழு.



– 2 –


இக்குழுவால் வெளியிடப்படவிருக்கும் **'கலைஞரின் திரையுலக நினைவலைகள்'** என்ற இம்மலரில், திரையுலகில் கலைஞரோடு பயணித்த திரைத்துறையின் மூத்த கலைஞர்கள் முதல் இளைய தலைமுறைக் கலைஞர்கள் வரையிலான பலரும் தமது நெஞ்சங்களில் பொத்திப் போற்றி வைத்திருக்கும் கலைஞருடனான தமது நினைவுகளை தத்தமது நினைவுப் பூங்காவிலிருந்து கொய்து, தம் எழுத்துக்களாலும், புகைப்படங்களாலும் அழகிய ஓவியங்களாக வடித்து இம்மலருக்கு நறுமணத்தைக் கூட்டியுள்ளனர்.

கண்ணைக் கவரும் வண்ண அட்டைகளுடன் வடிவமைக்கப்பட்டு, மிக நேர்த்தியாகத் தொகுக்கப்பட்டுள்ள இம்மலரைப் படிப்பவர்கள், கலைஞர் என்னும் அழகிய சோலையின் நடுவே அமைந்த தடாகத்து நினைவலைகளில் ஒரு ஓடம் போலப் பயணித்து கலைஞரை மீண்டும் கண்டு கைகோர்த்து தமிழ் பேசி பரவசமடைவர் என்பது திண்ணம். இம்மலர் அனைவரது மனங்களிலும் மணம் வீசிட என் நெஞ்சார்ந்த வாழ்த்துகள்.

மேலும், இம்மலர் வெளியிட முயற்சிகள் செய்த கலைஞர்–கலைஞர் குழுவின் தலைவரான மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் மற்றும் குழுவினர் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்,

**(மு.க. ஸ்டாலின்)**



உதயநிதி ஸ்டாலின்
தமிழ்நாடு துணை முதலமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை-600 009.



## கலைஞரைப் போற்றுவோம்!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை, தமிழ்நாடே கொண்டாடிக் கொண்டிருக்கும்போது, அவரைப்பற்றிய இந்த மலர் வெளிவருவது முக்கியமான தருணம். அரசியல், கலை, இலக்கியம், இதழியல் என்று பல்துறைகளிலும் கால் பதித்து, எல்லாத் துறைகளிலும் சாதனைகள் படைத்த மகத்தான ஆளுமை கலைஞர் அவர்கள்.

அவருடைய நூற்றாண்டைச் சிறப்பாகக் கொண்டாடுவது என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு முடிவெடுத்தபோது, அவருடைய பல்துறை சாதனைகளை மக்களிடம் கொண்டு செல்ல பல குழுக்கள் அமைக்கப்பட்டன. அந்தவகையில், 'கலைஞர் - கலைஞர்' குழுவில் நான் இடம்பெற்றுள்ளது என் வாழ்நாளில் மறக்க முடியாத வாய்ப்பு. இந்தப் பணிகளை ஒருங்கிணைத்தது, என் மனதுக்கு மிகவும் நெருக்கமான பணி.

திரைத்துறையாக இருந்தாலும் அரசியலாக இருந்தாலும் என்னுடைய எல்லாப் பணிகளுக்கும் முன்னோடியாக இருப்பவர் முத்தமிழறிஞர் கலைஞரே. எனக்கு மட்டுமல்ல, இன்று தமிழ்த்துறையிலும் தமிழ்நாட்டு அரசியலிலும் பலருக்கும் முன்னோடியாக இருப்பதும் அவரே.

பட்டங்கள் கொடுத்துப் பெருமைப்படுத்துவது அரசியலிலும் திரையுலகத்திலும் வழக்கமானதுதான். ஆனால் 'கலைஞர்' என்று முத்தமிழறிஞருக்கு நடிகவேள் எம்.ஆர்.ராதா அவர்களால் வழங்கப்பட்ட அடைமொழி, ஒரு காரணப்பெயராக காலத்தைத் தாண்டி நிலைத்துவிட்டது.

அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், நடிகவேள் எம்.ஆர்.ராதா, கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், முரசொலிமாறன் என்று அரசியல் தலைவர்கள், கலைஞர்கள் என்று வித்தியாசம் பார்க்காமல் தலைவர்களே கலைஞர்களாகவும் கலைஞர்களே தலைவர்களாகவும் இருந்த ஓர் இயக்கம், உலகத்திலேயே திராவிட இயக்கம்தான்.

அவர்கள் நாடகங்களையும் தமிழ்த் திரைப்படங்களையும் பகுத்தறிவு, சுயமரியாதை, சமூகநீதி, சமத்துவம் ஆகிய கொள்கைகளைப் பரப்பும் அரசியல் ஆயுதங்களாக மாற்றினார்கள். பழமைவாதக் கருத்துகளும் சமஸ்கிருதம் கலந்த தமிழும் நிறைந்திருந்த தமிழ் சினிமாவின்


நேஷனல் பிக்சர்ஸ் தயாரித்த
பராசக்தி
திரைக்கதை வசனம் : மு.கருணாநிதி

முகத்தை மாற்றியமைத்தவர்கள் இவர்கள்தான். குறிப்பாக, முத்தமிழறிஞர் கலைஞரின் சாதனைகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை.

இன்று தற்கால சினிமாவில் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளைப் பேசும் அரசியல் சினிமாக்கள் வெளிவருகின்றன என்றால், அதற்கு அடிக்கல் நாட்டியது கலைஞரின் 'பராசக்தி' திரைப்படம்தான். 'அம்பாள் எந்தக் காலத்தில் பேசினாள்?' என்று 1952-இல் அவர் எழுதிய வசனம் மாபெரும் புரட்சி. அதுவும் தணிக்கைத் துறையில் பெரும் நெருக்கடி, பத்திரிகைகள் பெரிதும் ஆதரவளிக்காத நிலை, இன்றைய காலத்தைப்போல் தொழில்நுட்பம் பெரிதும் வளராத காலம் என்று எல்லா சவால்களையும் எதிர்கொண்டு அவர் திரைப்படங்களில் முற்போக்குக் கருத்துகளை வசனங்களாகத் தீட்டினார்.

பல ஆண்டுகாலம் பராசக்தி, மனோகரா வசனங்களைப் பேசுவது என்பதே தமிழ் சினிமா நடிகர்களுக்குத் தமிழ்த்திரையுலகில் அடியெடுத்து வைக்க, நுழைவுத்தேர்வாக இருந்தது. நடிகர் திலகம் சிவாஜிகணேசன், மக்கள்திலகம் எம்.ஜி.ஆர் என்ற இரண்டு சகாப்தங்கள் வளர்வதற்கு உதவியவை கலைஞர் தீட்டிய வசனங்களே.

எப்படி முன்னணி நட்சத்திரங்களுக்கு ரசிகப்பட்டாளம் இருந்ததோ அதுபோல் கலைஞரின் வசனங்களுக்கும் பெரும் ரசிகப்பட்டாளம் இருந்தது. 'வசனம்: மு.கருணாநிதி' என்று டைட்டிலில் பெயர் வரும்போது திரையரங்கமே கைதட்டல்களால் அதிர்வதைப் பலர் சொல்லிக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை உரத்தக் குரலில் பேசும் 'நெஞ்சுக்கு நீதி', 'மாமன்னன்' என்னும் இரண்டு படங்களில் நடிக்கும்போது எனக்கு கலைஞரின் எழுத்துகளே கண்முன் வந்தன. அவரது வசனங்களும் சமூகச்சீர்திருத்த உணர்வுமே எனக்கு அந்தப் படங்களில் நடிப்பதற்கான ஊக்கத்தை அளித்தன. அதுவும் கலைஞர் தன் வாழ்க்கை வரலாற்றை எழுதிய புத்தகமான 'நெஞ்சுக்கு நீதி' என் படத்தின் தலைப்பாக அமைந்தது பெரும்பேறு.

திரைத்துறையில் இயங்கியபோது, கலைஞராக இருந்த அவர்தான் முதலமைச்சராக ஆட்சிக்கட்டிலில் அமர்ந்தபோது, திரைத்துறையினரின் குறைகளைத் தீர்க்கும் காவலராகவும் இருந்தார். திரைப்படத்தொழிலாளர்களுக்கு என்று ஏராளமான நலத்திட்டங்களைக் கொண்டுவந்தார். கலைஞருக்கும் தமிழ்த்திரையுலகத்துக்கும் இடையிலான உறவு மகத்தானது. அதனால்தான் கலைஞரின் நூற்றாண்டை தமிழ்த் திரையுலகமே இணைந்து பிரமாண்ட

விழாவாக நடத்தியது. கலைஞரின் திரையிசைப் பாடல்களை விஜயா தாயன்பன் அவர்களின் குழுவினர் மாபெரும் இசைநிகழ்ச்சிகளாக நடத்தினார்கள்.

இந்தக் கொண்டாட்டங்களின் தொடர்ச்சியாக, இந்திய சினிமாவில் மாபெரும் புரட்சி செய்த 'பராசக்தி' திரைப்படத்தை என்னுடைய சொந்த முயற்சியில் டிஜிட்டல் முறையில் வண்ணத் திரைப்படமாக மாற்றியிருக்கிறேன். கலைஞரின் பேரனாக மட்டுமல்ல, அவரது வசனங்களின் ரசிகனாக, அவரால் பெருமையடைந்த தமிழ்த்திரையுலகைச் சேர்ந்தவனாக இந்த முயற்சியை முன்னெடுத்திருக்கிறேன். விரைவில் தமிழ்நாடு முழுவதும் வண்ணத்தில் பேசப்போகும் 'பராசக்தி' கலைஞரின் சாதனைகளுக்கும் பெருமைக்கும் சமர்ப்பணமாக இருக்கும்.

தமிழ்த்திரையுலகில் கலைஞரின் சாதனைகளையும் திரைத்துறையினருக்கும் கலைஞருக்குமான உறவையும் சொல்லும் இந்த 'கலைஞர் - கலைஞர்' குழு தயாரித்துள்ள மலர் ஒரு முக்கியமான ஆவணமாக வரலாற்றில் நிலைத்து நிற்கும். இந்த மலரைத் தொகுக்கும் பணியில் ஈடுபட்டவர்களுக்கும் இந்த மலரில் பல அற்புதமான கட்டுரைகளைப் பதிவு செய்தவர்களுக்கும் என் அன்பையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வணக்கம்.

உங்கள்

(உதயநிதி ஸ்டாலின்)



**மு.பெ. சாமிநாதன்**
தமிழ் வளர்ச்சி மற்றும்
செய்தித் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை-600 009



## வாழ்த்துச் செய்தி

முத்தமிழறிஞர் கலைஞர் என்றதும் நாடு, நகரம், பட்டிதொட்டி எங்கணும் ஏன் தமிழ் கூறும் நல்லுலகம் அனைத்திலுமே ஒரே ஒருவரைத்தான் குறிப்பிடுவார்கள்; எண்ணிடுவார்கள்.

திருக்குவளை முத்துவேலவரின் திருமகன்! அஞ்சுகத் தாய் ஈன்றளித்திட்ட அருந்தமிழ்ப் புதல்வன்! பேரறிஞர் அண்ணாவின் நல்லதம்பி! பதிமூன்று முறை தொடர்ந்து தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஈடுஇணையற்ற உறுப்பினர், அதில் ஐந்து முறை தமிழ்நாட்டின் ஈடற்ற முதலமைச்சர்! நின்ற தேர்தல்களில் எல்லாம் வென்ற ஒரே தலைவர்! எங்கள் மாசற்ற தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் ஆவார்.

முத்தமிழறிஞர் கலைஞரின் நுட்பமான அறிவையும் செயற்கரிய ஆற்றலையும்: திறமான நிருவாகப் பாங்கினையும்: ஓய்வறியா பேருழைப்பினையும்: கனிச்சாற்றுக் கவிதை மழை பொழிந்திடும் சொல்லாற்றலும்: தன்னேரில்லா தமிழாட்சி புரிந்த மாட்சியும்: பகைவனுக்கும் அருளும் பேருள்ளத்தை நினைந்துருகி பெருமகனாரின் நூற்றாண்டு நிறைவுப் பெருவிழாவில் பலப்பட்ப் பாராட்டிச் சீராட்டி வருவதைக் கண்டு, கேட்டு, மகிழ்ந்து வருகிறோம்.

முத்தமிழறிஞர் கலைஞருக்கு ஒரு டாக்டர் பட்டமல்ல, பற்பல டாக்டர் பட்டங்களுக்குத் தன்னை உரிமையாளராக தகவமைத்துக் கொண்டுள்ளார் என்று சொன்னால் அது மிகையாகாது. பராசக்தி, மனோகரா போன்ற திரைப்படங்களுக்குத் தீட்டிய தீந்தமிழ் வசனச் சிறப்புக்காக ஒரு டாக்டர் பட்டம்: சிலப்பதிகாரக் காப்பியத்தைப் பூம்புகாராக புத்தெழிலும் புதுநோக்கும் கொண்ட இலக்கிய நயத்திற்காக ஒரு டாக்டர் பட்டம்: பூம்புகார் நகரத்தையே மீள உருவாக்கிய கட்டுமானத்திற்கு ஒரு டாக்டர் பட்டம்: வள்ளுவர் கோட்டத்தை உருவாக்கியதற்காக ஒரு டாக்டர் பட்டம்: சுனாமியே நின்று வணங்கிச் சென்ற 133 அடி உயரத்திலான வான் புகழ் கொண்ட ஐயன் திருவள்ளுவரின் திருவுருவச் சிலை நிறுவியதற்கு ஒரு டாக்டர் பட்டம்:

**மு.பெ. சாமிநாதன்**
தமிழ் வளர்ச்சி மற்றும்
செய்தித் துறை அமைச்சர்

1968இல் நடைபெற்ற இரண்டாவது உலகத்தமிழ் மாநாட்டில் பண்பாட்டுப் பேரணி வகுப்பின் வண்ணத் திரைப்படத்திற்கு முத்தமிழறிஞர் கலைஞர் தீட்டித் தந்த வண்டமிழ் எழில் கொஞ்சிடும் வர்ணனை சிறப்புத் திறத்திற்காக ஒரு டாக்டர் பட்டம்: 2010ஆம் ஆண்டு கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ் செம்மொழி முதல் மாநாட்டினை சீரோடும் சிறப்போடும் நடத்திக் காட்டிய முறைமைக்கு ஒரு டாக்டர் பட்டம் என்று டாக்டர் பட்டங்களை வாரி வழங்கிக் கொண்டேயிருக்கலாம்.

ஓயாத தமிழ்ப் பெரும் பணியில் தொய்வின்றி உழைத்த முத்தமிழறிஞர் கலைஞர் செம்மாந்து புகழ் பூக்க வீற்றிருந்த தமிழ் வளர்ச்சித் துறையில், எளியோனாகிய யானும் செயலாற்ற வாய்ப்பு நல்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எந்நாளும் கடமைப் பட்டுள்ளேன்.

முத்தமிழறிஞரின் நூற்றாண்டு பெருவிழாவில் "கலைஞர் கலைஞர்" என்று உருவாக்கப்பட்ட குழுவினர் ஆற்றிவரும் தன்னேரில்லாப் பணிகளை நெஞ்சாரப் பாராட்டி மகிழ்கிறேன்.

நன்றி! வணக்கம்.

அன்புடன்

(மு.பெ.சாமிநாதன்)

ஆர். காந்தி
கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை-600 009.



## வாழ்த்துரை

தமிழக மக்களின் இதய துடிப்பு, தமிழையே மூச்சாக சுவாசித்தவர், தமிழன்னையே தவமிருந்து பெற்ற தலைமகன், ஏழைகளின் பசி போக்கியவர், சமத்துவபுரம் உருவாக்கியவர், முற்போக்கு சிந்தனையாளர், சமூக சீர்த்திருத்த நலனில் அக்கறை கொண்டவர், கருணையும் நீதியும் தனது கொள்கையாக கொண்டவர், முத்துவேலர் மற்றும் அஞ்சுகத் தாய் ஈன்றெடுத்த தவப்புதல்வர், **முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை** இந்த திராவிட மாடல் ஆட்சிக் காலத்தில் கொண்டாடுவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறோம். அவர் மறைந்தாலும், அவரது எண்ணமும், செயலும், சூரியனைப் போன்று அனைவரது வாழ்விலும், பிரகாசத்துடன், வழிகாட்டுதலாக அமைந்துள்ளது.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் ஆற்றிய பெரும் பணிகள், இயற்றிய நூல்கள், இயக்கிய திரைப்பட காவியங்கள், கவிதைகள் மற்றும் கலைஞர் அவர்களின் பெருமையைப் போற்றும் வகையில், கலைஞர் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளைக் கொண்டாடுவதற்கு வித்திட்ட, **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு** எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால்**, கலைஞர் அவர்களின் நூற்றாண்டைக் கொண்டாடும் வகையில் அரசு சார்பில் 12 குழுக்கள் அமைக்கப்பட்டன. அதில் **"கலைஞர் - கலைஞர்"** குழு மூலம் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று சிறப்பிக்கப்பட்டன.

...2.



ஆர். காந்தி
கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை-600 009.

-2-


தமிழகத்தில் சினிமா என்பது, ஒரு பொழுதுபோக்காக மட்டுமின்றி, அது மக்களின் உணர்வாக இரசிக்கப்படும் நிலையில், திரைப்படங்களில் சமூக சிந்தனைகளை வெளிப்படுத்தி சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த இயலும் என நிரூபித்துக் காட்டியவர் முத்தமிழறிஞர் கலைஞர் ஆவார்.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் திறன்மிகு படைப்பாற்றலால் உருவான திரையுலக காவியங்களை, தமிழக மக்களின் கண்களுக்கு விருந்தாக அமையக்கூடிய **"கலைஞரின் திரையுலக நினைவலைகள்"** என்கிற சிறப்பு மலர் வெளியிட அரும்பாடுபட்ட அலுவலர்கள் அனைவருக்கும் என் உள்ளம் நிறைந்த பாராட்டுக்களையும், நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இச்சிறப்பு மலரில் இடம்பெற்றுள்ள கருத்துக்களை அனைவரும் பார்த்து, படித்து பயன் பெறுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

அன்புடன்

R. Ga

(ஆர். காந்தி)



**மா. சுப்பிரமணியன்,** பி.ஏ., எல்எல்பி.,
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை
அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை-600 009



# “திரையுலகின் தீர்க்கதரிசி”

பகுத்தறிவுப் புரட்சியை, சுயமரியாதைக் கிளர்ச்சியை வடிவம் எதுவாகினும் அதை வரலாற்றுச் சிறப்புகளோடு வடித்துத் தந்தவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். கையில் கிடைத்த வாய்ப்புகள் ஒவ்வொன்றையும் கருவிகளாக்கி, களத்தில் வெற்றிமுரசொலிக் கொட்டுவதற்கு நின்றுக் களமாடும் ஆயுதமாக்கி, கனித்தமிழ் நாடு வளம்பெற கடமையாற்றியவர் கலைஞர். இனமானப் போருக்கு எழுத்துத்தழல் ஏந்தி நற்றமிழ்ச் சமூகத்தின் நலம்பாடியவர் கலைஞர்.

அடிப்படையில் அவர் ஒரு புரட்சிகர எழுத்தாளர். அறிஞர் பெருந்தகை அண்ணாவின் தம்பியாய், எழுச்சி நிறைந்த இனமான விடுதலைக் கருத்துகளை ஏட்டில் வடித்துத் தந்து எட்டுத்திசையும் வியப்புற வைத்தவர். மக்களின் சிந்தனைகளை, கருத்துக்களை கவரும் வடிவம் எதுவென்று அவர் புரிந்து வைத்திருந்தார். ஆகச்சிறந்த மேதையாய் சிறுவயதிலேயே அறிந்து வைத்திருந்தார். அதன் வெளிப்பாடுதான் காட்சி ஊடகத்தில் அவர் பெரும் பாய்ச்சலை நிகழ்த்திக்காட்டினார். அதன்வழியே பெரியாரின் பகுத்தறிவை, அண்ணாவின் திராவிட நாட்டுத் தேவையை மக்களுக்கு செவிவழியே, கண்கள் வழியே ஊட்டினார்.

காட்சி ஊடகமான திரைத்துறை, உலகின் நலனுக்கும் பயன்படும் உன்னதமானக் கருவி என்று கலைஞர் கண்டுணர்ந்திருந்தார். இளம் வயதிலேயே கண்டு கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்றறியும் புலன்களின் மேன்மையைப் பெற்றிருந்தார் அவர். திரைத்துறை அவரை இதுவரை காணாத வெளிச்சச் சூரியனாய் மடிவிரித்து ஏந்திக்கொண்டது. திரைத்துறையில் முத்தமிழறிஞர் அவர்கள் செய்த சாதனைகள் பெரும் வரலாற்றுச் சிறப்புகளுக்கு உரியவையாகும். அதை நான் ஏட்டில் விவரிக்க முயற்சித்தால் வானத்தை உள்ளங்கைக்குள் அடக்கும் முயற்சிக்கு ஒப்பாகும். சேலம்தான் கலைஞரின் எழுதுகோலுக்கு நெருப்புச் சிறகுகளை பூட்டிவிட்டது என்பேன். பராசக்தி திரைப்படத்தின் வசனப் பாய்ச்சல் நூற்றாண்டு கடந்தும் அதன் வேகத்தை இன்னும் நிறுத்தவில்லை. தமிழ்ச் சமூகத்தில் புரையோடிக் கிடந்த

மா. சுப்பிரமணியன், பி.ஏ., எல்எல்பி.,
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை
அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை-600 009

...2...

மூடத்தனங்களை, பகுத்தறிவுக்கு ஒவ்வாத பஞ்சாங்கக் கேடுகளை, பழமைவாதக் குப்பைகளை எரித்துப் பொசுக்கியது. பராசக்தியில் கலைஞர் எழுதிக் காட்டிய தீப்பந்த வசனங்கள். தமிழ்நாட்டின் புதிய வரலாறு கலைஞரின் பராசக்தியில் இருந்துதான் துவங்கியது எனலாம். பெரியாரும், அண்ணாவும், இன்னபிற திராவிடப் பெரும் தலைவர்களும் கலைஞரின் வசனம் கேட்டு புளகாங்கிதம் அடைந்தார்கள். பூரித்துப்போனார்கள். கேளிக்கைக்கும், பொழுது போக்கிற்கும் பயன்படுத்தப்பட்ட திரைத்துறையை, சமூக மாற்றத்திற்கு பயன்படுத்தியவர் தலைவர் கலைஞர். தாள்களை வாள்களாக்கி அடிமைத்தளையை, ஆரிய ஆதிக்கத்தை அகற்றியவர் அஞ்சுகத்தாயின் மைந்தர் அய்யன் கலைஞர்.

மந்திரகுமாரியின் வசன வெப்பமும், மனோகராவின் கிளர்ச்சி முழக்கமும் என்றைக்கும் தமிழ்மண்ணை இனமான வீரத்தோடு வைத்திருக்கும் இருபெரும் பதிவுகளாகும். தீப்பறக்கும் வசனங்கள் மட்டுமல்ல, கலைஞரின் எழுதுகோலில் இருந்து தேன் தெறிக்கும் காதல் வரிகளும் சொட்டின. இளைஞர் சமூகத்தின் இதயங்களை மயிலிறகால் தட்டின. தனது 20 வயதில் 1947இல் ராஜகுமாரி திரைப்படத்திற்கு வசனம் தீட்ட வாய்ப்பைப் பெற்ற தலைவரின் எழுதுகோல்தான், புதிய தமிழ்நாட்டின் திரைத்துறை, அந்த ஆரிய மாயையில் இருந்து திரையை மீட்டு, பகுத்தறிவுக் கருத்துக்களை தன் எழுத்தின் மூலம் நாடெங்கும் பரப்பின.

அபிமன்யூ, மருதநாட்டு இளவரசி, மந்திரகுமாரி இப்படங்களின் வசனங்கள்தான் திரையுலகின் தீர்க்கதரிசனமாக மக்களுக்கு புடமிட்டுக் காட்டிய புத்துலகப் படைப்புகளாகும். தலைவிதியில் கிடந்த திராவிட இனத்தை தலைநிமிர வைத்தது முத்தமிழறிஞரின் திரைப்பட வசனங்கள்தான். பணம், திரும்பிப் பார், மலைக்கள்ளன், ரங்கோன் ராதை ஆகிய திரைப்படங்களில் கலைஞர் வடித்த எழுத்தோவியங்கள் இன்னலுற்ற தமிழகத்தை மீட்டெடுத்த எழுச்சி கீதங்கள் ஆகும்.

ராஜா ராணியும், புதையலும் வசனத்திற்காய் வெற்றிக் கனிகளை ருசித்தன. புதுமைப்பித்தன் திரைப்படம் முத்தமிழறிஞரின் வசனத்தை இமயத்தின் உயரத்திற்கு எடுத்துச் சென்றது. குறவஞ்சியில் சமூகத்தின் வேறு ஒரு பக்கத்தை மக்களுக்குக் காட்டினார் கலைஞர். இருவர் உள்ளம், தாயில்லாப் பிள்ளையில் பாச நேசத்தின் பண்பாட்டைப் பறைசாற்றினார். இதற்கெல்லாம் மணிமுடி தரித்ததுபோல் கலைஞரின் பூம்புகார் திரைக்காவியம் என்றும் மக்கள் இதயத்தில் வாழும் ஒப்பில்லாப் படைப்பு.

மா. சுப்பிரமணியன், பி.ஏ., எல்எல்பி.,
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை
அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை-600 009

...3...

அடிமைத்தனமும் – ஆகம இருட்டும் மண்டிக்கிடந்த தமிழினத்தை மீட்கவந்த ரட்சகர் கலைஞர் ஆவார். அவர்தான் வீழ்ந்து கிடந்த தமிழனின் விசையிலா நரம்புகளில் விடியல் மின்சாரம் பாய்ச்சினார். வசனத்தால் திராவிடர் வலிமைபெறும் பகுத்தறிவுக் கசாயத்தைக் காய்ச்சினார்.

எண்ணிலா இலக்கியங்களை, சங்க கால வரலாற்றின் மேன்மைகளை திரையில் தீட்டித்தந்த, தலைவர் கலைஞரின் வசனத்தில் உருவான திரைக்காவியத்தில் அடியேனும் நடிக்கும் பேறுபெற்றது எனது வாழ்வின் அர்த்தமுள்ள அம்சங்களில் ஒன்றாகும். கலைஞர் கதை வசனத்தில் உருவான கண்ணம்மா திரைப்படத்தில் "இளைஞனே இளைஞனே எழுந்து வா" என்ற எழுச்சிமிகுப் பாடலில் நடிக்க வைப்பதற்காக 200 இளைஞர்களை பங்கேற்கச் செய்திருந்தோம். இறுதியில் வில்லன் கதாபாத்திரத்தை கைது செய்யும் வேடத்தில் நான் காவல்துறை அதிகாரியாக நடிக்க வேண்டும் என்ற தலைவர் கலைஞரின் ஆணைக்கிணங்க அந்த வாய்ப்பைப் பெற்று கலைஞரின் காலத்தால் அழியாத வசனங்கள் பேசி நடித்தேன்.

மறுநாள் பொங்கல் திருநாளில் தலைவரைப் பார்த்து, வாழ்த்து பெற அவர் இல்லம் சென்றபோது, "கண்ணம்மா" திரைப்படத்தில் நான் பேசி நடித்த வசனங்களைச் சொல்லச் சொன்னார். நானும் வசனங்களை ஒப்பித்தேன். ஒப்பித்து முடித்தவுடன், "இடையில் ஒரு வரியை விட்டுட்டியே" என்று சொல்லி விடுபட்ட வரியைச் சொன்னார். நான் ஆச்சரியத்தில் மூழ்கிப்போனேன். 4, 5 மாதங்களுக்கு முன் தன்னால் எழுதி வழங்கப்பட்ட வசனத்தில் விட்டுப்போன வரியை நினைவில் வைத்திருந்து சொல்லிய விதம் கண்டு நெஞ்சம் வியந்து நின்றேன்.

அப்படத்தின் வசனத்தையும் நானே டப்பிங் பேச வேண்டும் என்று முத்தமிழறிஞர் அறிவுறுத்தியதால் இயக்குநர் பாபாவிக்ரம் என்னிடம் உரைத்தது எண்ணி இன்றும் இதயம் நெகிழ்கிறேன். தலைவர் கலைஞரின் வசனத்தில் உருவான கண்ணம்மா திரைப்படத்தில் அவர் வசனத்தை நானும் பேசி நடித்தேன் என்பது எனது வாழ்வின் பெரும் பதிவாக, பெருமிதமாக எண்ணி எண்ணி இன்றுவரை மகிழ்கிறேன். திரைப்பட வசனங்கள் மூலம், கதைகளின் மூலம், திரைக்கதையின் மூலம், இந்த தமிழ்ச் சமூகத்திற்கு கலைஞர் பெருந்தகை ஆற்றிய பணிகளில் ஈடு இணை இல்லாதவை. எழுத்தை அறிவாகவும், எழுதுகோலை ஆயுதமாகவும் கையாண்ட கலைஞரின் பெரும்புகழ் பூமி உள்ளவரை நிலைத்து நிற்கும்.

நன்றி!

அன்புடன்

(மா. சுப்பிரமணியன்)



முனைவர் ம.சு. சண்முகம், இ.ஆ.ப.,
முதலமைச்சரின் செயலாளர்–II

தலைமைச் செயலகம்
சென்னை–600 009

வாய்மையே வெல்லும்

## மகிழுரை

பல்வேறு துறைகளில் முத்திரை பதித்த முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாட அமைக்கப்பட்ட 12 குழுக்களில் ஒன்றான **கலைஞர்–கலைஞர்** குழுவின் சார்பாக **'கலைஞரின் திரையுலக நினைவலைகள்'** என்ற இம்மலர் வெளியாவதில் குழுவின் உறுப்பினர்–செயலர் என்ற வகையில் மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகிறேன்.

கலைஞர்–கலைஞர் குழு தொடங்கப்பட்ட நாள் முதல் குழுவின் செயல்பாடுகளுக்கு சிறப்பான ஆலோசனைகளை வழங்கி, **'இசையாய் கலைஞர்'** என்ற மாபெரும் நிகழ்ச்சி நடத்தியதில் ஆகட்டும், தற்போது அழகிய இம்மலர் வெளியிடப்படுவதில் ஆகட்டும், தமது முழுப் பங்களிப்பையும் ஆதரவையும் அளித்து இக்குழுவினைச் சிறப்பாக வழிநடத்திய இக்குழுவின் தலைவர் **மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர்** அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரையுலகின் பல்வேறு துறைகளில் முத்தமிழறிஞர் கலைஞரோடு பணியாற்றிய திரைக்கலைஞர்கள் பலரின் நினைவலைகள் இம்மலரில் இடம்பெற்று ஒரு காலப் பெட்டகமாக இம்மலர் உருவாகியுள்ளது மனநிறைவைத் தருகின்றது. இம்மலருக்கு கட்டுரை, கவிதை, புகைப்படங்கள் ஆகியவற்றை ஆர்வமுடன் அனுப்பிவைத்த திரைத்துறை பிரமுகர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இக்குழுவின் துணைத்தலைவர்களான மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மற்றும் குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மலரை நுட்பமாகத் தொகுத்து அழகிய வண்ணங்களில் வடிவமைத்து நேர்த்தியாக அச்சிட்டு வெளியிட உதவிய அச்சகத்தார் உட்பட அனைத்து தொழில்நுட்பக் கலைஞர்களுக்கும் எனது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(ம.சு. சண்முகம்)**
உறுப்பினர்–செயலர்,
கலைஞர்–கலைஞர் குழு / முதலமைச்சரின் செயலாளர்–II



# கலைஞர்களுக்கெல்லாம் கலைஞர்

-திரு. அமிர்தம், இயக்குநர்

### அரசியலில் கோலோச்சிய போதும் அவர் கலைஞர் தான்

சிலருக்குச் சூட்டினால் அது பட்டம். ஆனால், தலைவர் கலைஞர் அவர்களுக்கு "கலைஞர்" என்பது பட்டமாக அல்ல, பெயராகவே அமைந்து விட்டது. தலைவர் "கலைஞர்" அவர்களுக்கு 'கலைஞர்' என்ற பட்டத்தைச் சூட்டியவர் நடிகவேள் எம்.ஆர்.ராதா அவர்கள். வீட்டில் வைத்த "கருணாநிதி" என்ற பெயரே மறந்து போகும் அளவுக்கு கலைஞர் என்ற பெயர் நின்று நிலைக்கக் காரணம், அவரது கலைத் திறமையும், கலையுலக ஆளுமையும் தான்.

தலைவர் கலைஞர் அவர்கள் அரசியலில் மட்டுமல்ல, திரையுலகிலும் தான் பங்கெடுத்த காலம் முழுவதும் கோலோச்சினார். அவர் வைத்தது அனைத்தும் அரசியலில் வெற்றிகரமான திட்டம் ஆனது. கலையுலகில் வெற்றித் திரைப்படம் ஆனது. இந்த இரண்டுக்கும் அடிப்படையாக கலைஞருக்கு அவர் ஏற்றுக் கொண்ட திராவிடக் கொள்கைகள் அமைந்திருந்தன.

### நடிக்க அழைத்தார்கள்!

தனது கொள்கைகளை முதலில் நாடகம் மூலம் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டு 1944-ஆம் ஆண்டு பழனியப்பன் என்ற நாடகத்தை கலைஞர் எழுதினார். எழுதியது மட்டுமல்ல, அவரே நாடகக் குழுவை உருவாக்கி அந்த நாடகங்களை ஊர் ஊராகப் போய் அரங்கேற்றம் செய்தார். அதில் தானே பங்கேற்று நடிக்கவும் செய்தார். இதன் மூலமாக அவரது கொள்கையும் பரவியது. கலையுலக பங்களிப்பும் உயர்ந்தது. அவர் எழுதிய வசனத்தை அவரே கம்பீரமான குரலில் உச்சரித்தது, பார்வையாளர்களை ஈர்த்தது. கலைஞரின் வசனத்தை அவர் மூலமாகவே கேட்கவே, அவரது நாடகங்களைப் பார்க்கக் கூடினார்கள். பல்வேறு நகரங்களில் கலைஞரின் நாடகங்களுக்கு கூட்டம் அதிகமாக திரள்வதைப் பார்த்த திரைப்பட நிறுவனங்கள், அவரை திரையுலகுக்கு அழைத்தன.

### கதாநாயகர்களை உருவாக்கினார்!

திரையுலகில் தனது கொடியை நாட்டிய கலைஞர் அவர்கள், தனது வசனங்களைப் பேசி நடிக்கத் தகுதியான கதாநாயகர்களையும் உருவாக்க வேண்டியது மிகமிக அவசியம் என நினைத்தார். 1947-ஆம் ஆண்டு ஜூபிடர் பிக்சர்ஸ் தயாரித்த "ராஜகுமாரி" என்ற படத்தின் மூலம் கலைஞர் திரை உலக பயணத்தைத் தொடங்கினார். 1950-ஆம் ஆண்டில் மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரித்த "மந்திரிகுமாரி" படத்தில் எம்.ஜி.ஆர். கதாநாயகனாக நடிப்பதற்கு அதன் தயாரிப்பாளர் டி.ஆர். சுந்தரம் முதலில் ஒத்துக்கொள்ளவில்லை. ஆனால், "எம்.ஜி.ஆர் தான் அந்த கதாபாத்திரத்திற்கு பொருத்தமாக இருப்பார்" என, தயாரிப்பாளர் டி.ஆர். சுந்தரத்திடம் பேசி சம்மதிக்க வைத்தார் கலைஞர். "மந்திரி குமாரி" படம் மாபெரும் வெற்றி பெற்றது. எம்.ஜி.ஆரும் கதாநாயகனாக அனைவராலும் வரவேற்கப்பட்டார். அது ஒரு அற்புதமான காதல் சித்திரம் என்பதால் பெண்கள் மனதைக் கவர்ந்தார் எம்.ஜி.ஆர்.1954 ஆம் ஆண்டு நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை எழுதிய "மலைக்கள்ளன்" கதைக்கு கலைஞர் அவர்கள் திரைக்கதை எழுதினார்கள். அதில் எம்.ஜி.ஆர்., பானுமதி மற்றும் நகைச்சுவை நடிகர் டி.எஸ். துரைராஜ் ஆகியோர் நடித்தனர். டி.எஸ். துரைராஜ் போலீஸ் வேடத்தில் நடிக்க நகைச்சுவை மூலம் அரசியல் அதிர்வெடிகள் வெடித்தன. இறுதியில், என்ன காரணத்தினாலோ தனது பெயரைப் போட வேண்டாம் என்று கலைஞர் சொல்லிவிட்டார். இது எம்.ஜி.ஆருக்குத் தெரிந்ததும் அதிர்ச்சி அடைந்தார். கலைஞர் அப்போது திருவாரூரில் இருந்தார்.

நடிகர் கே.ஆர். ராமசாமியை அழைத்துக்கொண்டு எம்.ஜி.ஆர்., திருவாரூருக்கு கலைஞரைப் பார்க்க வந்தார். இருவரும் இணைந்து, டைட்டிலில் பெயரைப் பயன்படுத்திக் கொள்ள கலைஞர் சம்மதம் தெரிவித்தார். "மலைக்கள்ளன்" படத்தில் டைட்டிலில் கலைஞர் பெயர் போடப்பட்டு தமிழ்நாடு முழுவதும் வெளியிடப்பட்டது. "மலைக்கள்ளன்" படம் மகத்தான வெற்றிபெற்றது. படம் 150 நாட்கள் ஓடி 1954-இல் வெளியான படங்களிலேயே அதிக வசூலை அள்ளிக் கொட்டியது. இந்த படத்திற்கு குடியரசுத் தலைவரின் "வெள்ளி மடல்" விருது கிடைத்தது. அதன்பிறகு எம்.ஜி.ஆருக்கு பட வாய்ப்புகள் குவியத் தொடங்கின.

இதேபோலத் தான், சிவாஜி கணேசனையும் திரையுலகில் வெற்றி கொடி நாட்ட வைத்தார் கலைஞர். 1952 ஆம் ஆண்டில் ஏ.வி.எம். நிறுவனமும், நேஷனல் பிக்சர்ஸ் பெருமாளும் கூட்டுச் சேர்ந்து தயாரித்த கலைஞரின் "பராசக்தி" படம் வெளிவந்தது. "பராசக்தி" படம் எடுத்த வரையில் படத்தைப் பார்த்துவிட்டு ஏ.வி.எம். மெய்யப்பன் அவர்கள் "சிவாஜி வேண்டாம்" என்று சொன்னார். ஆனால் "சிவாஜி தான் நடிக்க வேண்டும்" என்று கலைஞர் சொன்னார். அவருடன் இணைந்து நேஷனல் பிக்சர்ஸ் பெருமாளும் சொன்னார். இருவரும் இணைந்து சிவாஜியை மாற்ற விடவில்லை. அந்தப் படத்தின் மூலமாக தன் எழுத்தாற்றலால் மூடநம்பிக்கைகளை ஒழிக்க திரை உலகத்தை பயன்படுத்திக் கொண்டார் கலைஞர். தன் நடிப்பாற்றலால் முதல் படத்திலேயே கதாநாயகனாக உச்சத்தைத் தொட்டார் சிவாஜி கணேசன். 1954 - ஆம் ஆண்டில் "மனோகரா" படம் கலைஞரின் திரைக்கதை, வசனத்தில் வெளிவந்து மக்களின் மனதை மெய்சிலிர்க்க வைத்தது. கலைஞரின் கனல் தெரிக்கும் வசனத்தாலும், சிவாஜியின் நடிப்பாற்றலாலும் "மனோகரா" படம் மாபெரும் வெற்றிபெற்றது.

கலைஞர் படத்திற்கு திரைக்கதை வசனம் எழுதும்போது அவர் கையில் உள்ள பேனா அவர் நினைப்பதை எழுதும். அதேநேரத்தில் கலைஞரின் உதடுகள் எழுதியதை உச்சரித்துக் கொண்டிருக்கும். உதட்டளவில் தடுமாற்றம் ஏற்பட்டால், சொல்லை மாற்றிக் கொள்வார். அதனால் தான் அவர் கதை, வசனம் எழுதும் படங்களில் நடிக்கும் நடிகர்கள் காட்சிக்கு ஏற்ப எந்தத் தடுமாற்றமும் இல்லாமல் பேசி நடிப்பார்கள். கதாநாயகர்களுக்கு ஏற்பவும் வசனங்களை அமைப்பார் கலைஞர். சிவாஜியாக இருந்தால் நீண்ட வாக்கியமும், எம்.ஜி.ஆராக இருந்தால் சிறு வாக்கியங்களையும் அவர்களது வசதிக்கு ஏற்ப எழுதி அமைப்பார் கலைஞர்.

### வசனகர்த்தாக்களுக்கு மரியாதை!

கதாநாயகர்களுக்கு மட்டுமே மரியாதை கிடைத்து வந்த காலத்தில் வசனகர்த்தாக்களுக்கு மரியாதை ஏற்படுத்தித்

தந்தவர் தலைவர் கலைஞர். "வசனம் - மு.கருணாநிதி" என்று டைட்டில் போடும்போது கைதட்டும், விசிலும் பறக்கும். "கலைஞரின் வசனத்தில்" என்று போஸ்டர் போடும் அளவுக்கு எழுத்தாளர்களுக்கு மரியாதை ஏற்படுத்திக் கொடுத்தவர் கலைஞர்.

மாடர்ன் தியேட்டர்ஸ் டி.ஆர்.சுந்தரத்தை அனைவருமே "முதலாளி" என்று தான் அழைப்பார்கள். அவர் உட்கார அவர் அறையில் ஒரே ஒரு நாற்காலிதான் போடப்பட்டிருக்கும். அவர் கண்ணைக் காட்டினால் தான் இன்னொரு நாற்காலியே வரும். கலைஞரைச் சந்திக்கும்போது மட்டும் தான் முன்கூட்டியே நாற்காலியைப் போடச் சொல்வார் சுந்தரம். இது கலைஞர் மூலமாக வசனகர்த்தாக்களும், எழுத்தாளர்களும் பெற்ற மரியாதை ஆகும். "கொள்கைக்காக உரையாடல் எழுதினால் யாருடைய பகையாவது வருமோ என்ற கவலை இல்லாமல் எழுதியவர் கலைஞர்" என்று சொன்னார் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்.

பராசக்தி படத்துக்குப் வசனம் எழுத வேண்டும் என்று இயக்குநர் கிருஷ்ணன் பஞ்சு அவர்கள் தான், கலைஞரிடம் வந்து கேட்டார்கள். உடனே ஒப்புக்கொள்ளவில்லை கலைஞர். "கதையில் சில மாறுதல்களைச் செய்ய வேண்டும், கொள்கைகளைப் பரப்பும் வகையில் தான் வசனங்களை எழுதுவேன்" என்று கண்டிஷன் போட்டார் கலைஞர் என்று இயக்குநர் கிருஷ்ணன் பஞ்சு சொல்லி இருக்கிறார். அதாவது வாய்ப்பு கிடைக்கும் என்பதற்காக கொள்கையைப் பற்றி கவலைப்படாமல் இருந்தவர் அல்ல கலைஞர். அதனால் தான் அவரது வசனங்களும் மதிக்கப்பட்டது. அவரும் மதிக்கப்பட்டார்.

## படங்களைப் பார்த்து பயந்தார்கள்

"பராசக்தி வெற்றிகரமான படம் மட்டுமல்ல, வெறியர்களுக்குத் தக்க பாடம் தருகின்ற பள்ளியாகவும் இருக்கிறது" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதினார்கள்.

"பராசக்தி" படத்திற்குப் பிறகு கலைஞர் எழுதிய படங்கள் என்றால் சென்சார் போர்டு பிரச்சினை செய்யத் தொடங்கியது. வசனங்களில் மட்டுமல்ல, பாடல்களில் கூட பிரச்சினை செய்ய ஆரம்பித்தது. கலைஞர் எழுதிய "காஞ்சித் தலைவன்" படத்தில் ஒரு போர்ப்படை புறப்படும்போது பாடப்படும் பாடல் வரும். "வெல்க காஞ்சி, வெல்க காஞ்சி, வெல்க வெல்கவே" என்ற வரிகளில் "காஞ்சி" என்ற வார்த்தையை அனுமதிக்க மாட்டோம் என்று சொன்னார்கள். "காஞ்சி என்பது ஊர் பெயர் தானே! ஏன் அனுமதிக்க மறுக்கிறீர்கள்?" எனக் கேட்க, "காஞ்சி என்பது அண்ணாவை மனதில் வைத்து எழுதியுள்ளார்கள். அதை அனுமதிக்க முடியாது" எனப் பிடிவாதம் பிடித்தார்கள். பிறகு கலைஞர் அவர்கள் "வெல்க நாடு- வெல்க நாடு, வெல்க வெல்கவே" என மாற்றி எழுதி சென்சார் போர்டு அனுமதி பெற்றார்கள்.

1953 ஆம் ஆண்டு சேலம் மார்டன் தியேட்டர்ஸ் தயாரிப்பில் "திரும்பிப்பார்" படம் கலைஞர் கதை, வசனத்தில் உருவானது. படத்தையே திரையிட முடியாத அளவுக்கு ஆயிரக்கணக்கான அடிகளை வெட்டி விட்டனர். "கலைத் துறையில் இத்தகைய ஒளி நிறையத் தேவை" என்று தலைவர் கலைஞரை ஊக்கப்படுத்தினார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

"பராசக்தியின் அருளால் இன்று திராவிடப் பண் தமிழகமெங்கும் ஒலிக்கிறது" என்று பேரறிஞர் அண்ணா சொல்லும் அளவுக்கு பட்டிதொட்டி எங்கும் கலைஞரின் வசனங்கள் ஒலித்தது.

## வசனங்கள் பாடப்புத்தகம் ஆனது!

கலைஞர் அவர்கள் வசனம் எழுதத் தொடங்கிய பிறகு வசனப் புத்தகங்கள் அதிகம் விற்றன. பலரும் மனப்பாடம் செய்யத் தொடங்கினார்கள். நடிகர்கள் அதனை ஒப்பித்து பிரபலம் அடையத் தொடங்கினார்கள். "பராசக்தி"யின் நீதிமன்றக் காட்சியும், "மனோகரா" அரண்மனைக் காட்சியும், கண்ணகியின் வாக்குமூலமும், சாக்ரடீசின் இறுதிச் சொற்பொழிவும் கலைஞரை மட்டுமல்ல, தமிழையும் இன்று வரை உயிரோட்டமாக வைத்துள்ளது.

"ஓடினாள்... ஓடினாள்... வாழ்க்கையின் ஓரத்துக்கே ஓடினாள்", "தீயவனே திரும்பிப்பார்.. நீ நடந்து வந்த பாதையைத் திரும்பிப்பார்", "உடைந்த வாளாக இருந்தாலும் ஒரு வாள் கொடுங்கள்", "தோல்விகளையும் வெற்றியின் படிகளாக்கிக் கொள்ளும் வித்தை கற்றவன் நான்", "வெள்ளாடுகளின் கொம்புகள் கூர்மையாகி விட்டால்... வேங்கையின் பற்களையும் நொறுக்கி எறிய முடியும்". இப்படி எத்தனையோ வரிகளைத் தந்தவர் கலைஞர்.

## எனக்கு "பூமாலை" கிடைத்தது!

1964ஆம் ஆண்டு "பூம்புகார்" படம் ஆரம்பிக்கப்பட்டது. தலைவர் கலைஞர் அவர்கள் திரைக்கதை, வசனம் எழுதினார்கள். அந்தப் படத்தை ஒளிப்பதிவு செய்ய முதன்முதலாக எனக்கு வாய்ப்பு கொடுத்தார் கலைஞர். "பூம்புகார்" படம் மாபெரும் வெற்றி பெற்றது. அடுத்து "பூமாலை" என்று படம் ஆரம்பிக்கப்பட்டு கலைஞர் கதை வசனம் எழுத அந்த படத்திற்கும் ஒளிப்பதிவு செய்ய எனக்கே வாய்ப்பு கிடைத்தது. அதை "மறக்க முடியுமா?" முடியவே முடியாது! காரணம் அடுத்து தயாரிக்கப்பட்ட "மறக்க முடியுமா" படத்திற்கு கலைஞர் கதை, வசனம் எழுத என் அன்பு சகோதரர் முரசொலி மாறன் அவர்கள் படத்தை இயக்க, அவர்கள் இருவரோடும், சேர்ந்து பணியாற்ற கிடைத்த வாய்ப்பு... எனக்கு கிடைத்த பாக்கியம்!

## கலைஞரின் கணிப்புகள்!

வெற்றிப் படங்களை மிகச் சரியாக கணிப்பார் கலைஞர். 1964 ஆம் ஆண்டு ஏ.வி.எம். சார்பில் "பூம்புகார்" படம் எடுக்க

முடிவு செய்து கலைஞர் திரைக்கதை வசனம் எழுத ஒப்பந்தம் ஆனது. 10 ஆயிரம் ரூபாய் முன்பணமும் கொடுத்துவிட்டார்கள். திடீரென படத்தை எடுக்கும் முயற்சியை ஏ.வி.எம்.நிறுவனம் கைவிட்டது. பத்தாயிரத்தை அவர்களிடமே திருப்பித் தந்தார் கலைஞர். "பூம்புகார்" படத்தை தானே தயாரிக்க முடிவெடுத்தார். அந்த படத்துக்கு ஒளிப்பதிவாளராக இருக்கும் பெருமையை நான் பெற்றேன். படத்தை முடித்த பிறகு ஏ.வி.எம். நிறுவனரையே அழைத்து போட்டுக் காண்பித்தார் கலைஞர். ஒரு முக்கிய படம் வெளியாக இருப்பதால், உங்கள் படத்தை வெளியிடாமல் இருந்தால் நல்லது என்று அந்த நிறுவனர் சொன்னார். ஆனால் கலைஞர், அந்தப் படம் வெளியாகும் நாளில் "பூம்புகாரை" வெளியிட்டார். "பூம்புகார்" பெரும் வெற்றி பெற்றது.

என் அன்புச் சகோதரர் செல்வமும், நானும் சேர்ந்து அறிஞர் அண்ணா எழுதிய "வண்டிக்காரன் மகன்" கதையை படமாக்க முடிவு செய்தோம். தலைவர் கலைஞரிடம் திரைக்கதை, வசனம் எழுத வேண்டும் எனக் கேட்டோம். "எழுதுகிறேன்" என்று சொன்ன கலைஞர், "பல படங்கள் ஒளிப்பதிவு செய்த நீயே இந்தப் படத்தை இயக்கு" என்று சொல்லி இயக்குநர் ஆக்கிவிட்டார். ஜெய்சங்கர், ஜெயசித்ரா, அசோகன் நடிக்க படம் தயாரிக்கப்பட்டது. படத்தைப் பார்த்து விட்டு தலைவர் என்ன சொல்வாரோ என்று நான் பயந்தேன். படம் முடிந்தபின் கலைஞரும், என் அன்புச் சகோதரர் மாறன் அவர்களும் படம் பார்த்தார்கள். "படம் நன்றாக இருக்கிறது" என்று பாராட்டினார்கள். அதன் பிறகு தான் எனக்கு நிம்மதி வந்தது. "படத்தை எப்போது வெளியிடப் போகிறீர்கள்?" என்று கலைஞர் கேட்க, நானும் செல்வமும், "இன்னும் முடிவு செய்யவில்லை" என்று சொன்னோம்.

கலைஞர் அவர்கள், "படத்தை வரும் தீபாவளியன்று வெளியிடுங்கள்" என்று சொல்லிவிட்டார். நானும், செல்வமும் அதிர்ந்து போய் "தீபாவளிக்கு பெரிய இயக்குநர்கள், பெரிய நடிகர்கள் நடித்த 10 படம் வெளி வருகிறது. அதனால் நம் படத்தை தனியாக விட்டால் தான் நல்லது" என்று சொன்னோம். நாங்கள் சொன்னதையே அன்புச் சகோதரர் மாறன் அவர்களும் சொன்னார்கள். உடனே தலைவர் கலைஞர் "10 படத்தோடு வெளியிட்டு வெற்றி பெற்றால் தான் நமக்குப் பெருமை" எனச் சொல்லிப் புறப்பட்டுப் போய்விட்டார்கள். அவர் சொன்னதை எங்களால் எப்படி மீற முடியும். 10 படங்களோடு தீபாவளியன்று "வண்டிக்காரன் மகன்" வெளியிடப்பட்டது. மாபெரும் வெற்றிபெற்று, 100 நாட்கள் ஓடியது. என்னுடைய இயக்கத்தில் கலைஞரின் எழுத்தாற்றலால் மாபெரும் வெற்றி பெற்றது. 10 படங்களோடு போட்டியிட்டு வெல்லும் என்பதை கணித்ததன் மூலம் அவர் "மகா கலைஞராக" உயர்ந்து நிற்கிறார்.

என்னை வளர்த்து ஆளாக்கியவர் கலைஞர். தான் திரைக்கதை எழுதிய "பூம்புகார்" படத்தில் முதன் முதலாக ஒளிப்பதிவு செய்ய வாய்ப்புக் கொடுத்தவர் கலைஞர். "வண்டிக்காரன் மகன்" படத்தை இயக்க முதல் வாய்ப்பு அளித்து "இயக்குநர் அமிர்தம்" என அழைக்கப்படும் உயர்வை உருவாக்கிக் கொடுத்தவர் கலைஞர். ■












# எங்கள் மூத்த சகோதரர் கலைஞர்

-திரு. AVM.சரவணன், தயாரிப்பாளர்



கலைஞர் அவர்களைப் பற்றி பேசுவதும், எழுதுவதும் ஓர் இனிமையான அனுபவம். என் பள்ளிக் கூட நாட்களில் அவருடைய வசனங்களை மனப்பாடம் செய்து பள்ளி ஆண்டு விழாக்களில் பேசி பரிசுகள் பெற்றிருக்கிறேன். தமிழ் மொழியில் எனக்கு ஆர்வம் ஏற்படக் காரணமாக இருந்தது அவருடைய வசனங்கள் தான் என்று கூறுவேன். திரை உலகில் அவருடைய வசனங்கள் திருப்பு முனையாக அமைந்த நாட்கள், பி.எஸ். உயர்நிலைப் பள்ளியில் ஏழாவது படித்துக் கொண்டிருந்தபோது பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டு பராசக்தியில் கலைஞரின் வசனங்கள் பேசி முதல் பரிசு வாங்கினேன்.

இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு தொடர்பாக எங்கள் ஸ்டுடியோ வளாகத்தில் ஒரு நாள் விருந்து நடைபெற்றது. முதலமைச்சர் அண்ணா அவர்களோடு கலைஞரும் வந்து கலந்து கொண்டார். இருவருக்கும் நெருக்கமாக இருந்த இயக்குநர்களான கிருஷ்ணன்-பஞ்சு அவர்கள் என்னைக் கலைஞரிடம் அழைத்துப் போய் அறிமுகப்படுத்தினார்கள். கலைஞரோடு நான் முதலில் பேசியது அப்போதுதான். பின்னர் அவரோடு பல சந்திப்புகள், நீண்ட உரையாடல்கள், தொழில் ரீதியாகவும், நட்பு ரீதியாகவும் நெருக்கம் ஏற்பட்டது. ஹலோ மெட்ராஸ் என்ற பெயரில் சென்னையைப் பற்றிய தகவல்கள், முக்கியமாக சுற்றுலாப் பயணிகளுக்குப் பெரும் உதவியாக இருக்கக்கூடிய தகவல்கள் அடங்கிய மாத இதழ் ஒன்றைத் தொடங்கியபோது அதை அவர் திருக்கரங்களால் வெளியிட வேண்டும் என்ற என் விருப்பத்தைச் சொன்னவுடன் மகிழ்ச்சியுடன் ஏற்று 1972 செப்டம்பர் 13ஆம் தேதியன்று அவர் வெளியிட நான் பெற்றுக் கொண்டதை என்றும் மறக்க இயலாது....

1975ஆம் ஆண்டில் எங்கள் ஸ்டுடியோவில் வேலை நிறுத்தம் நடைபெற்றபோது, அன்றைய முதல்வர் கலைஞர் அவர்கள் தான் தலையிட்டு, பிரச்சினைகள் சுமூகமான முறையில் தீர்த்து வைத்ததை வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் நான் எழுத்திலும், பேச்சிலும் பதிவு செய்யத் தவறியதேயில்லை. "ஏவிஎம் நிறுவனத்தின் பொன் விழாவில் தலைமையேற்று சுமார் 190 பேருக்குக் கேடயம் வழங்கிக் கௌரவிக்க வேண்டும்" என்று கலைஞர் அவர்களைக் கேட்டுக் கொண்டோம். அனைவருக்கும் அவரது கைகளால் கேடயங்கள் வழங்கிக் கௌரவித்தார். அத்தனை பேரும் அவருக்குத் தெரிந்த கலைஞர்கள். விழா உணர்ச்சிப்பூர்வமாக அமைந்தது. கலைஞர்கள் நெகிழ்ந்து போனார்கள்.

பொன்விழா கண்ட கலைஞர் அவர்கள் 1997ஆம் ஆண்டில் பொன்விழா கண்ட எங்கள் நிறுவனத்தைப் பாராட்டி எங்களையும் கௌரவித்தார். அதேபோல கலைஞரின் பவள விழாவையும் 52 வருட திரையுலக சேவையைப் பாராட்டியும் விழா எடுத்தபோது பலதரப்பினரது விருப்பப்படி விழாக் குழுவின் தலைமைப் பொறுப்பேற்றேன். 29.09.1998 அன்று சீரும் சிறப்புமாக நடைபெற்ற அந்த விழா அவருக்கு மிக்க மகிழ்ச்சியைக் கொடுத்தது என்று மனம் நெகிழப் பாராட்டினார். 22.01.2006 அன்று ஏவிஎம் நினைவு அஞ்சல் தலையை டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் அன்றைய மாண்புமிகு மத்திய அமைச்சர் தயாநிதி மாறன் வெளியிட, நானும் என் மகன் எம்.எஸ்.குகனும் பெற்றுக் கொண்டோம்.

தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை வளாகத்தில் எங்கள் தந்தையார் அவர்களின் நூற்றாண்டு தொடங்கியபோது, 30.07.2006 அன்று பிலிம் சேம்பரில் அப்பச்சி அவர்களின் சிலையையும் கலைஞர் அவர்கள் திறந்துவைத்தார். தமிழ்த் திரையுலக வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பணிகள் ஏராளம். குறிப்பாக, 01.07.1989-இல் சினிமாவிற்கு விதித்த வரியை 54% இருந்து 40% ஆகக் குறைத்தார்கள். 01.08.1998-இல் 40% இருந்து 30% ஆகக் குறைத்தார்கள். 12.06.2000-இல் 30% இருந்து 25% ஆகக் குறைத்தார்கள். 22.07.2006-இல் தமிழில் பெயர் வைக்கப்படும் படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து முழுவதுமாக விலக்களித்தார்கள். இது நல்ல தமிழ்ப் பெயர்களில் படங்கள் வரவேண்டும் என்ற அவரின் ஆர்வத்தை அனைவரும் உணருமாறு அமைந்தது.

சில வருடங்களுக்கு முன்பு நான் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது அதை அறிந்த கலைஞர் அவர்கள், என் மகன் குகனுக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு, "யாரோ ஒருவர் சொல்லி எனக்கு தெரிய வந்தது. ஏன் எனக்குத் முதலில் தெரியப் படுத்தவில்லை?" என்று உரிமையுடன் கேட்டு உடனே மருத்துவமனைக்கு நேரில் வந்து நலம் விசாரித்தார். அவர் ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் எங்கள் வீட்டு மற்றும் அலுவலக நிகழ்ச்சி எதுவாக இருந்தாலும் தவறாமல் எங்கள் அழைப்பை ஏற்று கலந்து கொள்வார். அதேபோல் நான் அவரை சந்திக்க நேரம் கேட்கும் போதெல்லாம் காக்க வைக்காமல் உடனடியாக நேரம் ஒதுக்கி என்னை அழைப்பார். இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் அவர் அரசியல் தலைவர் மட்டுமல்ல ஓர் உணர்வுப்பூர்வமான கலைஞர்... மனித நேயம் மிக்க மாமனிதர்... எங்கள் குடும்பத்தின் மீது தனி அன்பும் பாசமும் உள்ள மூத்த சகோதரர் போன்றவர் என்று உணர்த்துகிறது. அவர் புகழ் என்றென்றும் நிலைத்து நிற்கும்.

கலைஞர் அவர்களின் புகழ் வாழ்க! ■





# தமிழ்க் கலைஞர் தமிழ்த் திரைஞர்

## -திரு. கமல்ஹாசன்

கலைஞர்கள் பலர் இருக்கலாம்... ஆனால் கலைஞர் என்றால் அது ஒருவரையே குறிக்கும். தமிழ்த் திரைத் துறையில் அவர் பதித்த தடம் ஆழமானது. வசனக் கலை, திரைக்கதைக் கலை, அதன் உள்ளார்ந்த இயக்கக் கலை என அவர் தொட்டுச் சாதித்துள்ள துறைகள் பல. தான் எடுத்த ஒவ்வொன்றிலும் தன் கலைத் தன்மையை அழுத்தம் திருத்தமாகக் காட்டியதால் அவர் கலைஞர் ஆனார்.

அறிவு ஜீவிகளிலிருந்து, சாதாரணமானோர் வரைக்கும் பாகுபாடு பார்க்காமல் சென்று சேரும் மாபெரும் கலை சினிமா. அசுர சக்தி வாய்ந்த ஊடகம். அதன் முழு வீச்சையும் வீரியத்தையும் உணர்ந்து அதைப் பயன்படுத்திக்கொண்டார் கலைஞர். அதில் பல உச்சங்களையும் நிகழ்த்திக்காட்டினார். அந்த சினிமா என்னும் சாதனத்தை வைத்து, தமிழை வளர்த்தார். தமிழ்நாட்டை வளர்த்தார். சமூகம் சார்ந்த சிந்தனையை, கலையின் ஊடாக விதைத்தார்.

வசனங்களில் அவர் பற்ற வைத்தது பகுத்தறிவு நெருப்பு. அது ஆதிக்கத்தின் அடித்தளம் வரைக்கும் சென்று சுட்டது. தமிழர்தம் மனங்களிலே தமிழுணர்வை நட்டது. எம்.ஜி.ஆர், சிவாஜி ஆகிய இரு பெரும் ஆளுமைகளைப் புகழேணியில் ஏற்றியது கலைஞரின் பேனா. நடிகர்கள் பிரபலம் அடைந்தது புரிந்து கொள்ளத்தக்கது. அவர்களோடு இணைந்து, அவர்களுக்கு ஈடாக கலைஞரும் கோலோச்சியது ஆச்சரியப்படத்தக்க உண்மை.

கலைஞர், சிவாஜி, எம்.ஜி.ஆர் ஆகிய மூவேந்தர்களும் கட்டியெழுப்பியதுதான் கோடம்பாக்கத்தின் கலைக் கோட்டை. முத்தமிழறிஞர் கலைஞர், தமிழ் சினிமாவில் செய்த சாதனைகளையும், திரையுலகிற்கு ஆற்றிய பங்களிப்புகளையும் நினைவிலேயே வைத்திருந்து செயல்படவேண்டியது என்னைப் போன்ற திரைக்காதலர்களின் கடமை.

அரசியல் முன்னெடுப்புகள் சமூக மேம்பாட்டுப் பணிகள், இலக்கியத்தை தலைமுறை தாண்டிக் கைமாற்றிவிடும் கடமை ஆகியவற்றோடு தமிழ்த் திரையுலகுக்கு அவர் செய்த மகத்தான பங்களிப்பைப் பட்டியலிட்டுத் தீராது. வசனகர்த்தா, பாடலாசிரியர், திரைக்கதை ஆசிரியர் என பன்முகத் தன்மையுடன் செயல்பட்டவர் கலைஞர். தனது வரிகளால் திரைப்பட வசன எழுத்துமுறையையே அடுத்த கட்டத்துக்கு நகர்த்திச் சென்றவர். கலைஞரின் வசனங்கள் இன்றைய சூழ்நிலைக்கும் பொருந்துவதைக் கண்கூடாகப் பார்க்கிறோம்.

சினிமா பேசத் தொடங்கும்போதே பாடவும் தொடங்கிவிட்டது. பேச்சைக் காட்டிலும் பாடுவது அதிகமாகவும் இருந்தது. உணர்வுகளைச் சொல்ல வேண்டுமானால் அது பாடல்களாலேயே இயலும் என்று பாடல்களின் பிடியில் இருந்த தமிழ் சினிமாவை கனல் தெறிக்கும் வசனங்களின் சினிமாவாக மாற்றிக்காட்டினார் கலைஞர். கதைக்களம் எதுவாக இருந்தாலும் பகுத்தறிவு,

முற்போக்குச் சிந்தனைகளை நுட்பமாகச் சித்தரிக்கும் திராவிட திரைக்கதை பாணியை உருவாக்கினார். எழுதி 75 ஆண்டுகளாகியும் கலைஞரின் வசனங்கள் இன்னமும் ஒலித்துக்கொண்டுதான் இருக்கின்றன. ஏற்கெனவே இருக்கும் போக்கை, அது வெற்றிகரமானதாக இருந்த போதிலும் தனக்கென ஒரு பாணியை உருவாக்கி, தமிழ்த் திரையின் போக்கையே மாற்றி வெற்றி கண்ட கலைஞரை "நவீன தமிழ் சினிமாவின் தந்தை" என்று குறிப்பிடுவதில் எனக்குத் தயக்கங்கள் ஏதும் இல்லை.

**கலைஞரின் திராவிட சினிமா:**

தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சியும் கூட மேடை நாடகங்களை அரசியல் காரணங்களுக்காக பயன்படுத்தி வந்தது. காந்தி போன்று வேடமணிந்த ஒருவரை மேடையில் நடக்கச் செய்து பின்னணியில் பாடலை ஒலிக்கச் செய்வது என்ற அளவில் தான் அந்த நாடகங்களின் தரம் இருந்தது. ஏன்? 1939இல் எழுத்தாளர் கல்கி எழுதிய "தியாக பூமி" திரைப்படம் கூட இந்த பாடல் வழி கதை சொல்லல் முறையிலிருந்து தப்ப இயலவில்லை. ஆனால் ஒரு கலைஞர் உருவாவதற்கு இத்தகைய சூழல் அவசியமாகிறது.

கலைஞரின் குழந்தைப் பருவமும் கூட இசையும், ஆடலும் பாடலுமாகவே கழிந்திருக்கிறது. எந்தத் தருணத்தில் அவருக்குள் இருந்த கலைஞன் எழுத்தை நோக்கித் திரும்பினான் என்று சொல்வது கடினம். காரணம் மிக இளம் வயதிலேயே, 12 வயதிலேயே, அவர் எழுதிய நாடகங்கள் மாட்டுக் கொட்டகையில் அரங்கேற்றம் கண்டன. அண்ணா நடத்திவந்த "திராவிட நாடு" இதழில் கலைஞரின் கட்டுரை வெளியான பொழுது அவருக்கு வயது 14. நாகப்பட்டினம் திராவிட நடிகர் சங்கத்திற்காகத் தனது "பழனியப்பன்" என்ற நாடகத்தை 100 ரூபாய்க்கு விற்றார். அந்தப் பணத்தை திருவாரூரில் திராவிடர் கழகக் கூட்டங்களை ஒழுங்கு செய்து நடத்தப் பயன்படுத்திக்கொண்டார்.

கலைஞர் சினிமாவில் சாதித்தது அவ்வளவு சுலபத்தில் நடந்தேறிவிடவில்லை என்பதையும் பார்க்க வேண்டும்.

இன்றைக்குத்தான் மாணவர்கள் அரசியலை விட்டுத் தள்ளியிருக்க விரும்புகிறார்கள். அன்று நிலைமை அப்படியில்லை. "சிறுவர் சீர்திருத்தச் சங்கம்", "தமிழ் மாணவர் மன்றம்" என அன்றைய அரசியல், மாணவர்களைச் சுற்றியே சுழன்றது. இதில் கலைஞர் தன்னை இரண்டு வழிகளில் இணைத்துக் கொண்டார். ஒன்று அரசியல் பேரணிகளில் கலந்துகொள்வது. இரண்டாவது அச்சு இதழ்களில் ஆசிரியப் பணி மேற்கொள்வது. மாணவ நேசன் மற்றும் முரசொலி உள்ளிட்ட பத்திரிகைகளில் கலைஞர் பணியாற்றி இருக்கிறார்.


ஒரு நடிகராக ஆவதுதான் கலைஞரின் விருப்பமாக இருந்தது. ஆனால், மிக இளம் வயதிலேயே திருமணம் செய்துகொண்டது உள்ளிட்ட காரணங்களால், வருமானம் ஈட்டிக் கொள்வதற்காக ஏதாவதொரு வேலையிலிருந்தாக வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானார். விழுப்புரம், பாண்டிச்சேரி உள்ளிட்ட ஊர்களிலிருந்த நாடக அரங்கங்களில் வேலை பார்த்து, பிறகு ஈரோட்டிற்குச் சென்று பெரியாரின் குடியரசு இதழில் சேர்ந்தார். பெரியாரோடு நேரடியாகப் பேசிப் பழகுவதற்கு உண்டான சந்தர்ப்பங்கள் கலைஞருக்கு அங்குதான் கிடைத்தன. அதன் தாக்கம் அவரது பிற்கால கலை வாழ்விலும், அரசியல் வாழ்விலும் தொடர்ந்தது. எம்.ஜி.ஆர் கதாநாயகனாக நடித்த முதல் திரைப்படம், கலைஞர் எழுதிய முதல் படம் ஆகிய இரண்டு காரணங்களுக்காக "ராஜகுமாரி" படம் சரித்திரத்தில் இடம் பெற்றிருக்கும். கோவையை மையமாக























வைத்து இயங்கிக் கொண்டிருந்த ஜூபிட்டர் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்த "அபிமன்யு" படத்திற்கும் கலைஞர் தான் எழுதினார். கணக்கிற்கு இது அவருக்கு இரண்டாவது திரைப்படம். ஆனால் அவருக்கு உண்டான உரிய அங்கீகாரம் கிடைக்காத காரணத்தால் தயாரிப்பு நிறுவனத்திலிருந்து விலகி திருவாரூர் சென்று சேர்ந்தார். இனி அரசியல் நடவடிக்கைகளில் மட்டும் ஈடுபட்டால் போதும் என்ற முடிவை எட்டி இருந்தார். ஆனால் அசல் திறமையைத் தமிழ் சினிமா என்றுமே தவற விடுவதில்லை. மாடர்ன் தியேட்டர்ஸ் சார்பாக டி.ஆர்.சுந்தரம் அவரை சேலத்துக்கு அழைத்துக் கொண்டார்.

பாரதிதாசன், கண்ணதாசன் உள்ளிட்ட பலருக்கு அன்று சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் ஒரு அடையாளமாகவே இருந்தது. மாடர்ன் தியேட்டர்ஸ் நிறுவனத்துக்காகக் கலைஞர் எழுதிய முதல் படைப்பு "மந்திரி குமாரி". ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்றான குண்டலகேசியை அடிப்படையாக வைத்து ஏற்கெனவே மந்திரி குமாரி என்ற பெயரிலேயே ஒரு மேடை நாடகத்தை அரங்கேற்றம் செய்திருந்தார் கலைஞர். இத்திரைப்படம் அந்த நாடகத்தின் நீட்சியாகவே அமைந்திருந்தது.

திரைக்கதையைச் செப்பனிடுதல் என்னும் கலை இன்று புழக்கத்தில் இருக்கிறது. அதை எழுபது ஆண்டுகளுக்கு முன்பே செய்து காட்டியிருக்கிறார் கலைஞர். மருத நாட்டு இளவரசி படத்தின் திரைக்கதை சரியாக இல்லை என்று தயாரிப்பாளர்கள் கருதினர். கலைஞரை அழைத்தனர். அதைச் செப்பனிட்டு வெற்றிப்படமாக்கினார் கலைஞர்.

சுவாரசியம் கூட்டும் திரைக்கதை அமைப்பை, பராசக்தி, மனோகரா, மலைக்கள்ளன், ராஜா ராணி, பூம்புகார் என தனது அனைத்துப் படைப்புகளிலும் பின்பற்றினார். முப்பது வயதுக்கு உள்ளாகவே பத்துக்கும் மேற்பட்ட திரைப்படங்களுக்கு கலைஞர் எழுதியுள்ளார் என்பது எவரும் வியக்கும் தகவல். கலைஞரின் படைப்புகள் தமிழக மக்களிடம் எத்தகைய வரவேற்பைப் பெற்றன என்பது உங்கள் அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான். உதாரணத்திற்கு, சுவாரசியமான இரண்டு நிகழ்வுகளை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மனோகரா திரைப்படத்திற்கு தினமணி கதிரில் விமர்சனம் வெளியாகியிருந்தது. படத்தின் கதை, திரைக்கதை, இசை, இயக்கம், தொழில்நுட்பம் இவை எல்லாவற்றையும் தாண்டி அவர்கள் அதிசயித்த ஒரு விஷயம் கலைஞரின் வசனங்கள். எழுத்து தவிரவும் தமிழ் சினிமாவிற்கு அவர் செய்த பங்களிப்புகள் பல உண்டு. தமிழ்நாடு திரைப்பட மேம்பாட்டுக் கழகத்தை நிறுவியது; தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுத் தொகையைப் பன்மடங்கு கூட்டியது; தமிழில் பெயர் வைக்கும் திரைப்படங்களுக்கான வரிச் சலுகையை அமல்படுத்தியது என்று அடுக்கலாம். எல்லாமாகச் சேர்ந்துதான் என் தமிழாசான்கள் பட்டியலில் கலைஞர் முதல் பெயராக நிற்கிறார். அப்படிப்பட்ட ஆசானாலேயே கலைஞானி என்று பட்டம் சூட்டப்பட்டது, என்னைப் பட்டத்து இளவரசனைப்போல் உணரவைத்த தருணம். சம்பிரதாயத்துக்குப் பட்டம் கொடுத்துவிட்டு ஒதுங்கிவிடாமலும் ஒதுக்கிவிடாமலும், தன் பயணத்தில் என்னை இணைத்தபடியே அவர் தொடர்ந்த பாங்கு மறக்கமுடியாதது.

தமிழ்க் கலையின், தமிழ்த் திரையின், வரலாற்றில் மைல் கல்லாக அமைந்தவை கலைஞரின் பங்களிப்புகள். ■

# தமிழோடு வாழ்ந்த காலம்!

- கவிப்பேரரசு வைரமுத்து

கலைஞருடனான எனது நெருக்கம் அன்பால் அமைந்தது. அவருடனான நெருக்கமும், உரையாடல்களும் சாதாரணமாக நிகழ்ந்ததல்ல, அவ்வளவு எளிதும் அல்ல. அவரது உயரத்துக்குத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்கிற தவிப்பில் நிகழ்ந்தது. அதற்குத் தகுதி உடையவராக இருக்க வேண்டும் என, எனக்கு நானே தேர்வு வைத்து, மெல்ல மெல்ல என்னை வளர்த்துக் கொண்டேன். முப்பத்து ஐந்து வருடங்களாக அவருடன் நெருங்கிப் பழகி, பேசியவை எல்லாம், தனி நூலாகத் தொகுக்கும் அளவுக்கு அடர்த்தி கொண்டவை.

## எழுத்துகளோடு முதல் அறிமுகம்

"கலைஞரை முதன்முதலில் "பராசக்தி" வசனத்தில் கேட்டுப் பார்த்தும், வசனப் புத்தகத்தில் தொட்டுப் பார்த்தும் உணர்ந்தேன். சொற்களுக்குப் பின்னால் பயணப்பட்டு ஒரு மனிதரை, அவருடைய உருவத்தை, ஸ்பரிசத்தை அடைய முடிந்த அனுபவம் அது. என்னுடைய பதினொரு வயதில் நிகழ்ந்தது. என் சித்தப்பா பாண்டி, வாங்கி வைத்திருந்த வசனப் புத்தகத்தை மனப்பாடம் செய்தேன். அந்த வசனங்களில் இருந்த சொல்லாட்சிகளில் சொக்கிப் போனேன்.

"சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்" என்பார்கள். அந்தச் செந்தமிழ் எனக்கு நாப்பழக்கமாகியது "பராசக்தி" வசனங்களால்தான்.

விவசாயக் குடும்பத்தில் பிறந்த நான், எட்டுத்தொகை பத்துப்பாட்டு வரை பயணப்பட முடிந்தது. இலக்கியப் பரிச்சயம் என்பது மலைக்கும் மடுவுக்குமான இடைவெளி. ஆனால், அந்த இடைவெளியைக் கலைஞரின் எழுத்துக்கள்



குறைத்தன. ஆக கலைஞரோடு அறிமுகமாவதற்கு முன்னரே கலைஞரின் எழுத்துகளோடு அறிமுகப்படுத்திக் கொண்டேன்.

## முதல் சந்திப்பு

1972-ஆம் ஆண்டு, பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது கலைஞர் முதலமைச்சர். ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று, கல்லூரியின் திருவள்ளுவர் மன்ற விழாவுக்கு வருகிறார். அவரைத் தமிழ்க்காதலனாக வரித்துக் கொண்டிருந்த எனக்கு, முதல் நாள் இரவிலிருந்தே இருப்புக் கொள்ளவில்லை. நிகழ்வுக்கு வருகை தந்த கலைஞரை, கல்லூரி மாணவன் என்கிற உரிமையோடு வாசலில் நின்று வரவேற்றேன். அவரைக் காணவேண்டும் என்கிற கனவுகளோடு காத்திருந்த எனக்கு, அது மிகப்பெரிய மகிழ்ச்சி. வழியனுப்பும்போதும் அவர் கார் கதவைச் சாத்திவிட்டு நின்றேன். என்னை அவருக்குத் தெரியாது. ஆனாலும் நெடுங்காலம் பழகிய உரிமையோடு அவரோடு அன்பு பாராட்டினேன்.

## முதல் கவியரங்கம்

கடலில் மறைந்த பூம்புகார் நகரைக் கரைக்குக் கொண்டு வந்த கலைஞர், 1975-ஆம் ஆண்டு அங்கு "இந்திர விழா" எடுத்தார். அப்போது எம்.ஏ. முதலாமாண்டு படித்துக் கொண்டிருந்தேன். அந்த விழாவில், ஒன்பது தலைப்புகளில் ஒன்பது கவிஞர்கள் கலந்து கொண்டோம். "சிலப்பதிகாரத்தில் ஒன்பான் சுவைகள்" பொதுத்தலைப்பு. அவர்களில், நான் மட்டும்தான் மாணவன். மற்ற எல்லோரும் கல்லூரிப் பேராசிரியர்கள். எனக்கு "உவகை" என்ற தலைப்புக் கொடுக்கப்பட்டது. 40 ஆயிரம் பேர் கலந்துகொண்ட கவியரங்கம். அந்த நிகழ்வுதான் வைரமுத்து என்ற பெயரை தமிழ்நாடெங்கும் பச்சைகுத்தியது. கலைஞர் என் பெயரை மனதில் எழுதிக்கொண்ட மேடை அதுதான். அங்குதான் என் முதல் நூலான "வைகறை மேகங்களை" அவருக்குக் கொடுத்தேன். "என் துரோணருக்கு உங்கள் ஏகலைவன் வைரமுத்து" என எழுதிக் கொடுத்தேன். அதன்பின்னர் சில இடங்களில் சந்தித்துக் கொண்டாலும் நெருங்கியதில்லை.

## மிசாவில் உடனிருந்தேன்

மிசா காலக்கட்டத்தில் ஆட்சி கலைக்கப்பட்ட பின்னர்தான், கலைஞருடன் உறவு அதிகமாயிற்று. நானும், என்னைச் சார்ந்த நண்பர்களும் அவரைச் சென்று அடிக்கடி பார்த்துவிட்டு வருவோம். "பேச்சுத் துணைக்கு" இருப்போம். அப்போதும் எனக்கு அவ்வளவு நெருக்கமில்லை என்றாலும், என் அன்பை அவரிடம் காட்டிக் கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. நான் அரசுப் பணியில் இருந்தேன் என்பதால், ஞாயிற்றுக்கிழமைகளில் அவரைச் சென்று சந்தித்து விடுவேன். அதனால், "இங்கு அடிக்கடி வருவதால், உங்கள் பணிக்கு பாதிப்பு வந்துவிடப் போகிறது, பார்த்துக் கொள்ளுங்கள்" என்று ஒருமுறை கூறினார். அவ்வளவு அக்கறை கொண்டிருந்தார். அந்த அன்பு நெகிழ்வைத் தந்தது.

## நகைச்சுவை

கலைஞருடனான உரையாடல்களில் அவரது மொழி வளம் ஆச்சரியத்தை அளிக்கும். நாம் நினைத்துப் பார்க்காத நேரத்தில் அதைப் பிரயோகம் செய்வார். ஒருமுறை தொலைபேசியில் அவர் அழைத்தபோது, நான் கிடைக்கவில்லை. பிறகு நான் அவருக்கு போன் செய்தபோது, "ஐயா மன்னிக்கணும், நீங்கள் அழைத்தபோது நான் முடிவெட்டிக் கொண்டிருந்தேன்" என்றேன். "தப்பாச் சொல்றீங்களே" என்றவர், "முடிவெட்டிக் கொண்டிருந்தீர்கள் என்றால், நீங்களே வெட்டிக் கொண்டிருப்பதாக அர்த்தம், முடி வெட்டப்பட்டுக் கொண்டிருந்தேன் என்றால்தானே சரியாக இருக்கும்" என்றார். அந்த நேரத்து வெடிச்சிரிப்புக்குச் சொல்ல வேண்டுமா? கலைஞர் சொல் விளையாட்டுகளில் அதி வித்தகர்.

## நீரடித்து நீர் விலகுவதில்லை

அவருக்கு நெருக்கமான நேரங்களில் நான் இருக்க வேண்டும் என எதிர்பார்ப்பார். இரண்டாயிரமாவது ஆண்டில், குமரி முனையில் திருவள்ளுவர் சிலை திறப்புவிழா நிகழ்வுக்கு முதல் நாள் கவியரங்கம் நடைபெற்றது. அதற்கு அடுத்த நாள் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நான் ஏற்கெனவே ஒப்புக்கொண்ட ஒரு விருது நிகழ்ச்சி. எனவே கவியரங்கத்தை முடித்துவிட்டு, கலைஞரிடம் விடைபெற்றுக் கொள்வதற்காகக் கேட்டேன். "திருவள்ளுவர் சிலை திறப்பதைவிட உங்களுக்கு அந்த நிகழ்ச்சி பெரிதாகிவிட்டதா?" என கோபப்பட்டார். அவரால் விடை கொடுக்க முடியவில்லை, என்னால் விடை பெறவும் முடியவில்லை. ஆனால், கொடுத்த வாக்கை நிறைவேற்ற வேண்டும் என்பதால், நான் சென்னை நிகழ்ச்சியில் கலந்து கொண்டேன். அடுத்த பத்து நாட்கள் என்னோடு அவர் பேசவில்லை. ஆனால், முரசொலியில் "நீரடித்து நீர் விலகுவதில்லை" என்று ஒரு கடிதம் எழுதியிருந்தார். எனது கைகள் அனிச்சையாகக் கலைஞருக்குத் தொலைபேசி செய்தன. வழக்கம்போல பேசத் தொடங்கினோம்.

எவ்வளவு கோபம் வருகிறதோ, அவ்வளவு சீக்கிரம் மாறி விடுவார், அதை மறந்து விடுவார். "மறப்போம், மன்னிப்போம்" என்பதுதான் அவரது அழகான குணம்.

## "வைரமுத்து கவிதைகள்" முன்னுரை

அவருடைய எழுத்துகளுக்கு நானும், என்னுடைய எழுத்துகளுக்கு அவரும் மிக நீண்ட கால ரசிகர்கள் என்பது எழுதப்பட்ட கதை. இருந்தாலும், என்னுடைய வைரமுத்து கவிதைகள் தொகுதிக்கு அவர் எழுதி இருக்கும் முன்னுரை, என்மேல் கொண்ட அன்புக்குச் சான்று என்பேன். இதுவரை அப்படி ஒரு முன்னுரையை எவரும் எழுதி இருக்க முடியாது. அது நான் பெற்ற பேறு. அவரது மறைவுக்குப் பிறகு நான் பாதி மனிதனாகிவிட்டேன். என் உரையாடல் வெளி சுருங்கிவிட்டது.

## இலக்கிய உறவு

ஒரு கால் நூற்றாண்டு காலம் நானில்லாமல் அவரது நூல் வெளியீட்டு விழாவும், அவரில்லாமல் என் நூல் வெளியீட்டு விழாவும் நடந்ததில்லை. எனது 17 நூல்களை அவர் கரங்களால் வெளியிட்டிருக்கிறார். வைரமுத்து கவிதைகள் நூலை நான் அவருக்கே காணிக்கையாக்கி இருக்கிறேன். அவரது சில நூல்களுக்கு நான் முன்னுரை எழுதியிருக்கிறேன். எங்கள் உறவை ஆசான் - மாணவன் என்பதா? தந்தை - மகன் என்பதா? கலைஞர் - ரசிகன் என்பதா? பெருந்தோழர் - தோழர் உறவு என்பதா? அவரை எப்போது நினைத்தாலும் என் கண்கள் நீர் கட்டுகின்றன. ■







# திரைத்துறையை திருப்பிப் போட்ட போராளி

-திரு . S . P . முத்துராமன், இயக்குநர்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு என்பது தமிழகத்தின் நூற்றாண்டு "சரித்திரம்".

கலைஞரின் எழுத்து பேச்சு நடிப்பு - ஆளுமை கொள்கைப் பிடிப்பு - எடுத்த காரியத்தை திறமையோடு முடிப்பது - நிர்வாகம், இப்படி அவரின் சாதனைகள்தான் எங்களைக் காந்தமென இழுத்தது. எங்களுக்குக் கிடைத்துள்ள எல்லாப் புகழும் "கலைஞருக்கே".

17-10-1952 அன்று வெளிவந்த படம் "பராசக்தி". தமிழ்த் திரையுலகையே திருப்பிப் போட்ட படம். "பராசக்தி" படத்தின் வசனம் கலைஞர். அது வசனமல்ல கொள்கை முழக்கம். மக்கள் மனதில் பதிந்தது பகுத்தறிவு. தடை வரும் என்றார்கள். அதனாலேயே படையென திரண்டது மக்கள் கூட்டம். வழக்கமாக பாடல் புத்தகம் வெளிவரும். இப்படத்திற்கு வசனப்புத்தகம் வெளியிட்டார்கள். வசன ஒலித்தட்டு தெருவெங்கும் ஒலித்தது. கலைஞரின் வசனங்களை மனப்பாடம் செய்து, பள்ளியில் சிவாஜி போல் நடித்துக்காட்டி கைதட்டு வாங்கினேன். அந்தப் பாராட்டுதான் என்னை சினிமாத் துறையில் பணியாற்ற வேண்டுமென்ற "இலட்சியத்தை" உருவாக்கியது. "பராசக்தி" படம் விமர்சனங்களுக்கு உள்ளானது. ஒரு பத்திரிகை "கதை-வசவு கருணாநிதி பரப்பிரம்மம்" என்று கேலி செய்தது. போராளி கலைஞர் பயந்து விடுவாரா? "பரப்பிரம்மம்" என்ற தலைப்பிலேயே நாடகம் நடத்தி அவர்களை பரபரப்பாக்கினார். "பதிலடி".

நான் SSLC படித்து பாஸ் செய்ததும், என்னை சினிமாவில் சேர்த்து விடுங்கள் என்று அடம் பிடித்தேன். என் தந்தையார் கவியரசர் கண்ணதாசனிடம் என்னைக் கூட்டிச் சென்று விவரத்தைக் கூறினார்கள். கவியரசர், "இப்போதுதான் பள்ளிப் படிப்பை முடித்திருக்கிறான். சினிமாவில் பணியாற்ற உலக அனுபவம் வேண்டும். என்னிடம் "தென்றல்" பத்திரிகையில் பணியாற்றட்டும். அதன்பிறகு சினிமாவில் சேரட்டும்" என்று கூறியதால் அவர் வீட்டிலேயே தங்கிக் கொண்டு தென்றலில் பணியாற்றினேன். இரண்டு ஆண்டுகள் ஆன பிறகும் கவியரசர் என்னை சினிமாவில் சேர்க்கவில்லை. "தம்பி" "தம்பி" என்று கூடவே வைத்துக் கொண்டார்.

மீண்டும் என் தந்தையாரிடம் சினிமாவில் சேர்த்து விடுங்கள் என்று கூற, என் தந்தையார், அறிஞர் அண்ணாவின் "ஓர் இரவு" நாடகத்தை ஏவிஎம் அவர்கள் சினிமாவாக எடுக்க விரும்பினார்கள். நான்தான் அண்ணாவிடம் கூறி ஏவிஎம்மிற்கு வாங்கிக் கொடுத்தேன். "வா, ஏவிஎம்மைப் பார்க்கலாம்" என கூட்டிச் சென்றார்கள். நான் தென்றலில் வேலை பார்ப்பதால், "சினிமாவில் எடிட்டிங்கில் சேர்ந்து வேலை பழகிக்கொள்" என்று அப்ரென்டிசாகச் சேர்த்துக் கொண்டார்கள். எடிட்டிங்கில் வேலை பழகினேன். அதுதான் நான் டைரக்டர் ஆவதற்கு அஸ்திவாரம். அதன்பிறகு டைரக்டர்

ஏசி.திருலோகசந்தரிடம் உதவி டைரக்டர். அவர்தான் என் "குரு". கலைஞர் அவர்கள் அடிக்கடி ஸ்டுடியோவுக்கு வருவார்கள். என்னைப் பார்த்ததும் என் தந்தையார் எப்படி இருக்கிறார்கள் என்று விசாரிப்பார்கள். என் தந்தையார் அவர்கள் "கல்லக்குடி" போராட்டத்தில் கலைஞரோடு சிறைக்கு சென்றவர்கள். "நெஞ்சுக்கு நீதி" நூலில் கலைஞர் அவர்கள் சுறுசுறுப்புக்கு மறுபெயர் அண்ணன் இராம. சுப்பையா என்று எழுதியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல கலைஞர் முதலமைச்சர் ஆன பிறகு ஒரு நாள் இரவு, முரசொலி செல்வம் எங்கள் வீட்டிற்கு வந்தார்கள். வரவேற்றோம். செல்வம் என் தந்தையாரிடம் கலைஞர் உங்களை மேல்சபை உறுப்பினராக ஆக்கியுள்ளார் என்றார். என் தந்தையார் மகிழ்ந்து போனார். என் தந்தையார் கலைஞரிடம் எதுவும் கேட்கவில்லை. அவரின் தொண்டினை உணர்ந்து கலைஞரே பதவியைக் கொடுத்தார். அதுதான் கலைஞர். என் தந்தையார் ஓடி ஓடி தொண்டுகள் செய்வாரே தவிர மேடை ஏறிப் பேசமாட்டார். அந்தக் குறையைப் போக்க என் தம்பி பேராசிரியர் சுப.வீரபாண்டியன் மேடை ஏறி சுற்றி சுற்றிப் பேசி வருகிறான். அவன் பேச்சைக் கேட்டு கலைஞர் சொல்லுவார் "வீரபாண்டியன் யார் தெரியுமா? காரைக்குடி இராம.சுப்பையா அண்ணன் பையன்." கலைஞர் அவர்களுக்கு அவ்வளவு மகிழ்ச்சி, அவன் பேசுவதற்கு பல ஆலோசனைகளையும் வழங்குவார்கள்.

நான் ஏவிஎம்மில் பதினைந்து ஆண்டுகள் எடிட்டிங்கிலும், உதவி துணை இயக்குநராகவும் பணியாற்றிய பிறகு வி.சி.குகநாதனின் "கனிமுத்து பாப்பா" மூலம் இயக்குநர் ஆனேன். அதன் பிறகு நாங்கள் தயாரித்த "பெத்த மனம் பித்து" படம் நூறு நாள் ஓடியது. அதற்காக இராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் விழா எடுத்தோம். உயர்திரு ஏவிஎம் அவர்கள் தலைமை வகிக்க, கலைஞர் அவர்கள் கேடயங்களை வழங்கினார்கள். விழாவில் தலைமையுரையாற்றிய ஏவிஎம் அவர்கள் அனைவரையும் பாராட்டிவிட்டு, "இந்தப் படத்தை இயக்கிய S.P.முத்துராமன், ஏவிஎம் ஸ்டுடியோவில் வேலை பயின்றவர்... 'எங்கள் வீட்டுப் பிள்ளை'" என்றார்கள். விழா சிறப்புரையாற்றிய கலைஞர் அவர்கள், "ஏவிஎம் அவர்கள், S.P.முத்துராமனை 'எங்கள் வீட்டுப் பிள்ளை' என்று கூறினார்கள். கழகத் தொண்டர் என் அண்ணன் இராம.சுப்பையாவின் மகன்தான் எஸ்பி.முத்துராமன். அதனால், முதலில் முத்துராமன் 'எங்கள் வீட்டுப் பிள்ளை'" என்று கூறி பெருமைப்படுத்தினார்கள். நான் மகிழ்ச்சியின் உச்சிக்கே போனேன். எனக்கு "ராஜா சாண்டோ விருது", முரசொலி அறக்கட்டளை விருது கொடுத்து ஊக்கப்படுத்தினார்கள்.

கலைஞர் வசனம் எழுதிய முதல் இரண்டு படங்களுக்கு டைட்டிலில் பெயர் போடவில்லை. படைப்பாளியின் கோபம். தன் முழுத்திறமையையும் காட்டி வசனங்கள் எழுதி, வசனம்-கலைஞர் என்று போட்டால்தான் மக்கள் விரும்புவார்கள் என்ற நிலையை உருவாக்கினார். எழுத்தாளர்களுக்கு உரிய உரிமையை வாங்கித் தந்தார். நடிகர்களை கூத்தாடிகள் என்று கேலி செய்த காலத்தில், தானே மேடை ஏறி நடித்து "நடிகர்கள்" கலைஞர்கள் என்று மரியாதையோடு அழைக்க வைத்தவர். அவர்களுக்கு வாழ்வளித்தவர். 'மே தின' விழாவிற்கு சம்பளத்தோடு விடுமுறை கொடுத்து தொழிலாளர் தினத்திற்கு மரியாதை செலுத்தினார்.

திரைப்படத்துறையில் காம்பவுண்டிங் டாக்ஸை ஒழுங்கு படுத்தியது, படத்திற்கு தமிழ்ப் பெயர் வைத்தால் நிதி உதவி, பல விருதுகள், பல பரிசுகள், திரை உலகத்திற்கு பல பிரச்சனைகள் ஏற்பட்டபோது அவைகளைத் தீர்த்து வைத்த பெருமை அவருக்கு உண்டு. "தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கம்" தோன்றுவதற்குக் காரணமே கலைஞர்தான்.

கலைஞருக்கு இறுக்கமான "சூழ்நிலைகள்" ஏற்பட்ட போதெல்லாம், கலை விழாக்களில் கலந்து கொண்டு நான் "இளைப்பாறும் இடம்" கலைத்துறை என்றார்.

"ஒரே ரத்தம்", ஒதுக்கப்பட்ட பட்டியல் இனத்து மக்களின் கதை. கலைஞருக்கு வசனம் எழுத நல்ல வாய்ப்பு. பட்டியல் இனத்து மக்களுக்காக கலைஞர் வாதிட்டார். இந்தப் படத்தில் இன்றைய முதல்வர், அன்றைய தளபதி ஸ்டாலின் அவர்கள் நடித்தார்கள். தந்தையும் மகனும் 'ஒரே ரத்தம்' கொள்கையிலும்-செயலிலும்.

"பிள்ளையோ பிள்ளை" படம் கலைஞரின் மகன் மு.க.முத்துவுக்காக எடுத்த படம். முத்து நடிகர் மட்டுமல்ல-நல்ல பாடகரும் கூட. கலைஞரின் 'பிள்ளையோ பிள்ளை' மு.க.முத்து, பல படங்களில் நடித்தார்.

"மனோகரா" கலைஞரின் வெற்றிப் படங்களில் ஒன்று. டைரக்டர் L.V.பிரசாத். சிவாஜியும் கண்ணம்மாவும் போட்டி போட்டு வசனம் பேசி நடித்த படம். அரசவைக்கு மனோகரனை சங்கிலியினால் கட்டி இழுத்து வருவார்கள்.

அரசர்: "மனோகரா! உன்னை எதற்காக அழைத்திருக்கிறேன் தெரியுமா?"
மனோகர்: "திருத்திக் கொள்ளுங்கள் அரசே! அழைத்து வரவில்லை, என்னை இழுத்து வரச் செய்திருக்கிறீர்கள்."

என்று நீதிக்காக வசனம் பேசி சங்கிலியை அறுத்துக் கொண்டு மன்னனோடு சண்டைக்கும் போவான்.

இது காட்சி. படத்தின் தயாரிப்பாளரின் மாப்பிள்ளை, சிறையிலிருந்த கலைஞரைச் சந்தித்து, இந்தக் காட்சி இயற்கையாக இல்லை. காளியின் அருளால் சங்கிலி அறுந்தால் இயற்கையாக இருக்கும். காட்சியை இப்படி மாற்றிவிடலாம் என்றார். கலைஞர், "மனோகரன் பேசுகிற நியாயத்துக்கான வசனம், காளியின் அருளைவிட பலம் கொண்டது. அதனால் மாற்ற முடியாது" என்று கூறிவிட்டார். மாப்பிள்ளை தலைகுனிந்தார். மக்கள் கைதட்டி கலைஞரை தலை நிமிர வைத்தனர்.

கலைஞர் தன் கொள்கைக்காக எதிர்த்து நின்று போராடுவார். வெற்றி பெறுவார். கலைஞர் என்ற "போராளி" தோற்றதில்லை. என்றும் எப்போதும் "வெற்றி" தான்.

கால மாற்றங்களை ஏற்றுக்கொண்டு, அவைகளைக் கற்றுக்கொண்டு "வெற்றி" கண்டவர் கலைஞர். அதனால்தான், அண்ணன் நடிகர் திலகம் சிவாஜிக்கும் வசனம் எழுத முடிந்தது. அவர் மகன் இளைய திலகம் பிரபுவுக்கும் எழுத முடிந்தது. இறுதிச் சுற்றில் பல புத்தகங்களைப் படித்து "ராமானுஜருக்கும்" வசனம் எழுதினார். படிப்பு, படிப்பு, அதன் பிடிப்பினால் தான் பேனாவை பலமாகப் பிடித்துக் கொண்டார். அவர் கடைசிவரை பேனாவை விடவில்லை. பேனாவும் அவரை விடவில்லை.

கட்சி, ஆட்சி, கலைத்துறை, முரசொலி, முதல்வர் பதவி - இலக்கியம் சமூகப் பிரச்சினைகள்... இரண்டு குதிரையில் பயணிப்பதே கஷ்டம். கலைஞர் பல துறைகளில் பயணித்து எல்லாத் துறைகளிலும் முதல்வராகத் திகழ்ந்தார். ■

# பாசமுள்ள பெரியப்பா

- திரு. பிரபு, நடிகர்

கலைஞர் வசனமும், சிவாஜி நடிப்பும் போல ஈடு இணையில்லாத நட்பு கலைஞர் பெரியப்பா, சிவாஜி அப்பா இருவரின் நட்பு. அப்பாவின் திருமணத்தில் மாப்பிள்ளைத் தோழனாக இருந்து தன் அன்பை வெளிப்படுத்தியவர் கலைஞர் பெரியப்பா.

நான் பெங்களூரு பிஷப் கார்டன் பள்ளியில் எட்டாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த சமயம். எங்கள் பள்ளிக்கு எதிரில் இருக்கும் உட்லண்ட்ஸ் ஹோட்டலில் அய்யா கலைஞர் தங்கியிருக்கிறார் என்று கேள்விப்பட்டு அவரைப் பார்க்கப் போனேன். அவர் தங்கியிருந்த ரூம் கதவைப்போய் தட்டினேன். கதவைத் திறந்தது கலைஞர் அய்யா. அவரைப் பார்த்ததும் எனக்கு சந்தோஷமாயிடுச்சு. அவரும் "வா பிரபு" என்று என்னை அன்போடு உள்ளே அழைத்துச் சென்றார். எல்லோரிடமும் நம்ம கணேசு மகன் என்று பெருமிதத்துடன் சொல்லி, சிறுவனான என்னை பெருமைப்படுத்தினார். எனக்கு என்ன பிடிக்கும் என்று கேட்டு பாதாம் கீர் வாங்கிக் கொடுத்தார். தென்பாண்டிச்சிங்கம் என்ற புத்தகத்தில் அன்பான வாசகம் எழுதி கையெழுத்திட்டு எனக்குப் பரிசாக வழங்கினார். அதேபோல், நான் நடிகர் ஆனதும் கலைஞர் அய்யா அவர்களிடம் ஆசீர்வாதம் வாங்கினேன். "உங்க அப்பா சிவாஜி கணேசன் நடிப்புக்கே சக்கரவர்த்தி. அவர் அளவுக்கு நீ வளரனும்" அப்படின்னு மனசார வாழ்த்தினார்.

பூம்புகார் புரொடக்ஷன்ஸ் தயாரிப்பில் கலைஞர் அய்யா கதை வசனத்தில் "பாலைவன ரோஜாக்கள்" படத்தில் நான் நடித்தேன். படப்பிடிப்புத் தளத்தில் கலைஞர் அவர்களின் வசனத்தை அவர் முன்னே பேசும் சமயங்களில் எல்லாம் பயங்கர டென்ஷன் ஆக இருக்கும். ஆனால் எங்களை கலைஞர் அய்யா கேலி செய்தாலும் சுவாரஸ்யமாகப் பேசி, சொல்லிக்கொடுத்து நன்றாக பேச வைப்பார். நகைச்சுவையாகப் பேசி, தான் இருக்கும் இடத்தை கலகலப்பாக வைப்பதில் கலைஞர் அவர்கள் "மஹா கலைஞர்".




நான் நடித்த "காவலுக்கு கெட்டிக்காரன்" படத்தோட வசனம் எழுதியது கலைஞர் அய்யா. "கிளியோபட்ரா" ஓரங்க நாடகம் அந்த படத்துக்காக எழுதப்பட்டது. கலைஞர் அய்யா எழுதி அய்யா நடிகர் திலகம் பேசி நடித்த மனோகரா, ராஜாராணி படத்தில் இடம்பெற்ற "சேரன் செங்குட்டுவன்", ஒரே டேக்கில் எடுக்கப்பட்ட ஓரங்க நாடகம், போன்ற அத்தனை சாதனைகளும், இரட்டைக்குழல் துப்பாக்கி போல் இருந்துச்சு. நான் சிறுவயதிலிருந்து பெங்களூர் கான்வென்டில் ஆங்கிலத்தில் படித்தவன். தமிழ் என்றாலே தரிகடதோம்தான். அதிலும் கலைஞர் அவர்களின் வசனம்னா சொல்லனுமா என்ன?

நான் தமிழில்தான் "கிளியோபட்ரா" வசனம் பேசினேன். ஆனால் கலைஞர் அய்யா "பிரபு, தமிழில் பேசிக்காட்டு. கணேசு எப்படி பேசுவாரு, நீ என்ன இப்படி பேசுற" என்று கிண்டலடிப்பார்.

அப்புறம் கலைஞர் அய்யா அந்த வசனத்தை டேப்ரிகார்டரில் பேசி கேசட்டை என்னிடம் கொடுத்துவிட்டு "எப்படிப் பேசவேண்டும் என்று கணேசுகிட்ட கேட்டுக்கொள்" என்று சொல்லிட்டாரு. நானும் சூரக்கோட்டையில் தங்கியிருந்த அப்பாவுக்கு அனுப்பி வச்சேன். அப்பா வேறு ஒரு தொணியில் பேசி அனுப்பினாரு. அப்பா பேசின தொணியில் பேசி நடித்துதான் கலைஞர் அவர்களிடமும் ரசிகர்களிடமும் பாராட்டு பெற்றேன். அதற்கு முழுக்காரணம் வசனகர்த்தா கலைஞர் அவர்கள். வசனம் எழுதுவதில் கலைஞருக்கு நிகர் கலைஞர்தான்.



கலைஞர் அய்யா ஆட்சியின்போதுதான் எனக்கு "கலைமாமணி" விருது மற்றும் "புரட்சித்தலைவர் விருது" கொடுத்து மகிழ்வித்து



மகிழ்ந்தார். என்னை எங்கே பார்த்தாலும் அன்போடு கன்னத்தைக் கிள்ளுவார். "உங்க அப்பா கன்னத்தைத் தான் கிள்ள முடியலை, அதனால் உன் கன்னத்தையாவது கிள்ளிக்கிறேன்" என்று பாசத்தோடு சொல்லுவார்.

ஆனால், கலைஞர் வீட்டில் டெலிவிஷனில், சிவாஜி அப்பா நடித்த படங்களைப் பார்க்கும்போது, ஓடிப்போய் நடிகர் திலகம் அவர்களின் கன்னத்தைத் தொட்டு முத்தம் கொடுப்பாராம். அதை நெகிழ்ச்சியுடன் எல்லோரிடமும் குழந்தைபோல் சொல்லி சந்தோஷப்பட்டவர் கலைஞர் அய்யா. அப்பாவும், பார்ப்பவர்களிடம் எல்லாம் "வசனம் எழுதுவதில் முனா கானா மாதிரி வருமா" (அப்பா கலைஞர் அய்யாவை பாசத்துடன் அப்படித்தான் சொல்வார்) என்று சொல்லி பெருமைப்படுவார். தான் முதல்வராக இருக்கும்போது தன் நட்பை உலகுக்கு உணர்த்தும் வகையில் கலைஞர் பெரியப்பா, சிவாஜி அப்பாவுக்கு மெரினா பீச்சில் சிலை வைத்து அழகு பார்த்தார். அப்பாவுக்கு தப்பாத பிள்ளையாக மகன் எங்க ஸ்டாலின் அண்ணன் எங்க குடும்பத்தினரிடம் காட்டும் பாசத்தில் கலைஞர் அய்யாவை ஞாபகப்படுத்திக்கொண்டே இருக்கிறார்.

நடிகர் திலகம் அவர்களின் மணி மண்டபத்தில் மக்கள் எப்பொழுதும் பார்க்கும் விதமாக, புதிதாக சிவாஜி கணேசன் அவர்களின் சிலை செய்து அதை வெளிப்புறத்தில் வைத்து அரசாங்க மரியாதை கொடுத்து பெரும் விழா எடுத்தார்.




மூன்றாம் தலைமுறை நட்புச் சங்கிலியாக அன்புத்தம்பி உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விக்ரம் பிரபுவிடமும் எங்க குடும்பத்தினரிடமும் அளவு கடந்த அன்பு வைத்துள்ளார்.

உலகெங்கும் "கலைஞர் 100" விழா சிறப்பாகக் கொண்டாடி வருவது சிறப்பு. தமிழ் உள்ளவரை கலைஞர் அய்யா புகழ் நிலைத்திருக்கும். ■

# எழுதியதையா திரும்ப எழுத முடியும்?

**-திரு. நாசர், நடிகர்**



அரசியல், சினிமா என எல்லாத் துறைகளிலும் உச்சம் தொட்ட கலைஞர், அணுகுவதற்கு எளிமையானவராக இருந்தார். அந்த முரண் ஆச்சரியமானது. அவரைக் கொண்டாடுவதற்கு ஒவ்வொருவருக்கும் ஒரு காரணத்தை அளித்திருப்பதுதான் கலைஞர் என்கிற ஆளுமையின் சிறப்பு.

கலைஞர் அவர்களின் ஐந்து படைப்புகளில் இடம்பெற்றிருக்கிறேன் என்பதே எனக்குப் பெருமைதான். முதன்முதலில் அவரின் "நியாயத்தராசு" படத்தில் இடம்பெற்றேன். அந்தப் படத்தின் வசனங்கள் எல்லாம், "ஷார்ட்" ஆக ஒரு சில வரிகளில் இருக்கும். 1950 - 60-களில் வசனங்களில் புரட்சி ஏற்படுத்தியவர். இயக்குநருக்கு ஏற்ப "ஷார்ட்" ஆன வசனங்கள் படைத்தது வியப்பளிக்கும். அந்தப் படத்துக்காக, படக்குழு அனைவரும் அவரைச் சென்று சந்தித்தோம். முதன்முறையாக அவரை நேரில் பார்க்கையில், எனக்கு இனம்புரியாத மகிழ்ச்சி ஏற்பட்டது.

### கற்றுக்கொள்ள வேண்டிய அர்ப்பணிப்பு

கலைஞரும் படப்பிடிப்புக்கு அவ்வப்போது வருவார். எழுதிக்கொடுத்துவிட்டு, எப்படியாவது எடுத்துக் கொள்ளுங்கள் என இருக்கமாட்டார். எழுத்துக்கு என தினமும் நேரம் ஒதுக்குவதைப்போல, எழுதியவை சரியாக வருகிறதா எனப் பார்ப்பதும் கலைஞரின் வழக்கம். எடிட்டிங் அறைகளுக்கு வந்து காட்சிகளைப் பார்த்து கரெக்‌ஷன் சொல்வதையும் கவனித்திருக்கிறேன்.

எடுத்துக்கொண்ட பணிக்காக நேரமோ, காலமோ, புயல், மழை என எந்தத் தடங்கலையும் காட்டிக் கொண்டதில்லை. அந்த "டெடிகேஷனில்" கொஞ்சமாவது நான் கற்றுக்கொள்ள வேண்டும் என நினைத்திருக்கிறேன்.

அதன் பின்னர் "பாசப்பறவைகள்", "பொன்னர் சங்கர்", "இளைஞன்" என அவரது படங்களில் நான் நடித்திருக்கிறேன். எனக்கு முக்கியமாகவும், நெகிழ்வாகவும் இருந்தது அவரின் "தென்பாண்டிச் சிங்கம்" நாவல் தொலைக்காட்சித் தொடராக எடுக்கப்பட்டபோது, அதன் பிரதான கதாபாத்திரமாக நான் நடித்ததுதான்.

அந்தப் பாத்திரத்துக்கு யார் கிடைக்கிறார்களோ அவர்களைப் பயன்படுத்தலாம் என அவர் நினைக்கவில்லை. அந்த எழுத்தை, அந்தப் பாத்திரத்தைச் சுமக்கும் அளவுக்குத் திறன் கொண்டவர் யாராக இருக்கலாம் என அவர் யோசித்திருப்பார். அப்போது என் பெயரைத் தேர்வு செய்தது, நான் பெருமைப்பட்ட தருணமாக இருந்தது. அவரது முக்கியமான புதினம் ஒன்றை என் தோள்களில் வைக்கிறாரே என்கிற கடமை உணர்ச்சியும் எனக்கு அதிகரித்தது. நடிகனாக நான் பெருமையை உணர்ந்த நாட்கள் அவை.

### கருத்து சரியாக இருந்தால் போதும்

அந்தத் தொடரில் நடிப்பதற்காக அவரை நேரில் சந்தித்தேன். அந்த நாவலின் இரண்டு பிரதிகளை வாங்கி, ஒன்றை வீட்டிலும், ஒன்றை என் கைகளிலும் வைத்துக்கொண்டேன்.

அதேநேரத்தில் கலைஞர் அவர்களும் அவரது கையெழுத்திட்டு ஒரு பிரதி அளித்தார். படப்பிடிப்பின்போது சில காட்சிகளை நினைவுபடுத்தி அது குறித்து, எனது யோசனைகளைக் கேட்பார்.

அவரது வசனத்தை அப்படியே பேசவேண்டும் என கலைஞர் எதிர்பார்ப்பார் எனச் சிலர் கூறி இருந்தனர். ஆனால், அப்படி யெல்லாம் இல்லை என்பதை அவரது படைப்புகளில் நடிக்கும் போது உணர்ந்து கொண்டேன். ஒருமுறை அவரது வசனத்தில், எனக்கு வசதியாக சில வார்த்தைகள் வந்து விழுகின்றன. நான் அதைப் போட்டுக்கொள்ளலாமா எனக் கேட்டேன். "யாருய்யா சொன்னா, அப்படியே வரணும்னு, கருத்து சரியா வந்தா போட்டுக்க" என்றார். படைப்பாளியாகவும் கலைஞர் மிகவும் இலகுவானவர், எந்த இடைவெளிகளையும் வைத்துக் கொண்டதில்லை.

### அனைவரையும் சமமாக நடத்தியவர்

அவரைச் சந்திப்பதற்கு பொதுவாகவே பெரிய கெடுபிடிகள் இருக்காது என்றாலும், திரைத்துறையினர் எனில், உடனே அனுமதி கிடைத்துவிடும். தனிப்பட்ட முறையிலோ, திரைத்துறை சார்பாகவோ செல்கையில் எங்களோடு உளமாரப் பேசி மகிழ்வார். அவரது திரைத்துறை அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வார். அரசியல் பணி, ஆட்சிப் பணிகளுக்கு இடையில், திரைத்துறைப் பணியும், திரைத்துறையினர் சந்திப்பும் அவருக்கு ஆசுவாசம் அளிப்பவையாக இருந்தன. எல்லோரையும் சமமாக மதித்துப் பேசி கருத்துகளைக் கேட்டுக் கொள்வார். அந்தப் பாங்கு கலைஞரிடம் கற்றுக்கொள்ள வேண்டிய ஒன்று.

எனது தமிழ் உச்சரிப்பு அவருக்குப் பிடிக்கும். அது குறித்து ஒருமுறை கேட்டார். "நீ நல்லா தமிழ் பேசுறியே, எந்த ஸ்கூல்ல படிச்ச? யார் உன் தமிழ் ஆசிரியர்?" என விசாரித்தார். "அய்யா... பள்ளிக்கூடத்தில் எல்லாம் இந்த அளவுக்குப் பழகவில்லை. உங்க எழுத்து, வசனங்களைக் கேட்டுப் பழகியது" என விளக்கினேன். எங்க அப்பா தீவிரமான காங்கிரஸ்காரர் என்றாலும், அண்ணாவின் பேச்சிலும், கலைஞரின் எழுத்திலும் ஈடுபாடு கொண்டவர். அதனால், என் சிறுவயதில் செங்கல்பட்டில் நடக்கும் தி.மு.க. கூட்டங்களுக்கு அழைத்துச் சென்று பேச்சுகளைக் கேட்க வைத்துள்ளார். "முரசொலி" தலையங்கம், கலைஞர் கடிதங்களை வாய்விட்டுப் படிக்கவேண்டும் என்பது சிறுவயது பயிற்சியாக இருந்தது. இதை அவரிடம் பகிர்ந்துகொண்ட போது, ஆர்வமுடன் கேட்டுக் கொண்டார். எனது நடிப்பு தொடர்பாகவும் நிறைய பாராட்டி இருக்கிறார். அவரது படங்களில் நடித்தது மட்டுமல்ல, எனது மற்ற படங்களின்போதும் பாராட்டி இருக்கிறார்.

### உரையாடலுக்கான இடத்தை உருவாக்கியவர்

எனது நடிப்பு தொடர்பாக அவரோடு ஓர் உரையாடலும் நடந்துள்ளது. நான் நடிப்பது புதிதாக இருக்கிறதே எனக் கேட்டதுடன், "எங்க கத்துகிட்ட..? நாடகப் பின்புலம் இருக்கா..?" எனக் கேட்டார். "ஆமாங்கய்யா... நாடகப் பின்புலம் உண்டு. அதுவும் சமகாலப் பரீட்சார்த்த நாடகங்களில் நடித்த பயிற்சி உள்ளது" என்றேன். "அது என்னய்யா பரீட்சார்த்த நாடகம், ஒவ்வொரு நாடகமும் பரீட்சார்த்தம்தானே... எழுதியதையா திரும்ப எழுதமுடியும்?" எனக் கேட்டார். "அய்யா, சில மேலை நாட்டுக் கோட்பாடுகள் வந்திருக்கு, அதன்படி சில உத்திகளோட இந்த நாடகங்களைச் செய்கிறோம்" என விளக்கினேன். "வசனங்களே இல்லாத நாடகங்கள்கூடச் செய்ய முடியும்" என்றேன். "அது எப்படி வசனமே இல்லாத நாடகம் செய்ய முடியும்?" எனக் கேட்டார். இப்படி அவரோடு நீண்ட உரையாடலாக அது அமைந்தது.

புதிய ஒரு போக்கினைத் தெரிந்து கொள்வதற்கு ஏற்ப உரையாடலுக்கான இடத்தை உருவாக்கிக் கொடுப்பது என்கிற அந்தப் பண்பு மிக உச்சமாக இருந்தது.

நாடகங்களில் எல்லா எல்லைகளையும் கடந்தவர் என்று அவரால் சொல்லிக் கொள்ள முடியும். அப்படியான பணிகளைச் செய்தவர் அவர். ஆனால், நாடகத்தில் புதிய அணுகுமுறை குறித்துக் கேட்டு அறிவதும், ஏன் அப்படிச் செய்ய வேண்டும் எனத் தெரிந்து கொள்வதற்கான ஆர்வமும் வியப்புதான். அவர் கேட்டுத்தெரிந்து கொள்வதைவிட, என்னைப் பேசவிடுவது என்பதே பெரிய விஷயம்தானே. அப்படிப் பல வியப்புகளை அளித்தவர் கலைஞர்.





### வழிநடத்தும் வாழ்த்து!

1989-ஆம் ஆண்டு எனது திருமணத்தின்போது, அவருக்கு அழைப்பிதழ் அளித்து வந்தேன். கலைஞர் வருவார் என்கிற எதிர்பார்ப்பு எல்லாம் இல்லை. ஆனால், திருமண நாளில் ஒரு காவல் அதிகாரி வந்து, கலைஞர் வர உள்ளார் என சில பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்தார். முதல்வராகப் பொறுப்பேற்று கலந்துகொண்ட முதல் பொது நிகழ்ச்சியாக எனது திருமணம் இருந்தது. அவரது வாழ்த்தும், வழிகாட்டுதலும், எனது நடிப்பின்மீது அவர் வைத்த நம்பிக்கையும் என்றென்றைக்கும் வழிநடத்தும் என்கிற நம்பிக்கை எனக்கு உண்டு. அவரை உள்வாங்கி நடித்தவன் என்கிற முறையில், கலைஞருடன் நான் எப்போதும் பயணிக்கிறேன் என்றால், அது மிகையில்லை. ■






இசை வெளியீட்டு


# கலைஞர் ஒரு கலைக் கடல்

-திரு.K.R.கோதண்டராமைய்யா, தயாரிப்பாளர்

டாக்டர் கலைஞர் என்னும் பல்துறை வித்தகர் வாழ்ந்த காலத்தில் நானும் வாழ்ந்தேன் என்று பெருமைப்பட வைத்தவர் கலைஞர். திரையுலகத்திற்கும், அவருக்கும் நெருங்கிய தொடர்பு இருந்ததைப்போல, எனக்கும் கலைஞர் அவர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. நானும், அவரும் பகிர்ந்து கொண்ட விஷயங்களைப் பற்றி எழுதினால் அதுவே ஒரு தனி மலர் ஆகிவிடும் என்பதால் அவருக்கும் எனக்குமான சந்திப்புகள் நிகழ்ச்சிகள் பற்றி சில முக்கியமான நிகழ்வுகளை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

1986-ஆம் வருடம் பூம்புகார் பிக்சர்ஸ் தயாரித்த "காகித ஓடம்" என்ற தமிழ்த் திரைப்படத்தின் விநியோக உரிமையைப் பெற்று, வெளியிடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அப்போது தான் கலைஞர் அவர்களை முதன் முதலில் சந்தித்தேன், அது என் வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு பொன்னான நிகழ்வாகும்.

1987-ஆம் வருடம் "தமிழ்த் திரைப்பட வர்த்தக சபை" என்ற அமைப்பை எனது தலைமையில் தொடங்கி அதன் கீழ், தமிழ்த் திரைப்பட உலகின் நலனுக்காக உண்ணா விரதம், ஊர்வலம், போராட்டங்கள் பல, என எனது தலைமையில் நடத்தி வந்தேன். அப்போது திரு. பி.சி அலெக்சாண்டர் அவர்களின் ஆளுநர் ஆட்சி தமிழ்நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையில் ஏ.வி.எம் ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் ஒரு மாநாட்டை நடத்தினேன். அதன் தொடர்ச்சியாக கடற்கரையில் சீரணி அரங்கத்தில் பொதுக்கூட்டம் நடத்துவது என்று முடிவு செய்து, அதற்காக தென்னிந்திய நடிகர் சங்கத்திலிருந்து நடிகர் திரு.கமல்ஹாசன், திரு.விஜயகாந்த், போன்ற அனைத்து முன்னணி நடிகர், நடிகைகளும், திரையுலகப் பிரமுகர்களும் மற்றும் FEFSI தொழிலாளர்களும் ஊர்வலமாக நடந்து சென்று சீரணி அரங்கத்தில் கலைஞர் தலைமையில் பொதுக்கூட்டம் நடத்தினோம்.

அந்தப் பொதுக்கூட்டத்தில் பேசிய டாக்டர் கலைஞர் அவர்கள் "ஏ.வி.எம் ராஜேஸ்வரி மண்டபத்தில் இருந்து சீரணி அரங்கம் வரை அழைத்து வந்து விட்டீர்கள்... இங்கிருந்து அருகிலுள்ள கோட்டையில் என்னை அமர வைத்தீர்களானால், உங்கள் கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்றித் தருகிறேன்" என்று சொன்னார்.

அவர் சொன்னது போலவே அடுத்து வந்த சட்டமன்றத் தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்று, கலைஞர் அவர்கள் 13 ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்று 7-வது நாளே, அவர் கலந்துகொள்ளும் முதல் விழாவாக - தமிழ்த் திரைப்பட வர்த்தக சபை நடத்திய கலைஞர் பாராட்டு விழாவிற்கு முதல் அனுமதி அளித்ததோடு, விழா நடத்துவதற்கான இடமாக "வள்ளுவர் கோட்டத்தையும்" கலைஞர் அவர்களே தேர்வு செய்தார்.

அனைத்து நடிகர்-நடிகைகள் மற்றும் ஒட்டு மொத்த தமிழ்த் திரையுலகமே திரண்டு வந்து கலைஞர் பாராட்டு விழாவில் கலந்துகொண்டு, விழா மிகவும் சிறப்பாக நடந்ததாக தமிழ்த் திரையுலகமே பாராட்டியது, அந்த விழாவில் வெள்ளியில் வடிவமைக்கப்பட்ட வள்ளுவர் கோட்டத்தின் மாதிரியை கலைஞர் அவர்களுக்கு நினைவுப் பரிசாக நான் வழங்கி மகிழ்ந்தேன். இதற்காக செலவிடப்பட்ட தொகை சுமார் 50 இலட்சம் ரூபாயையும் நானே ஏற்றுக்கொண்டேன்.

அதே போல் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்த மூன்று மாதங்களுக்குள் அவர் சொன்னது போலவே, தமிழ்த் திரைப்படங்களுக்கு முதன் முதலாக மானியம், விருதுகள், கேளிக்கை வரி குறைப்பு போன்ற பல நலத் திட்டங்கள், சலுகைகளை அறிவித்தார் என்பது யாராலும் மறுக்க முடியாத ஒரு உண்மையாகும்.

அது மட்டுமில்லாமல் தமிழ் சினிமா சம்பந்தப்பட்ட பிரச்சனைகளை அலசி ஆராய்ந்து அரசுக்கு ஆலோசனை சொல்வதற்காக கலைஞர் அவர்கள் அமைத்த "ஐவர் குழு"என்ற ஆலோசனை கமிட்டியிலும் என்னையும் ஓர் உறுப்பினராக இடம்பெறச் செய்தார். தமிழ்த் திரைப்பட உலகில் நடந்த பல தீராத பிரச்சனைகளை, தலைவர் கலைஞர் அவர்களே நேரடியாகக் கலந்துகொண்டு சுமூகமாகத் தீர்த்து வைத்துள்ளார்.

2000-2001-ஆம் ஆண்டு தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபைத் தலைவராக இருந்தபோது, கார்கில் போருக்கு நிவாரணத் தொகையாக தமிழ்நாட்டிலுள்ள அனைத்து திரையரங்குகளின் ஒரு நாள் வசூலை முதலமைச்சர் நிதிக்கு அன்றைய முதல்வர் கலைஞர் அவர்களிடம் வழங்கப்பட்டது.

2006-ஆம் ஆண்டு, நான் தயாரித்து, நடிகர் தனுஷ் நடித்த "பரட்டை என்கிற அழகு சுந்தரம்" என்ற திரைப்படத்தின் துவக்க விழாவிற்கான முதல் அழைப்பிதழை கலைஞர் அவர்களிடம் கொடுத்தோம். கலைஞரின் துணைவியார் திருமதி. இராஜாத்தி அம்மையார் அவர்கள் கலந்துகொண்டு பூஜையை சிறப்பு செய்தார்.

தலைவர் கலைஞர் ஒரு சகாப்தம். அவரைப் போல இன்னொருவர் இத்தனை திறமைகளுடன் பிறக்கவும் முடியாது... ஜெயிக்கவும் முடியாது. அவருடைய சாதனைகளை அரசியல் உலகமும் திரையுலகமும் என்றைக்கும் மறுக்கவும் முடியாது, மறக்கவும் முடியாது... மறைக்கவும் முடியாது. கலைஞரின் சாமர்த்தியங்களையும், சாதனைகளையும் இன்னும் பல நூற்றாண்டுகளுக்கு வரலாறு பேசிக்கொண்டே இருக்கும்.. அயராமல் கரை தொட்டுப் போகும் அலைகளைப் போல...

தலைவர் கலைஞர் அவர்கள் வாழ்ந்த காலம், தமிழ்த் திரை உலகில் ஒரு பொற்காலம். வாழ்க கலைஞர் புகழ். ■

# கலைஞர் எனும் கலைக்கூடம்

-திரு. ஏ.எல்.அழகப்பன், தயாரிப்பாளர்

1966ம் ஆண்டு சிவகங்கை தொகுதியில் எனது உறவினர் சி.சேதுராமன் அவர்கள் திமுக வேட்பாளராகப் போட்டியிட்டார். R.V. சுவாமிநாதன் என்ற முன்னாள் அமைச்சர், காங்கிரஸ் மூத்த தலைவர், காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டார். நான் தி.மு.க. வேட்பாளருக்கு வேலை செய்து கொண்டிருந்தேன். சிவகங்கையில் கூட்டத்தை முடித்துக் கொண்டு, எங்கள் ஊரில் உள்ள தி.மு.க. வேட்பாளர் வீட்டில் சாப்பிட வந்தார்கள். எனது வயது 17. தலைவருடன் MGR அவர்கள், செ.மாதவன் அவர்கள், தென்னரசு போன்றவர்களும் வந்திருந்தனர். சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்த என்னைப் பார்த்து கலைஞர், "யார் இந்தப் பையன்" என்று கேட்க, "நமது கட்சிக்காரன்" என்று தென்னரசு அவர்கள் கூறியதும் என்னைக் கூப்பிட்டு, கலைஞர் அவர்கள் ஒரு சால்வை அணிவித்தார். அதுதான் என்னுடைய முதல் சந்திப்பு.

கலைஞரின் ரசிகன்... வாழ்நாளில் அவருடைய திரைக்கதை வசனத்தில் ஒரு படம் எடுக்க வேண்டும் என்று அன்று முடிவு எடுத்தேன். தி.மு.க. வேட்பாளர் சி. சேதுராமன் அவர்கள் வெற்றி பெற்று சட்டமன்ற உறுப்பினராகப் பதவியேற்றார். அதைக்காண சென்னை வந்தேன். எனது மைத்துனர் திருச்சியில் வட்டிக் கடை நடத்தி வந்தார். அங்கு வேலை பார்த்துக் கொண்டு எப்படியாவது திரைத் துறையில் பணிபுரிய முயற்சி செய்து கொண்டிருந்தேன். திருச்சியில் அப்போது MLA வாக இருந்த MS மணி, சு.நாகசுந்தரம் மற்றும் S.A.G. ராபி, A.V. கிருஷ்ணமூர்த்தி, மலர் மன்னன் போன்ற தலைவர்களுடன் நெருங்கிப் பழகி வந்தேன். அவர்கள் அறிமுகத்தில் பல கடைகளுக்கு கணக்கு எழுதும் வேலை செய்துகொண்டு இருந்தபோது சினிமா தியேட்டர்களில் கணக்கு எழுதும் வேலை கிடைத்தது.

திருச்சி வெலிங்டன், ராக்ஸி, மேலகல்கண்டார் கோட்டை சண்முகா, வேதா தியேட்டர்களின் கணக்கு எழுதும் வாய்ப்பு கிடைத்தது. அதன் மூலம் படக்கம்பெனிகளில் இருந்து வரும் Rep.ன் நட்பு கிடைத்தது. அவர்கள் மூலம் சென்னை வர ஏற்பாடு செய்து கொண்டிருந்தேன். கட்சித் தலைவர்களைச் சந்திப்பதும், கூட்டங்களுக்குச் செல்வதும் எனது முழுநேர வேலை. எனது குடும்பத்தார் எனக்கு திருமணம் செய்து வைக்க பெண் பார்க்க ஆரம்பித்தார்கள். அன்பில் தர்மலிங்கம், என்னை பெரிதும் பாராட்டுவார். அவரிடம் கூறி, தலைவர் கலைஞர் தலைமையில் திருமணம் செய்ய வேண்டும் என்று கூறினேன். பெண் நிச்சயிக்கப்பட்டு, மண்டபம் பார்க்க நான் தலைவர் தேதி தந்தால்தான் திருமணம் என்ற நிலையில் இருந்தேன். 1976 எமர்ஜன்ஸி டைம் சிறைக்குச் சென்று திரும்பிய நிலையில் தலைவர் வர முடியாத சூழல் உள்ளது என்று அன்பில் அவர்கள் கூறி, நான் உன் திருமணத்தை நடத்தி வைக்கிறேன் என்று கூறி 1976ம் ஆண்டு ஜூலை மாதம் அன்பில் அவர்கள் நடத்தி வைத்தார்கள்.

என் துணைவியாரின் குடும்பத்தினர் சென்னையில் வசித்து வந்தார்கள். நானும் சென்னைக்கு வந்து, எனது சகலை கவிஞர் பூவை செங்குட்டுவன் அவர்கள் மூலம் திரைத்துறையில் கோலோச்சிய அரக்கோணம் தொகுதி MLA, N.S. பலராமன், திரையரங்கு உரிமையாளராகவும், விநியோகஸ்தராகவும் கட்சியில் முக்கிய தலைவர்கள் ஆற்காட்டார், TR.பாலு, தலைவருடைய மருமகன் முரசொலி செல்வம், அரங்கண்ணல், வேடிவேந்தன் போன்ற பலரையும் பார்த்துப் பழகும் தொடர்பு ஏற்பட்டது. அதன் பயனாக நூர்ஜகான், கபாலி, ஜெயராஜ் திரையரங்குகளின் கணக்கு எழுதுபவராகவும், பட விநியோகஸ்தர்களின் பழக்கம் ஏற்பட்டு படிப்படியாக உயர்ந்து, நானும் ஒரு விநியோகஸ்தராக அறியப்பட்டு, 100 படங்களுக்கு மேல் NSC என்ற ஏரியாவின் விநியோகஸ்தராக வளர்ந்து, தெலுங்குப் படங்கள் டப்பிங் செய்து, தமிழ்நாடு முழுவதும் ரிலீஸ் செய்து, பொருளாதாரத்தில் நல்ல முறையில் வளர்ந்திருந்தேன்.

நான் விநியோகஸ்தராக, என் மகன் உதயா பெயரில் பெரிய படங்களை வெளியிட்டு வந்தேன். அந்த சமயம் தலைவர் கதை வசனம் எழுதிய "இருவர் உள்ளம்", "இதயக் கமலம்" போன்ற படங்களை தலைவருடைய உருவத்தைப் பெரிதாக பிரசுரித்து, பெரியளவில் போஸ்டர்களை சென்னை நகரம் முழுவதும் ஒட்டி, நீண்ட இடைவேளைக்குப் பிறகு வெளியான படங்களாக இருந்ததால் நல்ல வசூல் ஆனது. சில ஏரியாவில் 50 நாட்களைக் கடந்து வெற்றி பெற்றது. அதன் மூலம் தலைவருடைய கவனத்துக்கும் முரசொலி செல்வம் அவர்கள் கவனத்துக்கு வந்தேன். செல்வம் அவர்கள் என்னை அழைத்துப் பாராட்டினார். அந்த நேரத்தில், திரையரங்குகளில் சரியான பராமரிப்பு இல்லாமல் விநியோகஸ்தர்கள் பாதிக்கப்பட்டு இருந்த நிலையில், விநியோகஸ்தர்கள் பாதுகாப்புக்காக சென்னை - செங்கை மாவட்ட திரைப்பட விநியோகஸ்தர்கள் சங்கம் ஒன்றை ஏற்படுத்தி, சிந்தாமணி முருகேசன் தலைவராகவும், நான் செயலாளராகவும் பணிபுரிந்து விநியோகஸ்தர் - தயாரிப்பாளர்கள் பாதுகாக்கப்பட்டு வெற்றிகரமாக நடைபெற்று பலரின் பாராட்டுக்களையும் பெற்றது. அந்த சமயத்தில் தினகரன் பத்திரிகையில் "பட உலக பிரம்மாக்கள்" என்ற தலைப்பில் பிரபலமானவர்களின் பேட்டிகள் வெளியாகி வந்தன.

என்னுடைய பேட்டியில் நான் திரைத் துறைக்கு வந்த விபரங்களையும், திரைக்கு வந்த நோக்கமே தலைவர் கலைஞர், திரைக்கதை வசனம் எழுத நான் படம் எடுக்க வேண்டும் என்ற என் ஆசையையும், நான் கலைஞரை எப்படியாவது சந்திக்க வேண்டும் என்ற எண்ணத்தையும் வெளிப்படுத்தியிருந்தேன். அந்தப் பேட்டியை தலைவர் அவர்கள் படித்திருக்கிறார்கள். செல்வம் அவர்களை அழைத்து "யார் இந்தப் பையன்" என்று விசாரித்து, நமது கட்சிக்காரர் என்ற செய்தியை முரசொலி செல்வம் அவர்கள் மூலம் தெரிந்து கொண்டிருக்கிறார். அவரை வரச்சொல் என்று தலைவர் கூறியிருக்கிறார். உடனே செல்வம் சார் அவர்கள் தொலைபேசி மூலம் தலைவர் வரச்சொல்லியிருக்கிறார் என்ற செய்தியை எனக்குத் தெரிவித்தார். மறுநாள் காலை, தலைவரின் உதவியாளர்

சண்முகநாதன் அவர்களைத் தொடர்பு கொண்டேன். 10 மணிக்கு நான் கோபாலபுரம் சென்று தலைவரைச் சந்தித்தேன்.

பிரசிடென்ஸி ஓட்டலில் ரூம் போட்டு விவாதித்து, ஒரு கதையைத் தயார் செய்து "நியாயத்தராசு" என்ற திரைப்படத்தை எடுத்தேன். என்னுடைய பிறவிப்பயனை அடைந்த நிலையில் தலைவருடன் தினமும் சந்தித்து திரையுலகப் பிரச்சனைகளைக் கூறி என்னுடைய தொடர்பை நீடித்துக் கொண்டேன்.

ஒரே நேரத்தில் 5 படங்களுக்கு கதை வசனம் எழுதும் ஒரு தலைவரைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தேன். தினசரி தலைவரைப் பார்க்கும், பாக்கியம் கிடைத்தது. அந்த நேரத்தில் தயாரிப்பாளர்கள் சங்கத்தில் பல பொறுப்புகளை வகித்து வந்தேன். செயலாளராகப் பணிபுரிந்தபோது கலையுலக, பிரச்சனைகள் குறித்து, தயாரிப்பாளர் நலன் கருதி தமிழில் பெயர் வைக்கும் திரைப்படங்களுக்கு மானியமாக ரூ. 3 இலட்சம் வழங்கவும், பழைய படங்களுக்கு (Tax) வரிவிலக்கு வழங்கவும். கலைத்துறையைச் சேர்ந்தவர்களுக்கு கலைமாமணி விருது வழங்கவும், திரையுலக பிரச்சனைகள் எதுவாக இருந்தாலும், தலைவருடன் இருந்து பணிபுரிந்தேன்.

தேர்தல் காலங்களில் தலைவர் சுற்றுப்பயணம் செய்யும்போது, அவருடன் செல்லும் வாய்ப்பை வழங்கினார். அதன் மூலம் தமிழ்நாடு முழுவதும் கட்சி நிர்வாகிகளைக் கண்டு பழகும் வாய்ப்புகள் கிடைத்தன. திரைத் துறையிலிருந்த நடிகர் - இயக்குநர் T.ராஜேந்தர், வாகை சந்திரசேகர், தியாகு, நெப்போலியன், பாண்டியன், கலையரசு, ராதிகா, சரத்குமார் போன்று மற்றும் பிரபலமான நடிகர்களை தேர்தல் பிரச்சாரத்துக்கு அழைத்துச் சென்று தி.மு.க. வெற்றி பெற உறுதுணையாக இருந்தேன். பிரச்சார கேசட்டுகள் தயாரித்து வெளியிட்டேன்! தற்போதைய முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களும் பாடியுள்ளார் என்பது எனக்குப் பெருமை.

தலைவர் அவர்கள் அறிவாலயத்தில் கட்சி நிர்வாகிகளிடம் பேசிக்கொண்டிருந்த சமயம் திரைத்துறைக்கு வந்து 50 ஆண்டுகள் ஆகிவிட்டது என்ற செய்தியைத் தெரிந்து கொண்டேன். தலைவரை சந்தித்து, தங்களுக்கு பொன்விழா எடுக்க இருப்பதாகக் கூறினேன். மறுத்த தலைவர், பின் கட்சியின் முக்கிய தலைவர்கள் "தேர்தல் சில மாதங்களில் வர இருக்கிறது அழகப்பன் சொல்வது நல்ல நேரம்" என்று கூறி தலைவரை சம்மதிக்க வைத்தார்கள். உடன் அதற்கான முயற்சியில் இறங்கி, கட்சித் தோழர்கள். இராம நாராயணன், வாகை சந்திரசேகர், தியாகு, நெப்போலியன் போன்றவர்களை அழைத்துக் கொண்டு, திரையுலகத் தலைவர்களைச் சந்தித்து விசயத்தைக் கூறி, நீங்கள் எல்லாம் கலந்து கொள்ளவேண்டும் என்று கூறி அழைத்தவுடன், எல்லோரும் வருவதாகவும், தலைமையேற்று நடத்தித் தருவதாகவும் கூறினார்கள். தலைவரிடம் விசயத்தைக் கூறினோம். மிகவும் சந்தோசப்பட்டு சில ஆலோசனைகள் கூறி அனுப்பி வைத்தார். ஒப்புதல் தெரிவித்து தேதியும் கொடுத்து விட்டார்.

நாங்களும் விழாவுக்கான வேலைகளைச் செய்ய முயற்சித்துக் கொண்டிருக்கும்போது விழாவுக்கு ஒப்புக்கொண்ட திரையுலகப் பிரபலங்கள் இப்போது விழா எடுக்க வேண்டாம் தேர்தல் முடிந்த பிறகு பார்க்கலாம் என்று கூறி விட்டார்கள். ஆனால் விழா நடத்தியே ஆக வேண்டும். யாரைத் தலைமைப் பொறுப்பேற்று நடத்துவது என்பது குழப்பமாக இருந்தது. அப்போது நடிகர் தியாகு, கேப்டன் விஜயகாந்த் அவர்களை கேட்டுப் பார்க்கலாம் என்று கூறினார். அவர், எங்கள் அனைவருக்கும் பெரிதும் மதிப்பு கொடுத்துப் பழகுவார், நடிகர் சங்கத் தலைவராகவும் இருந்தார். உடனே அவரைச் சந்தித்து தங்கள் தலைமையில், கலைஞர் அவர்கள் திரைத்துறைக்கு வந்து 50 ஆண்டுகள் ஆகிவிட்டது, எனவே அவருக்கு விழா எடுக்க விரும்புகிறோம் என்று கூறியதும் உடனே ஒப்புக்கொண்டு மூத்த கலைஞர் அவருக்கு விழா எடுக்க நமக்கு கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்று கூறி பிரம்மாண்டமாக மெரினா கடற்கரையில் விழா எடுத்து, தலைவர் கலைஞர் அவர்களை மனம் குளிரச் செய்தார்.

நாங்கள் விழாவிற்காக வசூல் செய்த தொகையில் மீதம் இருந்த தொகையை என்ன செய்வது என்று யோசித்த வேளையில், தலைவர் உயரத்துக்கு ஒரு தங்கப் பேனா செய்ய முடிவு செய்து, அதை அவருக்கு விழா மேடையில் கொடுத்தோம், எல்லாவற்றிற்கும் காரணம் கேப்டன் விஜயகாந்த் என்றால் மிகை ஆகாது. தலைவர் கலைஞர் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தார். மீதம் உள்ள பணத்தை என்ன செய்யலாம் என்று கலைஞரிடம் கேட்டபோது ஆரம்ப காலத்தில் அவருடன் நடித்த நடிகர், நடிகைகளுக்கு கொடுக்கவே விருப்பம் தெரிவித்தார். அவர் கூறியபடி அனைத்து கலைஞர்களுக்கும் கொடுத்தோம்.


என் குடும்பத்தில் எந்த நிகழ்ச்சி நடந்தாலும் தலைவர் தலைமையில் தான் நடக்கும். என் மகள், மகன் திருமணங்களை நடத்தி வைத்தார். என்மேல் தனி அன்பு செலுத்தி, என்னை வளர்த்து எனக்கு தமிழகத்தில் ஒரு முகவரியைத் தந்தவர் கலைஞர். எனது திரைப்பட நிறுவனத்துக்கு, கலைஞர் கலைக்கூடம் என்று பெயர் வைத்து, இன்றளவும் நான் எடுக்கும் படங்களுக்கு கலைஞர் கலைக்கூடம் பேனரில் தான் எடுத்து வருகிறேன். தலைவர் கலைஞர் அவர்கள் 40 ஆண்டுகளாக நடந்த பல நிகழ்ச்சிகளை என்னிடம் கூறியுள்ளார். கலைத்துறை என்றால் தனி அன்பு செலுத்துவார். அதை எல்லாவற்றையும் கூறுவது என்றால் 200 பக்கங்கள் தேவைப்படும். ஒரு புத்தகமாக வெளியிட முயற்சிக்கிறேன். ■















# பராசக்தி ஒரு பரமசக்தி

**-திரு. AVM. குமரன், தயாரிப்பாளர்**




திரைத் துறையில் டாக்டர் கலைஞர் அவர்களின் பங்களிப்பினை விளக்கிடும் வகையில் ஒரு சிறப்பு மலர் வெளியிடப்பட உள்ளது என்பதை அறிந்து மிகுந்த மகிழ்ச்சி அடைந்தேன்.

என்னுடைய தந்தையார் ஏவிஎம் அவர்கள் கலைஞருடன் திரைத் துறையில் பணியாற்றிய நினைவுகள் பற்றி "எனது வாழ்க்கை அனுபவங்கள்" - ஏவிஎம் என்ற புத்தகத்தில் பராசக்தி திரைப்படத்தில் கலைஞர் அவர்களது சிறப்பான வசனத்தைப் பற்றி கீழ்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:-

"படம் மிகவும் அருமையாக அமைந்துவிட்டது. டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் புதிய பாணியில் வசனங்களைத் தீட்டியிருந்தார். அவற்றை கணேசன் உச்சரித்த முறை நன்றாக இருந்தது. சொல்லப் போனால் முன்னாள் முதல்வர் அறிஞர் அண்ணா **"ஓர் இரவு"** படத்திற்கு எழுதியிருந்ததை விட, கலைஞரின் வசனங்கள் சிறப்பாக இருந்தன என்று நாங்கள் நினைத்தோம். பொது மக்களும் அவ்வாறே அபிப்பிராயப்பட்டனர். கதையின் போக்கு, கலைஞரின் வசனம், கணேசனின் நடிப்பு மூன்றுமாகச் சேர்ந்து பராசக்தி படம் முன்பு நாங்கள் எடுத்த படங்களைக் கூட மிஞ்சும்படி எங்களுக்கு மகத்தான வெற்றியை அளித்தது."

மேலும், அந்த புத்தகத்தில் தமாஷா வரியிலிருந்து விலக்கு அளிக்க மாநில அரசிடம் தனது கோரிக்கையை ஏவிஎம் அவர்கள் கீழ்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:-

"சமுதாயத்தின் வளர்ச்சிக்குத் தேவையான விஷயங்களை உணர்த்தக்கூடிய ஒரு சக்தி வாய்ந்த மீடியமாக இந்த சினிமா இருப்பதாலும், பெரும்பான்மையான நம் மக்களுக்கு உள்ள ஒரே பொழுதுபோக்கு இதுதான் என்பதாலும், இத்தொழிலுக்கு "தமாஷா வரி" யிலிருந்து விலக்கு அளிக்க கலைஞர் தலைமையில் உள்ள ஆட்சியில்தான் என்னுடைய இந்தக் கோரிக்கை நிறைவேற அதிக வாய்ப்புக்கள் உண்டு என்று நம்புகிறேன். இந்தத் தொழிலில் உள்ள சங்கடங்கள் என்னென்ன என்பது மற்றவர்களைக் காட்டிலும் கலைஞர் அவர்களுக்கே அதிகம் தெரியும்."

கலைஞர் நூற்றாண்டு விழாவைச் சிறப்பிக்க வெளியிட உள்ள கலைஞரின் திரையுலக நினைவலைகள் என்ற மலர் மாபெரும் வெற்றி மலராக உருவாகிட எனது உளமார்ந்த வாழ்த்துக்களை இத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். ■













# கால நேரம் தெரிஞ்சுதான் எழுதனும்யா...

-திரு. சிவக்குமார், நடிகர்

மொழிப்பற்று, இனப்பற்று, நாட்டுப்பற்று கொண்ட அரசியல் தலைவர்களில் கலைஞருக்கு இணையாக யாரையும் சொல்ல முடியாது. திரையுலகிலும் அவரது இடத்தை அடைய யாரும் இல்லை. என் நினைவுகளிலும் அவர் உயரிய இடத்தில் நிறைந்திருக்கிறார்.

தமிழ் சினிமா வரலாற்றின் உச்சம் "பராசக்தி" திரைப்படம். அழியா வரம் பெற்ற படைப்பாக அதை உருவாக்கியது கலைஞரின் வசனங்கள். திரைப்படத்துறையில் நுழைய அந்த வசனங்களை எனது பத்து வயதில் மனப்பாடம் செய்யும்போது கலைஞரை அறிந்தேன். பின்னாட்களில் அவரைச் சந்திப்பேன், அவருடன் பழகுவேன் என்றெல்லாம் நான் நினைத்துக்கூடப் பார்த்ததில்லை. எனது திரைத்துறை நுழைவுக்கு அந்த வசனங்கள் நுழைவுச் சீட்டாக இருந்தன என்று கூறலாம்.

## இரண்டு வரி வசனங்கள்

அவரது கதை வசனத்தில் "பாசப் பறவைகள்", "பாடாத தேனீக்கள்" என இரண்டு படங்களில் நடித்துள்ளேன். அப்போது எங்களுக்கான வசனங்கள் நறுக்குத் தெறித்தாற்போல சின்னச் சின்னதாக எழுதி இருப்பார். "அண்ணே சிவாஜிக்கு மட்டும்தான் பக்கம் பக்கமா வசனமெல்லாம் தருவீங்க, எங்களுக்கு எல்லாம் திருக்குறள் மாதிரி இரண்டு வரிகள்தானா?" எனக் கேட்போம். "இந்தக் காலத்தில்

அப்படியான வசனமெல்லாம் கேட்கமாட்டாங்கய்யா, கால நேரம் தெரிஞ்சுதானே எழுதனும்" என்பார். அப்படி காலமாற்றத்தைப் புரிந்து கொண்டவராகவும் கலைஞர் இருந்தார். அந்த இரண்டு படங்களும் வெற்றிப்படங்களாக அமைந்தன.

அந்தப் படங்களில் நடிக்கும்போதுதான் "சங்கத்தமிழ்", "குறளோவியம்", "நெஞ்சுக்கு நீதி" முதல் இரண்டு பாகங்கள் ஆகிய நூல்களை அன்பாக அளித்தார். அந்த நூல்களை உடனேயே படித்தும் விட்டேன். ஒருமுறை நியூ உட்லண்ட்ஸ் ஓட்டலில் அவரது குடும்ப உறவினர் ஒருவரின் திருமணத்தின்போது, அந்த நூல்களைப் படித்துத் தயாரித்துக் கொண்டு, மேற்கோள்களை எடுத்துப் பேசியதும் அவர் மகிழ்ச்சி அடைந்தார். அவரது வாழ்த்துரையின்போது, "அந்தப் புத்தகங்களை எல்லாம் கழகத் தொண்டர்கள் படித்து, அது குறித்துப் பேச வேண்டும் என எதிர்பார்த்தேன். ஆனால், சிவக்குமார் அதைப் படித்து, பேசி, என் நெஞ்சில் பால் வார்க்கிறார்" எனப் பாராட்டினார்.

### கலைஞரை வரைந்தேன்!

1989-ஆம் ஆண்டு, எனது ஓவியங்களைப் பார்க்க வர வேண்டும் என அழைப்பு விடுத்தேன். திடீரென ஒருநாள், வீட்டுக்கு கலைஞர் வர உள்ளதாக தொலைபேசி அழைப்பு வருகிறது. அவரை வரவேற்பதற்காக வீட்டுவாசலில் மாலையுடன் காத்திருந்தேன். நட்பு அடிப்படையில் வருகிறார், அவருக்கு மாலை போடுவதா வேண்டாமா என்கிற தயக்கம் எனக்கு இருந்தது. அவர் வந்ததுமே அதைத்தான் கேட்டார். "எதுக்குய்யா மாலையெல்லாம்" என்றார். நானும் தயங்காமல், "அண்ணே இதுதான் சரியாக இருக்கும்" எனக் கூறி வரவேற்றேன்.

எனது வீட்டில் இரண்டு மணி நேரத்துக்கு மேல் இருந்தார். எப்போதும் தொண்டர்கள் சூழ, பரபரப்பாக இருக்கும் கலைஞர், ஒன்றரை மணி நேரத்துக்கு மேல் எதுவும் பேசாமல் என் ஓவியங்களைப் பார்த்து ரசித்தார். நான் வரைந்த பெரியார் படத்தைக் காட்டியதும், பார்த்து மகிழ்ந்தவர், "என் படத்தை எப்போ வரையப் போறீங்க?" எனக் கேட்டார். "அண்ணே, நீங்க கண்ணாடி போடாத படம் இருந்தா அதை வரைந்து தருகிறேன்" என 1969-ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்தபோது, கருப்புக் கண்ணாடி இல்லாத படத்தைக் கேட்டு வாங்கி வரைந்து அனுப்பினேன்.

### ஒளிவு மறைவில்லாத பேட்டி

அவர் பரபரப்பாக இருந்த மற்றொரு நேரத்திலும், எனக்காக நேரம் ஒதுக்கிப் பல விஷயங்களைப் பேசி இருக்கிறார். 1988-ஆம் ஆண்டு "சினிமா எக்ஸ்பிரஸ்" இதழுக்காக கலைஞரை சிறப்புப் பேட்டி கண்டேன். "அண்ணா நான் கேட்கும் எல்லா கேள்விக்கும் பதில் சொல்லனும். அது உங்க கொள்கையைக் கேள்வி கேட்பதாக இருந்தாலும் மறுக்கக்கூடாது" என்றேன். அந்தப் பேட்டி மிகச் சிறப்பாக வந்தது.

கலைஞரிடம் அதுவரை அப்படி ஒரு நேர்காணலை யாரும் செய்திருக்க முடியாது. எனது முதல் கேள்வியே "நீங்கள் சாமி கும்பிட்ட அனுபவம் உண்டா?" என்பதுதான். அந்தப் பேட்டியின்போது என்னிடம் பல விஷயங்களைப் பகிர்ந்து கொண்டார். பள்ளிக்காலம், அரசியல், திரை வாழ்க்கை என கலைஞர் குறித்து அந்தப் பேட்டியில் பகிர்ந்து கொண்டவை காலத்துக்கும் நிற்பவையாகும்.

### பவள விழா கண்ணீர்

1998-ஆம் ஆண்டு, கலைஞர் பவள விழா கொண்டாட்ட மேடையில் பேசுகிறேன். அவரது "ராஜா ராணி" திரைப்படத்தில் ஒரே ஷாட்டில் எடுக்கப்பட்ட ஐந்து நிமிட வசனத்தை வாசிக்கிறேன். அப்போது அரங்கில் இருந்த கலைஞர், சிவாஜி கணேசன் இருவரது கண்களிலிருந்தும் கண்ணீர்.

பிறகு நான் பேசியதைக் குறிப்பிட்டுப் பேசிய சிவாஜி, கலைஞரும் தானும் தஞ்சை பெரிய கோயிலுக்குக் காற்று வாங்கப் போன நினைவுகள் போல் பலவற்றைப் பகிர்ந்துகொண்டார். இப்படி கலைஞரின் ஒவ்வொரு காலத்துக்கும், வசனத்துக்குப் பின்னால் ஒரு வரலாறு இருப்பதை அறியலாம்.

### மகன்களை வாழ்த்தினார்!

1997 - ஆம் ஆண்டு என் மகன் சூர்யா நடித்து வெளியான "நேருக்கு நேர்" திரைப்படம் வெளியானது. அந்தப் படத்தின் முன்னோட்டக் காட்சியைப் பார்க்க கலைஞரை அழைத்தேன். என் அழைப்பின்பேரில், வருகை தந்து படம் பார்த்து சூர்யாவை நெஞ்சார வாழ்த்தினார்.

அதேபோல 2007-ஆம் ஆண்டு கார்த்தி நடித்த "பருத்தி வீரன்" படம் வந்தது. படம் பார்த்தவர், ஆச்சரியப்பட்டார். "ஒரு சீன்கூட எதிர்பார்த்த மாதிரி இல்லப்பா, புதுசா இருக்கு" என வியந்தார். அடுத்த நாள், "படத்தின் இறுதிக் காட்சியைப் பார்த்து என்னால் தூங்க முடியவில்லை, அவ்வளவு வருத்தமாக இருந்தது" எனக் கூறினார். திரைத்துறைக்குப் புதிய அலை இயக்குநர்களின் வருகை, அவரை அந்த அளவுக்கு உற்சாகப்படுத்தி இருந்தது.

### படிப்பை நிறுத்திய கொள்கை வெறி!

நான் எடுத்த நேர்காணலின்போது அவரது கல்வித் தகுதியைக் கேள்வி கேட்டேன். "படித்துப் பட்டம் பெற்று ஆட்சிப் பணிவரை சென்றிருந்தால், இன்னும் சிறப்பான நிலை அடைந்திருக்கலாம் அல்லவா?" எனக் கேட்டேன். தான் திறமை குறைவு காரணமாகப் படிப்பதை நிறுத்தவில்லை. கொள்கை வெறி காரணமாகப் படிக்கச் செல்லவில்லை என்றும், தேர்வு நாட்களில் பெரியாருடன் சுற்றுப்பயணத்தில் இருந்ததாகவும் கூறினார். அந்த கலைஞரின் திறமையையும், கொள்கையையும்தான் பின்னாட்களில் தமிழ்நாடு கண்டது.

கலை, இலக்கியம், அரசியலில் நமது காலத்தில் யாராலும் அசைத்துப் பார்க்க முடியாத உயரமும் ஆழமும் கொண்டவர் கலைஞர். அந்த இடம் என்றும் அப்படியே இருக்கும். ■



# கலைஞர் மேடையில் எம்.ஜி.ஆர். வசனம் பேசினேன்!

-திரு. சத்யராஜ், நடிகர்

தந்தை பெரியாரின் கனவைச் செயல்படுத்திய பெருந்தொண்டர் என்கிற வகையில், முத்தமிழறிஞர் கலைஞருக்கு தமிழ்நாடு என்றென்றும் நன்றிக்கடன் பட்டுள்ளது. பெரியாரின் தொண்டன் என்கிற முறையில், கலைஞர் என்னிடம் கொண்டிருந்த அன்புக்கு ஈடில்லை. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வசனங்களைப் பேசித்தான் திரையுலகில் வாய்ப்புகளைத் தேடினேன். அந்த ஆளுமையுடன் பின்னாட்களில் கொள்கை இணக்கத்துடன் பயணிக்க வாய்ப்பு அமையும் என்றெல்லாம் நினைத்தே பார்த்ததில்லை. ஆனால், அப்படி நிகழ்ந்தது.

### கொள்கை தந்த வாய்ப்பு

அவருடைய திரைப்படங்களில் "பாலைவன ரோஜாக்கள்", "மண்ணின் மைந்தன்" என இரண்டு படங்களில் நடித்திருக்கிறேன். 1986-ஆம் ஆண்டில், இயக்குநர் மணிவண்ணன் நாம் இருவரும் சேர்ந்து ஒரு படம் செய்ய உள்ளோம் என்றும், அந்தப் படத்தின் சிறப்பு, அதற்கு கலைஞர் கதை வசனம் எழுத உள்ளார் என்றும் கூறியிருந்தார். அந்தப் படம்தான் "பாலைவன ரோஜாக்கள்".

நான் கலைஞர் வசனத்தில் நடிக்கப் போகிறேன் என உற்சாகமாக இருந்த நேரம். அப்போது நான் வளர்ந்து வரும் நடிகர் என்பதால், என் மீது அக்கறை கொண்ட நண்பர்கள் சிலர், அந்தப் படத்தில் நடிக்க வேண்டாம், எப்படியாவது தவிர்த்து விடுங்கள் என ஆலோசனை கூறினர். கலைஞர் படத்தில் நடித்தால், அரசியல் முத்திரை விழுந்துவிடும், வளர முடியாது என்று குறிப்பிட்டனர். ஆனால், அவர் வசனத்தில் நடிக்கும் வாய்ப்பைத் தவற விட எனக்கு மனமில்லை. நடிகர் திலகம் சிவாஜி, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். ஆகியோருக்கெல்லாம் வசனம் எழுதி, அவர்கள் மீது விழாத முத்திரையா நம் மீது விழப்போகிறது என நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனாலும் அவர்களும் விடாமல், சம்பளத்தை இரண்டு மடங்காக்கினர். அதுவும் ஓ.கே ஆகிவிட்டது. கடைசியாக, கலைஞர் ஏற்கெனவே எடுத்த இரண்டு படங்கள் ஓடவில்லை என்றும், அதனால் அவருக்கு இப்போது நேரம் சரியில்லை என்றும் கூறினர். அப்போதுதான், நான் நாத்திகன், பெரியார் தொண்டன் என்கிற விவரத்தையே அவர்களிடம் கூறி, "எனக்கு இதுபோன்ற நம்பிக்கைகள் கிடையாது. நான் கலைஞர் படத்தில் நடிக்கிறேன்" என உறுதி காட்டி, அதில் நடித்தேன்.

அப்படித்தான் "பாலைவன ரோஜாக்கள்" திரைப்படத்தில் கலைஞரின் கதை வசனத்தில் நடிக்க வாய்ப்பு கிடைத்தது. அந்த வாய்ப்பினை வாங்கிக் கொடுத்தவை தந்தை பெரியாரின் கொள்கைகள். அந்தப் படத்தில் நடிக்கத் தொடங்கிய போதுதான் முதன்முதலில் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்தேன். நிறைய பேசி, ஊக்கப்படுத்தினார். அந்தப் படம் நான் கதாநாயகனாக நடித்து, 100 நாட்கள் ஓடிய முதல் படமாக அமைந்தது.

### அணிவித்த மோதிரம்

தந்தை பெரியாரின் வாழ்க்கை வரலாற்றுப் படத்தில் நடித்த போது, பலமுறை கலைஞர் அவர்களைச் சந்திக்க வேண்டிய வாய்ப்பு வந்தது. பல குறிப்புகளைக் கொடுத்து உதவி இருக்கிறார். தந்தை பெரியார் எப்படிப் பேசுவார் என்பதைப் பேசிக் காட்டி ஊக்கப்படுத்தி இருக்கிறார். அந்தப் படம் தணிக்கைக்குச் சென்று எந்தத் தடையும் இல்லாமல் வந்ததற்கு, அவர்தான் முக்கியக் காரணம்.

அந்தப் படத்தின் நூறாவது நாள் விழாவின்போது, தந்தை பெரியார் அணிந்திருந்த மோதிரத்தை, 70 ஆண்டு காலமாகப் பாதுகாக்கப்பட்ட மதிப்புமிக்க மோதிரத்தை "பெரியார்" படத்தில் நடித்ததற்காகக் கலைஞர் எனக்கு அணிவித்த அந்த நாளை என்னால் மறக்க முடியாது. திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் வீரமணி அவர்கள் அளிக்க, கலைஞர் அணிவித்த மோதிரம் என் வாழ்நாளில் நான் பெற்ற மதிப்புமிக்கப் பரிசு. "இந்த மோதிரம் அணிந்திருக்கும் வரை, பகுத்தறிவுக் கொள்கையில் இருந்து விலகிச் செல்ல முடியாது. விலகிச் செல்ல முடிவெடுத்தால் இந்த மோதிரம் உன்னை விடாது" எனக் கூறித்தான் அணிவித்தார். அந்த அளவுக்கு என் மீது தனிப்பட்ட அன்பு காட்டியவர் கலைஞர். அவர் கையால் பல விருதுகளை வாங்கி இருக்கிறேன். சிறந்த நடிகருக்கான விருது, பெரியார் விருது, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் விருது என வாங்கி இருந்தாலும், அந்த மோதிரம்தான் அவர் எனக்கு அளித்த உயரிய விருது.

### இரண்டு முட்டாள்கள்

கலைஞர் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளில் நான் பேசும் சூழல் அமைந்தால், அவரின் வசனங்களை எடுத்துவிடுவேன். ஒருமுறை கோபாலபுரம் சென்றிருந்தபோது, "என்ன சத்தி, நீ மேடையில் எப்பவும் சிவாஜி கணேசன் வசனத்தையே பேசிக் காட்டுற, உனக்கு எம்.ஜி.ஆர்.தானே பிடிக்கும், அவர் வசனத்தையும் பேசு" என்றார். "என்ன வசனம் சொல்லுங்கய்யா" எனக் கேட்டபோது, "நாம்" படத்தில் எழுதிய வசனத்தைக் கூறி பேசச் சொன்னார். அதன் பின்னர் சிவாஜி கணேசன், எம்.ஜி.ஆர். என இருவருக்கும் அவர் எழுதிய வசனங்களை மேடையில் பேசுவதை வழக்கமாக்கிக் கொண்டேன்.

ஒருதயாரிப்பாளரின் வாழ்க்கை வரலாற்று நூல் வெளியீட்டு விழா, கலைஞர் தலைமையில் நடைபெற்றது. அந்த நிகழ்ச்சிக்கு நானும் அழைக்கப்பட்டிருந்தேன். நூலினை நான் வாசிக்கவில்லை. ஆனால், கலைஞர் முதல் நாளே வாசித்துவிட்டார். அந்த நூலில் "கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களை நான் முட்டாள் என்று சொல்வேன்" என்கிற வாசகம் இருந்துள்ளதை வாசித்த கலைஞர், நிகழ்ச்சியில் பேசுகையில், நான் இந்த நூலை நேற்றுதான் வாசித்தேன். படித்த பின்னர் இந்த விழாவுக்கு வரலாமா? வேண்டாமா என யோசித்தேன். ஆனால், எனக்கு முன்னர் தம்பி சத்யராஜ் இருக்கிறார். ஆகவே, ஒரு முட்டாள்




இருந்தால்தான் வருத்தம், விழாவில், இரண்டு முட்டாள்கள் இருப்போம் என்பதால், தைரியமாக வந்தேன் எனக் கூறியதும் அரங்கே வெடித்துச் சிரித்தது.


அதுமட்டுமல்ல, "இன்று இங்கு இரண்டு முட்டாள்கள் மட்டும் இருக்கலாம், ஆனால், தந்தை பெரியாரின் கொள்கைகளை மக்கள் உள்வாங்கிக் கொள்ளும் காலத்தில், உலகம் முழுவதும் முட்டாள்களாக இருப்பார்கள் என்பதை மறந்துவிட வேண்டாம்" என முடித்தார்.

அவர் நகைச்சுவையாகப் பேசுவதாகத் தோன்றும். ஆனால், அவை அந்த நேரத்து நகைச்சுவையாக இருப்பது மட்டுமல்ல்; பிறகு அறிவார்ந்த முறையில் யோசிக்க வைக்கும். அதுதான் கலைஞர்.

## கொள்கைகளில் வாழ்கிறார்

அவருடன் எனக்கு, நடிகர் - வசனகர்த்தா என்கிற வகையில் நெருங்கிய தொடர்பு இருந்ததுபோல, தந்தை பெரியாரின் தொண்டர் என்கிற வகையில் மிக நெருங்கிய அன்பு கிடைத்தது. கலைஞர் இப்போது நம்முடன் இல்லை என்பது அறிவியல் உண்மை. ஆனால், அவர் நம்மைவிட்டு எங்கும் செல்லவில்லை. அவருடைய செயல்களாக, கொள்கைகளாக இருக்கின்றார்.

இட ஒதுக்கீடு, பெண் விடுதலை, பெண்களுக்கான சொத்துரிமை, சாதி ஏற்றத்தாழ்வு ஒழிப்பு எனப் பல முற்போக்குத் திட்டங்களைச் செயல்படுத்தியவர் முதலமைச்சர் கலைஞர். அவற்றை முன்னெடுத்துச் செல்ல உடன்பிறப்புகள் இருக்கிறார்கள். அந்த வகையில், கலைஞர் என்றும் உயிர்ப்போடு இருப்பார். ■



# நெஞ்சில் நிறைந்த நீதி

**- திரு. R.B. சௌத்ரி, தயாரிப்பாளர்**

கலைஞர்...

அவர் சிந்தனைகளின் சிற்பி என்பார்கள். தூரத்திலிருந்து பார்க்கும் பொழுது மிகப்பெரிய பிம்பம் என்பார்கள். ஆனால், அவர் அருகில் இருப்பவர்களுக்குத்தான் தெரியும் அவரின் எளிமை. அந்த எளிமையை நான் பார்க்க, பேச நினைக்கும் பொழுதெல்லாம் அந்த எளிமையிடம் இருந்து உடனே எனக்கு அழைப்பு வரும். எங்கள் நிறுவனத்தின் எத்தனையோ திரைப்படங்களை அவரே அழைத்து அவருடன் என்னையும் அமர வைத்துப் பார்த்துள்ளார். எங்கள் திரைப்படங்களின் சிலவற்றிற்கு மிக உயர்வான தமிழக அரசின் விருதினை என் கைகளில் தந்து என்னைக் கவுரவித்துள்ளார். அடடா அவையெல்லாம் எத்தனை இனிமையான தருணம். அவருக்கு நெஞ்சார்ந்த நன்றியைக் கூற நினைக்கும் பொழுது அவரின் "நெஞ்சுக்கு நீதி"யில் நான் இடம் பெற்றிருப்பது நினைவுக்கு வருகிறது.

நன்றி. ■






# கலைஞர் எனும் மாலுமியுடன் என் கலைப்பயணம்

-திரு. வாகை சந்திரசேகர், நடிகர்



அரசியல் களம், பத்திரிக்கைத்துறை, கவிதை, கட்டுரை, திரைக்கதை, வசனம், மேடைப்பேச்சு, நகைச்சுவை திறன், சீர்மிகு அரசாட்சி, உடற்பயிற்சி, இயக்கத்தின் தலைவர், வெற்றி தோல்வியில் மகிழ்ந்தும், சோர்ந்தும் விடாத மனப்பக்குவம், நீண்ட ஆயுள் இவை அனைத்தும் ஒரே மனிதனிடம் அமைந்திடுவது சாத்தியமா? அவர் தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

நான் ஏற்றுக்கொண்ட தலைவரை, நான் மதிக்கும் ஆசான், நான் போற்றும் தந்தையைப் பற்றிய எண்ணங்களைப் பகிர்ந்து கொள்வதில் பெரு மகிழ்ச்சியினையும், நன்றியினையும், தெரிவித்துக் கொள்கின்றேன். கலைஞரோடு எனக்கான நெருங்கிய தொடர்பு நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்தது. ஆனால், நான் கலைஞரை நேரில் முதன் முதலாகப் பார்த்தது என்னுடைய 12 வயதில். எங்கள் ஊருக்கு வந்திருந்த கலைஞரை தேர்தல் நேர பிரச்சாரத்தில் பார்த்தேன்.

ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் மிகப்பெரிய கூட்டத்தில் ஒருவனாகப் பார்க்கும் வாய்ப்பைப் பெற்றேன்.

அப்போது எனக்குத் தெரியாது... சில ஆண்டுகளில் அவரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பையும், கழகத்தில் அவரின் கீழ் பணியாற்றும் வாய்ப்பையும் பெறுவேன் என்று. பள்ளியில் படிக்கும் காலத்தில் இருந்தே தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் இன்னும் பல்வேறு தலைவர்கள் நடத்தி வந்த நாளிதழ்களைப் படிக்கும் வாய்ப்பு கிடைத்தது.

பள்ளிப் பருவத்தில் என்னையும் அறியாமல் திரைப்படங்களின் மீது நாட்டம் ஏற்பட்டது. அதே வேளையில் சுயமரியாதை, பகுத்தறிவுக் கொள்கைகள் அடங்கிய அண்ணாவின் ஓர் இரவு, வேலைக்காரி, கலைஞரின் பராசக்தி, மனோகரா போன்ற திரைப்படங்களைப் பார்த்து வசனங்களை மனப்பாடம் செய்து பள்ளி விழாக்களில் பேசி நடித்தேன். குறிப்பாக கலைஞரின் வசனங்கள் அடிப்படையே மனதில் பதிந்தது. அதுவே என்னை அறியாமல் திரையுலகப் பயணத்திற்கு பாதை போட்டது. பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு சென்னை நடிப்புப் பயிற்சி கல்லூரியில் சேர்ந்து படிக்க முயற்சித்தேன் முடியவில்லை.

தொடர்ந்து என் கலைப்பயணத்தின் வேட்கை நாடகங்களில் நடிக்கத் தொடங்கினேன். சில ஆண்டுகள் நடித்துவிட்டு மீண்டும் சென்னைக்கு வந்து திரைப்படத்தில் நடிக்க வாய்ப்பு தேடினேன். இயக்குநர் இமயம் பாரதிராஜா அவர்களின் அறிமுகம் மூலமாக திரைப்படத்தில் அறிமுகமானேன். தொடர்ந்து முக்கிய கதாபாத்திரங்களில் நடித்த நான் கதாநாயகனாக நடிக்கத் தொடங்கினேன். இப்படியாக என் திரைப் பயணம் போய்க் கொண்டிருந்தபோது தான், அந்த இனிமையான நாளும் வந்தது. ஆம். கலைஞர் அவர்களிடமிருந்தே என்னைச் சந்திக்க அழைப்பு வந்தது.

என் மானசீகத் தலைவரை, எனது ஆசானைச் சந்திக்கும் பொன்னான வாய்ப்பை அவரே வழங்கியது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. கோபாலபுரம் கலைஞர் இல்லத்திற்குச் சென்றேன். அவருடைய உதவியாளர் சண்முகநாதன் என்னை வரவேற்று தலைவரிடம் அழைத்துச் சென்றார். அறையின் கதவைத் திறந்தேன். அங்கே நாற்காலியில் தலைவர் கலைஞர் புன்சிரிப்போடு அமர்ந்திருந்தார். பள்ளி மாணவராக கட்டுக்கடங்காத கூட்ட நெரிசலில் தூரத்தில் இருந்து பார்த்த நான், இன்று அவர் அருகே அமர்ந்து இருக்கின்றேன். நான் அவரையே இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தேன்.

கலைஞர் பேச ஆரம்பித்தார். "சந்திரசேகர் உங்களுடைய திரைப்படங்கள் பார்த்திருக்கிறேன். சிவப்பு மல்லி, பாலைவனச்சோலை, சுமை போன்ற படங்கள் பார்த்திருக்கின்றேன். வாழ்த்துக்கள்" என்று வாழ்த்திய கலைஞர் அடுத்து சொன்ன வார்த்தை தான் இன்று வரை என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அவை "தமிழ்த் திரை உலகிற்கு நல்ல தமிழ் பேசும் நடிகன் கிடைத்திருக்கிறீர்கள். நடிகர் திலகம் சிவாஜிக்குப் பிறகு இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ஆர். க்குப் பிறகு நல்ல தமிழ் பேசும் நடிகர் நீங்கள்". இந்த வார்த்தைகள் என் காதில் இன்றும் கலைஞரின் கரகரத்த குரலில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

எதற்காக என்னை அழைத்தார் என்ற காரணத்தைக் கூறினார். "தூக்கு மேடை நாடகத்தைத் திரைப்படமாக எடுக்க இருக்கின்றேன். அந்த வசனங்களை நீங்கள் தான் பேச முடியும். எனவே, நீங்கள் நடித்தால் சிறப்பாக இருக்கும்" எனச் சொல்லிவிட்டு, "என்னுடைய திரைப்படத்தில் நடித்தால் உங்களுக்கு எதிர்ப்புகள் வரலாம்" என்று கூறினார். நான் புரிந்து கொண்டேன். அடுத்த நொடியே நான் சொன்னேன் "நான் நடிகன் ஆவதற்கு முன்பே திமுக கொள்கைப் பற்றாளன்" என்பதைச் சொல்லி "எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் நடிப்பேன். எனக்காகத் தங்கள் பேனா வசனம் எழுதப்போகிறது என்றால் இதைவிட எனக்கு மகிழ்ச்சி இல்லை" என்றேன்.

தூக்குமேடை திரைப்படம் வெகுவேகமாக வளர்ந்தது. இயக்குநர் அமிர்தம் தான் தூக்கு மேடை திரைப்படத்தை இயக்கினார். படத்தின் முக்கியக் காட்சி நீண்ட வசனம் ஸ்டுடியோவில் நேரடி ஒளிப்பதிவில் டப்பிங் இல்லாமல் எடுக்கத் தயாரானோம். டேக் ரெடியான நேரத்தில் திடீரென்று கலைஞர் படப்பிடிப்பு தளத்திற்குள் வந்துவிட்டார். எனக்கு கொஞ்சம் பதட்டம். என் நிலையைப் புரிந்து கொண்டு, எடுங்கள் என்று சொல்லிவிட்டு படப்பிடிப்புத் தளத்தை விட்டு வெளியே சென்று விட்டார். பிறகு நீண்ட வசனம் கொண்ட அந்த ஷாட்டை எடுத்து முடித்தோம். தளத்தை விட்டு வெளியே வந்தபோது அங்கே ரிக்கார்டிங் இன்ஜினியர் அறையில் காதில் ஹெட்போனைப் போட்டுகொண்டு வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு பாராட்டிச் சென்றார்.

நான் பேசிய வசனத்தின் சிறு பகுதித் துளிகள் "நல்ல தீர்ப்பு. நான் விரும்பிய தீர்ப்பு. நாட்களெல்லாம் நாட்டுக்கே உழைப்பேன் என்ற வீர வாள்கள் பல தொங்க விடப்பட்ட தூக்குமேடையில் இதோ நானும் ஒரு போர்வாளாய் தொங்கப் போகிறேன். வாய்மைதனை கொன்று கொண்டே இருக்கிற வஞ்சகரை வென்று கொண்டே இருப்பதற்கு, நின்று கொண்டே தூங்கிய மேடை இந்தத் தூக்கு மேடை. அவர் போல் உறங்கிடவே இதை நாடி வந்து விட்டேன்.

கொள்கை சத்தமிட்டோர் குரல் வளையை முத்தமிட்ட கயிற்றுக்கு என் கழுத்தின் மீது ஒரு காதலாம். அதை நிறைவேற்றக் காத்திருக்கும் என்னைப் பார்த்து கடுங்கோபம் கொள்ளாதே பவானி, ரத்தம் பொங்குமிடத்தில் எனை தொட்டிழுத்து முத்தம் பெற்றவளே, இலட்சிய வெற்றிக்கு உயிரை தத்தம் செய்தவளே, பல கொலைகள் செய்தவன் பரிசுத்த பக்தனாம். அவனைத் தண்டித்த நானே பரமபாதகனாம். படிக்கட்டுகள் பல கொண்ட நீதிமன்றத்தில் வடிகட்டிய பொய்யர்கள் சாட்சி கொடிகட்டி பறக்கும் வரை வெடிவைத்துப் பிளந்தாலும் உண்மை வெளிவரப் போவதில்லை. மடிப்பிச்சை கேட்டு உயிர் வாழ விருப்பமில்லை. அதனால் ஆவிதனை சாவில் நட்டு புகழ் பூவை பறித்துனக்கு சூட்டுகிறேன் பவானி, ஏன் புரிந்தான் என என்னிடம் மனமின்றி சட்டமெனும் சாத்தான் வகுத்ததே வேதமென்று நிரபராதிகளின் ஊண் பருகி, உயிர் பருகி, தேன் பருகினாற் போல் மயங்குகிற நீதி தேவன்கள் இருக்கும் வரை நறுமணமிக்க சந்தன மலர்கள் சமுதாய சாக்கடையில் எத்தனை நட்டால் தான் என்ன பயன்..." இந்த வசனம் இன்னும் தொடர்ந்து எரிமலையாய் வெடிக்கும்.

கலைஞர் அவர்களின் படைப்புகளில் பதினைந்து படங்களுக்கு மேல் நடித்துள்ளேன். கலைஞருக்கு 84 வயதிருக்கும் போது, திண்டுக்கல்லில் திமுக மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டில் கலைஞரின் வாழ்க்கை வரலாற்றை நாடகமாகத் தயார் செய்தேன். அதில் கலைஞரின் 24 வயது, 45 வயது, 65 வயது மற்றும் 84 வயது தோற்றங்களில், அவர் முன்னிலையில் இலட்சக்கணக்கான தொண்டர்கள் காண நடித்தேன். தலைவரின் பாராட்டுதலைப் பெற்றேன். 40 ஆண்டுகளுக்கு








மேலாக வெற்றி தோல்வி இரண்டையும் சமமாகப் பார்க்கும் கலைஞரின் வழியில் என்னை இணைத்துக் கொண்டு கலைப் பணி, கழகப் பணியாற்றி வருகின்றேன். தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றச் செயலாளராக ஒரு முறையும், வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினராக ஒரு முறையும் பணியாற்றி கலைஞரின் பாராட்டுதலைப் பெற்றது திருப்தி அளிக்கிறது.

நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக பழகியதில், வாரத்தில் ஒரு முறையாவது நேரில் சந்தித்துப் பேசிவருவதை வழக்கமாகக் கொண்டிருந்தேன். சில சமயங்களில் வெளியூர் படப்பிடிப்பில் இருந்தால் தொலைபேசியில் பேசிவிடுவேன். என் வளர்ச்சி, குடும்பச்சூழல் எல்லாவற்றையும் மிக அக்கறையோடு விசாரிப்பார். எனது திருமணத்திற்கு வந்து எங்களை வாழ்த்தினார். என் பேரப்பிள்ளைகளையும் வாழ்த்தினார்.

கலைஞர் அவர்கள் திரைப்படத்தில் வசனம் எழுத ஒரு கொள்கை வகுத்திருந்தார். பகுத்தறிவு, சுயமரியாதை மற்றும் கழகக் கொள்கைக்கு மாறான வசனங்களை எழுதுவதில்லை என்று. அதைப்போலவே நானும் நடிக்கும் திரைப்படங்களில் கலைஞரையோ, கழகக் கொள்கைக்கு மாறுபட்ட வசனங்களைப் பேசுவதில்லை என்று நடிப்பதற்கு ஒப்புக்கொள்வற்கு முன்பே எனது கருத்தினை எடுத்துரைத்து ஒப்பந்தத்தில் சேர்த்து விடுவேன்.

இப்படியாக கலை, அரசியல், பொது வாழ்க்கை மூன்றிலும் கலைஞரைப் பின்பற்றும் தம்பி என, என் பயணத்தை தொடர்கின்றேன். கலைஞருக்குப் பிறகு கழகத்தின் தலைவர் மாண்புமிகு தளபதியார் அவர்கள் தலைமையில், இளையவர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சுறுசுறுப்பு மிக்க உழைப்பின் வழியில், திராவிட முன்னேற்றக் கழக, கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் தலைவராக, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மற்றும் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தின் தலைவராக, கலைஞர் புகழ் ஓங்கும் வகையில் பணியாற்றி வருகின்றேன். ஒரு தமிழனாய் கலைஞர் புகழ் போற்றும் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். ■



# பல்லவி சரணமும் அவரே!

-திரு.எஸ்.ஏ.ராஜ்குமார், இசையமைப்பாளர்

வடக்கே இமயத்திற்கு இணையாக தெற்கே குமரிக்கடல் நடுவே ஐயன் திருவள்ளுவருக்கு வானுயரச் சிலையெழுப்பி, செம்மொழிக்கும், செந்தமிழ் நாட்டுக்கும் இறவாப் பெருமையைத் தேடித்தந்த தமிழர் கோமான் கலைஞர் பெருமான் துயில் கொண்டிருக்கும் வங்கக் கடலோரம் நோக்கி வணங்குகிறேன்.

1987-ம் ஆண்டு கலைஞரின் கதை வசனத்தில் இராமநாராயணன் இயக்கத்தில் என் இசையமைப்பில் எனது இரண்டாம் படமாக வெளியாகி வெற்றியடைந்த "வீரன் வேலுத்தம்பி" திரைப்படத்தின் பாடல் கம்போசிங் பணியில் ஈடுபட்டிருந்தபோதுதான் முதன்முதலில் கலைஞர் அவர்களைக் காணும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இதில் வியப்பு என்னவென்றால், கலைஞர் அவர்களை நான் சென்னை மத்திய சிறையில் தான் சந்தித்தேன். ஆம், அப்போது ஒரு அரசியல் போராட்டத்திற்காக கலைஞர் அவர்கள் சிறையில் இருந்த நேரம்.

இயக்குநர் இராம நாராயணனுடன் கலைஞர் அவர்களைக் காண சிறை வளாகம் சென்றிருந்தேன். கலைஞர் அவர்கள் சிறைக்குள் அமர்ந்திருக்க வெளியே நின்று நான் அவரை வணங்கினேன். என்னை பார்த்துப் புன்னகைத்த கலைஞர் அவர்கள் "என்ன தம்பி டியூன் போட்டாச்சா?" என்றார்.

நான் அதிர்ந்து போய் இயக்குநரைப் பார்க்க அவர் உடனே "டியூன பாடுங்க ராஜ்குமார்" என்றார். உண்மை என்னவென்றால் நான் அதுவரை அந்த சிச்சுவேஷனுக்கு டியூன் கம்போஸ் செய்திருக்கவில்லை. கொஞ்சம் யோசித்த நான், உடனே என் மனதில் உதித்த டியூனை சந்தமாக கலைஞரிடம் பாடிக்காட்டினேன். நான் பாடியதைக் கூர்ந்து கவனித்த கலைஞர் அவர்கள் சில நிமிடங்கள் சிந்தித்து, அவர் கையில் வைத்திருந்த நோட்டில் சில வரிகளை எழுதி, பின் என்னிடம் கொடுத்து பாடச் சொன்னார்.

நான் "சுருளு மீசைக் காரனடி வேலுத்தம்பி, சூராதி சூரனடி வேலுத்தம்பி" என்று அவர் எழுதிய பல்லவியைப் பாடினேன். கலைஞர் அதனை மிகவும் ரசித்தார். பிறகு "தம்பி அனுபல்லவி பாடுங்க" என்றார். நான் உடனே "தான நன்ன தன தன்னன்னா" என்று அனுபல்லவியை பாடினேன். கண்களை மூடியபடி அதைக் கேட்ட கலைஞர் சில வினாடிகள் யோசித்து வரிகளை எழுதி என்னிடம் கொடுத்து பாடச்சொன்னார்.

"சூரியனில் நெருப்பெடுப்பான்... சூழ்ச்சிகளைக் கொளுத்திடுவான்" என்று இருமுறை பாடியதும் கலைஞரும், இயக்குநரும் மகிழ்ந்து பாராட்டினர். பிறகு கலைஞர் அவர்கள் "தம்பி நீங்க சரணம் டியூன் பண்ணி அனுப்புங்க நா... எழுதியனுப்புறேன்." என்றதும் நாங்கள் கலைஞரிடம் விடைபெற்றோம்.



தமிழர் தலைவராம் கலைஞர் அவர்கள் ஒரு கவிஞராக என் மெட்டுக்குப் பாட்டெழுதினார் என்பதை எண்ணிப் பெருமிதம் அடைந்தபடி காரில் இல்லம் திரும்பிக் கொண்டிருந்தேன். என் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. இரண்டு நாள் கழித்து இயக்குநர் இராம நாராயணனின் அலுவலகத்தில் நான் பாடல் கம்போசிங் செய்து கொண்டிருந்தபோது இயக்குநர் அவர்கள், கலைஞரிடமிருந்து பாடல் வந்துவிட்டது என்று கூறி பேப்பரை என்னிடம் கொடுத்தார்.

கலைஞர் அவர்களின் கையெழுத்து முத்துக்களைக் கோர்த்து அடுக்கி வைத்ததுபோல் செந்தமிழின் காப்பியங்களைச் செதுக்கிய கையெழுத்து. எத்தனையோ தமிழர்களின் வாழ்வில் ஏற்றம் கொடுத்த கையெழுத்து. கண்களில் ஒற்றிக்கொண்டேன். மெட்டுக்கு ஏற்றபடி கச்சிதமாக எழுதப்பட்ட அந்த வீரமிகு பாடலை முழுவதும் படித்து மகிழ்ந்தேன். பாடலின் முடிவில், பின்குறிப்பிட்டு எழுதியிருந்தார் கலைஞர்.

“தேவையெனில்... திருப்தியெனில்... பயன்படுத்திக் கொள்க...”

எனக்கு எழுதப்பட்டிருந்த அந்த வரிகளைப் படித்து நெகிழ்ந்தேன். தமிழ் கூறும் உலகம் போற்றும் நிகரில்லா படைப்பாளியான கலைஞர் பெருமான் ஒரு புதுமுக இசையமைப்பாளனான என்னிடம் கூறிய அந்தச் செய்தியில் இருந்த எளிமை என்னை உலுக்கியது. தன்னலமற்ற அந்தத் தகைமை யாருக்கு வரும்? உயரம் குறைந்த கலைஞர் பெருமான் எனக்கு உலகளாவித் தெரிந்த தருணம் அது. இன்றளவும் என் உள்ளத்தில் கலைஞர் அவர்கள் இமயம் போல் உயர்ந்து கொண்டிருக்கிறார். ■











# நரிக்குறவர்களின் கல்விக்கண் திறந்த கலைஞர்

-திரு. கலைஞானம், தயாரிப்பாளர்

1962 வாக்கில், சென்னை மயிலாப்பூர் தண்ணீர்துறை மார்க்கெட் அருகே, ஒரு நரிக்குறவ பெண்மணிக்கு, பொது மக்கள் பார்த்துக் கொண்டிருக்க. பிளாட்பாரத்திலேயே பிரசவமானதைக் கண்டு அதிர்ந்து போனேன்.

மற்றொரு நாள் எல்டாம்ஸ் ஹோட்டல் பின்புறத்தில் குப்பைத் தொட்டியில் எச்சில் இலைகளை போட்டபோது, அதை நாய்கள் வந்து தின்றுகொண்டிருக்க, நாய்களோடு நாய்களாய் நரிக்குறவர்கள் கூட்டமும் அந்த எச்சில் சோற்றை தின்பதையும் பார்த்து துடித்துப்போனேன். இப்படி ஒரு இனம். இவர்கள் யார்? இந்த நாட்டின் குடிமக்கள் தானே அவர்களிடமே கேட்டறிந்தேன்.



சாமியோ எங்களுக்கு ஊரு இல்ல. குடியிருக்க வீடு இல்ல. ஊரு ஊராகச் சுற்றித்திரிந்தே வாழ்கையை ஓட்டுகிறோம் என்றார்கள்.

இந்த இரு நிகழ்வுகளும் மனதில் ஆழமாய்ப் பதிந்துவிட, அதன் விளைவாக, "குறத்தி மகன்" என்ற கதையை எழுதினேன். இந்த கதையைக் கேட்ட இயக்குநர் கே.எஸ்.கோபலகிருஷ்ணன், அவர் இயக்கத்தில் படமாக எடுத்தார். ஜெமினி கணேசன், கே.ஆர்.விஜயா, கமலஹாசன், மாஸ்டர் ஸ்ரீதர் நடித்த "குறத்தி மகன்" படம் பெரும் வெற்றி பெற்றது.




நரிக்குறவ சமூகத்தில் பிறந்த ஒருவன் நன்கு படித்து, நல்ல நிலைக்கு வருவதுபோல் அமைத்திருந்த அந்த படத்தைப் பார்த்த, அந்த இன மக்கள் என்னிடமும் திரு. கே.எஸ். கோபாலகிருஷ்ணனிடமும் வந்து, "சாமியோ, நாங்க குறத்தி மகன் படம் பார்த்தோம், நாங்களும் படித்து நாலு பேரைப் போல வாழ ஆசைப்படுகிறோம்" என்று அவர்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்கள்.

உடனே நான், "நீங்கள் அனைவரும் முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களைப் பாருங்கள். நிச்சயம் அவர் உங்களுக்கு நல்லது செய்வார்" என்றேன். கலைஞர் கருணாநிதி அவர்கள் தான் அன்று தமிழக முதல்வராக இருந்தார்.

நரிக்குறவர்களும் முதல்வர் கலைஞரைப் பார்த்து கோரிக்கை வைக்க, திக்கு தெரியாதவர்களுக்கு திசை காட்டியாக விளங்குகின்ற, அடித்தட்டு மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்தையே எப்பொழுதும் சிந்திக்கின்ற, கலைஞர் அவர்கள், அப்பொழுதே அவர்களின் கோரிக்கையை ஏற்று, அவர்களுக்கென பள்ளிக்கூடம் ஒன்றை கட்டித்தர ஏற்பாடு செய்து, நரிக்குறவ இன மக்களின் கல்விக் கண்ணைத் திறந்தார். இன்று அந்த இனத்தில் பல பட்டதாரிகள் உருவாக கலைஞரே காரணம் என்பது வரலாறு.

கலைஞர் கல்வி தந்தார்கள் என்றால், இன்றைய முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் நரிக்குறவர்களுக்கு இருக்க இடம் கொடுத்து, அவர்கள் வீடு சென்று சாப்பிட்டதைப் பார்த்தபோது என் இலட்சியம் நிறைவேறிய மகிழ்ச்சிப் பெருக்கில் வாழ்ந்து வருகிறேன்.

எச்சில் சோற்றைத் தின்று வாழ்ந்த நரிக்குறவர்கள் வாழ்க்கையில் கல்வி அறிவு தந்து அவர்களை மக்களோடு மக்களாக வாழ வைத்த டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களின் புகழ் என்றும் நிலைத்திருக்கும். ■

# தமிழின்

## மூத்த திரைப்படக் கலைஞர்

**- அமரர் முக்தா V.சீனிவாசன், தயாரிப்பாளர்**



தமிழ்ப்படத் தயாரிப்பளர்கள் இருவகைப்பட்டவர்கள், தங்களுக்கென்று ஒரு ஸ்டுடியோ வைத்துக் கொண்டு அதில் படம் எடுப்பவர்கள் ஒருவிதம். இந்த வகையில் வாசன், ஏ.வி.எம்., சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் சுந்தரம் போன்றவர்கள் வருவார்கள். இந்த வகை தயாரிப்பாளர்களில் மிக மூத்த நிறுவனம் திரு.ஏ.வி.எம். அவர்களுடையது. இவர் 1935-ல் படம் எடுக்கத் தொடங்கினார். ஸ்டுடியோக்களை வாடகைக்கு எடுத்து அதிலே தங்களுக்கு வேண்டிய செட்டுகளைப் போட்டு அதில் படம் எடுத்த தனியார் படத்தயாரிப்பாளர்கள் மறு வகைப்பட்டவர்கள். சொந்த ஸ்டுடியோ மட்டும் இவர்களிடம் கிடையாது. மற்றபடி படப்பிடிப்புப் பணிகள் அத்தனையும் உண்டு. தேவர், பந்துலு, நாங்கள் (முக்தா), வீனஸ் போன்றவர்கள் இந்த வரிசையைச் சேர்ந்தவர்கள். இவ்வரிசையில் மூத்த தயாரிப்பாளர் டாக்டர் கலைஞர்தான். இன்றைக்கு 54 ஆண்டுகளுக்கு முன்பு 1953-ல் கலைஞர் தயாரிப்பாளராக பங்கேற்ற "நாம்" என்ற படம் வந்தது.

இன்றைக்குத் தமிழ்நாட்டின் மூத்த ஸ்டுடியோ அதிபர், தயாரிப்பாளர் என்றால் ஏ.வி.எம்-மையும், தனியார் துறையில் மூத்த திரைப்படத் தயாரிப்பாளர் என்றால் டாக்டர் கலைஞரையும் தான் சொல்ல வேண்டும்.

1953ஆம் ஆண்டு வெளியான நாம் படத்தில் எம்.ஜி.ராமச்சந்திரன் நடித்தார். இதன் தயாரிப்பாளர்கள் எம்.ஜி.ஆர்., டாக்டர் கலைஞர் (என் நினைவு சரியாக இருந்தால்), ஏ.காசிலிங்கம் அவர்கள். இந்தப் படம் பெரும் வெற்றியைக் கண்டது என்று சொல்லமாட்டேன். ஆனால் இதற்கு முன் வந்திருந்த கலைஞர் படங்களாகிய மந்திரிகுமாரி, மருத நாட்டு இளவரசி போன்ற படங்கள் மாபெரும் வெற்றியைப் பெற்று இருந்தமையால் இந்தப் படத்திற்கும் கூட்டம் வந்தது. இந்தப் படத்தை கலைஞர் தயாரித்தபோது தி.நகரில் காமராஜர் வீட்டுக்கு சமீபமாக ஒரு வீட்டில் கலைஞர் குடியிருந்தார் என்பது என் ஞாபகம். இதை நான் ஒரு கூட்டத்தில் குறிப்பிட, அங்கு வந்திருந்த முரசொலி மாறன் அவர்கள் என் கூற்றை ஆமோதித்ததுடன் கலைஞர் இந்தப் படத்தின் தயாரிப்பாளராக இணைவதை எங்கள் அன்னை ஒப்பவில்லை என்றும் கூறிவிட்டார்கள்.

எழுத்து, பேச்சு மூலம் நாட்டை முன்னேற்றிய கலைஞர் பிறந்தது 1924-ஆம் ஆண்டு ஜுன் மாதம் 3-ஆம் தேதி. பிறந்த ஊர் திருவாரூர் பக்கத்திலுள்ள திருக்குவளை கிராமம். பள்ளியில் படிக்கும்போது கையெழுத்துப் பிரதி ஏடுகளைத் தயாரித்து வெளியிட்டார். அவரது கவனம் நாடகத்துறை மீது பட்டது. சில ஒப்பற்ற நாடகங்களை எழுதினார் கலைஞர். எம்.ஆர்.ராதா அவர்கள் நடித்த "தூக்குமேடை", ஏ.எம்.ரத்தினம் அவர்களின் தேவி நாடக சபையினர் நடித்த "மந்திரிகுமாரி" தன் சொந்தப் பொறுப்பில் "காகிதப்பூ" போன்ற நாடகங்களை அவர் எழுதி இயக்கினார்.






பத்திரிகைத் தொழிலில் பணியாற்றிய கலைஞருக்கு எம்.எஸ். முத்துகிருஷ்ணன் என்கிற இசைக் கலைஞர் அறிமுகம் உண்டு. அவரது பரிந்துரையில் கோவை சென்று அங்கு அப்போது ஜூபிடர் நிறுவனத்தில் வசனம் எழுதிக் கொண்டிருந்த ஏ.எஸ்.ஏ. சாமியிடம் உதவியாளராகச் சேர்ந்தார். "ராஜகுமாரி", "அபிமன்யூ" ஆகிய படங்களுக்கு வசனங்கள் எழுதிக் கொடுத்தார். அந்தப் படங்களில் இவரது பெயர் "வசனங்கள் உதவி" என்றுதான் டைட்டிலில் போடப்பட்டன.

இதைத் தொடர்ந்து இவரது கதை வசனத்தில் "மருதநாட்டு இளவரசி" என்கிற படம் வந்தது. எம்.ஜி.ஆர். - வி.என். ஜானகி நடித்த படம். இது மாபெரும் வெற்றி பெற்றது. 1952-இல் வெளியான கலைஞரது "பராசக்தி" படம் நாட்டில் பெரும் பரபரப்பை உண்டாக்கியது. சிவாஜி கணேசன் என்கிற உலகில் சிறந்த நடிகர் இந்தப்படத்தில் தான் அறிமுகமானார். "பராசக்தி" படம் கலைஞரின் புகழை வானத்தைத் தொடும் அளவுக்கு உயர்த்திவிட்டது. 1954-ல் வெளியான "மனோகரா" படத்தின் வசனங்கள் பெரும் புகழ் கொண்டவையாக அமைந்தன. தர்பார் சீனில் மனோகரன் தன் தாய்க்காக மன்னனிடம் வாதிடும் காட்சி மிக மிகப் பாராட்டத்தக்கதாக இருந்தது.

இளங்கோவனுக்குப் பிறகு, அண்ணாவுக்கு அடுத்தபடி கலைஞர் தமிழ்ப் பட உலகின் மிகப் புகழ் கொண்ட வசனகர்த்தாவாக உயர்ந்தார். இவரது பெயரை டைட்டிலில் பார்த்த உடனேயே ரசிகர்கள் நீண்ட நேரம் கை தட்டி மகிழ்ந்தனர். இந்த காலக்கட்டத்தில் நிறைய படங்களுக்கு கதை, வசனம் எழுதியதோடு, தன் சொந்த திரைப்படத் தயாரிப்பு நிறுவனத்தை அமைத்து அதன் மூலம் வரிசையாகப் படங்களை எடுத்து வந்தார் கலைஞர். அதில் அவருக்கு உறுதுணையாக இருந்தவர் முரசொலிமாறன் அவர்களும், அமிர்தம் அவர்களும். பின்பு மாறன் அவர்கள், தனியாக வசனம் எழுதும் துறையில் மாபெரும் அங்கீகாரம் பெற்றார்.

அமிர்தம் அவர்கள், துரை என்கிற காமிராமேனிடம் தொழில் கற்று, பின்பு தானே தனியாக காமிராவை இயக்கத் தொடங்கினார். எனது "ஆயிரம் பொய்" என்கிற படத்தில் அமிர்தம் அவர்கள் காமிராமேனாகப் பணிபுரிந்தார். கலைஞர் தயாரித்த படங்கள் ஏராளமானவை. தேவரும், பந்துலுவும், நானும் தயாரித்த தமிழ்ப் படங்களின் எண்ணிக்கைக்கு கூடுதலாகவே அவரது படங்களின் எண்ணிக்கை இருந்திருக்கலாம். அவரின் ஒவ்வொரு படமும் அவருக்கு ஒரு அனுபவம். "காஞ்சித் தலைவன்" என்கிற படத்தை எடுத்தார் கலைஞர்.

அதில் புலிகேசி என்கிற பாத்திரப் படைப்பு வருகிறது. அதற்கு சென்சாரில் ஏகப்பட்ட ஆட்சேபனை வந்தது. அப்போது அவர் சிறையில் இருந்தார். அந்தப்படத்தின் விநியோகஸ்தரான தீரன் மூலம், வெங்கட்ராமன் அவர்கள் கலைஞரைச் சிறைச் சாலையில் சந்தித்து மாற்று வசனங்கள் எழுதி வாங்கி வந்து சென்சாருக்கும் காட்டி "டப்பிங்" செய்தார். "பராசக்தி" படமே முதலில் முழுவதுமாக தடை செய்ய வேண்டிய படமாகக் கருதப்பட்டது. "தியாக பூமியின் தலையெழுத்து" அதற்கு வந்துவிடும் என நினைத்தோம். நல்ல வேளை சர்டிபிகேட் கொடுத்து விட்டார்கள். படம் போடு போடு எனப் போட்டது.

அவரது மற்றுமொரு படம் சென்சாரில் சிக்கிக் கொண்டது. அப்போது கலீல் மான்ஷெனில் 4வது மாடியில் சென்சார் ஆபீஸ் படியேறிச் செல்ல மூச்சு வாங்கும். கலைஞர் அவர்கள் படிகளை ஏறிக் கடந்து வந்தார். அப்போது லிப்ட் வரவில்லை. ஏறி நேராக சென்சார் ஆபீஸர் அறையில் நுழைந்தார். அசந்து போய்விட்ட சென்சார் ஆபீஸர் ஜி.டி.சாஸ்திரி, அவரைப் பார்த்து "என்ன திருப்பதி மலைமீது ஏறி வருவதுபோல் இருந்ததா?" என்று கேட்க, கலைஞர் "நல்ல உதாரணம் சொன்னீர்கள்" என்றார். புரியாமல் ஆபீஸர் சாஸ்திரி பார்க்க, கலைஞர் ஆபீஸரிடம், "திருப்பதியில் மொட்டை அடிக்கிறார்கள். அதே மொட்டை அடிக்கும் வேலையை இங்கும் நீங்கள் செய்கிறீர்கள்" என்று கூற, ஆபீஸர் சாஸ்திரி தன்னை மறந்து மேசையைத் தட்டி ஓங்கிச் சிரித்தார்கள்.

கலைஞர் அவர்களது படம் எல்லாம் அநேகமாக சென்சார் பிரச்சனை இல்லாமல் வந்தது இல்லை. படம் எடுத்தபோது அவருக்கு அதிகமான பொருளாதாரப் பிரச்சனைகள் வந்திருக்கின்றன. அன்று தலை சிறந்த நடிகை ஒருவர் சம்பள பாக்கி வராமல் ஷூட்டிங்கிற்கு வர மறுத்து விட்டார். உடனே, கலைஞர் தன் வீட்டுப் பெண்களின் நகைகளை அடமானம் வைத்து பணம் வாங்கி, நடிகைக்குக் கொடுத்து ஷூட்டிங்கிற்கு அழைத்து வந்ததாக அந்தக் காலத்தில் பேசிக்கொள்வார்கள்.

"குறவஞ்சி" என்கிற படத்தை எடுத்தார் கலைஞர். மார்ச் 12-ம் தேதி ரிலீஸ் என திட்டமிடப்பட்டது. நண்பர்கள், "அது பரீட்சை சமயம், ஏப்ரல் முதல் வாரத்தில் படத்தை வெளியிடுங்கள்" என்று யோசனை கூற அதை ஏற்று அவ்வாறே தேதியை மாற்றினார். அப்போது, நிதியமைச்சராக இருந்த மொரார்ஜி தேசாய், அடுத்த வாரமே "ஒவ்வொரு படமும்





வெளியாகும் போது பத்தாயிரம் ரூபாய் எக்ஸைஸ் ட்யூட்டி வேண்டும்" என சட்டம் கொண்டு வந்தார்.

அப்படி எக்ஸைஸ் ட்யூட்டி தமிழ்நாட்டில் முதலாவதாக கட்டியவர் கலைஞர் அவர்கள். அதைத் தொடர்ந்து நான் கட்டினேன். இருவரும் அனந்தசாமி என்பவரிடம் தான் கடன் வாங்கினோம் என்பது என் ஞாபகம் (அது ஒருவேளை சரியாக இல்லாது இருக்கலாம்). எம்.ஜி.ஆரை வைத்து ஒரு படத்தை ஆரம்பித்து, அது முடிவடையாது கலைஞர் பட்ட சிரமம் எங்களுக்கெல்லாம் தெரியும். சினிமாத் தொழில் தரும் அத்தனை கஷ்டங்களையும் சந்தித்தவர் கலைஞர்.

ஆயினும், விடாது படம் எடுத்துக் கொண்டே இருந்தார். சந்திரசேகர், இராமநாராயணன் போன்ற இயக்குநர்கள் அவரிடம் உண்மையாகவும், நேர்மையாகவும் பணிபுரிந்தார்கள். என்னை டைரக்ட் செய்ய ஒரு படத்திற்கு கலைஞர் அழைத்தார். என் துரதிருஷ்டம் அந்தப் படம் தொடங்கப்படவே இல்லை.

ஏராளமான படங்களை எடுத்த கலைஞர், தமிழகத்தின் மூத்த தயாரிப்பாளர் என்பது நமக்குப் பெருமையல்லவா? ■

(2003-இல் வெளிவந்த, அமரர் முக்தா V.சீனிவாசன் அவர்கள் எழுதிய 'தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் வரலாறு' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.)

# காவிரியின் தெம்மாங்கு

-கவிஞர் கலா பிரியா

“பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே” என்னும் நன்னூல் சூத்திரத்திற்கேற்ப, காலம் தோறும் கவிதைகளில் புதுமை தோன்றி வந்திருக்கிறது. பாரதியின் வசன கவிதைகள் துவங்கி நவீன கவிதைகள் தமிழில் வலுப்பெற்றுவிட்ட காலமிது. இந்த மாறுதலுக்கு கலைஞரின் கவிதைகள் ஒரு உந்துசக்தி என்பதை திராவிட இயக்க ஓவ்வாமையுள்ளவர்கள் வேண்டுமானால் ஒத்துக் கொள்ளத் தயங்குவார்கள். ஆனால், கலைஞர் எப்போதுமே காலங்களுக்கிடையே பாலங்கள் அமைத்தவர். அந்தப் பாலத்தில் நடந்து கவிதை பயின்று, அந்தக் கலைஞரின் கவிதைகளால் கவரப்பெற்று நானும் ஒரு கவிஞனானவன் என்பதைச் சொல்வதில் எனக்குத் தயக்கமே இருந்ததில்லை. அண்ணா, கலைஞர் ஆகியோர் தங்கள் எழுத்துக்களில் மீண்டும் மீண்டும் சொல்லித்தான் நானெல்லாம் அமெரிக்க கவிஞர் கவால்ட் விட்மனையும், வங்க எழுத்தாளர் ராகுல்ஜியையும் படிக்க ஆரம்பித்தேன்.

1947-இல் ராஜகுமாரி தொடங்கி 2011-இல் வெளியான பொன்னர் சங்கர் வரை அவரது கதை வசனத்தில் வெளியான சுமார் அறுபத்தி ஐந்து படங்கள் மூலம், “காலங்களில் அவள் வசந்தம்” என்ற திரைப்படப் பாடல் போல, தன்னைக் “கலைகளிலே அவர் கதை வசனம்” என்று தகவமைத்துக் கொண்டவர் கலைஞர். 1960-80-களில் கலைஞர் முழங்கும் கவியரங்க மேடைகள் பலருக்கும் முன்னோடியானதும், மிகப் பிரபலமானதுமாகும். இதெல்லாம் பலரும் அறிந்ததே. ஆனால் அவர் ஒரு சிறந்த பாடலாசிரியர் என்பதைச் சிலரே அறிவார்கள். அவர் திரைப்படப் பாடல்களிலும் தனிச் சிறப்புப் பெற்றவர் என்பதை நிறுவுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

என்னிடம் சிலர் கேட்பதுண்டு நீங்கள் ஏன் திரைப்படங்களுக்குப் பாடல் எழுதக் கூடாது என்று. செய்யலாம் என்று நானும் நினைத்ததுண்டு. சொல்லியும் இருக்கிறேன். ஆனால் நா. முத்துக்குமார் மூலம் அறிமுகமான பிரபல இசையமைப்பாளர் ஒருவருடன் பேசிக் கொண்டிருக்கும்போது “நீங்க எப்படி எழுதினாலும், மியூசிக் போடலாங்க. ஆனா, மீட்டர்ல வந்து பாட்டு உக்காரணும். அப்பத்தான் எங்களைப்போல இசையமைப்பாளர்களுக்கு வசதி” என்று கூறினார். அது ஒரு முக்கியமான விஷயம். அவரே சொன்னார் “கலைஞர் அதிலும் விற்பன்னர்” என்று, இதுபோலப் பல செய்திகள் உண்டு. கலைஞர் எழுதிய பிரபலமான “காகித ஓடம் கடலலை மீது போவது போல...” பாடல் பிறந்த விதம் பற்றி ஒரு சுவையான நிகழ்வொன்று உண்டு.

அந்தப் பாடலை எழுதுவதற்கு பாடலாசிரியர் மாயவனாதன், இசையமைப்பாளர் டி.கே.ராமமூர்த்தி ஆகியோர் அமர்ந்துள்ளனர். எதனாலோ டியூன் போடத் தாமதமாகிறது. கவிஞர் மாயவனாதன், “சட்டுப் புட்டுன்னு டியூனைச் சொல்லுங்க..” என்று எரிச்சலுடன் கேட்டிருக்கிறார். என்னய்யா பெரிய டியூன், “மாயவனாதா.. மாயவனாதா..” இதுதான்சந்தம், இதுக்கு பாட்டை எழுதுய்யா என்று தானும் சற்று சூடாகப் பதிலளித்திருக்கிறார் ராமமூர்த்தி. கவிஞரோ



கோபப்பட்டு எழுந்து சென்று விட்டார். அந்த நேரம் கலைஞர் அங்கே வந்து என்ன நடந்தது என்று கேட்க, விஷயத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அவ்வளவுதானே, அதே சந்தத்திற்கு இந்த வரிகள் சரியா பாருங்கள்.. என்று காகித ஓடம்.. கடலலை மீது என்று சொன்னாராம்.. அவர் சொன்ன வரிகள் அழகான டியூனில் அப்படியே வந்து கிளையமரும் பறவை போல உட்கார்ந்திருக்கிறது அற்புதமான பாடலாக.

இதேபோல ஒரு சந்தர்ப்பத்தை பாசக்கிளிகள் படம் பற்றி அந்தப் படத்தில் இணை இயக்குநராகப் பணியாற்றிய கவிஞர் இளையபாரதி கூறுவார். தென்பாண்டி சிங்கம் கதையைக் கொஞ்சம் சமூக அக்கறை கொண்ட கதையாக மாற்றி பாசக்கிளிகள் திரைப்படம் வெளிவந்தது. கலைஞர் கதை வசனம் எழுத அமிர்தம் இயக்கினார். ஒருமுறை பாடல் எழுதுவதற்கு அவரிடம் டியூன் அடங்கிய கேசெட்டைக் கொடுத்துவிட்டு பேசிக் கொண்டிருந்தேன். உனக்கு லேட்டாயிடுச்சு, வீட்டுக்குக் கிளம்பு என்றார் கலைஞர். அவரின் வீட்டுக்குப் பின்புறமுள்ள ஹோட்டலில் ஆர்டர் பண்ணிவிட்டு சாப்பிட உட்காருகிறேன். கலைஞரிடமிருந்து அழைப்பு. ஒரு இருபது நிமிடத்தில் திரும்பி வர முடியுமா, டியூனுக்கு ரெண்டு லைன் எழுதியிருக்கேன். அல்லது அப்படியே சொல்கிறேன், எழுதிக்கிறியா என்று, கல்லாவிலிருந்து டிஷ்யூ பேப்பரை எடுத்து அவர் சொன்ன ரெண்டு வரிகளையும் எழுதிக் கொண்டேன். ஆர்டர் பண்ணிய சாப்பாட்டை அப்படியே விட்டுவிட்டு அவரின் வீட்டுக்குச்

சென்றேன். குழந்தை மாதிரி, நீ சொன்ன டியூனுக்கு இப்போ நான்கு வரி எழுதிட்டேன்யா... இது டியூனுக்கு வருகிறதா பாடிப் பாரு என்றார். பாடினேன். மிகக் கச்சிதமாக இருந்தது என்று இளையபாரதி குறிப்பிடுவார்.

"தென்றல் என்னும் தேர் ஏறி-தமிழ் மன்றம் வந்த முல்லை மலரே" -என்கிற பல்லவியோடு ஆரம்பிக்கிற பாடல்தான் அது.
அதில்-

"நானறிவேன் இசை ஞானம் யாவும்
நாசிகா பூஷ்ஷணி நான் பாடும் ராகம்"

என்று ஒரு வரி வரும். "நாசிகாபூஷ்ஷணி" என்ற ராகத்தில் அமைந்த பாடல் இது. அதையே நாசூக்காக பாடல் வரிகளிலும் கொண்டு வந்து விட்டார் கலைஞர். அவருக்கு "ராகங்களிலும் பெரிய புலமை உண்டு" என்பதை விளக்கும் சம்பவம் இது. அவருக்குத் தெரியாத கலைகளே கிடையாது. அதனால்தான் அவர் கலைஞர். அதைத் தெரிந்துதான் நடிகவேள் எம்.ஆர்.ராதா "கலைஞர்" என்ற பட்டத்தினை வழங்கி மகிழ்ந்தார். இந்தப் பாடலை முழுவதும் படித்துப் பாருங்கள். அத்தோடு யூ டியூபில் கேட்டும் பாருங்கள். அப்போது தெளிவாகும் கலைஞரின் இசைஞானமும் கவிதா விலாசமும்.

"தென்றல் என்னும் தேர் ஏறி - தமிழ்
மன்றம் வந்த முல்லை மலரே
தென்றல் என்னும் தேர் ஏறி - தமிழ்
மன்றம் வந்த முல்லை மலரே
உனைப்போல் இல்லையோர் அழகே
உதிக்கும் ஞாயிறெனெ உருமாறி
உலகை எழுப்ப ஒளியாய் வா வா
(தென்றல்)
நானறிவேன் இசை ஞானம் யாவும்
நாசிகா பூசனி நான் பாடும் ராகம்
நானறிவேன் இசை ஞானம் யாவும்
நாசிகா பூசனி நான் பாடும் ராகம்
பாவமுடன் ஜதிசொல்லி பாடும்
தகுதியும் அதனுடன் கூடும்
நாலும் தெரிந்தவன் நான்தானே
பல நூலின் ஆழம் அறிவேனே
(தென்றல்)
தகத் தோம் தில்லானா
தகத் தோம் தில்லானா (ஜதி சொல்லல்)
தோம்... தோம்...
தண்ணிலவாய் குளிரும் உன்முகம்
தனலாய் கொதிக்கும் என் அகம்
மாமதுரை தமிழ்ச்சங்கப் பாட்டு
தேன்மதுர இதழ்கள் பாடக் கேட்டு
செவியில் தேன்பாய வீணை மீட்டு
புவியில் உனக்கு நிகர் யார் காட்டு"

கலைஞரின் காவியமான பராசக்தி படத்தில் வரும் "பூமாலை புழுதி மண் மேலே" பாடலில் வரும்

"பாராயோ என் பன்னீர்செல்வமே
சீரோடு வாழ்ந்தோம்
வேரோடு சாய்ந்தோம்
ராஜாங்கம் போல வாழ்ந்த வாழ்வும்
வீழ்ந்தே பாழான எந்தன் வயிற்றில் பிறந்தாய்
ராஜா நீயேன் பிறந்தாய்?"

என்று எழுதியிருக்கிறார். படத்தில் அந்தக் குழந்தை பிறந்ததுமே "பேரன் பன்னீர் செல்வம் பிறந்திருக்கிறான்," என்று மருத்துவச்சி சொல்லுவார். பன்னீர் செல்வம் பெரியாருக்கு முன் நீதிக்கட்சியின் தலைவராய் இருந்தவர், இந்தி எதிர்ப்புப் போராளி என்பதெல்லாம் புதிய தலைமுறையினருக்குத் தெரியாத செய்திகள்.

ஆனால் அப்படிப்பட்ட திராவிட இயக்கப் போராளிகளை எல்லாம் காலாகாலத்திற்கும் நினைவு கொள்ளும் முகமாகக் கலைஞர், சங்க காலப் புலவனைப் போல, அவரைத் தன் பாடலிலும் வசனத்திலும் வைத்திருக்கிறார். அத்தோடு பாகப்பிரிவினை படத்தில் வருகிற, ஏன் பிறந்தாய் மகனே ஏன் பிறந்தாயோ என்ற கண்ணதாசனின் பாடலுக்கு இந்தப் பாடல் ஒரு முன்னோடி என்றால் மிகையில்லை. இதில் வருகிற

"பறவை வீட்டில் நீ பிறந்திருந்தாலும்
பசி நீங்கவே உணவும்
பறந்தோடி வந்திடும் "

என்ற வரிகளை எங்கள் பதின் பருவத்தில் பேசிப்பேசி மகிழ்ந்திருக்கிறோம்.

'நாம்' என்றொரு திரைப்படம், மேகலா பிக்சர்ஸ் என்ற நிறுவனப் பெயரில் வெளி வந்தது. அதன் தயாரிப்பில் கலைஞருக்கும் பங்கு உண்டு. அந்தப் படத்தின் பிரதிகள் இப்போது கிடைப்பதில்லை. அந்தப் படத்தின் அரசியல் வாடையற்ற வசனத்தை பாடல்கள் மூலம் தீர்த்து வைத்திருக்கிறார் கலைஞர். அதில் அனைத்துப் பாடல்களும் கலைஞர் எழுதியவை.

ஒரு பாடலின் வரிகள்:

சிலசில இடங்களில் பணத்தோட்டம் அது
செல்வக் குமரி... கோட்டம் இப்படிப்
பலபல கருத்துக்கள் சொல்லும் தேனாறு
பகுத்தறிவூட்டும் லட்சிய வரலாறு
அண்ணா வாழ்கவே குமர அண்ணா வாழ்கவே.

படத்தின் கதாநாயகனான குமரனை அவனது தோழர்கள் வாழ்த்திப் பாடுவதாக அமைந்த பாடலில் அண்ணாவின் நூல்களான பணத்தோட்டம், குமரிக்கோட்டம் எல்லாவற்றையும் குறிப்பிடுகிறார். (இவற்றையெல்லாம் பிற்காலத்தில் எம்.ஜி.ஆர். தன் படங்களுக்குத் தலைப்பாக வைத்தார். அவரது பெரிய இடத்துப் பெண், பணக்காரக் குடும்பம் போன்ற படங்களின் தலைப்புக்களை எல்லாம் கலைஞர் சூட்டியவையே என்ற செய்தி பலருக்கும் வியப்பளிக்கலாம்) அண்ணாவின் படைப்புகளை சாதுர்யமாகப் பட்டியலிட்டு அத்தோடு

புழுவாகத் துடிக்கின்ற ஏழை
கழுகாகப் பறக்கின்ற சீமான் இந்தப்
பொல்லாத பேதங்கள் எல்லாம்
இல்லாத பொன்னாடாய்ச் செய்தார் அந்த
அண்ணா வாழ்கவே குமர அண்ணா வாழ்கவே

என்று அண்ணாவையும் வாழ்த்திப் பாடுகிற சாமர்த்தியமெல்லாம் கலைஞரன்றி யாருக்கும் கை வராது. அண்ணாவை மட்டுமல்ல பல பெரியார்களையும் தன் பாடலில் சிறப்பித்துப் பாடி, அண்ணாவின் பொன்மொழியான "எதையும் தாங்கும் இதயம் வேண்டும்" என்பதையும் பாடலில் கொண்டு வருகிறார்.

"சாக்ரட்டீஸ் வாழ்வினைப் பார்
சாகாத காந்தி முடிவையுமே பார்
வேதனையாலே வீழாதே

சோதனையாலே வாடாதே - நீ வாடாதே
சோதனையாலே வாடாதே - வரும்...
எதையும் தாங்கும் இதயம் வேண்டும்"

இப்படிக் கொள்கை விளக்கம் மட்டுமல்ல, இனிய காதலையும் பாடலில் கருத்தாக எழுத வல்லவர்தான் கலைஞர்.

"நீ...
இராவிடம் இருள் சூழும்
என்ற நிலை தந்த
திராவிடப் பொன்னழகி...
வாழ்ந்திடுவாய் விண்ணமுதே" -

என்ற "அம்மையப்பன்" படப்பாடல் வரிகளில் நீ இராவிடம் இருள் சூழும், என்று பாடும்போது நீ இல்லாத இடம் இருள்சூழும் என்று சிலேடையாகவும் அடுத்து வருகிற திராவிடம் என்ற வார்த்தைக்குப் பொருந்துகிற சந்தமாகவும் எழுதியிருக்கிற கலைஞர் ஒரு வார்த்தைச் சித்தர்.

வாலிபம் என்பது கலைகின்ற வேடம் - அதில்
வந்தது வரட்டும் என்பவன் முழு மூடம்
வருமுன் காப்பவன் தான் அறிவாளி - புயல்
வருமுன் காப்பவன் தான் அறிவாளி
வந்தபின்னே தவிப்பவன்தான் ஏமாளி.

துடுப்புகள் இல்லாப் படகு - அலைகள்
அழைக்கின்ற திசையெல்லாம் போகும் - தீமையைத்
தடுப்பவன் இல்லாத வாழ்வும் - அந்தப்
படகின் நிலைபோலே ஆகும்.

இப்படி "வாழ்க்கை எனும் ஓடம் வழங்குகின்ற பாடம்" இதை விடச் சிறப்பாக யாரால் எழுதி விட முடியும்?

நான் ஏதோ 1950களில், 1960களில் வந்த படப் பாடல்களாகக் குறிப்பிடுகிறேன் என்று எண்ண வேண்டாம். 2005இல் வெளிவந்த "மதுரை மீனாட்சி" படத்தில் வரும் வரிகள் "நீதிமன்றத் துலாக்கோலே சாயலாமா நிரபராதி நியாயமின்றிச் சாகலாமா" என்று எழுதியிருக்கிறார். அதே போல "மண்ணின் மைந்தன்" படத்தில்

"கண்ணை காக்கும் கடமைதான்
இமைக்குப் பெரிய தொல்லையா
கடமை தவறி நடப்பதற்கு
காவல் எதற்கு சொல்லையா"

என்று கண்ணுக்கு மை தீட்டும் கச்சிதத்தோடு பாடல் தீட்டியுள்ளார் கலைஞர்.

நான் இங்கே பறித்துத் தந்திருப்பதெல்லாம் கை கொள்ளுமளவுக்கான மலர்கள்தான். கலைஞரின் திரைப்படப் பாடல்களை கவிஞர் நெல்லை ஜெயந்தா அரும்பாடு பட்டு கூடை கொள்ளும் ஒரு நூலாகத் தொகுத்துக் கொண்டிருக்கிறார். கலைஞரது பாடல் வரிகள் தமிழ்த்தேன் மாந்த விரும்பும் அஞ்சிறைத் தும்பிகளுக்கு ஒரு மலர்க்காடு. அந்தக் காலத்தை அசை போட நினைப்பவர்களுக்கு அவையொரு தேன் ஏடு. அவரது பாடல் வரிகளிலேயே சொன்னால் அவர் இயற்றிய பாடல்கள் அனைத்தும்

"காவிரியின் தென் பாங்கு
கற்பூரப் பெட்டகம்...
பூவிரித்த சோலையிலே
பொங்கும் புதுமணம்.." ■











# வசனம் எனும் வரம்

**-திரு. பிரசாந்த், நடிகர்**




கலைஞரின் சரித்திர படமான பொன்னர் சங்கர் படத்தில் பொன்னராகவும் சங்கராகவும் இரட்டை வேடமேற்று நடிக்கும் மிகப்பெரிய வாய்ப்பு எந்த நடிகருக்கும் கிட்டாத ஒன்று.

பொன்னர் சங்கர் படத்திற்காக நான் வி.எப்.எஸ். கம்பியூட்டர் கிராபிக்ஸ் டைரக்டராகவும் (GRAPHIC V.F.S. DIRECTOR) இயங்கினேன்.

பொன்னர் சங்கர் படத்தின் துவக்க விழா அழைப்பிதழை, நான், கலைஞர் சிறுவயது, 40 வயது, தற்பொழுது என மூன்று உருவங்களிலும் ஒரே புகைப்படமாக கம்பியூட்டர் வடிவமைத்து அச்சிட்டேன். அந்த அழைப்பிதழுக்கு SAPPY AWARD கிடைத்தது.

கலைஞர் என்னை உச்சி முகர்ந்ததை என்னால் என்றுமே மறக்க முடியாது. பொன்னர் சங்கர் படப்பிடிப்பு தளத்திற்கு கலைஞர் வரும்போதெல்லாம் என்னை வாஞ்சையோடு அருகில் அமர்த்திக் கொள்வார். கலைஞர் என்மீது காட்டிய அளப்பரிய பாசத்தை வார்த்தைகளால் வடிக்க முடியாது. பொன்னர்-சங்கர் என்கின்ற பிரம்மாண்டமான படத்தில் கலைஞரின் வசனத்தை பேசி நடித்த படம் என் திரைப்பட வாழ்க்கையில் ஒரு **மைல்கல் - வைரக்கல்...**

படம் முடிந்து முதல் காட்சியை கண்டு ரசித்து என்னுடைய வீர சாகச செயல்களையும் கம்பியூட்டர் கிராபிக்ஸ் நேர்த்தியையும் கலைஞர் வானளாவ வாழ்த்தியது, ஆசீர்வதித்தது, எனக்கு கிடைத்த புதையல். அந்த நீண்ட பயணம் உலகுள்ளவரை என் நினைவுகளை விட்டு அகலாது.

அது நான் செய்த பூர்வ புண்ணிய பாக்கியம். ■

# அங்கீகாரத்தைத் தொடங்கி வைத்தவர்!

- கவிஞர் யுகபாரதி

இந்தியா முழுவதும் இன்று பேசப்பட்டுக் கொண்டிருக்கின்ற அரசியல் முழக்கங்களை உருவாக்கியவர் கலைஞர். அவரது தன்னம்பிக்கைதான் தமிழ்நாட்டைக் கட்டி எழுப்பியது. அவரது கையால் விருது வாங்கி, தொடங்கியதுதான் எனது திரை வாழ்க்கை.

முத்தமிழறிஞர் கலைஞர் குறித்து, நான் அறியும் வயதில் எனக்குச் சொல்லப்பட்டவை எல்லாம் அவரைப் பற்றித் தவறான சித்திரங்களே. அவரைப் பற்றிய அவதூறுகளையே கேட்டு வளர்ந்தேன். அப்படி இருந்த சூழலில்தான் கவிதைக்குள் புழங்கத் தொடங்குகிறேன். கவிதைகள் பிடிபடத் தொடங்கிய காலத்தில் முத்தமிழறிஞர் கலைஞரின் எழுத்துக்களும் அறிமுகமாகின. அவர் குறித்த தவறான சித்திரங்கள் எனக்குள் இருந்து மறையத் தொடங்கியிருந்தன.

### அங்கீகாரத்தைத் தொடங்கி வைத்தவர்

"பிற்பாடு" எனது முதல் கவிதைத் தொகுப்புக்கு தமிழ்நாடு அரசு விருது வழங்கியது. முதன்முதலில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கையால் விருதினை வாங்குகிறேன். அவர் கையைத் தொட்டு அந்த விருதினை வாங்கிய போது, தமிழ்நாட்டில் வேறு எவருமே தலைவர் இல்லை என்கிற உணர்வு எனக்கு ஏற்பட்டது. அவர் கையைத் தொட்ட உணர்வோ என்னவோ அடுத்த ஆண்டும் தமிழ்நாடு அரசின் பரிசினை நானே பெற்றேன்.

அந்த ஆண்டு எனக்கு இரண்டு பரிசு அளிக்கப்பட்டது. சிறந்த கவிதைத் தொகுப்புக்கு தனியாகவும், நம்பிக்கையூட்டும் கவிஞர் என்கிற வகையிலும் நான் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தேன். எனினும், தமிழ் வளர்ச்சித் துறையின் கவனத்துக்குக் கொண்டு சென்று ஒரு விருதினைத் திருப்பி அளித்தேன் என்பது வேறு கதை. அதன்பின்னர் "குறள் பீட விருதும்" தேடி வந்தது. இப்படி கலைஞர் கையால் விருது வாங்கிய எனக்கு, அடுத்தடுத்த அங்கீகாரங்கள் கிடைத்தன. சொல்லப்போனால், எனக்கான அங்கீகாரத்தைத் தொடங்கி வைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான்.

### கலைஞர் இதழ்

நான் நவீன இலக்கிய இதழான கணையாழியில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். அந்த இதழில், ஒருமுறையாவது கலைஞரின் அட்டைப்படம் தாங்கிய இதழைக் கொண்டு வர வேண்டும் என ஆசைப்பட்டேன். அப்படி ஒரு இதழைத் தயாரிக்கவும் முற்பட்டேன்.

என்னுடன் இருந்தவர்கள், "அந்த இதழ் வந்தது என்றால், ஒன்று உன்னை வேலையை விட்டு நிறுத்தி விடுவார்கள் அல்லது கணையாழியையே நிறுத்தி விடுவார்கள், பார்த்துக் கொள்" என்றனர். இதழின் ஆலோசனைக் குழுவில் இருந்த அப்போதைய தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் மா.ராசேந்திரன் அவர்கள், நவீன இலக்கிய விமர்சகர் வெங்கட் சாமிநாதனிடம் கட்டுரை வாங்கலாம் என்றார். அவர் கறாரான விமர்சகர் எனப் பெயர் எடுத்தவர். அவரிடம் கலைஞரைப் பற்றிய கட்டுரை வாங்க வேண்டும். ஆனால், வெங்கட் சாமிநாதனுக்கு கலைஞரின் எழுத்துக்களையும் தாண்டி தனிப்பட்ட முறையில் ஒரு கசப்புணர்வு உண்டு. எனினும் நான் கட்டுரை கேட்டதும், "தருகிறேன்" என்று கூறியவர் கலைஞர் தொடர்பான புத்தகங்களைச் சேகரித்துத் தரவும் என்று குறிப்பிட்டார். நான் அவ்வாறு சேகரிக்கத் தொடங்கியபோது கலைஞரின் நூல்கள் கிட்டத்தட்ட மூன்று அட்டைப்பெட்டி அளவுக்கு வந்தன. தனித்தனியாகப் பார்க்கிறபோது, அந்த அளவு தெரிந்திருக்காது. ஆனால், மொத்தமாகப் பார்த்ததும் பெரும் மலைப்பாக இருந்தது. அந்த மனிதர் தன் வாழ்நாளில் எவ்வளவு எழுதிக் குவித்து இருக்கிறார் என்பதும், அதில் நான் எந்த இடத்தில் இருக்கிறேன் என்பதையும் உரசிப் பார்ப்பதற்கு அந்த நேரம் எனக்குப் பயன்பட்டது. வெங்கட் சாமிநாதனும் "இவ்வளவா எழுதி இருக்கிறார்?" என்று ஆச்சரியப்பட்டார்.

அதன் பின்னர், அவர் எழுதிய கட்டுரை, கலைஞர் மீது கொண்டிருந்த இனம் புரியாத வெறுப்பினையும் தாண்டி, கலைஞரின் எழுத்துகள் மீது நல்ல அபிப்ராயம் கொண்டிருந்ததை வெளிப்படுத்தியது.

அதைக் கணையாழியில் படித்துவிட்டு மகிழ்ந்த கலைஞர், அந்தக் கட்டுரையை முரசொலியில் மறுபதிப்புச் செய்தார். "பாருங்கள் வெங்கட் சாமிநாதன்கூட நம்மைப் பாராட்டுகிறார்" என்று கலைஞர் குறிப்பிட்டு இருந்தார். அந்த இதழுக்காக எனக்கு நிறைய பாராட்டுகளும், விமர்சனங்களும் வந்தன. எனது பத்திரிகைப் பணியில் அந்த இதழ் ஒரு மைல் கல்லாக அமைந்தது.

### பாடலாசிரியர் கலைஞர்

கலைஞரின் 90-வது வயதில் கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள், "ஒருங்கிணைத்த நூறு கவிஞர்கள் வாழ்த்து" என்கிற நிகழ்ச்சியில் நானும் கலந்து கொண்டேன். அந்த மேடையில், தமிழ்த் திரையின் பழைய பாடல் ஆசிரியர் குறித்து நான் எழுதியிருந்த "நேற்றைய காற்று" என்கிற நூலைப் பரிசளித்தேன். அந்த நூல் எதைப் பற்றியது என கலைஞர் கேட்க, நான் பழைய பாடலாசிரியர்கள் குறித்து என்றேன். உடனே அவர், அதில் நான் இருக்கிறேனா என்று கேட்டதும் அந்த இடம் கலகலப்பாக ஆனது. அதில் அவர் குறித்தும் எழுதி இருக்கிறேன் என்றதும், அருகில் இருந்த அய்யா சண்முகநாதனிடம் அந்த நூலைக் கொடுத்து, "அதைத் தனியாக வை" என்றார்.

நான் இப்போது அந்த நிகழ்வை யோசித்துப் பார்த்தாலும், பிரமிப்பாக இருக்கிறது. ஏராளமான படைப்புகளை உருவாக்கிய





அவர், ஐந்து முறை முதலமைச்சராக இருந்தவர், 90 வயதிலும் தான் ஒரு திரைப்பாடல் ஆசிரியர் என்று மகிழ்வதும், அந்த வயதிலும் வாசிப்பதை விடாமல் இருப்பதும், யாராலும் நினைத்துப் பார்க்கவும் முடியாத அசாத்தியம். அரசியலில் திரைத்துறை சார்ந்தவராகவும், திரைத்துறையில் அரசியல்வாதியாகவும் இயங்கியவர் அவர்.

அந்த நூலுக்காக கலைஞரின் பாடல்களை நான் ஆய்வு செய்கையில், மொழியை அவர் நுட்பமாகக் கையாண்ட விதம் பிரமாதமாக இருக்கும். மொழியைக் காப்பதற்காக அவர் தனது சிறு வயதில் தெருவில் இறங்கிப் போராடியது மட்டுமல்ல, அந்த மொழியை முழு முற்றாகக் கற்றவராக, அறிந்தவராக, அதை நுட்பமாகக் கையாளத் தெரிந்தவராக இருந்தார்.

கலைஞர் எழுத்துக்களை வாசித்த வகையில் சொல்கிறேன்... அவர் கவிதை எழுதினாலும், கட்டுரை, சிறுகதை, புதினம் என அனைத்துப் படைப்புகளிலும் தனது கொள்கையைப் புகுத்தி இருக்கிறார். வாசிப்பவர்கள் அதை உணர்ந்து கொள்வதுதான் சாமர்த்தியம். ■


கலைஞரின் கை வண்ணத்தில் அண்ணன்மார் கதை
கலைஞரின்
பொன்னர்-சங்கர்

# கலைஞருடன்

# பொன்னர்-சங்கர், நான்

-திரு.தியாகராஜன், நடிகர்

பிரசாந்த் நடிக்கும் படத்திற்கு "தமிழ்" என்று பெயர் சூட்டியதும், தமிழே மூச்சாக வாழும் முத்தமிழ் அறிஞர் கலைஞரை அணுகி, அப்படத்தின் தமிழ் என்ற தலைப்பை கலைஞர் கையால் எழுத வைத்து அவர் எழுதியதையே படத்தின் தலைப்பாக வடிவமைத்தேன்.

அவரது தமிழ்ப் புலமை எனக்கு உயிர் மூச்சு...
கலைஞரை அடிக்கடி நான் சென்று சந்திப்பேன்.

அவர் 2006 தேர்தலில் வெற்றி பெற்றதும், கலைஞரைச் சந்தித்தேன். அப்போது அவர் எனக்கு இரண்டு புத்தகங்கள் தந்தார். ஒன்று "பாயும்புலி பண்டார வணிகன்" மற்றொன்று "பொன்னர் சங்கர்". இவற்றை படமாக்கும் எண்ணத்தில் படிக்க வேண்டும் என்ற அன்புக் கட்டளையிட்டார். இரண்டு புத்தகங்களையும் படித்து முடித்துவிட்டு கலைஞரிடம் "பொன்னர் சங்கர் நாவலை நான் இயக்கி தயாரிக்கின்றேன்" என்று நான் கூறியதும் வியந்துபோய் என்னைப் பார்த்து மகிழ்ச்சியோடு சரியென்றார். பிரசாந்தையே பொன்னர் சங்கர் ரெட்டை சகோதரர்களின் வேடத்தை ஏற்கச் சொன்னார். பொன்னர் சங்கர் நாவலை படமாக்கிப் பார்க்க வேண்டும் என்பதும் கலைஞரின் நீண்டநாள் விருப்பமாக இருந்தது என்பதனை பின்னர் அறிந்தேன். படத்தின் நடிகர், நடிகைகளைத் தேர்வு செய்து அவர்கள் அனைவரையும் அழைத்துச் சென்று கலைஞரிடம் அறிமுகம் செய்தேன்.

ஒரு முக்கிய கதாபாத்திரத்திற்கு ஆஜானுபாகுவான நடிகர் நெப்போலியனைத் தேர்வு செய்தேன். அப்போது அவர் மத்திய மந்திரி. இந்திய ஜனாதிபதியிடம் அனுமதி பெற்று பொன்னர் சங்கரில் நடிக்க வந்தார். பின்னர் பிரபு, நாசர், ஜெயராம், பிரகாஷ்ராஜ், ராஜ்கிரண், பொன்வண்ணன், ராஜ்கபூர், ரியாஸ்கான், போஸ் வெங்கட், சந்தானபாரதி, டெல்லி கணேஷ், பெசன்ட் ரவி, பரத் டபோல்கர், பாரதி கண்ணன், பொன்னம்பலம், கேப்டன் ராஜ், விஜயகுமார், ராஜேந்திரன், ஷண்முகராஜா மற்றும் குஷ்பு, சீதா, பானு, சினேகா, கீதாபாபு, லக்ஷ்மிராம கிருஷ்ணன் ஆகியோருடன் கதாநாயகிகளாக மும்பையிலிருந்து பூஜா சோப்ரா, திவ்யா பரமேஸ்வரன் என்று இரண்டு இந்திய அழகி போட்டியில் வென்றவர்களை கதாநாயகிகளாக தேர்வு செய்தேன். இசையமைக்க இளையராஜா தேர்வு செய்யப்பட்டார்.

பொன்னர் சங்கரில் போர்வீரர்களாக நடிக்க 5000த்திற்கும் மேற்பட்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 3000 குதிரைகள் சங்கமம். கலைஞர்கள் 800 பேர் மற்றும் 2000 நடனக் கலைஞர்களுடன் படம் நடந்தது. படத்தின் பூஜையை வள்ளுவர் கோட்டத்தில் ஏற்பாடு செய்தேன். கலைஞருக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. படம் ஆரம்பித்தது முதல் முடிந்து திரைக்கு வரும்வரை ஐந்து வருடங்கள் கலைஞருடன் நெருங்கிப் பழகும் அரிய வாய்ப்பு கிடைக்கப்பெற்றேன். தினமும் காலையில் 5 மணிக்கு கலைஞரைச் சந்தித்து அன்று என்ன படப்பிடிப்பு என்பதை கலந்துரையாட அவர் இல்லம் வருவேன். மதிய உணவு இடைவேளையில் படப்பிடிப்புத் தளத்திற்கு கலைஞர் வந்து படப்பிடிப்பை சற்று கவனித்து விட்டு செல்வார்.





மூன்று நாளைக்கு ஒருமுறை எடுத்த காட்சிகளை அவருக்கு திரையிட்டுக் காட்டுவேன். அவரோடு பயணித்த காலத்தில் அவரது சீரிய சிந்தனை, கடமை உணர்ச்சி, அயராத உழைப்பு, திட்டமிடும் நேர்த்தி, விருந்தோம்பல், ஹாஸ்ய சம்பாஷனை, இவை அனைத்தையும் அருகில் இருந்து பார்க்கக்கூடிய அரிய வாய்ப்பினைப் பெற்றேன். அரசியல், ஆட்சி மாண்மை, கட்சிப்பணி, தொண்டர்கள், பொதுத் தொண்டு, குடும்பம் இவற்றை ஒன்றுவிடாமல் மிகக் கவனமாக செயல்படும் நேர்த்தியைக் கண்டு வியந்து போனேன். அவரோடு இணைந்து செயல்பட்ட அந்த ஐந்து வருட பொற்கால நினைவுகள் என்னுள்ளே என்றென்றும் நிலைத்து இருக்கும்.

அவர் திரைப்படமாக்கிப் பார்க்க வேண்டும் என்று மிகவும் விரும்பிய பொன்னர் சங்கர் நாவலை அவர் எதிர்ப்பார்த்திருந்தது போலவே இயக்கி தயாரித்து வெளியிட்டு அவரை சந்தோஷப்படுத்தியது எனக்கு கிடைத்த பேரதிர்ஷ்டம். இன்று கலைஞர் நம்மோடு இல்லையென்றாலும் அவர் நம்மோடு தான் இங்கு எங்கேயோ இருந்துகொண்டு நம்மையெல்லாம் கவனித்து இயக்கி கொண்டிருக்கிறார் என்ற எண்ணம் என்னுள்ளே திடமாக புரையோடிப் போய் உள்ளது. அவர் அருகில் இருந்து கலைஞரிடமிருந்து நான் கற்றுக்கொண்ட பல நற்செயல்கள் அரிய விஷயங்கள் எனக்கு கிடைத்த மிகப்பெரிய பொக்கிஷம். நான் பெரும் அதிர்ஷ்டசாலி...கலைஞர் புகழ் ஓங்குக... ■


# லீடர்ஷிப் இருந்தா வலிக்காது!

**- கவிஞர் பா.விஜய்**

முத்தமிழறிஞர் கலைஞர் அய்யா அவர்களுடன் பயணித்த படைப்பாளர்கள் வட்டத்தில் எனக்கும் இடம் கிடைத்தது என் பேறு. வித்தகக் கவிஞர் என என்னை ஏற்றிவைத்து அழகுபார்த்தவர் கலைஞர்.

இரண்டு தலைமுறைகளாக திராவிடச் சிந்தனை, செயல்களைக் கொண்ட குடும்பத்தின் பிள்ளையாக, முத்தமிழறிஞர் கலைஞர் எங்களுக்கு வழிகாட்டியாக இருந்தவர், இருப்பவர். அவரின் நூல்களே என் எழுத்துகளைச் சீர்படுத்தின. எனது கவிதை நூல்களுக்கு அவரிடம் அணிந்துரை வாங்க வேண்டும் என பள்ளிநாட்களில் கனவு கண்ட நான், எனது 23 நூல்களை அவர் கையால் வெளியிட வைத்தது, வாழ்நாள் பேறு அடைந்தேன்.

திரைப்படப் பாடலாசிரியராக வளர்ந்து வந்த நேரம். என் கவிதை நூல்களையும் எடுத்துக்கொண்டு அவரைச் சந்திக்கச் சென்றேன். முதன்முதலில் சந்தித்தது சில நிமிடங்கள்தான். அவரைச் சந்தித்துவிட்ட உற்சாகம் இருந்தாலும், அந்த நேரத்து படபடப்பைத் தவிர்க்க முடியவில்லை. ஆனால், அவரோ நான் யார், எழுதிய பாட்டுகள் என்னென்ன என்பது வரை அப்டேட்டில் இருந்தார். அன்று அவரோடு உரையாட சிறிது நேரம்தான் கிடைத்தது என்றாலும், எழுதுபவர்களை அவர் என்றைக்குக் கைவிட்டார்? அப்படித்தான் அவரோடு நெருக்கமாகப் பயணிக்க வாய்ப்புகள் அமைந்தன.



## பாடலில் இலக்கணப் பிழை

2005-ஆம் ஆண்டு, எனது 10 நூல்கள் வெளியீடு அவர் தலைமையில்தான் நடைபெற்றது. அந்த 10 நூல்களையும், வெளியீட்டு விழாவுக்கு முன்பே அவரிடம் கொடுத்து விட்டேன். நூல்கள் அனைத்தையும் வாசித்து விட்டு, நிகழ்ச்சிக்கு வந்தவர், என்னை வெகுவாகப் பாராட்டினார். முக்கியமாக அப்போதுதான் எனது பாடல் “ஒவ்வொரு பூக்களுமே” தேசிய விருது வாங்கியிருந்தது. அந்தப் பாடலில், “ஒவ்வொரு பூக்களுமே” என இலக்கணக் குழப்பம் இருக்கிறது என்று சர்ச்சையானது.

அதுகுறித்து கவிஞர் வாலியிடம் கலைஞர் கேட்க, கண்ணதாசன், “ஆயிரம் நிலவே வா” என எழுதி இருக்கிறார். அது சரி என்றால், இதுவும் சரிதான்” என விளக்கினார். அப்படி அந்த சர்ச்சையை முடித்து வைத்தவர் கலைஞர். அந்த மேடையில் என்னை “வித்தகக் கவிஞர்” என அவர் உச்சரித்து, உச்சி முகர்ந்து அளித்த அடைமொழி ஆயிரம் விருதுகளுக்குச் சமமானது.

## மேன் ஆஃப் த மேட்ச்

2006-ஆம் ஆண்டு, தேர்தலுக்கு முன்னர் கலைஞர் தலைமையில் கவிப்பேரரசு வைரமுத்து, கவிக்கோ அப்துல் ரகுமான், காவியக் கவிஞர் வாலி, கவிஞர் மு.மேத்தா ஆகியோர் பங்கேற்ற கவியரங்க நிகழ்வில், எனது பெயரையும் இணைக்கச் சொல்லி மேடை ஏற்றினார். அந்த மேடையில், நான் கவிதை வாசித்து

முடித்ததும் கைதட்டல் ஒலியில் அரங்கமே அதிர்ந்தது. நான் இருக்கையில் வந்து அமர்ந்து, கலைஞர் என்ன சொல்வாரோ எனப்பார்க்கிறேன். என்னைப் பார்த்தவர், தனது கண்ணாடியை மேலே தூக்கி, புருவத்தை உயர்த்தினார். அந்த நொடி, அவர் எனக்களித்த பாராட்டு, ஆஸ்கர் விருதைவிட உயர்ந்த விருதாக அமைந்தது. அன்றைய நிகழ்வு குறித்து, அவர் கூறுகையில், "இன்று 'மேன் ஆஃப் த மேட்ச்' பா.விஜய் தான்" என்றார். அந்த நிகழ்ச்சி முதல், அவருக்கு அணுக்கமானவர்கள் பட்டியலில் என்னையும் இணைத்துக் கொண்டார்.

அதன் பின்னர், அவரை எப்போதும் சந்திக்கும் வாய்ப்புகள் அமைந்தன. ஏதாவது நல்ல கவிதை எழுதினால், அவரிடம் வாசித்துக் காட்டச் சென்றுவிடுவேன். பரபரப்பான வேலைச்சூழல் இருந்தாலும், அதையெல்லாம் வெளிக்காட்டிக் கொள்ளாமல் பேசிக் கொண்டிருப்பார்.

### வில்லன் பெயரை மாற்றினார்

அவர் எழுதிய "தாய்" காவியத்தை "இளைஞன்" என படமாக்கியபோது, நடிக்கும் வாய்ப்பினை வழங்கினார். அந்தப் படத்துக்காகத் தினமும் அவரைச் சந்திப்பேன். முதலமைச்சராகப் பல்வேறு பணிகளுக்கு இடையில் வசனம் எழுதுவதே பெரிய விஷயம். ஆனால் அவர், படம் எப்படி வருகிறது, அன்று எடுக்கவேண்டிய காட்சிகள் என்ன என்பதற்கெல்லாம் ஆலோசனை வழங்குவார்.

படத்தின் விவாதத்துக்காக மகாபலிபுரத்துக்கு அழைத்துச் சென்றார். அந்த நேரத்தில், முழுமுற்றாக அவர் பழைய கலைஞராக மாறி இருந்தார். தொடக்கக் காலங்களில் சினிமா நிறுவனங்களில் பணியாற்றிய பல நினைவுகளைப் பகிர்ந்து கொள்வார். சில நாட்களில் காலை 4 மணிக்கு போன் வரும். "என்ன எழுந்துட்டியா?" எனக் கேட்பார். அந்தக் குரல் ஓயாத உழைப்பின் குரல் என்பதால், அன்று நாள் முழுவதும் உற்சாகமாக இருக்கும்.அந்தப் படத்தின் வில்லன் பாத்திரத்துக்கு வைத்திருந்த பெயர் ஆவுடையப்பன். அதைக் கேட்ட அவர், "அது வேண்டாம்ய்யா, அறிஞர் அண்ணாவின் உதவியாளர் பெயர். அதனால வேற பெயர் வெச்சிடுங்க" என்றார். அந்தப் பெயருக்குப் பின்னாலிருந்து ஒரு வரலாற்றை உருவி எடுத்துக்கொண்டு வரும் அந்த நுட்பம் அவரைத் தவிர யாராலும் முடியாது. அண்ணா சாலை அலுவலகம் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக தலைமைச் செயலகம் புறப்பட்டுச் செல்வதைப் பார்ப்பது அலாதியான அனுபவமாக இருக்கும். குறிப்பாக, புதிய தலைமைச் செயலகம் கட்டப்பட்டபோது, மாலை நேரங்களில் அங்கு செல்வார். ஒருநாள் மாலை நேரத்தில் அவரைச் சந்திக்க வீட்டுக்குச் சென்றிருந்தேன். அவர் தலைமைச் செயலகம் புறப்பட்ட நேரத்தில், "வர்றியா" என்றார். எனக்கு எதுவும் புரியவில்லை. அவரோடு அழைக்கிறார் என்பது சட்டென பிடிபட்டதும், "வர்றேன்ய்யா" என்கிறேன். "வண்டியில் ஏறு" என்றார். கருப்புப் பூனைப் படை பாதுகாப்பு கொண்ட முதலமைச்சர் வாகனத்தில் அவருடன், சென்னை நகரத்துக்குள் பயணித்த அந்த அனுபவத்தினைச் சொல்வதற்கே வார்த்தைகள் இல்லை.

வாகனம் அண்ணா சாலையில் சென்றுகொண்டிருந்தபோது, ஆயிரம் விளக்கு அருகே கண்ணாடியை இறக்கியவர், "இங்குதான் முன்பு "முரசொலி" அலுவலகம் இருந்தது. நான் அங்குதான் எழுதிக்கொண்டிருப்பேன்" என தனது நினைவுகளைப் பகிர்ந்து கொண்டார். அந்த நிகழ்வு சாதாரண விஷயமல்ல. தனது உழைப்பு, காலம் ஆகியவற்றை இளைஞர்களிடம் பகிர்ந்து கொள்வதிலிருந்து அவர்கள் உத்வேகம் அடைய வேண்டும் என்கிற உணர்வினை, அந்த நிகழ்விலிருந்து புரிந்து கொண்டேன்.

தலைமைத்துவ விதி அவரோடு பயணித்த காலத்தில் மகிழ்ச்சி, வருத்தம் என அத்தனை உணர்வுகளையும் பகிர்ந்து கொண்டிருக்கிறேன். மிகப்பெரிய தலைவருடன் பேசிக்கொண்டிருக்கிறோம் என்கிற இடைவெளியை அவர் காட்டியதில்லை. அன்றைக்கு என்ன பாட்டு எழுதினேன், சரணம், பல்லவி என்ன எனக் கேட்பார். ஒருமுறை சோகத்தை வெளிப்படுத்தும் கவிதை எழுதியதை, அவரிடம் வாசித்துக் காட்டினேன். தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தவர் சற்று நேரத்தில், "உனக்கு லீடர்ஷிப் பத்தலய்யா, லீடர்ஷிப் இருப்பவனுக்கு மட்டும்தான் இன்னொருத்தன் குத்தினா வலிக்காது" என்றார். அந்த வார்த்தைகள் என்னை உலுக்கிவிட்டன. எத்தனை பேர் அவர் மனதில் குத்தியிருப்பார்கள்... எத்தனை எத்தனை அனுபவங்களில் இருந்து அவர் கற்றிருப்பார்... அவர் அடைந்த வலிகளில் இருந்து கடைந்தெடுத்த ஒரு வார்த்தையாக அதை உணர்ந்தேன். கலைஞர் என்கிற தலைவரைப் பார்த்துப் பிரமிக்கிறோம் என்றால், அந்த அனுபவங்களும், வலிகளை அவர் கடந்து வந்த விதமும் காரணமாக இருப்பதை உணரலாம். அவர் வருத்தப்பட்ட நேரத்தையும் அறிவேன். ஒரு மழைநேரத்தில் சந்திக்கச் சென்றபோது, மழை வெள்ளத்தால் மக்கள் அடைந்த துயரத்தைத் தொலைக்காட்சிகளில் பார்த்து வருந்திக் கொண்டிருந்தார். இப்படி, பல்வேறு பரிமாணங்களைக் கொண்ட மகத்தான தலைவர். அவரின் இலக்கிய மாணவனாக எனக்கு வழிகாட்டினார். ஓர் எழுத்து, மொழிக்கும், மொழியைச் சார்ந்த இனத்துக்கும் என்ன செய்ய வேண்டும் என தெளிவுபடுத்தியவை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எழுத்துகள். நாம் அதைக் கடைப்பிடித்தால் போதும்!... ■



# ஓய்வறியா பேனாக்காரர்...

-திரு.வி.சி.குகநாதன், தயாரிப்பாளர்



நான் சந்தித்தவர்களில் என்னை அதிகமாக சிந்திக்க வைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தான். அழகுக்காக இதை நான் எழுதவில்லை... ஆதாரங்களுடன் பட்டியலிடுகிறேன். பல ஒப்பனை முகங்கள் உருவாகி, உச்சம் தொட்டதற்கு இந்த ஓய்வறியாப் பேனாக்காரரே காரணம்.

மறுக்க முடியுமா?

அய்யராத்து தமிழும், பழைய மெட்ராஸ் பாஷையும் தமிழ்த் திரை உலகில் கோலோச்சி வந்த காலத்தில்... தன் தூய தமிழ் வசனங்களால் திரைத்தமிழை... திருத்தி மறுவாழ்வு தந்தவர் தான் நமது கலைஞர்.

மறுக்க முடியுமா?

வருமானத்திற்காக மட்டும் திரையில் எழுதியவர் அல்ல. படங்கள் மூலம் பாமரனுக்கும் புரியும் வண்ணம் பகுத்தறிவை வளர்த்தவர் கலைஞர். "அறம் செய விரும்பு... ஆறுவது சினம்" அவ்வை எழுதியது.

"கோவில் கூடாதென்பதற்காக அல்ல... கோவில் கொடியவர்கள் கூடாரமாக மாறிவிட்டதை கண்டிப்பதற்காக"... இது கலைஞர் எழுதியது.

மறுக்க முடியுமா?

"மந்திரிகுமாரி" என்ற படத்தில் ராஜகுரு ஒரு அந்தணர். அவர் மகனோ மாறுவேடத்தில் கொலை, கொள்ளை, கற்பழிப்பு என எல்லாவற்றையும் செய்துவிட்டு மாட்டிக் கொண்டதும்.. அவை எல்லாம் தன் கலை என்று அரச சபையிலே பிரகடனம் செய்கிறான்.

"இவை சட்டவிரோதம் அல்லவா?" எனக் கேட்கும் தந்தை... "இதை எல்லாம் விட்டுவிடு... நான் மன்னரிடம் பேசி மன்னிப்பு பெற்றுத் தருகிறேன்" எனக் கேட்க,

"புலி ஆட்டைக் கொல்லாமல் இருந்தால்... கொக்கு மீனைப் பிடிக்காமல் இருந்தால்.. பாம்பு தவளையை விழுங்காமல் இருந்தால்... நானும் என் கலையை விட்டிருப்பேன்" என்கிறான்.

இந்தக் காட்சியை பார்த்தவர்கள், சற்று கற்பனை வளத்தோடு கொஞ்சம் மாற்றி இன்றைய ஒன்றிய அரசிலுள்ள சில கதாபாத்திரங்களுக்கு பொருத்திப் பேசிப் பாருங்க. அப்படியே பொருந்திவிடும். காலத்தை வென்ற பேனாக்காரர் நம் கலைஞர்.

மறுக்க முடியுமா?

கோமாளித்தனமான நாடகங்களை அரங்கேற்றி பண்பாட்டுக்கு விரோதமான கதைகளைப் படமாக்கி, படத்தின் பெயரை வேறு மொழிகளிலே வைத்து, கழக ஆதரவு கூட்டமாக இருந்த கலை உலகை மூன்று சதவீதத்தினர் குழப்பிவிட செயல்பட்ட நேரத்தில்... கலைஞர் அவர்கள் துணிச்சலோடு நல்ல கருத்துக்களை சொல்லும் படங்களுக்கு மானியம் தருவதாக அறிவித்தார். பின்னர் படங்களுக்கு தமிழிலே பெயர் வைத்தால் வரிவிலக்குத் தர சட்டம் இயற்றி செயல்படுத்தினார்.

மறுக்க முடியுமா?

திரைப்படத் தொழிலாளர்களுக்கு நலவாரியம், இன்சூரன்ஸ், கூட்டுறவுச் சங்கம், வீடு கட்ட நிலம், இப்படி ஏராளமான நன்மைகளைச் செய்தவர் நம் கலைஞர் அவர்கள்

மறுக்க முடியுமா?

சிலருக்கு பேனா என்பது காது குடையவும், முதுகு சொறியவும் பயன்படும் ஒரு கருவி. ஆனால் கலைஞரின் பேனா எரிமலையாக... எதிரிகளை தேடிப்போய் தாக்கும் ஏவுகணையாக, நம்மை சுற்றிப் படர்ந்திருந்த ஆரிய மாயையை அறுத்தெறியும் போர்வாளாக, நம் இனத்தின் அறியாமையைப் பயன்படுத்தி... நம்மை சிதைக்க விதைக்கப்பட்ட போலி ஆன்மீகத்தை தடுக்கும் கேடயமாக... இந்த மாநில இளைஞர் கூட்டத்தை தட்டி எழுப்பிய முரசொலியாக விளங்கியது.

மறுக்க முடியுமா?

இவர் எழுத்துக்களை சினிமாவில் பார்த்துக் கேட்டு.. இவர் போல வரவேண்டும் என்ற ஆசையில் கலை உலகம் நாடி ஓடிவந்த லட்சக்கணக்கான இளைஞர்களில் நானும் ஒருவன். இருட்டுக் கொட்டகைக்குள், வீட்டுக்கே தெரியாமல் திருட்டுத்தனமாக போய் அமர்ந்து கலைஞர் எழுத்துக்களை எம்.ஜி.ஆர். பேசக் கேட்டு அதிசயித்து மகிழ்ந்தவன் நான். அவர் முகத்தைப் பார்த்தவனில்லை, குரலைக் கேட்டவனுமில்லை... ஆனால், படத்தில் முத்தான கருத்தாழம் மிக்க வசனங்கள்... அதில் மூர்க்கத்தனமான சிவப்பு சிந்தனைகள்... பகுத்தறிவுப் பிரச்சாரம்.

வீரத்தை விதைத்திருந்த விதமோ என்னை வியப்பில் ஆழ்த்தியது. யாரிவர்? இவர்போல் நானும் எழுதமுடியுமா? ஈழத்தில் ராணி தியேட்டரில் என் பன்னிரெண்டாவது வயதில் "மலைக்கள்ளன்" படம் பார்த்த எனக்குள் எழுந்த கேள்வி. அதைத் தொடர்ந்து அவரின் பழைய படங்கள்... புதிய படங்கள் எல்லாவற்றையும் பார்த்தேன். அவர் வசனங்களை மனப்பாடம் செய்தேன்.

பல இடங்களில் அதைப் பேசிக் காட்டி பல பரிசுகளும் பெற்றிருக்கிறேன். முக்கியமான ஒரு விஷயத்தை வெட்கத்தை விட்டுச் சொல்கிறேன். என் தந்தை ஒரு தமிழ் ஆசிரியர்... ஆனால் என்னை ஆங்கில மீடியத்தில் படிக்க வைத்தார். நானோ கலைஞர் வசனங்களை மனப்பாடம் செய்து திரும்பத் திரும்ப அதைப்பேசிப் பழகி தமிழைக் கற்றுக் கொண்டது மட்டுமல்ல...யாழ்ப்பாணத் தமிழ் பேசுவதை மறந்தேன். அந்தக் காலத்தில் திரை உலகில் என் வாழ்வை அமைத்துக் கொள்ள இதுவும் உதவியது.

படிப்பதற்காக என்று சொல்லி சென்னை வந்த நான் புரசைவாக்கத்தில் என் தாத்தா வீட்டில் தங்கியிருந்தேன். முதலில் காஞ்சியில் படிப்பை ஆரம்பித்தேன். அங்கு தான், நான்























முதன் முதலாக 1962-ஆம் ஆண்டு கலைஞரை சந்தித்தேன். காஞ்சி பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் ஒரு குழுவாக தெருத் தெருவாக, வீடு வீடாக பேரறிஞர் அண்ணாவுக்காக தேர்தல் பிரச்சாரம் செய்தோம்... ஒரு நாள் பரபரப்பு காணப்பட்டது. ஒரு காரில் வந்திறங்கிய ஒருவர் எங்களோடு பிரச்சாரத்துக்கு வந்தார்... அப்போது தான் அவர்தான் கலைஞர் கருணாநிதி என்று தெரிந்து கொண்டேன். அப்போது என் கையில் தி.மு.க. கொடியிருந்தது. அந்தக் கொடியுடன் போய் அவருக்குக் கை கொடுத்தேன். எதையோ, சாதித்து விட்டவன் போல் என் மனதில் ஒரு மகிழ்ச்சி. ஆனால் அவரிடம் எதுவும் பேசமுடியவில்லை. என் கேமராவில் ஒரு Group போட்டோ மட்டும் எடுத்துக் கொண்டோம்.

பேரறிஞர் அண்ணாவுடன் சில நாட்கள் முன்பு எடுத்த போட்டோ இலங்கை பத்திரிகைகளில் வந்து எனக்கு நல்ல பெயரை ஏற்படுத்தியிருந்தது. அடுத்து கலைஞரோடு எடுத்த படத்தையும் அனுப்பி வைத்தேன். கேட்க வேண்டுமா? பெரிய காஞ்சிபுரத்தில், கலைஞர் பொதுக்கூட்டம் பேசினார். அவர் எழுத்துக்களை நேசித்த நான் அவர் பேச்சை அன்று தான் கேட்டேன். ஆடிப்போய்விட்டேன். அவர் போய்விட்டார்.... நான் ஏதோ ஒரு மயக்கத்தில் அந்த மேடையருகே ரொம்ப நேரமாக நின்றிருந்தேன்.

அடுத்து எஸ்.எஸ். தென்னரசு அவர்கள் என்னை கோபாலபுர வீட்டுக்கு அழைத்துப் போனார். எம்.ஜி.ஆர். பட கதாசிரியராக நான் கலைஞருக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டேன். வாழ்த்து சொன்ன அவர், என் வயதைக் கேட்டார். இவ்வளவு சின்ன வயதில் எம்.ஜி.ஆருக்கு கதை எழுதுவது அபூர்வமான விஷயம் என்றார். என் மீது அவருக்கு ஒருவிதமான பாசம் உருவானதை என்னால் உணரமுடிந்தது. ஆனால், எனக்கு அவர் எழுத்தின் மீதும் பேச்சின் மீதும் மோகம் இருந்ததே தவிர... அவரோடு நெருங்கிப் பழகவேண்டும், நட்பை வளர்க்க வேண்டும் எனத் தோன்றவில்லை. ஆனால் எதிர்பாராத விதமாக மீண்டும் மீண்டும் அவரைச் சந்திக்கும் வாய்ப்புகள் வந்தன.

உதாரணமாக, 1967-இல் நான் ஜேயார் மூவீஸ் அலுவலகத்தில் தங்கத் தொடங்கினேன். ஒரு நாள் திடீரென கலைஞர், நாவலர், N.V.N. மூவரும் அந்த அலுலவகம் வந்தனர். 1967-ஆம் ஆண்டு தேர்தல் சமயம். அன்பகத்தில் கூட்டம் அதிகமாக இருந்ததால் அண்ணாவின் அனுமதியோடு ஏதோ சில வேலைகளை செய்ய வந்திருப்பதாக முதலாளிகளிடம் சொன்னார்கள். ஜேயார் மூவீஸ் சங்கரன்... ஆறுமுகம் அவர்கள் என்னை கூப்பிட்டு... அவர்கள் போகும்வரை அந்த மூவரையும் கவனித்துக் கொள்ளும் பொறுப்பை என்னிடம் தந்தார்கள். செ.மாதவன், எஸ்.எஸ்.தென்னரசு, தங்கபாண்டியன் ஆகியோர் அங்கிருந்தனர். இதைப்போல் பல இடங்களில் கலைஞரோடு பழகும் வாய்ப்பு கிடைத்தது.

ஜேயார் மூவீஸ் அலுவலகத்தை ஹபிபுல்லா ரோடுக்கு மாற்றிய பின்னால்... கலைஞரின் திரைப்படக் கம்பெனியான மேகலா பிக்சர்ஸ் வடக்கு போக் ரோடில் இருந்ததால், நாங்க அங்கே போறதும்.. அவங்க இங்கே வருவதும் வழக்கமாயிடுச்சு. எங்கே அண்ணாவோ, கலைஞரோ பேசினால் அந்த கூட்டத்துக்கு தவறாமல் போயிடுவேன்.

கலைஞர் முதல்வரான பின்னாடி, நாங்க தயாரித்த "கண்ணே பாப்பா" படத்தை பார்க்க அழைத்தோம். வந்து பார்த்து பாராட்டினார். அவர் பாராட்டை எழுதி வாங்கினால் தினத் தந்தியிலே விளம்பரமாய் போடலாம்னு நினைச்சு கேட்டேன். ஒரு பெரிய கவரை கிழிச்சி கலைஞரிடம் கொடுத்தேன். கார் பானட் மேலே வச்சு எழுதி கொடுத்தாரு. அடுத்த நாள் விளம்பரமாய் போட்டோம். அவர் எழுதித் தந்ததை பிரேம் போட்டு மாட்டி அலுவலகத்திலே பல வருஷங்களாக வைத்திருந்தோம்.

"பூம்புகார்" பட ரிலீசுக்கு முதல் நாள் இரவு கலைஞர் அவர்கள் செட்டியாரைப் பார்க்க ஏவிஎம் வந்தபோது அவரிடம் பேசியதை மறக்க முடியாது.

1973-இல் நான் தயாரித்த மூன்றாவது படமான "பெத்த மனம் பித்து" நூறாவது நாள் விழாவில் நான்கு ஐந்து அமைச்சர்களுடன் வந்து கலைஞர் அவர்கள் தலைமை தாங்கி மகிழ்வித்ததை மறப்போமா?

'மைக்கேல் ராஜ்' நூறாவது நாள் விழாவுக்கு என் தாயாரும் வந்திருந்தார்கள். அதில் நான் எழுதிய சில வசனங்களை சொல்லிக் காட்டி பாராட்டி பேசியதோடு "தம்பி குகநாதன் தமிழுக்கும் சினிமாவுக்கும் மிகவும் தேவையானவர். அவர் பணி தொடரட்டும்" எனப் பேசினார் நம் கலைஞர். அன்று என் தாயார் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

என், "மனிதச் சங்கிலி".. "எழுச்சி பயணம்" "வீர வணக்க ஊர்வலம்" போன்ற பல ஈழத்தமிழர்களுக்கான போராட்டங்களில் கலந்து கொண்டு கலைஞர் வாழ்த்தியதை மறப்போமா? மகாலிங்கபுரத்தில் முரசொலி அலுவலகமும், என் படக்கம்பெனியும் அருகருகே இருந்ததனால்... நான் அடிக்கடி திருநெல்வேலி சூரி சாரோடு போய் கலைஞரை சந்திப்பேன்.

நான் இயக்குநர்கள் சங்கத் தலைவரானபோதும், எழுத்தாளர் சங்கச் செயலாளர் ஆனபோதும் "பெப்சி" தலைவரானபோதும், அகில இந்திய திரைப்பட தொழிலாளர் சம்மேளனத்தின் செயலாளராக ஆனபோதும் கலைஞரை சந்தித்து வாழ்த்துப் பெற்றேன். அவர் எழுதிய படங்களைப் பார்க்க எப்போதும் என்னை அழைப்பார். நானும் தவறாமல் போவேன். மனதில் பட்டதை மறைக்காமல் அவர் அருகில் போய் மெதுவாக சொல்லிவிடுவேன். பல விஷயங்களில் உண்மை பேசும் என்னை அவருக்குப் பிடிக்கும்.

நான் "பெப்சி" தலைவரானதும் முதல்வராக இருந்த கலைஞர் அவர்களைப் பார்க்க கோபாலபுரம் போனேன். என்னோடு என் பாசத்துக்குரிய அண்ணன் அமிர்தமும், சகோதரர் இராம நாராயணனும் வந்திருந்தார்கள். அவர் அறைக்குள் நுழைந்ததும் "அதியசமான வெற்றி குகா" என சத்தமாகவே சொன்னார். அதன் அர்த்தம் எனக்கு மட்டுமே தெரியும். யாருக்கும் தெரியாமல் ஒரு கடிதத்தை எழுதி எடுத்துப் போயிருந்தேன். புறப்படும்போது அதை அவர் கையில் கொடுத்தேன். பின்னர் படிப்பார் என்ற எண்ணத்தோடு அவர் அப்போதே படித்துவிட்டு, சென்னை நகருக்குள் ஒரே இடத்தில் நூறு ஏக்கர் எங்கே கிடைக்கும் குகா எனக் கேட்டார். இடம் இல்லை என்பது தான் அவர் எண்ணம்... இருந்தால் அவர் தரத் தயார் என்பதை புரிந்துகொண்டு அருகில் கிடைத்தாலும் பரவாயில்லை என்றேன். என்னையே இடத்தை தேடச் சொன்னார். பல இடங்கள் தேடி இறுதியில் பையனூரை தேர்ந்தெடுத்தேன். மறுக்காது தந்தார். திரைப்பட நகரம் உருவாகியது.

என் தந்தையார் ஈழத்தில் இறந்தபோது தலைப் பிள்ளையான நான் அங்கு போய் ஒரு மாதம் தங்கவேண்டிய கட்டாயம். யாரிடமும் சொல்ல முடியவில்லை. ஆனால் கலைஞரின் இரங்கல் கடிதம் அங்கு வந்தது. எப்படி? எனக்கே புரியவில்லை.. ஆனால், என் தந்தை போய்விட்டாரே என கலங்கி நின்ற எனக்கு அண்ணன் கலைஞரின் கடிதம் பெரும் ஆறுதலையும், தைரியத்தையும் தந்தது. ஈழத்தமிழர்கள் ஆறுதல் சொன்னார்கள். "உனக்கென்னப்பா... எம்.ஜி.ஆரும் உன்னோடு, தலைவர் கலைஞரும் உன்னோடு" என ஆறுதல் சொன்னார்கள். அந்த இருவரும் தான் எனக்கு முகவரி தந்தவர்கள்...

மறக்க முடியுமா?

ஒரு தடவை கோபாலபுரம் போயிருந்தபோது "தென்பாண்டி சிங்கம்".. தான் எழுதிய புத்தகத்தை கொடுத்து, இதை படமாக எடுங்கள் எனச் சொல்லித் தந்தார். அளவற்ற மகிழ்வோடு பெற்றுக் கொண்ட நான் அதற்கான ஆக்க வேலைகளில் ஈடுபட்டேன். கவிஞர் இளையபாரதி என்னைத் தேடிவந்து ஆற்காட்டார் ஆதரவுடன் அதே நாவலை சீரியலாக எடுத்து வருவதாகச் சொன்னார். அதனால் அந்த நாவலை படமாக்கும் பாக்கியத்தை கைவிட்டேன். கலைஞரோடு ஏற்பட்ட இன்னும் பலநூறு நிகழ்வுகள் உண்டு, இடமும் நேரமும் போதாது. இன்று அவர் நம்மோடு இல்லை என்றாலும், அவர் இதயத்தில் ஒரு ஓரமாக ஒட்டிக் கொண்ட அன்புத் தம்பி நான். அரசியல்வாதியாக நான் இல்லை என்றாலும் அவர் வளர்த்த திராவிடக் கொள்கைகளையே சுவாசிக்கும் ஒரு சிறு பேனாக்காரனாக இருப்பதில் பெருமிதம் கொள்கிறேன். இறுதிக் காலங்களில் அவரை நான் சந்தித்த ஒவ்வொரு தடவையும் அவர் பாதம் தொட்டு வணங்கி, கைகளைப் பற்றி என் கண்களில் ஒத்தி மகிழும் பழக்கத்தை வழக்கமாக்கிக் கொண்டேன். அப்போது அவர் கண்கள் காட்டிய பரிவை அவரது கறுப்புக் கண்ணாடிக்குள்ளாக என்னால் பார்க்க முடிந்தது. அவர் நம்மோடு தற்போது, இல்லை என்ற உண்மையை ஏற்றுக் கொள்ளாதவன் நான் அவரது பிள்ளைகளும், பேரப் பிள்ளைகளும், இயக்கத்துத் தம்பிகளும் அவர் நினைவுகளை, செயல்களை, திட்டங்களை, கனவுகளை, நம்முள் விதைத்துக் கொண்டிருக்கும் வரை அவர் வாழ்ந்து கொண்டுதான் இருப்பார். ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரித்துக் காட்டுவதற்கு பெயர்தான் பகுத்தறிவு. கலைஞரைப் பிரித்து... அறிவால் வகுத்துப் பார்த்தால், இந்தியாவுக்கு திராவிட அரசியலை எடுத்துச் செல்லும் முத்துவேலர் கருணாநிதி ஸ்டாலின் தெரிவார். பெண்களுக்கு இட ஒதுக்கீடு, சொத்திலே பங்கு என்றெல்லாம் பார்த்தால் கனிமொழி கருணாநிதி தெரிவார். கலை உலகம், இளைஞர் அணி என்று பார்த்தால் முதலில் உதயநிதி ஸ்டாலின் தெரிவார். சற்றுப் பின்னால் தமிழரசும், அருள்நிதியும் தெரிவார்கள். முரசொலியை நினைத்தால் செல்வியும், செல்வமும் தெரிவார்கள். மதுரையை நினைத்தால் அழகிரி தெரிவார். மத்திய மாநில உறவு பற்றி நினைத்தால் மாறன் தெரிவார்.

அண்ணா சொன்னார். "எனக்கு வாய்த்தது போல் ஒரு தலைவரும், ஒரு தொண்டரும் உலகில் யாருக்குமே வாய்த்ததில்லை. தலைவர் - பெரியார்; தொண்டர் - கலைஞர்" அந்த ஆற்றல் மிக்க, நன்றியுள்ள, பன்முகத் திறமைகள் படைத்த கலைஞர், காலம் நமக்களித்த கற்பகத்தருவே. கலை உலகை வாழ வைத்த கலைஞரின் பொற்பாதங்களில் நன்றி மலர்கள் தூவி வணங்கி மகிழ்கிறேன். ■




CINEMA



# அந்தச் சொல்லின் முழுமையான பொருள் அவர்!

-திரு.பொன்வண்ணன், நடிகர்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை அரசியல்வாதியாக, திரைத்துறை ஆளுமையாக அல்லது இலக்கியவாதியாக எந்தக் கோணத்தில் பார்ப்பது என்பதிலேயே யாரோடும் ஒப்பிட முடியாதவர். அவற்றையெல்லாம் தாண்டி, சக மனிதர்கள் மீது அன்பும் நட்பும் கொண்டு பாராட்டுவதில் கலைஞர் மிகச்சிறந்த மனிதராக இருந்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை என்னுடைய பள்ளிக் காலத்திலேயே நேரடியாகப் பார்த்திருக்கிறேன். கரூர் மாவட்டத்தில், மொடக்குறிச்சிக்கு அருகில் உள்ள எங்கள் ஊருக்கு, கழக நிகழ்ச்சிக்கு வருகை தந்தார்.

ஊரில், நான்குமுனை சந்திப்பு ஒன்றில் தி.மு.கழகக் கொடியை, கலைஞர் ஏற்றி வைத்தார். வள்ளுவர் நடராஜன் என்கிற கழக நிருவாகி ஏற்பாடு செய்திருந்த அந்த நிகழ்ச்சியில் கலைஞர், கொடியை ஏற்றிவைத்துப் புறப்பட்டதும், கழக நிருவாகிகளும் அவருடனேயே அவர் தங்கியிருந்த ஓட்டல் வரை சென்றனர். வேடிக்கை பார்க்கச் சென்ற நானும் அந்தக் கூட்டத்தில் இருந்தேன்.

அதற்கு முன் கலைஞர் குறித்தோ, அவரது ஆளுமை குறித்தோ எனக்கு எதுவும் தெரியாது. அப்போது, அவர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த காலம். கழகத்தினருடன் இயல்பாகப் பேசிக் கொண்டிருந்தார். கலைஞரை முதன்முதலாக அப்படித்தான் பார்த்தேன்.



## "பொன்னர் சங்கர்" கள ஆய்வு

அதன் பின்னர், நான் கல்லூரியில் படிக்கும் காலத்தில் அவரைச் சந்திக்கும் சூழல் அமைந்ததுடன், அவருடன் ஒருவாரத்துக்குப் பயணிக்கும் வாய்ப்பும் கிடைத்தது. கலைஞர் அவர்கள் "பொன்னர் சங்கர்" கதையை "குங்குமம்" வார இதழில் தொடராக எழுதினார். அதற்குக் களப்பணி செய்வதற்காக ஈரோடு வந்திருந்தார். அவரது சுற்றுப்பயணத்துக்குக் கழக நிருவாகி சுப்புலட்சுமி ஜெகதீசன் பொறுப்பு வகித்தார். அவர் எனது உறவினர் என்பதுடன், அன்றைய சூழலில், கழகத்தில் இணைந்து தீவிரமாகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். கலைஞர் அவர்களின் அந்தப் பயணத்தின்போது உணவு கொண்டு செல்வது போன்ற சிற்சில உதவிகளுக்காக நானும் உடன் சென்றேன்.

கரூர், கொடுமுடி, திருச்சி என பல இடங்களுக்கு அவருடன் பயணித்தேன். அவ்வளவு எளிமையாக இருப்பார். அப்போதுதான் கலைஞர் அவர்களின் ஆளுமை குறித்து, அதிகமாகத் தெரிந்து கொண்டேன். நானும் எழுத்து, ஓவியம் என எனது ஆர்வத்தினை வளர்த்துக் கொண்டிருந்ததால் கலைஞர் குறித்து, அறிந்து கொள்ளாமல் இருக்க முடியுமா?

## கடந்த கால முகங்கள்

அதன் பின்னர், நான் ஊரிலிருந்து சென்னை வந்து, இயக்குநர் பாரதிராஜா அவர்களிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றினேன். அந்தக் காலக்கட்டத்தில் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தார். திரைத்துறை சார்ந்த பிரச்சினைகளுக்காக எங்கள் இயக்குநர் தலைமையில்தான் கலைஞரைச் சென்று சந்திப்போம். அப்போது, அவர் எங்களை நடத்தும் முறை, பேசும் விதம் எல்லாம் நெருங்கிய உறவினர்களிடம் பேசுவதுபோல இருக்கும்.

“பொன்னர் சங்கர்” கதை திரைப்படமாக எடுக்கப்பட்டபோது அந்தப் படத்தில் நடிக்க எனக்கும் வாய்ப்பு வந்தது. படத்தின் இயக்குநரும், தயாரிப்பாளருமான தியாகராஜன் கலைஞரைச் சந்திக்கச் செல்கையில், அவருடன் நானும் சென்றிருந்தேன். படம் தொடர்பான பேச்சுகளுக்கு இடையில், பொன்னர் சங்கர் கதைக் களம், களப்பணிக்காக கலைஞரின் வருகை என பழைய நினைவுகளை அவரிடம் கூறினேன். நான் அந்த நிகழ்வைச் சொல்லும்போதே, அவர் உற்சாகமாகி “அங்க வந்தியா? அவர் எப்படி இருக்கார்? இவரைத் தெரியுமா?” என அந்த நாட்களையும், இடங்களையும் நினைவுகூர்ந்து பேசத் தொடங்கினார். அப்போது உடன் வந்தவர்கள் யார் யார் என எனக்குச் சரியாக நினைவில் இல்லை. கிட்டத்தட்ட முப்பது ஆண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்வு. இந்த இடைவெளியில் அவர் எவ்வளவு மனிதர்களைச் சந்தித்திருப்பார்? அனுபவங்கள் இருக்கும்? அத்தனையும் நினைவில் வைத்திருக்க முடியுமா? அவரால் எப்படி நினைவுகளைப் பிசகாமல் பகிரமுடிந்தது என வியப்பு ஏற்பட்டது.

அங்கு புழங்கிய மனிதர்களைக்கூட நினைவிலிருந்து விசாரிக்கிறார் எனில், எவ்வளவு உணர்வுப்பூர்வமாக அவர்களை அணுகி இருப்பார். ஒவ்வொரு விஷயத்தையும் உணர்வுப்பூர்வமாக அணுகியதால் மட்டுமே, ஒரு சம்பவத்தைச் சொன்னவுடன், பெயர், ஊர் வரை அவரால் பகிர்ந்துகொள்ள முடிந்தது. அப்படியான பிணைப்பு யாருக்கும் சாத்தியமாகுமா? தெரியாது.

“பொன்னர் சங்கர்” படத்தில் நடித்ததும் மறக்க முடியாத அனுபவம். கதாபாத்திரங்களின் ஒவ்வொரு உரையாடலிலும் கவனம் செலுத்துவார். அந்தப் படத்தில் முக்கியப் பாத்திரமான தாமரையின் அண்ணன் சின்னமலைக் கொழுந்தாக நடித்திருந்தேன். அதில் நான் நடித்தால், சிறப்பாக இருக்கும் என பரிந்துரை செய்தது கலைஞர்தான். தவிர, அந்தப் பாத்திரத்துக்காக சில ஆலோசனைகளை அளித்தார். படப்பிடிப்புத் தளத்துக்கு அவர் வந்தாலே படபடப்பாக இருக்கும். ஆனால், அவர் அன்றைக்கு உள்ள வேலைகள் என்ன? யார் நடிக்க உள்ளனர் எனக் கேட்டுக் கொண்டு விடைபெறுவார். என்னிடத்தில் “பொன்னர் சங்கர்” களப்பணி நாட்களைப் பகிர்ந்து கொள்வது வழக்கமாக இருக்கும். அந்தப் படத்தில் நடிக்கக் கிடைத்த வாய்ப்பு பெரும் பேறு என்றுதான் சொல்லுவேன்.

“பருத்தி வீரன்” திரையிடலின்போது, அந்தப் படத்தைப் பார்க்க வந்தவர் எனது நடிப்பை வெகுவாகப் பாராட்டினார். குறிப்பாகப் படத்தில் இயக்குநர் மற்றும் குழு மீது மிகுந்த அன்பு பாராட்டினார். புதிய முயற்சிகளை, இளைஞர்களை ஊக்குவிப்பவராக அவரைப் பார்க்க முடியும். இளைஞர்களை மேடை ஏற்றுவதில், அவர்களை அடையாளம் காண்பதில் மிகப்பெரிய ஆசிரியராக இருந்து வழிகாட்டியவர் என்பதைப் பல மேடைகளில் இருந்து என்னால் அடையாளம் காட்ட முடியும். நான் ஓவிய ஆர்வம் கொண்டவன் என்பதை அறிந்து, என்னை உற்சாகப்படுத்தி இருக்கிறார்.


## புதுப்பித்துக் கொண்டவர்

அவர் தன்னைப் புதுப்பித்துக்கொண்டே இருந்தவர். தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொண்டவர். ட்விட்டர் / பேஸ்புக் போன்ற சமூக வலைத்தளங்களில் தன்னை “அப்டேட்” செய்து கொண்டு பயணித்தார். அந்தப் புதுப்பித்தல் மூலம்தான் தமிழ்நாட்டின் எதிர்காலத்துக்குத் தேவையானதை வடிவமைத்தார். அதே நேரத்தில் கலை உணர்ச்சியிலும் அவர் சமரசம் செய்து கொண்டதில்லை.

அதேபோல கலைஞர் அளவுக்கு விமர்சனங்களை எதிர்கொண்டவர்கள் எவருமில்லை. ஆனால், தன் மீதான விமர்சனங்களைத் தைரியமாக எதிர்கொண்டு, அவற்றைக் கடந்து நிற்கிறார் எனில், அதற்குக் காரணம் அவர் இலக்குகளை நோக்கி பயணப்பட்டவர். தந்தை பெரியார் கனவு கண்டதை நிறைவேற்ற, நின்ற மாணவராக, அவர் தனது இலக்குகளில் தெளிவாக இருந்தார். நான் பல்வேறு சூழ்நிலைகளில் அவரைச் சந்தித்துள்ளேன். பல வியப்புகளை அளித்துள்ளார்.

ஆனாலும், அரசியலில் மிகப் பெரிய தோல்விகளைச் சந்தித்த மறுநாளே, இயல்பான உரையாடலுக்குத் தயாராகும் அந்த ஆளுமைப் பண்பை எந்த நாளும், நம்மால் மறக்க முடியாது என்கிற இடத்தை விட்டுச் சென்றிருக்கிறார். எந்தக் கோணத்தில் இருந்து பார்த்தாலும் “கலைஞர்” என்கிற பொருளின் முழுமையாக, கலைஞராகத் திகழ்ந்தவர் கலைஞர்!... ■





# காலத்தை வென்ற கலைஞர்

-திரு. கோ. தனஞ்செயன், தயாரிப்பாளர் (ம) எழுத்தாளர்



தமிழ்த்திரையுலகில் எனது பயணம் 2007-ல் "வெள்ளித்திரை" என்ற திரைப்படத்துடன் மோசர்பேர் என்டர்டைன்மெண்ட் நிறுவனத்தின் மூலம் தொடங்கியது. அதற்குப் பின் சில திரைப்படங்கள் எடுத்து வந்தபோது, 2008-ல் அதிர்ஷ்டவசமாகப் பாடலாசிரியர் பா.விஜய் அவர்கள் மூலம், கலைஞரின் "தாய் காவியம்" திரைப்படத்துடன் இணையும் ஒரு வாய்ப்பு கிடைத்தது. கலைஞர் அவர்கள் எழுதிய "தாய்" என்ற நாவலின் அடிப்படையில், "தாய் காவியம்" என்ற திரைக்கதையைக் கலைஞர் அவர்கள் எழுதி வருவதாக பா. விஜய் அவர்கள் சொல்ல, அந்த நாவலைப் படித்தவுடன், கலைஞர் எழுதி வரும் அந்தத் திரைக்கதையை, திரைப்படமாக எடுக்க நானும் என் குழுவும் ஆர்வம் கொண்டோம். எங்கள் ஆர்வத்தைக் கலைஞர் அவர்களுக்கு தெரியப்படுத்த, அவரும் எங்களின் தயாரிப்பில், அக்கதைக்குத் திரைக்கதை-வசனத்தை எழுதித் தருவதாக பா. விஜய் அவர்களிடம் ஒப்புக்கொண்டார்.

இது குறித்து மேலும் பேச, நாங்கள் கலைஞர் அய்யா அவர்களை முதன் முதலாக ஜூன் 9, 2008 அன்று சந்தித்தோம். முதலாம் சந்திப்பில் அவருக்கு மிகவும் பிடித்த "திருவள்ளுவர்" அவர்களின் தஞ்சாவூர் ஓவியத்தைக் கொண்டு சென்றிருந்தோம். கலைஞர் அவர்கள் அதைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். அதைவிட, கலைஞர் அவர்களின் திரைக்கதையில் அதுவரை உருவான 74திரைப்படங்கள் பற்றிய விபரங்கள், அவரின் திரைப்படங்களில், எங்களால் திரட்ட முடிந்த திரைப்படங்களின் DVD-தகடுகள் கொண்ட ஒரு பெட்டியைக் கொண்டு சென்றிருந்தோம். நாங்கள் அவரின் திரைப்பயணத்தைச் சரியாக அந்தப் பெட்டியில் பதிவு செய்துகொண்டு வந்ததைப் பார்த்து, கலைஞர் அவர்கள் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தார். அவரின் திரைப்பயணம் பற்றி நாங்கள் குறிப்பிட்டிருந்த விபரங்களை ஆர்வத்துடன் சரிபார்த்தார். கலைஞர் அவர்களின் திரையுலகப் படைப்புகளைப் பற்றி நாங்கள் தயாரித்த அந்தத் தொகுப்புப் பெட்டி, கலைஞர் அவர்களுக்கு மிகவும் பிடித்து இருந்தது. எனக்குப் பெருமையாக இருந்தது. அந்தத் தொகுப்புப் பெட்டியில், அடுத்து, அவருடன் இணையவிருக்கும் எங்களது திரைப்படமும் இருக்க வேண்டும் என்ற பெரிய ஆவலும் ஏற்பட்டது.

அதன் பின், "தாய் காவியம்" திரைக்கதையை எங்கள் நிறுவனத்திற்கு எழுதித் தர கலைஞர் அவர்களுடன் ஓர் ஒப்பந்தம் 17 ஜூலை 2008 அன்று செய்து கொண்டோம். அந்த ஒப்பந்தத்தில் கலைஞர் அவர்களும் நானும் கையொப்பம் இட்டோம். அந்தத் திரைக்கதை கலைஞர் அவர்களின் 75-வது திரைப்படைப்பாக வரவிருப்பது எங்களுக்குப் பெரும் மகிழ்ச்சியைத் தந்தது. எங்கள் இருவரின் கையொப்பம் கொண்ட அந்த ஒப்பந்தத்தின் நகல் இன்றும் என் வசம் ஒரு பெரிய பொக்கிஷமாக இருக்கிறது.

கலைஞர் அவர்களின் கைவண்ணத்தில், அந்தத் திரைக்கதை நாங்கள் எதிர்பார்த்ததைவிட மிகப்பெரிய பொருட்செலவில் தயாராக வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அத்தகைய பெரும் பொருட்செலவுக்கு எங்கள் நிறுவனம் தயக்கம் காட்டியபோது, வேறொரு நிறுவனம் அதே திரைக்கதையைத் திரைப்படமாக எடுக்க முன்வந்தது. பா.விஜய் அவர்கள் எங்களிடம் சூழ்நிலையை எடுத்துரைத்தவுடன், கலைஞர் அவர்களுடன் அத்திரைக்கதை உருவாகப் பயணித்ததே எங்களுக்கு மகிழ்ச்சி. அந்தப் புதிய நிறுவனம் நாங்கள் அதுவரை செலவு செய்த

தொகை எதையும் திருப்பி தர வேண்டியதில்லை, அவர்கள் கலைஞரின் "தாய் காவியம்" திரைக்கதையைத் திரைப்படமாக எடுத்துக்கொள்ள எங்கள் சம்மதத்தை அளித்தோம். அப்படி உருவானதுதான் கலைஞரின் 75-வது திரைக்கதையான "இளைஞன்" திரைப்படம்.

அதற்கு அடுத்த வருடம் எங்களது தயாரிப்பில் வெளிவந்த இயக்குநர் சசி அவர்களின் "பூ" திரைப்படம் பல விருதுகளை எங்களுக்கு கொடுத்தது. அதில் முக்கியமாகத் தமிழ்நாடு அரசின், பெண்களை உயர்வாகக் காண்பித்த சிறந்த திரைப்படம் என்ற விருது கிடைத்தது. அந்த விருதை 2009-ல் முதல்வர் கலைஞர் அவர்களின் திருக்கரங்களால் பெற்றுக்கொண்டேன். திரையுலகில் எனக்குக் கிடைத்த முதல் விருது அது. அதற்குப் பின், இரண்டு தேசிய விருதுகள், இன்னும் பிற விருதுகளைப் பெற்றிருந்தாலும், கலைஞர் அவர்களின் கையால் கிடைத்த அந்த முதல் விருதுதான் எனது வீட்டில் பெரிய புகைப்படமாக இன்றும் அலங்கரிக்கிறது.

சில வருடங்கள் கழித்து 2013-ல் மீண்டும் கலைஞர் அவர்களை எனது குடும்பத்துடன் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. என்னுடைய திரைப்பயணம் பற்றியும், கலைஞர் அவர்களுடன் "தாய் காவியம்" திரைப்பட உருவாக்கத்தில் கிடைத்த வாய்ப்பைத் தவற விட்டது பற்றி எனது வருத்தத்தைப் பதிவு செய்து, தொடர்ந்து அவருடன் பயணிக்க என்னுடைய ஆர்வத்தைத் தெரியப்படுத்தி, எனது குடும்பத்திற்கு அவரின் ஆசிகளைப் பெற்று வந்தேன். அதன் பின், அவரைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை.

ஆனாலும் கலைஞரின் திரைப்படைப்புகளுடன்தான் என் வாழ்க்கை இருந்தது. 2014-ல் வெளியான என்னுடைய ஆங்கிலப் புத்தகம் PRIDE OF TAMIL CINEMA-வில் கலைஞரின் திரைப்படைப்புகளான "மணமகள்", "மந்திரி குமாரி", "பராசக்தி", "மனோகரா", "மலைக்கள்ளன்", "இருவர் உள்ளம்" பற்றியும், அவை தமிழ் சினிமாவில் ஏற்படுத்திய தாக்கத்தைப் பற்றியும் விரிவாக எழுதி இருந்தேன். அந்தப் புத்தகம் இந்திய அரசின் சிறந்த திரைப்படப் புத்தமாக 2014-ம் வருடத்திற்குத் தேர்வாகி எனக்கு முதல் தேசிய விருதும் கிடைத்தது. இவ்வாறு என் திரையுலகப் பயணத்தில் கலைஞர் அவர்களின் தாக்கம் தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கிறது.

தனது கடைசி காலம் வரை, எழுத்து, அரசியல், அரசு நிருவாகம், மக்கள் தொண்டு மற்றும் சினிமா எனப் பல துறைகளிலும் சாதனை படைத்து, தன்னிகரில்லாத தலைவராக இருந்தவர் கலைஞர். அவரின் மேன்மையான அரசியல் பண்பு, நாகரிகம், தலைமை நிருவாகத் திறமை, பேச்சாற்றல், எழுத்தாற்றல் எனப் பல திறமைகளுடன், என்றென்றும் அவரின் எண்ணற்ற திரைப்படைப்புகளும் அவரின் புகழைப் பாடிக்கொண்டே இருக்கும்.

கலைஞர் 100 ஆண்டுகள் என்பது இந்த நூற்றாண்டின் ஒரு மாபெரும் சகாப்தம். அந்தச் சகாப்தம் என்றென்றும் மக்கள் மனதில் நிலைத்து இருக்கும். அத்தகைய மாபெரும் சகாப்தத்தின் வாழ்க்கையில், நானும் ஒரு சிறிய அளவில் பங்கு கொள்ள முடிந்தது, எனக்குக் கிடைத்த பாக்கியம் என்றே கருதுகிறேன்.

வாழ்க கலைஞர் புகழ்! ■









# தூரத்து இடி முழக்கம்

**-திரு. எஸ்.ஜெயராம், நடிகர்**



ஒரு எளிய கலைஞனாகிய நான் மாபெரும் கலைஞரை சிலமுறை சந்தித்ததுண்டு. என் மகனுக்கு காளிதாசன் என்று பெயரிட்டதால் எங்களை அவர் உச்சி முகர்ந்ததுண்டு. அத்தனை அரசியல் போராட்டங்களுக்கு நடுவிலும் இம்மண்ணின் கலைஞர்களை அரவணைப்பவர் நம் கலைஞர். அதை இங்கிருக்கும் அத்தனை திரைத்துறையினரும் உணர்ந்திருப்பார்கள். எனக்கு அந்த வாய்ப்பு முப்பது வருடங்களுக்கு முன்னால் அமைந்தது.

"மனசு ரெண்டும் புதுசு" என்ற திரைப்படத்தில் நான் நடித்துக்கொண்டிருக்கும் பொழுது அதன் இயக்குநர் திரு. அமிர்தம் அவர்களிடம் "கலைஞரை எப்படியாவது ஒருமுறை சந்திக்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுங்கள்" என்று கேட்டேன். "அவரிடம் நீங்கள் என்ன பேச வேண்டும்" என்று திரு. அமிர்தம் கேட்டார். "கலைஞரிடம் உரையாட நான் வாய்ப்பு கேட்கவில்லை, அவரை தூரத்தில் இருந்து ஒரு முறை பார்த்தால் கூட போதும்" என்றேன் நான். மறுநாளே திரு. அமிர்தம் அவர்கள் என்னை அறிவாலயத்திற்கு அழைத்துச் சென்றார். எட்டி நின்று பார்த்து விட்டு வந்துவிடலாம் என்று சென்றவனை "ஜெயராம் இங்க வா" என்று அழைத்து தன் அருகில் அமர்த்தி கொண்டவர் கலைஞர். அதன் பின் பலமுறை அவரை சந்திக்கவும் அவரது குடும்பத்தில் ஒருவனாக என்னை நான் உணரவும் செய்தவர் கலைஞர். அவர் இருக்கும் இடத்தில் இருந்து இறங்கி வந்து நம்மை அணைத்துகொள்ளும் அவரது பண்பே இன்றும் நான் எண்ணி வியப்பது. அந்த பண்பையே நான் இன்று நம் மரியாதைக்குரிய முதல்வரிடமும், தம்பி உதயநிதியிடமும் காண்கிறேன். அவர்கள் கலைஞரின் வம்சம். கலைஞரின் அம்சம். ■

# கலைஞர் எனும் பொக்கிஷம்

**-திருமதி குட்டிபத்மினி, நடிகை**

கலைஞர் அவர்கள் காலத்தால் அழியாப் புகழ் பெற்றவர் என்பது நாம் எல்லோரும் அறிந்தது. அவரின் ஆளுமை தமிழ்நாடு மக்களின் மனதில் என்றென்றும் பசுமரத்தாணி போல் நிலைத்து நிற்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. அஷ்டவதாணி என்றால் எட்டு கலைகளை ஒரே நேரத்தில் சிறப்பாக செய்பவர்கள். தசவதாணி என்றால் பத்து கலைகளை சிறப்பாக செய்பவர்கள். ஆனால் இவர் அதற்கும் மேல் என்று சொல்வதே சிறப்பு. ஆம், ஒருவர் நாட்டையும் ஆண்டுகொண்டும், தமிழையும் வளர்த்துக்கொண்டும், திரையுலகையும் ஆண்டால், அவரின் அறிவுத்திறன் அளப்பரியது என்பதை சொல்லித் தெரிய வேண்டியதல்ல. எனது திரையுலக வாழ்க்கையில் நான் அவரை சந்தித்தது ஒரு மறக்க முடியாத நிகழ்வு. அதுவும் ஒரு தயாரிப்பாளராக நான் அவரை காணச்சென்றது ஒரு முரண்பாடான நிகழ்வு என்றே கூறலாம். ஆம். அவரின் "ரோமாபுரி பாண்டியன்" என்ற காவியத்தை நான் நெடுந்தொடராக தயாரிக்க வேண்டி கலைஞர் அவர்களைச் சந்தித்தேன்.

முதன்முறையாக நான் அவரைச் சந்திக்கச் சென்றதால் நான் அவரிடம் மிகுந்த பயபக்தியுடன் "நமஸ்காரம்" என்றேன். அதற்கு அவர் தனது சிலேடையான பேச்சினால் என்னிடம் "வாழ்க்கையில் நமக்கு எதற்கு "காரம்" அழகான "வணக்கம்" இருக்கும் பொழுது" எனச் சட்டென கூறியது எனக்கு இன்றும் நினைவில் உள்ளது. அன்று முதல் நான் எல்லோரிடத்திலும் "வணக்கம்" எனக் கூறப் பழகிக்கொண்டேன். அவரின் அற்புத காவியமான "ரோமாபுரி பாண்டியன்" சின்னத்திரையில் நான் கொண்டு வர ஆசைப்பட்டதைக் கேட்டு அவர் பெருமகிழ்ச்சி அடைந்தாலும், அக்காவியத்தை என்னால் அத்தனை பொருட்செலவு செய்து தயாரிக்க இயலுமா? என்ற சந்தேகம் அவருக்குள் இருந்தது. ஆனால், பின்னர் நான் சரியாகத் திட்டமிட்டு அதனைத் திறம்படச் செய்து காட்டியதும் அவர் ஒரு குழந்தை போன்று பெருமகிழ்ச்சி அடைந்ததைப் பார்த்து ஆச்சரியப்பட்டேன்.

அதன்பின்னர் என் மீது இருந்த நம்பிக்கையால் அடுத்தடுத்து தொடர்கள் செய்ய ஊக்கம் அளித்தார். அதன்பின் பலர் தடுத்தும் மிகுந்த மன தைரியத்துடன் "இராமானுஜர்" என்ற நெடுந்தொடர் தயாரிக்க அவரிடம் நான் துணிந்து சென்று முன்மொழிந்தேன். அவரின் கோட்பாட்டிற்கு நேர் எதிரானது என்றாலும் சித்தாந்தத்தில் அவருடைய கருத்துடனும், இராமனுஜர் வாழ்வியல், கலைஞர் அவர்களுடன் ஒத்துப்போனதால் அத்தொடருக்கு அவர்கள் எழுத ஒப்புக்கொண்டார். இது திரைத்துறையினரை மிகப் பெரிய வியப்பில் ஆழ்த்தியது என்றே கூறலாம். அதில் எனக்கு பெரும் மகிழ்ச்சி. ஆனால்,

கலைஞரிடம் தமிழ் பயிலுவது அவ்வளவு சுலபமானது கிடையாது என்பதை, பின்னர் நான் உணர்ந்து கொண்ட தருணங்கள் பல. இந்தத் தொடரில் அவரின் ஒப்புதல் இல்லாமல் ஒரு எபிசோட் கூட நாங்கள் ஒளிபரப்பியதில்லை. தமிழ் உச்சரிப்புகள் மற்றும் வேறு சில தொழில்நுட்பக் குறைகள் எங்கள் கண்களில் இருந்து தப்பினாலும் அவர் கண்களுக்குத் தப்ப முடியாது. அது மட்டுமல்லாமல், திரைக்கதையில் சில காட்சிகள் எடுக்கத் தவறினாலும் அதைச் சரியாகக் கண்டுபிடித்து, என்னிடத்திலும் இயக்குநர் தனுஷிடமும் அதைப் பற்றி கேட்பதோடு நிற்காமல், அது நிச்சயம் இடம் பிடிக்க வேண்டும் என அடம்பிடித்தும் இருக்கிறார். அவரின் இந்தச் செயல், எங்களுக்கு மிகுந்த ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. நூற்றாண்டை நெருங்கி கொண்டிருந்த, அவரின் அந்த வயதிலும், அவரது நினைவாற்றல் மற்றும் கலையின் மீது அவருக்கு இருந்த அற்பணிப்பும், தீராக்காதலும் எங்களை வியப்பில் ஆழ்த்தியது. எனது முப்பத்தைந்து வருட திரையுலகத் தயாரிப்புப் பணியில் இந்தளவிற்கு ஒரு அற்பணிப்பை அப்பொழுதுதான் நான் முதன் முறையாக பார்த்து வியந்தேன். அது மட்டுமல்லாமல் என்னிடத்தில் அந்த தொடருக்கான, அவரது எழுத்திற்காக அவரே உரிமையுடன் கேட்டுப் பெற்ற ஊதியத்தை இன்றளவும் நான் அவருக்கு அளித்த காணிக்கையாகவும், பாக்கியமாகவும் கருதுகிறேன்.

கலைஞர் என்ற கலைக் கல்லூரியில் பயில அன்றைய காலகட்டத்தில் எனக்கு பெரிதும் உதவிய மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, இக்கட்டுரையின் மூலமாக எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலைஞர் அவர்களுடன், எனது இந்த திரையுலக பயணத்திற்கும், நெடுந்தொடர் தயாரிக்கவும் மூல காரணகர்த்தாவாகிய திரு. அமிர்தம் ஐயா அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலைஞர் உடனான தருணங்கள், ஒரு இராணுவ வீரரின் கட்டுப்பாட்டில் இருந்தது போன்ற ஒரு உள்ளுணர்வுடன் ஐந்து வருடங்களுக்கு மேலாக தொடர்ந்து பயணித்துள்ளேன் என்பதையும், இங்கு நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்து, அத்தருணங்களை என் வாழ்நாள் முழுவதும் நினைவுகொள்ளும் தருணங்களாகவும், அரிய பொக்கிஷமாகக் கருதுகிறேன் என்பதை இங்கு எடுத்துக் கூறப் பெருமை கொள்கிறேன். ■



# சரித்திரம் சாதனை காப்தம்

தமிழுக்கும், தமிழருக்கும், தமிழ்நாட்டிற்கும் ஏன் உலகெல்லாம் வாழும் தமிழர்களுக்கு ஒரு ஒப்பற்ற அடையாளமாகத் திகழ்ந்தவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். திரையுலகில் கலைஞரோடு நெருங்கிப் பழகியவர்களில் நானும் ஒருவன் என்பது என் திரையுலக வாழ்வில் பெரும் மன நிறைவைத் தருகிறது.

கலைஞரை நினைக்கும்போது, அவரது பேச்சாற்றல், எழுத்தாற்றல், செயலாற்றல் போன்றவற்றில் அவருக்கு நிகராக வேறு யாரையும் ஒப்பிட முடியாது. அவரது நாடி நரம்புகளில் ஓடும் குருதியில் தமிழுக்கும், தமிழர்களுக்கும், தமிழ் மண்ணுக்கும் நலம் பயக்கும் எண்ணங்களே, லட்சியங்களே ஊறிப் போயிருந்ததை அகிலமே அறியும்.









கலைஞரின் வாழ்க்கையில் அரசியலும், திரையுலகும் பின்னிப் பிணைந்திருந்தது. கலைஞருக்கு திரையுலகின் மீது இருந்த பற்றும் பாசமும் அளவிட முடியாதது. அவர் முதல்வரானதும் தமிழ்த் திரையுலகிற்குச் செய்த சேவைகளும், சலுகைகளும் ஒன்றல்ல, இரண்டல்ல, ஓராயிரம்! பல்வேறு காலகட்டங்களில் திரையுலகம் விரும்பிக் கேட்ட பல சலுகைகளை உடனுக்குடன் அளித்ததுடன், கேட்காததையும் வாரி வழங்கி, திரையுலகை தாயுள்ளத்துடன் அரவணைத்தவர் கலைஞர்' திரையுலகம் தழைக்க, செழிக்க அடித்தளமிட்டவர் கலைஞர்!

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., நடிகர் திலகம் சிவாஜி கணேசன் தொடங்கி இளைய தலைமுறைக்கும் அவரது பேனா முனை தீட்டிய வைர வரிகளில் பட்டை தீட்டிக் கொண்டது தமிழ்த் திரையுலகம். ராஜகுமாரி, அபிமன்யு, மருதநாட்டு இளவரசி, பராசக்தி, மனோகரா, மலைக்கள்ளன், பூம்புகார், பூமாலை, ராஜா ராணி, புதுமைப்பித்தன், புதையல், அரசிளங்குமரி, காஞ்சித் தலைவன் என்று தங்கத் தமிழை வெள்ளித்திரையில் தவழ விட்டவர் கலைஞர்.

திரையுலகிற்கு அளப்பரிய நன்மைகளை அள்ளித்தந்த கலைஞருக்கு, தமிழ்த் திரையுலகம் ஒன்று கூடி, அவரது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவது நமது நன்றிப் பெருக்கினை வெளிப்படுத்துவதாகும்.

கலைஞர் முதல்வராக இருந்த போது, சட்டசபையில் பட்ஜெட் விவாதம் நடந்து

-கலைப்புலி திரு.எஸ்.தாணு, தயாரிப்பாளர்

கொண்டிருந்தபோது ஏற்பட்ட ரகளையால், கலைஞரின் கண்ணில் காயம் ஏற்பட்டுவிட்டது. அன்றிரவே கலைஞரை நேரில் சென்று பார்த்தேன். கண்ணில் காயம் இருந்தும் அதைப் பொருட்படுத்தாமல் கலைஞர் மன உறுதியுடன் சொன்னதை அப்படியே சொல்கிறேன்…

"யார் என்ன நினைத்தாலும், நினைக்காவிட்டாலும், தமிழ் மக்களை நான் மறக்க மாட்டேன். என்னுடைய ஆட்சி பொற்காலம் என்று மக்கள் பேசவேண்டும் என்பது தான் என் ஆசை, இலட்சியம் எல்லாம். அதற்காக என் கடைசி மூச்சு இருக்கும் வரை உழைத்துக் கொண்டே இருப்பேன்" என உருக்கமாக கூறினார்.

பிலிம் சேம்பேரில் ஒரு பிரிவினர் ரகளையில் ஈடுபட்டனர். உடனே முதல்வர் கலைஞரை நேரில் சென்று பார்க்க முடிவு செய்தோம். டி.வி.எஸ். ராஜதி, டி.ராமானுஜம், ரமேஷ் பிரசாத், ஈ.கா. சீனிவாசன் மற்றும் பிரச்சனை செய்தவர்கள் அனைவரையும் கலைஞர் நேரில் அழைத்துப் பேசினார். பிரச்சனைகளை துல்லியமாக ஆராய்ந்து, வார்த்தைகளை சதுரங்கக் காய்களாக நகர்த்துவதில் கலைஞருக்கு நிகர் கலைஞர் தான்! தன் எதிரில் வைத்தே அவர்களை தன் கருத்துக்களை ஆமோதிக்கச் செய்து எது நியாயமோ, தர்மமோ அதை எடுத்துரைத்து அனைவரையும் ஏற்கவைத்து சமாதானம் செய்து வைத்தார் கலைஞர்!.

ஒரு பிரபல தயாரிப்பாளர், பைனான்சியர் தன் விலையுயர்ந்த சொகுசுக் காரில் செல்லும்போது, லாரி மோதி விபத்துக்குள்ளானார். இச்சம்பவம் வெளியே தெரிந்தால் திரையுலகில் கௌரவம் பாதிக்குமே என்று, சட்டத்திற்குட்பட்டு அந்த பெரிய மனிதரைக் காப்பாற்றி, அவப்பெயர் ஏற்படாமல் கலைஞர் உதவினார்.

பல மொழிப் பாடல்களைப் பாடிய பிரபலமான பாடகர் அவர், தன் மகளுக்கு மருத்துவக் கல்லூரியில் படிக்க "சீட்" கேட்டு, கலைஞரைப் பார்க்க என்னுடன் வந்தார். கலைஞர் அவரிடம் "கட் ஆப் மார்க்" முறையை விளக்கிக் கூறினார். சட்டத்தை மீறி எதையும் செய்ய இயலாது. ஆனால் கண்டிப்பாக வேறு (பிரைவேட்) கல்லூரியில் "சீட்" வாங்கித் தருவதாக உறுதி அளித்தார். பதவி இருக்கிறதென்று சட்டத்தையும் மீறாமல், உதவி கேட்டு வந்தவரின் மனமும் நோகாமல் நடந்து கொண்ட கலைஞரின் பரந்த மனம் பாராட்டிற்குரியது.

கலைஞருக்கும் நடிகர் திலகத்திற்குமுள்ள நட்பை திரையுலகம் நன்கறியும். நடிகர் திலகத்திற்கு "செவாலியே" விருது கிடைத்ததைப் பாராட்டி திரையுலகே திரண்டு ஒரு மாபெரும் விழா நடத்தியது. தனக்கும், நடிகர் திலகத்திற்கும் உள்ள நட்பினை அவர் ஒவ்வொன்றாக விவரிக்க, நடிகர் திலகம் மிகவும் உணர்ச்சிவசப்பட்டதை அருகில் இருந்தவர்கள் கவனிக்கத் தவறவில்லை. அந்த நாள் ஞாபகம் கலைஞருக்கு மடை திறந்த வெள்ளம் போல் பொங்கி வழிந்தது கலைஞரின் அற்புதமான பேச்சு திரையுலகினரின் நினைவில் என்றென்றும் நிலைத்திருக்கும். திரையுலகில் ஒரு பிரச்சனை என்று தெரிந்தால் முதல் நபராக உதவி செய்பவர் கலைஞர் தான்! "பெப்ஸி"யில் தொழிலாளர்கள் பிரச்சனை ஏற்பட்டபோது உடனடியாகத் தீர்வு காண வழிவகுத்தவர் கலைஞர்! தொழிலாளர்களிடம் ஒற்றுமையை ஏற்படுத்தி சமாதானம் ஆகும் வரை ஓயமாட்டார்! யாரும் எளிதில் கலைஞரை சந்தித்து நியாயம் பெறலாம், நிவாரணம் பெறலாம், நிம்மதி அடையலாம். திரையுலகினர் அனைத்து தரப்பினரும் பயனடைய பையனூரில் 100 ஏக்கர் நிலம் தந்து உதவினார்.

குடிசை மாற்று வாரியம், உழவர் சந்தை, சமத்துவபுரம், செம்மொழி மாநாடு, செம்மொழிப் பூங்கா, வள்ளுவர் கோட்டம், குமரியில் வள்ளுவர் சிலை என்று கலைஞரின் சாதனைகளை சொல்லிக் கொண்டே இருக்கலாம். கலைஞர் தமிழ்நாட்டின் முதலமைச்சராக, 18 ஆண்டுகள், 360 நாட்கள் பதவியில் இருந்தார். தமிழினத்தின் தன்மானத் தலைவர் கலைஞரின் ஆட்சி "பொற்காலம்" என்பதில் ஐயமென்ன?

கலைஞர் பண்ணுக்குச் சுவையானவர்; பார்வைக்கு தேனானவர்; கண்ணுக்கு மணியானவர்; கவலைக்கு மருந்தானவர்; அறிவானவர்; சிறப்பானவர்; மொத்தத்தில் மாபெரும் சிந்தனையாளர்!

திரையுலகினரின் நலனில் பெரிதும் அக்கறை உள்ளவர் கலைஞர்! ஒரு பொது நிகழ்ச்சியில் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் வெண் தாடியுடன் இருப்பதைப் பார்த்த கலைஞர், உடனே என்னை அழைத்தார். நடிகர்களுக்கு "இமேஜ்" முக்கியம், அதிலும் ரஜினிக்கு மிகவும் (இமேஜ்) முக்கியம். உடனே தாடியை எடுக்கச் சொல் என்றார். நானும் இதை ரஜினியிடம் தெரிவித்து விட்டேன்.

"குட் லக்" தியேட்டரில் படம் பார்த்துவிட்டு "லிப்ட்"டில் கீழே வந்து இறங்கி இருக்கிறார் கலைஞர். படம் பார்க்க வந்திருந்த ரஜினிகாந்த், கலைஞரைப் பார்த்ததும் அருகில் வந்து நின்றிருக்கிறார். கலைஞரிடம் தன் முகத்தை அப்படி இப்படி திருப்பி காண்பித்து "ஷேவ்" செய்து விட்டதை சொல்லாமல் சொல்லி இருக்கிறார். அடுத்த நாள் கலைஞர் என்னிடம் "ரஜினிகாந்த் தாடி எடுத்ததை குழந்தை மாதிரி என்னிடம் காண்பித்தார்" என்று சொல்லி சிரித்து மகிழ்ந்தார்.

வள்ளுவர் கோட்டத்திற்கு அருகே 50 அடி உயரத்தில் கலைஞரின் முகம் மட்டும் வரைந்து "கட் அவுட்" வைத்தது மறக்க முடியாத நிகழ்ச்சியாகும். செம்மொழி மாநாட்டிற்கு எனது பங்களிப்பாக, நான்கரை நிமிடத்தில் ஒரு பாட்டைத் தயாரித்துக் கொடுத்தேன். அப்பாடல் கலைஞர் தொலைக்காட்சியில் தொடர்ந்து ஒளிபரப்பானது. கலைஞர் நெகிழ்ந்து மகிழ்ந்து பாராட்டினார்.

கலைஞர் அவர்கள் உடல் நலிவுற்ற நிலையில் இருந்தபோது அவரை கோபாலபுரத்து இல்லத்தில் சந்தித்தேன். அப்போது 1989-ஆம் வருட தேர்தலின்போது பிரச்சாரத்திற்காக நான் தயாரித்துக் கொடுத்த பாடல்களை அவர் முன்பு பாடி, பழைய புகைப்படங்களைக் காண்பித்தேன். அதைக் கண்டு கலைஞரின் கண்கள் பணித்தன. அவரைக் கண்டு என் கண்களில் இருந்து கண்ணீர் மல்கியது. இது தான் நான் அவரை சந்தித்த கடைசி சந்திப்பு. சொல்லில்லாத் துயரம் அடைந்தேன். அப்பேற்பட்ட சூழ்நிலையில் அவரிடம் இருந்து விடை பெற்றேன்.

திரையுலகம், கலைஞரின் நூற்றாண்டு விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடுவது நாம் அவருக்கு செலுத்தும் நன்றியாகும். திரையுலகம் கலைஞரை என்றும் நன்றியுடன் நினைத்துப் பார்க்கும். அவர்களில் நானும் ஒருவன். ■

# ஆண் சிங்கத்தின் பெண் சிங்கம்

-திரு. எஸ்.பி.முருகேசன், தயாரிப்பாளர்

ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டம் தூத்துக்குடி தாலுக்கா ஆறுமுகநேரி எனும் கிராமத்தில் விவாசயக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த நான், மாண்புமிகு முதல்வர் - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிந்தனையில் முகிழ்த்த உளியின் ஓசை, பெண் சிங்கம் ஆகிய திரைப்படங்களின் தயாரிப்பாளராக வருவேன் என்று கனவிலும் நினைத்ததில்லை.

அத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க வாய்ப்பை எனக்கு வழங்கி பெருமைப்படுத்தியவர், எங்கள் உறவினரும் தொழிலதிபருமான திரு. எஸ். என். ஜெயமுருகன் அவர்கள் தான். இவ்வேளையில் அவருக்கு எமது நெஞ்சார்ந்த நன்றியை காணிக்கையாக்குகிறேன்.

அவருக்கு எத்தனையோ நண்பர்கள் இருப்பினும் எனக்கு அந்த வாய்ப்பை வழங்கிய காரணத்தினால், கோபாலபுரம் தலைவர் இல்லத்தில் முதன் முறையாக தலைவரை சந்தித்த நாள் முதல், நெஞ்சத்தில் நீங்காத பாசம் கொண்டிருந்தோம். எமது நினைவலைகள் உயர்ந்து உயர்ந்து ஆர்ப்பரித்துக்கொண்டுள்ளது.

உளியின் ஓசை திரைப்பட வசனங்களை இயக்குநர் இளவேனில் அவர்களிடம் கொடுத்து அதைப்படிக்கச் சொல்லி தலைவர் அவர்கள் கேட்பார்.

"பறக்கத் தெரியும் என்பதற்காக சூரியனுக்குள் பாய்ந்திட ஆசைப்படக்கூடாது" போன்ற பல வசனங்களை எடுத்துச் சொல்லி, "நல்லா இருக்குதுங்க அய்யா" என்று நான் கூறியபோது. அவரது முகத்தில் உருவான மகிழ்ச்சியைக் காணக் கண்கோடி வேண்டும்.

சொந்த மகன்களிடம் பழகுவதைப் போல, பாசத்துடனும், வாஞ்சையுடனும், தலைவர் எங்களிடம் நடந்து கொண்ட நிகழ்வுகள் அனைத்தும் இன்றும் நெஞ்சம் நெகிழ்கிறது. ஷூட்டிங் முடிந்த அன்று மாலையே "ரஷ்" பார்க்க வேண்டும் என்று ஆர்வமுடன் இருப்பார் தலைவர். BG எதுவும் நடந்திராத போதே, சீன்களை உன்னிப்பாகக் கவனித்து திரு. அமிர்தம் அண்ணன் அவர்களிடமும் திரு. இராம நாராயணன் அவர்களிடமும் சிறு சிறு திருத்தங்களைக் கூறி, அவர்கள் மூலமாக இயக்குநர் இளவேனில் அவர்களிடமும், எங்களிடமும் விளக்கிடச் செய்வார் தலைவர்.

எனது இளைய மகன் சுரேஷ்குமார் திருமண அழைப்பை, தலைவரிடம் கொடுத்துவிட்டு, "அய்யா நீங்க வந்து திருமணத்தை நடத்தி வைக்க வேண்டும்" என்றேன். "சட்டமன்றம் நடக்கிறதே" என்று மட்டும் கூறினார். நான் எதுவும் சொல்லவில்லை. வந்துவிட்டேன். திருமண நாளுக்கு முதல் நாள், பி.ஆர்.ஓ. மருதவிநாயகம் அவர்கள் என்னைத் தொடர்பு கொண்டு, "திருமணத்திற்கு தலைவர் வருவார், சட்டமன்றம் போற வழியில், மணமக்களை வாழ்த்திவிட்டுச் செல்வார்" என்று கூறினார். பி.எஸ்.ஓ. பாண்டியன் அவர்களும் இந்த செய்தியைத் தெரிவித்தார்.

குறித்தபடி, ராணி மெய்யம்மை மண்டபத்திற்கு வருகை தந்த முதல்வர் அவர்கள் காரிலிருந்து இறங்கினார். அவருடன் அமைச்சர் ஆற்காடு வீராச்சாமி அவர்களும், ஒன்றிய அமைச்சர் ஆ.ராசா ஆகியோரும் வந்தனர். அங்கிருந்தவாறே, என் மகனின் கரங்களில் மாங்கல்ய நாணை வழங்கி, மணமகளின் கழுத்தில் அணியச் சொல்லி வாழ்த்துகளைக் கூறியதுடன், இருவரிடமும் தங்க நாணயங்களை, திருமணப் பரிசாக வழங்கி, எங்கள் குடும்பத்திற்கு பெருமை சேர்த்தார்கள் என்பதை நானும், எங்கள் பிள்ளைகளும், இளந் தலைமுறையினரும் எந்நாளும் நினைவில் கொள்வோம்.





உளியின் ஓசை ஷூட்டிங் முடிந்து, திரைப்படம் வெளியாகும் வேளையில், தலைவர் அவர்கள் இராமச்சந்திரா மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருந்தார்கள். திரைப்படம் வெளியாவதில் தாமதம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் மிகுந்த அக்கறையுடன், மாண்புமிகு அமைச்சர் ஆற்காட்டார் அவர்களிடம் சொல்லி, அமைச்சர் எ.வ.வேலு அவர்களை வாங்க வைத்தார்கள். பொறுப்பு, ஈடுபாடு, விடாமுயற்சி, கலைஞர்களை மதிப்பது, அவர்களின் குடும்ப நலன்களை விசாரிப்பது, உதவி தேவையென்றால் தயாரிப்பாளர் மூலம் செய்து கொடுக்கச் செய்வது என்று ஒவ்வொரு தளத்திலும் தலைவரது திரைத்துறைப் பண்புகளை எண்ணிப் பார்த்து வியந்து போவோம்.

உளியின் ஓசை திரைப்படம் வெளியான பின்னர் தலைவரை சந்திக்க வேண்டுமே என்று நெஞ்சமெல்லாம் ஆவல் எழும். தலைவரின் பிறந்தநாள் ஜூன் 3-ஆம் தேதி. என்னுடைய பிறந்தநாள் ஜூன் 1-ஆம் தேதி. குடும்பத்தினருடன் சென்று தலைவரிடம் ஆசி பெறுவோம். என் பேரக்குழந்தைகளை கன்னத்தைக் கிள்ளி பெயர் கேட்பார். இவர்கள் சொன்னவுடன், பெரிய பாக்ஸிலிருந்து வட்ட வட்டமான சாக்லைட்டுகளை எடுத்து வழங்கி மகிழ்வார். அம்மா காபி கொடுப்பார்கள். இவ்வாறான நிகழ்வுகள் ஏராளம். அதன்பின்னர், "நீ இன்றி நானில்லை" திரைப்படம் தொடக்க விழாவும் நடைபெற்ற நிலையில், இயக்குநர் இளவேனில் அவர்களுக்கும் தலைவருக்கும் சிறு கருத்து வேறுபாடு ஏற்பட்டு, திரைப்படக் கல்லூரி மாணவர் பாலி ஸ்ரீரங்கம் அவர்களை வைத்து, பெண் சிங்கம் என்று பெயர் மாற்றப்பட்டு, ஷூட்டிங் துவங்கப்பெற்று, பிரம்மாண்டமான பொருட்செலவில், சென்னை ஸ்டுடியோக்களிலும், சுற்றுப்புறப் பகுதிகளிலும் ஷூட்டிங் நடைபெற்றது.

தாம்பரம் தேசிய சித்தா ஆராய்ச்சி நிறுவனம், எண்ணூர் காமராசர் துறைமுகம், கீழ்பாக்கம் மனநோயாளிகள் மருத்துவமனை, சென்னை பல்கலைக்கழகம், மதுரை மத்திய சிறைச்சாலை, மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயில், மதுரை ரயில் நிலைய சந்திப்பு போன்ற இடங்களில் எல்லாம் ஷூட்டிங் நடைபெற்றது என்பதெல்லாம், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் மட்டுமே சாதிக்க முடிந்தது என்று கூறினால் அது மிகையல்ல. அது இன்றளவும் திரைத்துறையினரால் பாராட்டப்படுகின்ற ஒன்றாகும்.



சுவிட்சர்லாந்துக்கும் சென்று பாடல்காட்சியை ஷாட் செய்தோம். தெலுங்கு நடிகர் உதய் கிரணும், நடிகை மீரா ஜாஸ்மினும் பெண் சிங்கம் திரைப்படத்தில் ஜோடியாக நடித்தனர். இரண்டு திரைப்படங்களைத் தயாரித்ததன் மூலம் ஜெ.நந்தினி ஆர்ட்சின் நிறுவனர் திரு.எஸ்.என்.ஜெயமுருகன் அவர்கள் நாடறிந்த தொழிலதிபராக கவனிக்கப் பெற்றார் என்பது பெருமைக்குரிய ஒன்றாகும். அதனை உருவாக்கிய மகத்தான வள்ளல் தலைவர் கலைஞர் அவர்களே ஆவார்.

ஆறுமுகநேரி முத்தாரம்மன் திருக்கோயில் குடமுழுக்கு நடைபெற்ற போது, எங்கள் ஊரின் உறவினர்கள் அனைவரும், "இராசாத்தி அம்மாவை அழைத்து வாருங்கள்" என்று என்னிடம் கூறியபோது, சிஐடி காலனி இல்லத்திற்கு சென்று முதல்வர் அய்யாவிடம் அனுமதி கோரியபோது, எந்தவித மறுப்பும் இன்றி, "புரொட்யூசர் கேட்கிறார், ஊர்க்காரங்க கோரிக்கை, பத்திரமா போயிட்டுவா" என்று சின்னம்மாவிடம் கூறியதை எந்தக்காலத்திலும் மறக்கவியலாது.

பொய்யின்றி மெய்யுரைக்கும் தன்மை நம்மிடம் இருப்பதை, தலைவர் உணர்ந்து விட்டார் என்றால், அதன்பின், நம்முடனான நட்பை-உறவை வலுப்படுத்திக் கொள்வார் என்பது நான் கண்ட பாடமாகும்.

எனது காலில் ஏற்பட்ட விபத்து காரணமாக, மருத்துவர் மயில்வாகனன் நடராஜன் அவர்களிடம் எனக்கு நடைபெற்ற அறுவை சிகிச்சையின் மூலம், கால் சற்று தாங்கித் தாங்கி நடக்கும் நிலை ஏற்பட்ட போது, வாகனம் ஓட்டிட இயலாத நிலை ஏற்பட்டது. அதன் காரணமாக, தலைவர் அவர்களை நேரில் சென்று சந்திக்க இயலாத சூழ்நிலை உருவானது. 2011-ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலில் தலைவர் கலைஞர் அவர்களின் தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு பல்வேறு சமுதாய அமைப்புகளும், நேரில் சந்தித்து ஆதரவினை தெரிவித்த போது, முதன் முதலில் அண்ணன் தளபதியார் அவர்களை நேரில் சந்தித்து ஆதரவுக் கடிதங்களை வழங்கவேண்டும். அதன்பின்னர் தான், தலைவருடைய ஒப்புதலைப் பெற்று, நமக்கு நேரம் ஒதுக்கித் தருவார் அண்ணன் தளபதியார் அவர்கள். அதன்படி, பல்வேறு நாடார் அமைப்பினரை அழைத்துச் செல்வேன். "முருகேசன், உங்க ஆளுங்களை அழைச்சிட்டு வாங்க" என்று பலமுறை தளபதியார் கூறியுள்ளார்.

எனது இரண்டு மகன்களும் அமெரிக்காவின் அரிசோனா மாநிலங்களில் வசிப்பதால், நானும் எனது வாழ்விணையரும் அடிக்கடி அங்கே சென்று விடுவோம்.

கொரோனா கொடுந்தொற்று காலத்தில் எல்லாம் அங்கேயே இருந்து விட்டோம். எங்கிருந்தாலும் தலைவர் கலைஞர் அவர்களின் நினைவுகளுடன் வாழ்ந்து வருகிறோம். அவருடைய அருந்தவப் புதல்வர் அண்ணன் தளபதியார் அவர்கள் தமிழ்நாட்டை ஆள்வதும், மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு துணை முதலமைச்சராகவும் திகழ்வது தென்னாடு பெற்ற பெரும் பேறாகும். அத்தகைய நெஞ்சினிக்கும் நினைவுகளுடன் முத்தமிழறிஞர் அய்யா கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா வேளையில், "கலைஞரின் திரையுலக நினைவலைகள்" சிறப்பு மலரில் எமது கருத்துக்களை பதிவு செய்து வணக்கங்களைத் தெரிவித்து மகிழ்கிறேன். ■

# மறக்க முடியாத மாமனிதர்


-அமரர் வி. ராஜேஷ், நடிகர்

சுதந்திரக் காற்றை சுவாசித்துப் பிறந்த என்னைப் போன்ற தமிழ் நெஞ்சங்களுக்கு கலைஞர் அவர்கள் மறக்க முடியாத மாமனிதராகவும், சாதனை படைத்த வீரராகவும் திகழ்கிறார். இயல், இசை, நாடகம் என்ற மூன்றும் சேர்ந்தது தான் சினிமா என்கிற திரைப்படக்கலை. ஆயக்கலைகள் அறுபத்து நான்கும் சங்கமிக்கும் இடம் தான் சினிமா. 20-ஆம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற கலை வடிவம்தான் சினிமா என்றார் மாமேதை லெனின்.

அனைத்துக் கலைகளையும் தனக்குள் வசீகரித்துக் கொண்டு தனித்து விளங்குகின்ற ஓர் ஒப்பற்ற கலைதான் சினிமா என்றார் உலகின் புகழ் பெற்ற இயக்குநர் புத்தோக்கின். அப்படிப்பட்ட ஓர் ஒப்பற்ற கலையை தன்னுடைய பேனா நூனியில் எழுபது ஆண்டுகள் வைத்திருந்தவர் டாக்டர் கலைஞர்.

1989-ஆம் ஆண்டு வெளிவந்த "காவலுக்குக் கெட்டிக்காரன்" என்கிற திரைப்படத்திற்கு கதை வசனம் எழுதியவர் கலைஞர். அந்தப்படத்தில் ஓர் கொடுமையான பண்ணையார் வேடத்தில் நான் நடித்தேன். அவர் எழுதிய முத்து முத்தான வசனங்களை நான் பேசி நடித்தேன்.

உலகிலேயே தினமும் அதிகமாக எழுதியவர்களில் கலைஞரும் ஒருவர். 1947-ம் ஆண்டு வெளியான ராஜகுமாரி படத்தில் ஆரம்பித்து வாழ்நாளில் இறுதிவரை திரைப்படத்திற்கு எழுதிக் கொண்டிருந்தார். காவலுக்குக் கெட்டிக்காரன் திரைப்படத்தில் வந்த காட்சிகளில் சில வசனங்களை எனக்கு ஏற்றபடி மாற்றி எழுதிக் கொள்ளலாமா என்று கவிஞர் இளையபாரதியிடம் கேட்டேன். அதற்கு கலைஞர் அவர்கள் ராஜேஷ் விருப்பப்படி எவ்வளவு வேண்டுமானாலும் மாற்றிக் கொள்ளட்டும்









என்று அனுமதியளித்தார். அவர் சொன்னதைக் கேட்டு அகமகிழ்ந்தேன்.

அதன்படியே, நானும் சில காட்சிகளில் வரும் ஒரு சில இடங்களில் வசனங்களை மாற்றி எழுதினேன்.

உழைப்பிற்கு ஓர் உதாரணம் என்றால் அது டாக்டர் கலைஞர் தான். கடுமையான உழைப்பு, நகைச்சுவை உணர்வு, வெற்றி பெற்றாலும் பெருமிதம் இல்லை, வெற்றி பெறாவிட்டாலும் துவண்டு விடுவதில்லை. ஆனால், தினமும் வெற்றியை நோக்கி ஓடிக்கொண்டேயிருந்தார். நேரத்தை எப்படி உபயோகிப்பது என்பதைக் கலைஞரிடமிருந்துதான் நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

நடைமுறை வாழ்க்கையில் அவருடைய பழக்க வழக்கங்களை நாம் ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டும். அப்படி அவரைப் பின்பற்றி வெற்றி பெற்றவர்களின் நானும் ஒருவன். எந்த ஒரு அழைப்பிதழை அவரிடம் நாம் கொடுத்தாலும் அதில் ஏதாவது ஒரு எழுத்துப் பிழையைக் கண்டுபிடித்து விடுவார். அந்த அளவிற்கு அவர் எதையும் கருத்தூன்றி ஒன்றுவிடாமல் கவனமாகப் படிக்கும் பழக்கமுள்ளவர். தமிழ்நாட்டிலுள்ள முக்கிய புள்ளிகள், கட்சியில் அதிகம் தொண்டாற்றியவர்கள் ஆகியோரின் இல்லத்தில் நடக்கும் முதல் நல்ல நிகழ்வுகளில் மறக்காமல் கலந்து கொள்வார்.

கலைஞர் வாழ்ந்த வருடங்கள் 94 என்றாலும் உழைப்பின் நேரத்தை கணக்கிட்டால் 200 ஆண்டுகள் வாழ்ந்ததற்குச் சமம். பல ஊடகங்களை தன்னிடம் வைத்திருந்தார். 1.அரசியல், 2. திரைப்படம், 3. முரசொலி பத்திரிக்கை, 4. புத்தகங்கள் எழுதுவது, 5.மேடைப்பேச்சு, 6.கலைஞர் தொலைக்காட்சி போன்ற ஆறிலும் கோலோச்சினார். 1947-ஆம் ஆண்டு வெளிவந்த ராஜகுமாரியிலிருந்து மந்திரிகுமாரி, பராசக்தி, மனோகரா போன்ற படங்களுக்கு அவர் எழுதிய வசனங்களும் காட்சிகளும் தமிழ்நாடு மக்களிடையே பேசு பொருளானது. வீடுகளிலும் அவருடைய வசனங்கள் பேசப்பட்டன. என்னைப் போன்ற நடிகர்களும் அவருடைய வசனங்களைப் பேசிக்காட்டிதான் நடிகரானோம். என்னுடைய 16 வயது வரை எனக்குத் திக்குவாய் இருந்தது. கலைஞர் அவர்களின் வசனங்களைப் பேசியதால்தான் எனக்கு திக்குவாய் என்ற குறை சரியானது. தமிழ்நாடு அரசியல் வரலாற்றையும், தமிழ்த் திரைப்பட வரலாற்றையும் எழுதினால் அதில் பல பக்கங்களை அவருக்கு ஒதுக்க வேண்டும்.

தமிழ்நாட்டிலுள்ள ஊர்கள் அனைத்திலும் அவருடைய கால்கள் படாத இடமே இல்லை. கட்சியிலுள்ள அனைவரின் பெயர்களும், அவர்களுடைய சரித்திரம் அனைத்தும் அறிந்தவர். தன்னுடைய 16வது வயதிலேயே புதுக்கவிதை எழுதியவர். அவர் சந்திக்காத அரசியல் தலைவர்களே இல்லை.

மறப்போம் மன்னிப்போம்: உறவுக்குக் கை கொடுப்போம்: உரிமைக்குக் குரல் கொடுப்போம்: போன்ற பொன் மொழிகளை ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டும். ■



"

இளம் கன்று பயமறியாது


"











# கலைஞர்களுக்கு முன்னுரிமை கொடுத்த மாமனிதர்

-திரு. சித்ரா லட்சுமணன், நடிகர்

திராவிட முன்னேற்றக் கழக பொதுக்கூட்ட மேடைகளில் தூரத்திலிருந்து பல முறை கலைஞரை நான் பார்த்திருக்கிறேன் என்றாலும், முதல் முறையாக அருகில் அவரைப் பார்க்கக் கூடிய வாய்ப்பு எனக்கு 1971-ஆம் ஆண்டிலேதான் அமைந்தது. அந்த காலகட்டத்தில் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளில் வெளியான "இந்தியன் மூவி ஸ்டார்" என்ற சினிமா பத்திரிகையின் ஆசிரியராக நான் பணியாற்றிக் கொண்டிருந்தேன். மிகப் பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி வாகை சூடி தமிழ்நாடு முதல்வராக இரண்டாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த கலைஞருக்கு வாழ்த்து சொல்வதற்காக ஒரு காலை வேளையில் நானும் "இந்தியன் மூவி ஸ்டார்" பத்திரிகையை நடத்திக் கொண்டிருந்த சிங்கப்பூரைச் சேர்ந்த நண்பரும் கலைஞரின் கோபாலபுரம் இல்லத்துக்குச் சென்றோம். கனிவோடு எங்களை வரவேற்று எங்களுடைய வாழ்த்துக்களை அன்போடு ஏற்றுக்கொண்டார் கலைஞர்.

அதற்குப் பின்னாலே, நீண்ட இடைவெளிக்குப் பின் கலைஞரை நான் நெருக்கமாக சந்தித்தது என்றால், அது என் இனிய நண்பரான பாரதிராஜாவிடம் உதவி இயக்குநராக நான் சேர்ந்ததற்குப் பிறகுதான். அக்காலகட்டத்தில், நான் பத்திரிகையாளனாக இருந்தேன். அப்போதுதான் எங்கள் இருவருக்கும் இடையே நட்பு துளிர்த்தது. அவர் இயக்குநராக அறிமுகமான "16 வயதினிலே" படம் முதல் அவருடைய எல்லா படங்களுக்கும் பத்திரிகை தொடர்பாளனாக இருந்த நான், அவரிடம் உதவி இயக்குநராக சேர்ந்த முதல் திரைப்படம் "அலைகள் ஓய்வதில்லை". அந்தப் படத்தை கலைஞர் பார்க்க வேண்டும் என்று அவரை அழைப்பதற்கு பாரதிராஜாவும், நானும் சென்றிருந்தோம். எங்கள் அழைப்பை ஏற்று ஓர் இரவுக் காட்சியில் ஈகா திரை அரங்கில் படத்தைப் பார்த்த கலைஞர் அந்தப் படத்தின் உச்சக்கட்ட காட்சியை பாரதிராஜா அமைத்திருந்த விதத்தை வெகுவாகப் பாராட்டினார்.

1989-ஆம் ஆண்டில் மீண்டும் தமிழ்நாடு முதல்வராக கலைஞர் பதவி ஏற்றதற்குப் பின்னாலே, பலமுறை அவரை கோபாலபுரம் இல்லத்திலும், கோட்டையிலும் சந்திக்கக் கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது என்றால் அதற்குக் காரணம், அந்த காலகட்டத்தில் தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கம், தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை, தென்னிந்திய திரைப்பட இயக்குநர் சங்கம் போன்றவைகளில் நான் செயற்குழு உறுப்பினராக இருந்ததுதான்.

அந்த காலகட்டத்தில் திரை உலகில் ஏற்பட்ட பல பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்காக திரை உலகப் பிரமுகர்கள் பலரோடு, பாரதிராஜாவும் நானும் அவரைச் சந்தித்திருக்கிறோம். எப்படிப்பட்ட பிரச்சனையானாலும் அதற்கான தீர்வை உடனடியாக சொல்லக்கூடிய அவரது ஆற்றலை அருகிலே இருந்து பார்க்கக்கூடிய பல வாய்ப்புகள் அப்போது எனக்குக் கிடைத்தன. திரை உலகத்தின் மீதும் அதைச் சார்ந்து இருப்பவர்கள் மீதும் அவருக்குள்ள அன்பை தெரிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு பலமுறை எனக்கு அமைந்திருக்கிறது. ஒரு முறை கலைஞர் சொன்ன ஒரு விஷயத்தில் என்னுடைய நண்பரான பாரதிராஜாவுக்கு லேசான கருத்து வேறுபாடு. "இளம் கன்று பயமறியாது" என்று சொல்வார்களே அதைப்போல தன்னுடைய அதிருப்தியை தெரிவிக்க தன்னுடைய கையில் இருந்த பைலை வேகமாக சோபா மீது வீசிவிட்டு கீழே போய்விட்டார் அவர். அந்த இடத்தில் முதல்வராக வேறு யார் இருந்திருந்தாலும் அவருக்கும் பாரதிராஜாவுக்குமான உறவு அன்றே முறிந்திருக்கும். கலைஞர்களை தாய் உள்ளத்தோடு பார்க்கின்ற மனதை அந்த தயாளுவின் மணாளன் பெற்றிருந்த காரணத்தால் "கோபமாகப் போனாலும் பாரதி கீழேதான் நின்று கொண்டிருப்பார், அவரை மேலே அழைத்து வாருங்கள்" என்று சொல்லி தன் உதவியாளரை அனுப்பினார்.

> "அன்று கலைஞர் என்ன சொன்னாரோ அதை அப்படியே தன்னுடைய மனதிலே பதிய வைத்துக் கொண்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று வரை கலைஞரைப் பார்த்து நடப்பதால்தான் இந்த ஆட்சி இவ்வளவு சிறப்பாக அமைந்திருக்கிறது"

அவருடைய அழைப்பை ஏற்று மீண்டும் மாடிக்கு வந்த போது, தான் செய்தது தவறு என்பதை பாரதிராஜா உணர்ந்திருந்த காரணத்தாலோ என்னவோ தயங்கித் தயங்கி அந்த அறைக்குள்ளே நுழைந்தார். "வா பாரதி, நீங்கள் நினைப்பதையெல்லாம் நடத்தித் தர வேண்டும் என்று எனக்கு ஆசை இருந்தாலும், அதற்கு வழிவகை இருக்கிறதா என்று பார்க்காமல் நான் முடிவெடுக்க முடியுமா?" என்று பாரதிராஜாவை பார்த்து கலைஞர் கேட்டபோது பதில் சொல்ல முடியாமல் தவித்து நின்றார் அவர். கலைஞர் எந்த அளவுக்கு எதார்த்தமான மனிதராக இருந்தார் என்பதற்கு ஒரு சம்பவத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

2011-ஆம் ஆண்டின் துவக்கத்தில் "சிறு முதலீட்டில் தயாரிக்கப்படும் திரைப்படங்களுக்கான உதவித் தொகையை 15 இலட்சமாக உயர்த்தித் தர வேண்டும்; தமிழ்த்திரைப்படத்தயாரிப்பாளர்களுக்குஎன்றுசொந்தமாக ஒரு கட்டிடம் இல்லாத காரணத்தால் சங்கத்திற்கு 5 கிரௌண்ட் நிலத்தை ஒதுக்கி தந்து தயாரிப்பாளர்கள் தங்கள் நிழலில் இளைப்பாற வழிவகை செய்ய வேண்டும்; வெளியிடாமல் முடங்கிக் கிடக்கும் தமிழ்த் திரைப்படங்கள் வெளியாக அரசு தரப்பில் ஒத்துழைப்பு தரப்பட வேண்டும்; சிறு முதலீட்டுப் படங்களுக்கான கேளிக்கை வரி ஐந்து சதவிகிதம் என்று நிர்ணயிக்கப்பட வேண்டும்" என்பது போன்ற பல கோரிக்கைகளோடு கோபாலபுரம் இல்லத்தில் நானும், தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கத்தின் நிருவாகிகளும் கலைஞரைச் சந்தித்தோம்.

எங்கள் கோரிக்கை மனுவைப் பெற்றுக் கொண்டு முழுவதுமாக அதை படித்துப் பார்த்த கலைஞர் "வரும் தேர்தலிலும் நான் நிச்சயமாக வெற்றி பெற்று விடுவேன் என்ற நம்பிக்கையோடு இந்த கோரிக்கை மனுவை நீங்கள் வைத்திருக்கிறீர்கள். தேர்தலைப் பொறுத்த வரையிலே அதன் முடிவு மக்கள் கையில் தான் இருக்கிறது என்பதை எந்த காலத்திலும் நான் மறந்ததில்லை. வரும் தேர்தலிலும் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிவாகை சூடி நான் முதல்வரானால் நிச்சயமாக உங்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றித் தருகிறேன்" என்று எங்களிடம் உறுதி கூறினார். மக்கள் சக்தி எந்த அளவுக்கு பெரியது என்பதை அவர் எவ்வளவு துல்லியமாக உணர்ந்து இருக்கிறார் என்பதை நாங்கள் தெரிந்து கொள்ள ஒரு வாய்ப்பாக அந்த சந்திப்பு அமைந்தது.

தமிழ்நாடு எத்தனையோ முதல்வர்களைச் சந்தித்திருக்கிறது. அவர்களில், திரையுலகைச் சார்ந்த கலைஞர்கள் தன்னைச் சந்திப்பதற்கு முன்னுரிமை கொடுத்த ஒரே முதல்வர் கலைஞர் மட்டுமே. இதை எந்த மேடையிலும் என்னால் உரக்கச் சொல்ல முடியும்.

டாக்டர் பட்டம் பெற்ற நடிகர் திலகம் சிவாஜிக்கு, பாரதிராஜா தலைமையில் சென்னையிலே நடைபெற்ற பிரம்மாண்டமான பாராட்டு விழா; நூறு திரைப் படங்களில் நடித்து முடித்ததற்காக நடிகை ரோஜாவுக்கு சென்னையில் நடைபெற்ற பாராட்டு விழா; ஆயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட திரைப்படங்களிலே நடித்த நடிகை மனோரமாவுக்கு சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெற்ற பாராட்டு விழா; ஆகியவைகளில் என்னுடைய பங்களிப்பு முக்கியமாக இருந்த காரணத்தினாலே இந்த விழாக்களுக்கு எல்லாம் கலைஞரை அழைப்பதற்கு பலமுறை நான் அவருடைய இல்லத்திற்குச் சென்றிருக்கிறேன்.

மனோரமா, கலைஞருடைய பல நாடகங்களில் நடித்தவர், இன்னும் சொல்லப்போனால் கலைஞரோடு இணைந்து நடிக்கின்ற வாய்ப்பினையும் பெற்றவர். அவருடைய பாராட்டு விழாவில் கலந்து கொள்ள வேண்டும் என்று மனோரமா, அவரது குடும்பத்தினர், என்னுடைய நண்பர்கள் சிலரோடு சேர்ந்து கலைஞரை அழைக்க நான் சென்றபோது "என்றைக்கு விழா?" என்பதுதான் அவருடைய கேள்வியாக இருந்தது. அந்தச் சந்திப்பின்போது மனோரமாவின் நாடக நாட்களைப் பற்றி கலைஞர் பகிர்ந்து கொண்ட பல சம்பவங்களைக் கேட்டு ஆச்சரியப்பட்ட மனோரமா "எப்படிங்க இப்படி ஒரு ஞாபக சக்தி?" என்று நேரடியாகவே கலைஞரிடம் தன் வியப்பைத் தெரிவித்தார்.

அயராத பல பணிகளுக்கு இடையில் ஏறக்குறைய இரண்டு மணி நேரம் "மனோரமா பாராட்டு விழா" மேடையில் இருந்து அந்த நிகழ்ச்சி கலகலப்பாக அமையக் காரணமாக இருந்தவர் கலைஞர். நான் நடத்திக் கொண்டிருக்கின்ற "டூரிங் டாக்கீஸ்" என்ற யூ டியூப் சேனலில் "சாய் வித் சித்ரா" என்ற நிகழ்ச்சியிலே பங்கேற்பதற்காக வந்த புகைப்படக் கலைஞரான யோகா ஒரு அருமையான தகவலை அந்த நிகழ்ச்சியிலே என்னோடு பகிர்ந்து கொண்டார்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் ஆயிரக்கணக்கில் கலைஞரை புகைப்படம் எடுத்துள்ள யோகா ஒரு முறை கலைஞர் நடந்து வருவதைப் போல புகைப்படம் எடுக்க முடிவு செய்து அதற்காக அவரை நடந்து வரச் சொல்லி இருக்கிறார். இந்தச் சம்பவம் நடந்த போது அந்த அறையில் இருந்தது கலைஞர், அவருடைய மகனும் இன்றைய தமிழ்நாடு முதல்வருமான மு.க.ஸ்டாலின் மற்றும் யோகா ஆகிய மூவர்தான்.

இரண்டு மூன்று முறை புகைப்படம் எடுத்ததற்குப் பின்னாலும் அந்தப் படம் சரியாக அமையாத காரணத்தால் ஒரு இலக்கை நோக்கி கலைஞர் நடந்து வந்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்த யோகா, "எதிரே நின்று கொண்டிருக்கும் ஸ்டாலினைப் பார்த்து நடந்து வாருங்கள்" என்று முதல்வரிடம் சொல்ல, அடுத்த கணமே "அவர்தான் என்னைப் பார்த்து நடக்க வேண்டும்" என்றாராம் கலைஞர். அந்த spontaneity - அது கலைஞரின் தனிச்சொத்து.

அன்று கலைஞர் என்ன சொன்னாரோ அதை அப்படியே தன்னுடைய மனதிலே பதிய வைத்துக் கொண்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று வரை கலைஞரைப் பார்த்து நடப்பதால்தான் இந்த ஆட்சி இவ்வளவு சிறப்பாக அமைந்திருக்கிறது என்று ஒரு கட்டுரையிலே பதிவு செய்திருந்தார் புகைப்பட கலைஞர் யோகா

அதை நான் வழிமொழிகிறேன். ■



# நீ அப்பா பெயரைக் காப்பாத்தனும்

**-திரு.முரளி இராமநாராயணன் (எ) முரளி இராமசாமி, தயாரிப்பாளர்**

தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா உலகெங்கும் உற்சாகத்தோடும், உவகையோடும் கொண்டாடப்படுகிற வேளையில், 'தலைவர் கலைஞரின் பேனா தலை குனியும் போதெல்லாம் தமிழினம் தலை நிமிர்ந்து உள்ளது'என்ற கவிதை வரிகள் நினைவுக்கு வருகிறது. தன் எழுதுகோலால் தமிழ் மனங்களை உழுத பேனா மன்னனுக்கு நூற்றாண்டு விழா. அது திரை உலகின் திருவிழா. விழுதுகளெல்லாம் கூடி அசைக்க முடியாத நம் ஆணிவேருக்கு அன்பு செலுத்திட அணிவகுக்கும் இனிய விழா.

இந்த சரித்திர புகழ் மிக்க சங்கத்தமிழ் தலைவனின் தங்கத் தமிழில் என் தந்தை இயக்குநர் இராம நாராயணன் அவர்கள் 4 படங்களுக்கு மேல் இயக்கி பெருமை பெற்றார். அவரை, தலைவர் கலைஞர் அவர்கள் காரைக்குடி சட்டமன்ற உறுப்பினராக்கி கௌரவித்தார். இரண்டு முறை தமிழ்நாடு இயல்-இசை-நாடக மன்றத்தின் தலைவராக்கி அழகு பார்த்தார். அந்த உறவு, அந்த உரிமை, அந்த பாசம் இரண்டாவது தலைமுறையாக இப்போதுவரை தொடர்கிறது.

மாண்புமிகு முதலமைச்சர் தளபதி ஸ்டாலின் அவர்களும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் மற்றும் முரசொலி செல்வம் அவர்களும், தலைவரின் குடும்பத்தாரும் தலைவர் கலைஞர் அவர்கள் காட்டிய அதே அன்பை, அதே நட்பை, அதே பாசத்தை எனக்கு அளிக்கிறார்கள். இந்த சமயத்தில் இரண்டு சம்பவங்கள் எனக்கு நினைவுக்கு வருகின்றன. ஒருமுறை நாங்கள் தயாரித்து அருள்நிதி நடிப்பில் உருவான "டிமாண்டி காலனி" படத்தின் சிறப்புக் காட்சியின் போது தலைவர் கலைஞர் அவர்கள், படத்தை பாராட்டிவிட்டு என்னிடம் "நீ உனது தந்தையின் பெயரை காப்பாத்தணும்" என்றார். மற்றொன்று... ஒவ்வொரு வருடமும் ஜூன் 3-ஆம் தேதி அன்று சரித்திரத் தலைவர் கலைஞர் அவர்களது பிறந்த நாளன்று எனது தந்தையார் தலைவர் கலைஞர் அவர்களிடம் ஆசி பெறுவதற்காக என்னை அழைத்துச் செல்வார். அப்பொழுது தலைவர் அவர்கள், ஒரு புதிய 10-ரூபாய் நோட்டை என்னிடம் கொடுத்து இதை நீ பத்திரமாகவும், ஜாக்கிரதையாகவும் வைத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லிக் கொடுப்பார்.

தலைவர் கலைஞருக்கு என் தந்தை, தமிழ்த்திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கத் தலைவராக 2010-இல் முன்நின்று "பாசத்தலைவனுக்கு பாராட்டு விழா" நடத்தினார். தமிழ் சினிமா மீது தீராத பற்று கொண்டவர் தலைவர் கலைஞர். அதனால்தான் தமிழில் பெயர் வைத்து வெளிவந்த நேரடி தமிழ்த் திரைப்படங்களுக்கு கேளிக்கை வரியினை முற்றிலுமாக நீக்கி தமிழ் சினிமாவை காப்பாற்றியவர் கலைஞர். தனது வசனத்தால் இன்றும் எல்லோர் மனதிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார் கலைஞர் அவரது ஆயுள் முடியவில்லை.

தமிழ் சினிமா மீது அவர் கொண்டிருந்த அக்கறை புரிகிறது. கலைஞரின் நூற்றாண்டு விழாவில் என்னையும் இணைத்திருப்பது என் வாழ்நாளில் எனக்கு கிடைத்த மிகப்பெரிய பாக்கியமாகும்.

காலத்திற்கு நன்றி!! கலைஞருக்கு நன்றி!! ■

# திரை ஞாயிறு கலைஞர்

-கவிஞர் அறிவுமதி





இடுப்புவலி எடுக்கு முன்பே எழுத்தாணி எடுத்தவர்!
நடை வண்டி பிடிக்கு முன்பே நல்ல தமிழ் கொடுத்தவர்!
பள்ளிக்குப் பல்கலையைப் பேச அழைத்த மகன்!
பகுத்தறிவுச் செழிப்பதற்கே பல் கலையால் உழைத்த மகன்!

தோள்துண்டைத் தூக்கி விட்டு, வாள்கையை நீட்டி நட்டு,
பாமரத் தமிழ் வயலில்
பச்சைகட்டும் பெரு விளைச்சல் செய்த
இவர் மேடைத் தமிழுக்கு ஈடிங்கு யாருண்டு!

மூளும் போருக்கு முதல் மூச்சு முரசொலியே
அப்பெயரைத்தான் சூட்டி எழுத்து முரசெடுத்து
இறுதி வரைத் தானடித்துத் தம்பியரை "உடன்பிறப்பே"
என்று உசுப்பி எழுப்பிவிட்ட எழுத்துத் தலைவனிங்கே
இவருக்கு இணையாக இந்நிலத்தில் எவருண்டு!

"கவிக்கோ" போல் தேர்ந்தெடுத்த கற்கண்டு கவிஞர்களின்
நடுவே அமர்ந்து கொண்டு இவர் போலே
எடுத்தத் தலைப்பிற்கு இழையளவும் பிசகாமல் நல்ல தமிழ்
சொற் கொண்டு சூழ்ந்த பெருந்திரளைச்
சொக்க வைத்து சொக்கட்டான் ஆடி
கவியரங்கில் இவரைப் போல் கைத்தட்டல்
இயல்பாகக் கண்டவர்கள் யாருண்டு!

ஊமைத் திரைப்படங்கள் உரையாடத் தொடங்கியதும்
புராணக் குப்பைகளே புற்றீசல் போலிங்கே
புறப்படத் தொடங்கின!
அத்தகையச் சூழலில்தான் அந்த ஈரோட்டார் பகுத்தறிவை
எடுத்தியம்பும் திராவிட இயக்கத்தார் திரைப்படங்கள்...
அறிவியலின் கலைத் திரையில் பகுத்தறிவைப் புகுத்தின!

ஆம்...
ஊமைத் திரைப்படத்தை ஊமையரின் திரைப் படமாய்...
தம் உயிர்ப்பு மிகு உரையாடல்களால் உருவாக்கித் தந்ததிலும்
உயரத்தின் உயரத்தை உள்ளபடி தொட்டது யார்?
கலைஞர்-கலைஞர்தான்!

"கோயில் கூடாது என்பதற்காக அல்ல.... கோயில்
கொடியவரின் கூடாரம் ஆகிவிடக் கூடாதே என்பதற்காக"
மொழியற்ற மக்களின் மொழியாக நின்றவர் கலைஞர்!
பாட்டுப் பெட்டிக்குள் பாடல்களே கேட்டவரை உரையாடல்
கேட்க வைத்த உன்னதக் கலைஞர் இவர் !

எண்பது அகவை என் அண்ணன் - நடிகர் சிவகுமாரும்
எட்டு அகவை சின்னஞ் சிறுசுகளும்
என்றோ எழுதிவைத்த இவர் வீரத்தாய்
எனும் வெற்றித்தமிழ்
உரையாடலைப் பேசி இன்றும் கைத்தட்டல்களை
வாங்கிக்குவிக்கிறார்களே....
இவர் போலே இத்தமிழில் வாகை சூடியவர் வரலாற்றில் யார்...
கலைஞர் கலைஞர்தான்!
வாழ்க கலைஞர் நூற்றாண்டு!
வாழ்க கலைஞர் பல்லாண்டு! ■



## நாளைய வரலாறு பேசும் கலைஞரின்

# ‘பெண் சிங்கம்’

### -டாக்டர் பாலி ஸ்ரீரங்கம், இயக்குநர்

2009-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முரசொலி அலுவலகத்திலிருந்து காலை எனக்கு அழைப்பு வருகிறது. “உனக்காக அய்யா காத்துக் கொண்டிருக்கிறார். அய்யா கோட்டைக்கு (தமிழ்நாடு முதலமைச்சர்) போகனும் உடனே வாங்க” என்று அய்யா சண்முகநாதன் தொலைபேசியில் சொன்னார். அன்று பெருமழை. லிபர்டியில் இருந்து கோடம்பாக்கம் முரசொலி அலுவலகத்திற்கு வழியெங்கும் செல்ல முடியாத வாகன நெரிசல். நான் வந்த வாகனத்தை விட்டு கீழே இறங்கி ஓட்டமாக, மழையில் நனைந்தபடியே, நானும் என் கடைசி உதவியாளரும் முரசொலி அலுவலகத்திற்கு சென்றடைந்தோம். மழையில் நனைந்து வந்த என்னைப் பார்த்து அய்யாவின் கையில் இருந்த கருப்பு சிவப்பு கைக்குட்டையை கொடுத்து “தலையைத் துடை” என்றதும், எனது கண்ணீரும் மழை நீரும் ஒன்றானது.

அய்யா கலைஞர் “பெண் சிங்கம் படத்தின் தலைப்பு எப்படி இருக்கு” என்று என்னிடம் கேட்டார். “நல்லா இருக்கு அய்யா” என்றேன். “யோசித்துச் சொல்” என்றார். மீண்டும் “நல்லா இருக்கு அய்யா” என்று அழுத்தமாகச் சொல்லி, “அய்யா உங்களுக்கு புகழ் கொடுத்தது பராசக்தி திரைப்படம். நான் இயக்கும் முதல் திரைப்படம் பெண் சிங்கம்” (பராசக்திக்கும் பெண் சிங்கத்திற்கும் ஒரு தொடர்பு இருக்கு). எனக்குள் இருந்த இறை நம்பிக்கையை ஆழ் மனதில் நினைத்துச் சொன்னதும் அய்யாவின் உதட்டில் புன்னகை பூத்தது. அருகில் இருந்த அன்றைய தமிழ்த் தயாரிப்பாளர் சங்கத் தலைவர் திரு. இராம நாராயணன் அவர்களிடம் சொல்லி படத்தின் தலைப்பை பதிவு செய்யச் சொன்னார்.

கலைஞர் அய்யா எழுதும் கதைக்கு தலைப்பு அய்யாவே தீர்மானிக்கலாம். மேலும் தமிழ்நாடு முதல்வராக இருந்த கலைஞர் திரைப் படைப்பாளியிடம் தனது எண்ணத்தை பதிவு செய்வதில் உயர்ந்த குணம் கொண்ட அய்யா கலைஞர் “பெண் சிங்கம்” என்ற தலைப்பைத் தந்து அறிமுக இயக்குநர் ஆகிய என்னை பெருமைப்படுத்தினார். காலம் உள்ளவரை எங்களைப் போன்ற கலைஞர்களின் மூத்த கலைஞராக வாழும் அய்யா என்றென்றும் எங்கள் மனதில் வாழ்ந்து கொண்டிருப்பார்.

09/09/2009 அன்று நான் கொளப்பாக்கம் வனத்துறை அலுவலகத்தில் படப்பிடிப்பு நடத்திவிட்டு மாலை நானும் எனது கடைசி உதவி இயக்குநரும் காரில் வந்து கொண்டிருந்தோம். திடீரென எனது உதவி இயக்குநர் மயக்கமாக இருக்கு என்றதும் உடனே நான் அருகில் இருந்த கேகே நகர் அரசு மருத்துவமனைக்கு பதற்றத்துடன் அவசரமாக அழைத்துச் சென்றேன். அய்யா கலைஞரிடம் இருந்து தொலைபேசி வந்தது. அய்யா தொலைபேசியில் என்னை அவசரமாக கோபாலபுரத்திற்கு அழைத்தார். பிறகு மருத்துவமனையில் நிகழ்ந்ததை அய்யாவிடம் கூறினேன். ஐயா, “நான் பார்த்துக் கொள்கிறேன்” என்று சில நொடிகள் பேசிவிட்டு போனை வைத்து விட்டார். அடுத்த நொடியில், தயாரிப்பாளர் படைசூழ வந்துவிட்டனர். பிறகு உதவி இயக்குநர் நலமடைய இரவு தி.நகரில் உள்ள திரைப்பட அலுவலகத்திற்கு அழைத்து



வரப்பட்டோம். இரவு 11 மணி அளவில் அய்யா கலைஞர் அவர்கள் எனது தொலைபேசியில் தொடர்பு கொண்டு உதவி இயக்குநரின் உடல் நலத்தை விசாரித்தார். அது மட்டுமில்லாமல் தூங்கிக் கொண்டிருந்த அந்த உதவி இயக்குநரிடம் போனில் பேசி நலம் விசாரித்தார். அப்படிப்பட்ட ஒரு பிதாமகனை இந்த உலகம் இனி பார்க்க முடியாது.

இதுவரை அய்யா கலைஞரின் படங்களின் இடம்பெறாத சிறப்பு "பெண் சிங்கம்" திரைப்படத்தில், அய்யா எழுதிய "வீணையில் எழுவது வேணு கானமா" என்ற பாடல் வெளிநாட்டில், அதாவது சுவிட்சர்லாந்தில் சிறப்பாக படப்பிடிப்பு நடத்தப்பட்டது. இதுவரை கலைஞர் எழுதிய திரைப்படங்களில் முதன்முதலாக வெளிநாட்டில் படம் பிடிக்கப்பட்ட பாடல் "பெண் சிங்கம்" சிங்கம்" என்னை முதன்முதலாக திரைப்பட இயக்குநராக அறிமுகப்படுத்தியது 2010 ஜூன் 03.

"கலைஞர் மு.கருணாநிதி ஆற்றிய தமிழ் திரைப்பணி" என்ற ஒரு ஆய்வு. எழுபத்தைந்து திரைப்படங்களில் கருத்தோட்டத்தை ஆய்வுசெய்து, 2023 மார்ச் 24-ல் சென்னை பல்கலைக்கழகத்தால் என்னை டாக்டர் பட்டம் பெற வைத்தது. அய்யா என்கின்ற கலைஞரின் ஆலமர தமிழ் விழுதை நினைத்தாலே என் ஆயுள் முழுவதும் ஆனந்தமே.

வாழ்க முத்தமிழ் அறிஞர் கலைஞர் நினைவு. கண்ணீர் பனிக்க எனது திரை ஆசான் அய்யாவின் திருப்பாதம் தொழுகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் கலைஞர்களின் சூரிய விடியல்



படப் பாட்டுதான். இது எங்களுக்குக் கிடைத்த பெருமை. இசை வெளியீட்டு விழாவில் திரு. கமலஹாசன், கவிப்பேரரசு வைரமுத்து, இயக்குநர் திரு.இராமநாராயணன், காவியக் கவிஞர் வாலி இவர்களுடன் அமைச்சர் பெருமக்கள் அமர்ந்து பாடல் காட்சியைப் பார்த்து அய்யா கலைஞரை அனைவரும் பாராட்டினார்கள். இப்படி ஐயா கலைஞரின் எழுத்தாணி, கதை, திரைக்கதை, வசனம், பாடல்கள், என சுழல்வதை நான் எனது இரு கண்களால் அருகில் இருந்து பார்த்த நிகழ்வுகளெல்லாம் எனக்குக் கிடைத்த மாபெரும் விருதாகவே நினைக்கிறேன்.

இதுவரை பல படங்கள் பணியாற்றிய நான், முதல் முறையாக அய்யா கலைஞர் அவர்களின் திருக்கரத்தில் "பெண் சிங்கம்" திரைப்படத்தின் இசை வெளியீட்டில் வெள்ளி வீணையை கலைமகள் வடிவமாகப் பெற்றதை எனது வாழ்நாள் பொக்கிஷமாகக் காத்து வருகிறேன். அய்யா கலைஞரின் "பெண் அண்ணன் திரு. தளபதி அவர்களுக்கும், பாசமிகு அண்ணன் எங்களின் திரை நாயகன் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் எனது நன்றியோடு கலைஞரின் புகழ் பாடுகிறேன்...

கவிதை மலர்:
கலைஞரின் எழுத்தாணி
வாரி இறைத்தாலும்
வற்றாது உன்னறிவு
வானம் இருண்டாலும்
வாடாது உன் பொலிவு
திருக்குவளை திருமகனே
கலைஞரின் நூற்றாண்டு
காலத்தை வெல்லும்
கலைஞரின் நூற்றாண்டு
கலையுலகம் சொல்லும்... ■

# Those Magical Moments With Aiya

-Thiru.Suresh Krissna, Director

One evening in January 2010, as I finished my early dinner and settled down to watch TV, I received an unexpected call from lyric writer Pa. Vijay. He posed a seemingly simple question: "What do you think of the writing of Kalaignar Aiya?" Without hesitation, I praised Kalaignar Aiya as an amazing writer, a genius and a legend, emphasizing the legendary status of his dialogues. Vijay then dropped a bombshell: he asked if I would be interested in working on a project written by Aiya. Overwhelmed with excitement, I eagerly accepted the offer. Suddenly, Vijay informed me that Aiya wanted to speak with me. I sprang up from my seat, leaving my family bewildered as I muted the TV and urged silence. When Aiya came on the line, addressing himself as

Aiya "Naan Kalaignar pesaren,"

I greeted him with reverence "Aiya Aiya Vanakkam"

Aiya "neenga ippo gopalapuram vara mudiyuma?"

What a question? Can you come? I thought to myself. I would have gone to anywhere on his call. Affirming my readiness to visit his Gopalapuram residence, I felt a rush of adrenaline. Without delay, I swiftly drove to meet Aiya.

This was the first time I met Aiya in person, I bowed down and touched his feet. He graciously asked me to sit next to him in his living room. It gave me goosebumps to realize I was seated in front of Aiya, the greatest legend of all times. I couldn't help but think about the countless historic moments that must have occurred in that very room. He immediately put me at ease, praising my film "Baasha" and acknowledging its impact on elevating Rajni to another level. I thanked Aiya for his kind words. Then, he called his wife, Dayalu Amma, and introduced me as the director of "Baasha." It was such a humane gesture that warmed my heart. He need not have done that, but it made me feel incredibly comfortable and welcomed. Aiya then offered me coffee or tea, to which I opted for coffee. His wife kindly prepared it for me, and I expressed my appreciation for the delicious coffee. From that moment on, every time I visited the Gopalapuram house, Aiya would tell his wife that I liked her coffee, and she would kindly prepare it for me. His affectionate and warm demeanor made every interaction with him truly special.



He shared with me the story of the film, which was based on the Russian book "Mother" by Maxim Gorky, adapted into Tamil as "Thai". It was a period film featuring grand sets and elaborate crowd scenes. The prospect of being part of such a project filled me with excitement, It was titled in Tamil as ILAIGNAN.

Despite being the Chief Minister at the time, Aiya's dedication to his craft was truly remarkable. He would wake up as early as 3 am and dedicate the hours until 7 am solely to writing dialogues. He considered this time as his personal space for working on the script, reserving the rest of the day for the affairs of the state and its people. In this disciplined manner, he meticulously crafted the entire dialogue for the film. Each morning, he would diligently write, and in the evenings, he would call us to narrate the dialogues he had penned. This level of commitment and devotion to his work was both admirable and inspiring.

One day, there came a moment when I felt a scene's dialogue needed to be changed. I hesitated for a while, pondering how to approach Aiya about it. Finally, I mustered the courage and asked Vijay if we should propose the change. It was a good suggestion, but asking Aiya to alter his own dialogue was daunting. With a nervous heart, I brought up the topic to Aiya. As soon as I voiced my request, a hush fell over the room. Aiya regarded me silently for a few moments, while his Secretary looked on in surprise. Despite my nerves, I waited anxiously for his response. Then, breaking the silence, Alya spoke: "I am very happy you asked this question. A writer's duty is to make corrections according to the director's vision. I will happily do it. Shanmugam, remind me tomorrow morning, and we will address it first thing." With a collective sigh of relief, we acknowledged Aiya's willingness to accommodate my request. What impressed me the most was his response-the respect he showed for the director's perspective. Throughout the film, he consistently sought my opinion on scenes and songs, making it a truly wonderful and collaborative experience.

While we were shooting in Ooty, Aiya had Tamil Maanadu scheduled in Coimbatore. Initially, he was supposed to join us in Ooty, but due to a heavy workload, he couldn't make it. Instead, he suggested that we come down to Coimbatore. Without hesitation, Vijay and I rushed to meet him. Aiya's level of involvement was truly exceptional. Upon our arrival at the hotel where he and the entire team were staying, we were promptly ushered up the lift to meet him. The warmth and reception he extended to us every time we met were unforgettable. Aiya had called us because he learned that we were shooting songs and scenes in Ooty. He wanted to review all the scenes once again and discuss the plan for the song picturization.


His enthusiasm and deep involvement in the project were truly remarkable and inspiring.

Aiya's dedication to the project was unparalleled. He must have watched the rushes and dubbed tracks at least fifty times, demonstrating his deep involvement and commitment to ensuring the film's quality. Despite his responsibilities as the Chief Minister, I had the privilege of accompanying him in his convoy on several occasions, from Gopalapuram to the new Assembly being constructed at the time. This first hand experience further highlighted his unwavering dedication to both his political duties and the film project.

Finally, when Aiya watched the film at Good Luck Theater, he called me next to him, I sat near his feet, he caught my hand, I clasped it over my chest with love, overwhelmed with emotion. He said, "I told you to make a good film, and you have created poetry on celluloid". His words moved me to tears, validating all the hard work and dedication we had poured into the project. Later, when I presented the photo album to Chief Minister Stalin sir, he went through all the photos and remarked, "At this age of my father's, his love for cinema has always been immense. You have brought back that smile, that passion, into his life. I am very happy." It was a moment of immense satisfaction and gratitude, knowing that our film had touched the hearts of both Aiya and Chief Minister Stalin sir.

One intriguing incident occurred when Aiya blessed me while I sat beside him. As he extended his hand in blessing, I instinctively grasped it and pressed it against my heart. Believe me, his palm was incredibly soft, almost childlike in its tenderness. It's no wonder many have likened him to having the heart of a child, for he consistently showed compassion towards the suffering of the poor, always serving them with love and care.

Thank you for giving me the opportunity to reminisce about some truly special moments spent with one of the greatest legends of our time, Aiya Kalaignar Karunanidhi Avl.. It's been an honor to reflect on these cherished memories. ■



# இப்போதும் எழுதிக்
## கொண்டுதானிருக்கிறாய்...

-கவிஞர் பழநிபாரதி

தலைவா!
உன் வான்புகழ் பெயரை
கிழக்கில்
சூரியன் எழுதுகிறது

உன் சங்கத் தமிழை
காற்று
மலர்களில் எழுதுகிறது

உன் குரலிலிருந்த
ஒலியையும் நெருப்பையும்
மின்னல்
இடிகளில் எழுதுகிறது

களைப்பறியாத உன் உழைப்பை
கடல்
அலைகளில் எழுதுகிறது

உன் சமத்துவ எழுத்தை
சமூகநீதிப் போராட்டத்தை
காலம்
வரலாற்றில் எழுதுகிறது

வள்ளுவ மை தொட்டு
எழுதிய உன் பேனா
அறிவாலயத்தின் கொடிமரமானது

அவசர நிலைக்கால இருளில்
முரசொலித்த உன் பேனா
தமிழ்நாட்டைக் கரைசேர்த்த
கலங்கரை விளக்கமானது

நீ கடிதம் எழுதினாய்
உன் பேனா
உடன்பிறப்புகளுக்கு
பண்ணிசைக்கும் புல்லாங்குழலானது
பாதுகாப்புக்கு
துப்பாக்கியாகவும் ஆனது

நீ வசனம் எழுதினாய்
பராசக்தி
சூலத்தினும் வலியதாய்
உன் பேனாவை
தேர்ந்தெடுத்துக்கொண்டாள்

தமிழ் வெல்லும் என்றெழுதிய
உன் பேனாவைத்தான்
தமிழ்த்தாய்
தன் இல்லத்தின்
திறவுகோலாய் வைத்திருக்கிறாள்


நீயின்றி
எதுவுமில்லை இங்கு
இப்போதும்
எழுதிக்கொண்டுதானிருக்கிறாய்

நீ மௌனமாய் சிந்திக்கும்
வங்கக் கடலோரம்
ஒவ்வொரு விடியலிலும்
அந்த அதிகாலையின் அமைதியில்
அலங்கரிக்கப்படும் மலர்களில்
உடன்பிறப்புகள்
உன் மடல்களைத்தாம்
வாசிக்கிறார்கள்

அசோகனின் தூண் போலத்தான்
உன் திராவிட எழுதுகோலும்

இதிலும்
நான்கு சிங்கங்கள் உண்டு
தந்தை பெரியார்
பேரறிஞர் அண்ணா
புரட்சிக் கவிஞன் பாரதிதாசன்
இவர்களுடன்
முத்தமிழறிஞன் நீ ! ■






# வசனத்தின் வரலாறு

-திரு.பிருந்தா சாரதி, வசனகர்த்தா

பள்ளி இறுதி படிக்கும் நாட்களில் பராசக்தி, மனோகரா போன்ற திரைப்படங்களுடைய வசனங்களை நான் முதன்முதலாகக் கேட்டேன். கும்பகோணத்தில் கும்பேஸ்வரர் திருமஞ்சன வீதியில் அப்போது குடியிருந்தோம். அருகில் மேற்கு கோபுர வீதியின் மூலையில் அரசியல் கட்சிகள் பொதுக்கூட்டம் நடத்துவதற்காகவே மேடை போட ஒரு இடம் இருக்கும். அங்கு பல்வேறு அரசியல் கட்சிகளின் பொதுக்கூட்டங்கள் நடக்கும். தி.மு.க. கூட்டம் நடைபெறுகிறபோது காலையிலிருந்தே கொள்கைப் பாடல்கள், திரைப்படங்களுடைய வசன ஒலிச் சித்திரம் ஆகியவை கேட்கத் தொடங்கிவிடும். அப்படித்தான் பராசக்தி, மனோகரா வசனங்கள் என்னை வந்தடைந்தன. அந்தத் தமிழில் இருந்த காந்தம் என் காதுகளை ஈர்த்தது. மீண்டும் மீண்டும் கேட்டேன்.

ஒரு முறை அப்பாவுடன் கலைஞர் பேசும் பொதுக்கூட்டம் ஒன்றுக்குச் சென்றிருந்தேன். அப்போது கலைஞர் முதலமைச்சர். கும்பகோணம் பேருந்து நிலையத்திற்கு அருகில் பொதுக்கூட்ட மேடை. அதன் எதிரில் இருக்கும் மூன்று நீண்ட சாலைகள் முழுவதும் மக்கள் திரள். தலைகள்... தலைகள்... மனித தலைகள். நீண்ட தூரத்திற்கு அப்பால் நின்றதால் மேடையில் இருந்த கலைஞர் என் கண்களுக்குத் தெரியவில்லை. அவரது காந்த குரல் மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது. எம்பி எம்பிப் பார்த்துக் கொண்டிருந்த என்னை தன் கைகளில் தூக்கி கலைஞரை என் கண்களுக்கு காட்டினார் அப்பா. நீண்ட துண்டு, கருப்புக் கண்ணாடி அணிந்த கலைஞரின் அந்த தோற்றம் இன்னும் சித்திரமாய் என் நெஞ்சில் நிலைத்திருக்கிறது.

மக்கள் கடலுக்கு நடுவே கப்பல் போன்ற ஒரு மேடை. அதில் மாலுமியாய்க் கலைஞர். அவர் பேச்சில் அலைகள் சிலிர்த்தன... கொந்தளித்தன... உயரே எழும்பி உற்சாகமாக வானை தொட்டன... கைதட்டி ஆர்ப்பரித்தன. அந்தக் கரகரத்த குரல் என் கவனத்தை ஈர்த்தது.

அதற்குச் சில ஆண்டுகளுக்குப் பிறகுதான் "பராசக்தி" திரைப்படத்தை "ராஜா டாக்கீஸில்" பார்த்தேன் பன்னிரண்டாம் வகுப்பு முடிந்து கல்லூரி சேரும் முன் பார்த்திருப்பேன் என்று நினைக்கிறேன். படத்தின் ஒவ்வொரு காட்சியும் அதில் இடம் பெற்ற ஒவ்வொரு வசனமும் சாட்டையைச் சுழற்றுவது போல பளீர் பளீர் என்று இருந்தன. "வானத்தை முட்டும் மாளிகைகள், மானத்தை இழந்த மனிதர்கள், உயர்ந்த கோபுரங்கள், தாழ்ந்த உள்ளங்கள், நீ தமிழ்நாடு, இதுதானா உன் பெருமை?" இது மறக்கக்கூடிய வசனமா?

"மனசாட்சி உறங்கும்போது மனக் குரங்கு ஊர் சுற்றக் கிளம்பி விடுகிறது" இது பூம்புகார். "மிருக ஜாதியில் புலி மானைக் கொல்கிறது; மனித ஜாதியில் மான் புலியைக் கொல்கிறது." இது "மருத நாட்டு இளவரசி." திரைப்படங்களில் தான் எழுதிய வசனங்களின் மூலமாக பார்வையாளர்கள் இதயத்தில் ஒரு இலக்கிய அனுபவத்தையும் உருவாக்கத் தவறவில்லை கலைஞர். "ராஜா ராணி" திரைப்படத்தின் "சாக்ரடீஸ்" ஓரங்க நாடகத்தில் நீதிமன்றத்தில் வழக்கு வரும்போது,"சாக்ரடீசின் பேச்சு ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விஷம்," என்று அனிடஸ் என்பவன் குற்றம் சாட்டுவான்.

"ஏன்? இருண்ட வீட்டுக்கு ஒரு விளக்கு என்றும் கூறலாமே," என்று சாக்ரடீஸ் பளிச்சென்று பதில் கூறுவார்.

ஒவ்வொரு படத்திலும் இப்படி ஏராளமான வசனங்கள்.... வசனங்களுக்காகவே திரைப்படங்கள் கவனிக்கப்பட்டன..

நீண்ட இடைவெளிக்குப் பிறகு திரை உலகில் அவர் எழுதிய "பாலைவன ரோஜாக்கள்" திரைப்படத்தை கல்லூரி காலத்தில் பார்த்தேன். அடுக்குமொழி, அலங்கார நடை ஆகியவற்றை முற்றிலும் விலக்கி இயல்பான நடையில் தன் உரைநடைக்கு புதிய முகம் உருவாக்கியிருந்தார். "மலைக்கள்ளன்", "இருவர் உள்ளம்" போன்ற படங்களில் அடுக்குமொழி தவிர்த்த இயல்பான உரைநடையை அவர் முன்பே பயன்படுத்தி இருந்தாலும் "பாலைவன ரோஜாக்களில்" மேலும் இயல்பாக எழுதி இருந்தது சினிமாவின் புதிய தலைமுறைக்கு ஈடு கொடுப்பதாக அமைந்தது. அரசியல் நையாண்டி, வசனங்களில் எதிரொலித்தது. நாட்டு நிலவரத்தை தன் வசனங்களில் எடுத்துக்காட்டி விமர்சித்திருந்தார். படமும் பெரும் வெற்றி பெற்றது.

அப்படத்தின் வெற்றியைத் தொடர்ந்து "நீதிக்குத் தண்டனை", "சட்டம் ஒரு விளையாட்டு", "மக்கள் ஆணையிட்டால்...", "புயல் பாடும் பாட்டு" "பாசப் பறவைகள்", "பாடாத தேனீக்கள்", "பொறுத்தது போதும்", "இது எங்கள் நீதி", "நியாயத் தராசு", போன்ற படங்களில் புரட்சிகரமான வசனம் எழுதி அரசியல் விவாதங்களை அனுப்பினார். பொழுதுபோக்கிற்காக திரையரங்கிற்கு வந்தவர்களை அரசியல் பேச வைத்தார்.

அவரது பேனாதான் அப்போதைய எதிர்க்கட்சி.

பத்திரிகைகளில் திரைப்பட விளம்பரம் வரும் குறுகிய இடத்தில் கூட தன் கருத்துக்களை அவ்வப்போது எழுதுவது அவருடைய வழக்கம். "பாலைவன ரோஜாக்கள்" திரைப்பட விளம்பரம் நாளேடுகளில் வந்தபோது அதில் இடம் பெற்ற சில வரிகள்:

"நீதிமன்றத்தின் நெடிய படிக்கட்டுகளில் நித்தம் நித்தம் அவனை ஏற்றி இறக்கினார்கள்... அப்போதும் அவன் நெருப்பின் பொறியாக நிமிர்ந்தானே அன்றி நீரின் துளியாக சிதறிடவில்லை"

"வாக்களிக்கப்பட்டவர்கள் செய்கிற தவறுகளுக்கு வாக்களித்தவர்களும் பொறுப்பாளி ஆகிறார்கள்"

போன்ற வரிகள் இடம் பெற்று இருக்கும். அவற்றை படம் பார்க்காத தினசரி பத்திரிக்கை வாசகர்கள் கூட படித்துவிட்டு விவாதித்தார்கள். ஒரு எழுத்தாளராக, திரைக்கதை வசனகர்த்தாவாக பேனாவின் பலத்தை முற்றிலுமாக அரசியலுக்குப் பயன்படுத்தினார். இல்லையென்றால் 13 ஆண்டுகால வனவாசத்தை, பாலைவனப் பயணத்தை, வெறும் அரசியல்வாதியாக யாரும் எளிதாக கடந்திருக்க முடியாது. எழுதுகோல் மூலம் செங்கோலை மீண்டும் கைப்பற்றினார் கலைஞர். அதேபோல, பிற மொழி படங்கள் சிலவற்றிற்கும் கலைஞருடைய கதை, திரைக்கதை, வசனங்கள் சென்றிருக்கின்றன. பராசக்தி, மனோகரா ஆகிய திரைப்படங்கள் கலைஞரின் வசனத்திற்காக தெலுங்கிற்குச் சென்றன.

ஆடஜென்மா, வீர கங்கணம், அம்மாயி மொகடு மாமகு யமுடு ஆகிய படங்களில் கலைஞரின் திரைக்கதை வசனம் இடம் பெற்றது. அதேபோல் "ஈநாடு" போன்ற பிற மொழி திரைப்படங்களுக்குத் தமிழில் திரைக்கதை வசனம் எழுதியதும் உண்டு. நாடக முன்னோடி பம்மல் சம்பந்த முதலியார் எழுதிய "மனோகரா" நாடகத்திற்கு அதே தலைப்பில் திரைக்கதை வசனம் எழுதினார் கலைஞர்.

அறிஞர் அண்ணாவின் கதைகளுக்கு கலைஞர் திரைக்கதை வசனம் எழுதியவை "ரங்கோன் ராதா", "வண்டிக்காரன் மகன்", முதலிய திரைப்படங்கள் ஆகும். அதேபோல் எழுத்தாளர் லட்சுமியின் "பெண் மனம்" நாவலுக்குக் கலைஞர் திரைக்கதை எழுதிய படம் "இருவர் உள்ளம்".

திரைப்படம் தொடங்கும் முன்பு கதாசிரியர், வசனகர்த்தா என்ற முறையில் கலைஞர் திரையில் தோன்றி திரைப்படத்தை அறிமுகம் செய்வார். பூம்புகார் திரைப்படத்தில் அது தொடங்கியது. ஏறக்குறைய ஐந்து நிமிடங்கள் ஓடும் அந்த அறிமுகத்தை தவறவிடாமல் கேட்பதற்காக திரைப்படம் தொடங்குவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பே அரங்கிற்கு சென்று விடுவேன். என்னைப் போலவே பலரும் வந்து காத்திருப்பார்கள். தமிழை அவர் உச்சரிக்கும் அழகு அப்படியான ஒரு ரசிகர் கூட்டத்தை அவருக்கு ஏற்படுத்தியிருந்தது.

இப்படி.. தான் திரைக்கதை, வசனம் எழுதிய எல்லாப் படங்களிலும் படம் தொடங்குவதற்கு முன்பு ஓர் எழுத்தாளராக திரையில் தோன்றி மக்களோடு உரையாடுவது கலைஞரை தவிர இன்னொருவர் செய்ததில்லை. இன்னொருவர் செய்தால் அது எடுபடுமா என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

கலைஞருடைய திரைப்பட வசனங்கள் உரத்த குரலில் பேசும் பிரச்சாரம் என்று ஒரு சாரார் அவர் மீது குற்றச்சாட்டை வைப்பது உண்டு.

கலை, கலைக்காகவே என்று கூறுபவர்கள் ஒரு புறம். கலை மக்களுக்காகவே என்று கூறுபவர்கள் இன்னொரு புறம்.

### கலை உண்மையில் யாருக்காக? எதற்காக?

மூன்று வேளை உணவும், குடியிருப்பதற்கு நல்ல வீடும், உடுப்பதற்கு தரமான ஆடைகளும் தொடர்ந்து பல காலங்களுக்கும் வைத்திருப்பவர்களுக்கு கலை என்பது தங்களுக்குள் தாங்களே ரசித்து மகிழும் ஒன்றாக அமையலாம். மனதுக்குள்ளேயே ஆலாபனை செய்து கொண்டு மகிழலாம்.

ஆனால், உண்ண உணவும் உடுக்க உடையும் இல்லாதவர்களாக, சமுதாயத்தில் மிகவும் ஒடுக்கப்பட்ட பிரிவினராக, தாழ்த்தப்பட்ட பிரிவினராக, பண்பாட்டு ரீதியாக புறக்கணிக்கப் பட்டவர்களாக இருக்கும் மனிதர்களுக்கிடையில் தன்னுடைய கலையை தனக்காக தன் மகிழ்ச்சிக்காக பயன்படுத்துவதில் ஒரு உயர்ந்த கலைஞன் செயல்பட முடியாது. அவன் மக்களுக்காகத்தான் பணியாற்ற வேண்டும். "பசித்தவனுக்கு சோறு தான் கடவுள்" என்று விவேகானந்தர் கூறியதைப் போல ஒடுக்கப்பட்ட மனிதர்களுக்கு முதலில் சுயமரியாதையும், தன்மான உணர்ச்சியும் ஊட்டுவதற்குத்தான் கலை பயன்படுத்தப்பட வேண்டும் என்று கலைஞர் முடிவெடுக்கிறார்.

### அதற்காகத் தன்னுடைய மொழியை பயன்படுத்துகிறார்.

அவர் எழுதுகிற படங்களில் தான் ஏற்றுக்கொண்ட திராவிட இயக்கச் சிந்தனைகள், சமூக நீதிக் கொள்கைகள் இவற்றையெல்லாம் உள்ளார்ந்த உணர்வாக வைத்துக் கொண்டு அவற்றை வெளிப்படுத்தும் சூழல் வரும்போது தக்கவாறு அவற்றை வெளிப்படுத்தி வந்திருக்கிறார்.

"ராஜா ராணி" படத்தில் இடம்பெறும் "சாக்ரடீஸ்" ஓரங்க நாடகம் ஒரு உதாரணம். "உன்னையே நீ எண்ணிப் பார்..." என்பது சாக்ரடீஸ் - இன் குரல் மட்டுமல்ல... அன்று மேடைகளில் ஒலித்த தந்தை பெரியாரின் குரலும் அதுதான். அதுதான் திரையில் சாக்ரட்டீசின் உருவத்தில் எதிரொலித்தது. நீதிமன்றத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்டதற்கு பிறகு சிறைக்கூடத்தில், கிரீடோ என்பவன் சாக்ரடீஸிடம், "ஏதன்சின் எழுச்சிமிக்க சிங்கமே! எங்கள் தங்கமே! கிரேக்கப் பெரியாரே! உம்மையும் எம்மையும் இந்த விஷம் பிரிக்கப் போகிறதா? ஐயகோ! நினைக்கவே நெஞ்சு நடுங்குகிறதே! நண்பா... எனக்குக் கடைசியாக ஏதாவது சொல்லு!" என்று கேட்க சாக்ரடீஸ் சொல்லும் பதிலில் தந்தை பெரியாரே நமக்கு கண் முன் தோன்றுவார். "புதிதாக என்ன சொல்லப்போகிறேன் உன்னையே நீ எண்ணிப் பார்! எதையும் எதற்காக? ஏன்? எப்படி? என்று கேள். அப்படி கேட்டதால்தான் இந்த சிலைவடிக்கும் இந்த சிற்பி சிந்தனை சிற்பியாக மாறினேன். அவர் சொன்னார்... இவர் சொன்னார்... என்று நம்பி அறிவிழந்து தடுமாற்றம் அடைய வேண்டாம். எவர் சொன்ன சொல்லானாலும் அதனை உந்தன் இயல்பான பகுத்தறிவால் எண்ணிப் பார்ப்பாய். அதைத்தான் உனக்கும் இந்த நாட்டுக்கும் நான் சொல்ல விரும்புவது."



இப்படி தனக்குக் கிடைத்த வசனம் வாய்ப்பில் தன் கொள்கைகளையும் கலந்து எழுதினார். ஒரு படைப்பாளியின் சுதந்திரம், வரலாற்று மறு ஆக்கம் செய்கின்றபோது அதை எழுதுகிறவனின் பார்வையும் அதில் கலந்து இருக்கும்.


அதே "ராஜா ராணி" படத்திலேயே "சேரன் செங்குட்டுவன்" ஓரங்க நாடகம் இடம்பெற்றது. அதில் புறநானூற்றுத் தாயின் வீரத்தைப் பற்றிய ஒக்கூர் மாசாத்தியாரின் பாடலைப் பேச வைத்திருப்பார். படம், தமிழ் நாட்டின் பெருமை, அதன் வீரம் ஆகியவற்றை தளர்ந்தபோது தாழ்ந்த நிலையில் இருந்த தமிழ்நாட்டிற்குச் சொல்ல வேண்டிய தேவை அக்காலத்தில் அவருக்கு இருந்தது. அதற்கு இப்படியான வரலாற்று பாடங்களைப் பேச வேண்டி இருந்தது. எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது அரசியல் கருத்துக்களை பேச வேண்டிய சூழலில் "பாலைவன ரோஜாக்கள்" எப்படி எழுதினார்? "இப்ப சுதந்திரம் எப்படி இருக்கு?" (போலியோவால் பாதிக்கப்பட்டவர்) "என் கை மாதிரி இருக்கு" அரசியல் திரைப்படங்களுக்கு வசனம் எழுதிய எழுத்தாளர்கள், உலகம் முழுக்க நிறைய பேர் இருக்கிறார்கள். ஆனால் திரைப்படத்தில் தான் எழுதிய ஒரு அரசியலை அமல்படுத்துகிற அதிகாரத்தைப் பெற்று முதலமைச்சராகவே ஆன எழுத்தாளர்கள் உலகில் வேறு எங்காவது உண்டா என்றால், எனக்குத் தெரிந்து இல்லை என்று தான் பதில் சொல்ல வேண்டி இருக்கிறது.

திரைப்படத்தில் அவர் பேசிய பல திட்டங்கள் அவர் ஆட்சிக்கு வந்ததும் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. முக்கியமாக பராசக்தி திரைப்படத்தில் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு திட்டத்தைப் பேசியிருப்பார். பிறகு அவர் ஆட்சிக்கு வந்ததும் நிறைவேற்றினார். ஆகவே எழுத்தை ஒரு நோக்கத்துக்காக எழுதி, அந்த நோக்கத்தை நிறைவேற்றுகிற பணியில் தன்னையே ஈடுபடுத்தி அதில் வெற்றி கண்டவர் கலைஞர் என்று சொல்வதில் தமிழர்கள் பெருமை கொள்ளலாம். மேகலா பிக்சர்ஸ், பூம்புகார் புரடக்சன்ஸ் போன்ற நிறுவனங்களைத் தொடங்கி, பங்கு தாரராக இருந்து, திரைத்துறையின் லாப நட்டங்களை பற்றிக் கவலைப்படாமல் இப்பணியை இளமையிலேயே செய்திருக்கிறார். கலைஞரின் திரைக்கதை வசன ஆற்றலால் பெரும்பான்மையாக அவர் எழுதிய படங்கள் வெற்றி பெற்றிருந்தாலும், ஓர் எழுத்தாளர் ஒரு திரைப்பட நிறுவனத்தைத் தொடங்கி வெற்றி பெறுவது என்பது இன்று கூட விஷப் பரீட்சைதான். ஆனால் கலைஞர் எல்லாப் பரீட்சைகளிலும் வென்றது போலவே இந்தப் பரீட்சையிலும் வெற்றி பெற்றார். மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஆகிய இருவரும் தமிழ் சினிமாவின் ஆளுமைகள். அவர்களின் முதல் திரைப்படங்களுக்கு வசனம் எழுதிய பெருமை கலைஞருக்கு உண்டு.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், நடிகவேள் எம்.ஆர்.ராதா, எஸ்.வி.சகஸ்ரநாமம், இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ஆர், கே.ஏ.தங்கவேலு, ஜெய்சங்கர், விஜயகாந்த், சத்யராஜ், பிரபு, முரளி, சந்திரபாபு, பானுமதி, டி.ஆர்.ராஜகுமாரி, கண்ணாம்பாள், சாவித்திரி, சரோஜாதேவி, பத்மினி, எஸ்.வி.ரங்காராவ், ராதிகா, லட்சுமி, ஊர்வசி என்று தமிழ்த் திரை உலகின் முக்கிய நடிகர்கள் அனைவருமே கலைஞர் எழுதிய திரைப்படங்களில் நடித்திருக்கிறார்கள். இவர்களில் நடிகவேள் எம்.ஆர்.ராதா அவர்கள் 1940-லேயே தூக்கு மேடை நாடகத்தை மேடையேற்றும்போது கலைஞருக்குக் "கலைஞர்" என்ற பட்டத்தை அளித்தவர்.

முன்னணி இயக்குநர்கள் டி.ஆர்.சுந்தரம், எல்.வி.பிரசாத், கிருஷ்ணன் பஞ்சு, பீம்சிங், பிரகாஷ் ராவ், ப.நீலகண்டன், டி.என்.பாலு, அமிர்தம், எஸ்.ஏ.சந்திரசேகரன், மணிவண்ணன், மனோபாலா, வி.எம்.சி.ஹனிபா, இராம நாராயணன், சந்தான பாரதி, சுரேஷ் கிருஷ்ணா என பலரும் கலைஞர் எழுதிய படங்களை இயக்கி இருக்கிறார்கள். கலைஞருக்கு பின் வந்த ஸ்ரீதர், கே, பாலச்சந்தர், மணிரத்தினம் முதலான சாதனை படைத்த திரைக்கதை வசன எழுத்தாளர்கள் பலர், கலைஞரின் எழுத்துக்களால் தாங்கள் உந்தப் பட்டதை பதிவு செய்திருக்கிறார்கள்.

பின்னாளில் முதலமைச்சர்களான எம்.ஜி.ஆர்., என்.டி.ராமராவ், வி.என்.ஜானகி, ஜெயலலிதா, மு.க.ஸ்டாலின் ஆகியோர் கலைஞரின் வசனத்தை திரையில் பேசியவர்கள் என்பது ஒரு வரலாறு. "வசனத்தில் வரலாறு படைத்தவர், வரலாற்றை வசனத்தில் வடித்தவர்" என்று கலைஞரைச் சொல்வது ஒரு துளி கூட மிகை இல்லாத உண்மையாகும். ■







# கலைஞரெனும் கருவூலம்

-திரு. மங்கை அரிராஜன், இயக்குநர்

அன்புள்ள ஐயாவுக்கு... தங்களின் திருவுருவப் படத்தை தன் சட்டை பாக்கெட்டில் சாகும் வரை வைத்திருந்த என் தந்தை இறுதி இடுகாட்டில் அடக்கமாகி மண்ணோடு மண்ணாக சேரும்போது... என் தலைவனின் படத்தை வீட்டுக்குக் கொண்டு சென்று.. என் பழைய கண்ணாடி துணிமணிகளோடு வை! என்று என் தந்தை இறப்பதற்கு முன்னால் சொன்னார்...

உங்களை அவர் நெருங்கி பார்த்ததில்லை... தொட்டுப் பார்த்ததில்லை, கண்ணுக்கு எட்டாத தூரத்தில் உடன்பிறப்புகளில் ஒருவராக உங்களைப் பார்த்தவர்... உங்கள் பேச்சு என்றால் அவருக்கு மூச்சு... உங்களின் பேச்சைக் கேட்க 60 கிலோமீட்டர் கூட நடப்பார்...

மிசாவில் சிறை சென்றவர்... அப்படிப்பட்ட ஒரு தொண்டரின் மகனான நான்... தங்களின் அருகில் அமர்ந்தேனே... தங்களைத் தொட்டுப் பார்த்தேனே...

இந்த பாக்கியம் பல பேருக்கு கிடைத்திருக்கும். கூடுதல் பாக்கியம் எனக்கே. என்னுடைய 21 வயதில் என் கதைக்கு வசனம் எழுதினீர்களே. இந்த பாக்கியம் யாருக்கும் கிடைத்ததில்லை. ஒருமுறை, தாங்கள் சொன்ன காட்சியை அனைத்து உதவியாளர்களும் நன்றாக உள்ளது என்று சொன்னபோது நான் மட்டும் "காட்சி நன்றாக இருக்கிறது, திரைக்கதைக்கு ஒட்டவில்லை" என்று சிறு பிள்ளையாக, அறியாமை, புரியாமை இல்லாமல் சொன்னபோது, என்மேல் கோபப்பட்டுச் சென்று பிறகு அன்று மாலையே புதிய காட்சி சொல்லி அனைவரையும் அசத்தினீர்களே... அதனால்தான் நீங்கள் திரை உலக பிரம்மா....

மீண்டும் ஒரு நாள். தாங்கள் எழுதிய வசன பேப்பரை நான் வாங்க கோபாலபுரம் வந்தபோது, நீங்கள் அந்த வசன பேப்பரை என்னிடம் தராமல்... "உங்க டைரக்டர் (அமிர்தம் ஐயா) கிட்ட போய் பேமெண்ட் வாங்கிட்டு வா தருகிறேன்" என்று சொன்னீர்கள்..

ஒரு நிமிடம் என் தலை சுற்றியது. சொந்த மருமகன் இடத்திலே தலைவர் காசு கேட்கிறாரே என்று எண்ணி. அப்பாவியாக சென்று என் இயக்குநர் அமிர்தம் சார் அவர்களிடம் சொன்ன போது. "ஐயர் சார் (பூம்புகார் ப்ரொடக்ஷன்ஸ் மேனேஜர் திரு. மகாதேவன் ஐயர்) வந்து பார்ப்பார் என்று சொல்லி, மாமா கிட்ட வசனத்தை வாங்கிட்டு வா" என்று சொன்னதும், மீண்டும் தங்களிடம் வந்து அவர் சொன்னதைச் சொன்னேன். உடனே நீங்கள் சொன்னீர்கள் "இந்தப் பணம் எனக்கு இல்லப்பா கட்சி நிதிக்குப் போகணும்... அதனால பேர் போடாம செக் வாங்கிட்டு வா" என்று சொல்லி வசன பேப்பரைத் தந்தீர்கள்.

தன்னுடைய ஒவ்வொரு வியர்வையும், உழைப்பும் கட்சிக்கே என்று நீங்கள் சொல்லாமல் சொன்னது அன்று என் இளம் வயதிற்குப் புரியவில்லை. அதனால் தான் நீங்கள் உலக அரசியலின் ஆசான். மீண்டும் ஒரு நாள் கோபாலபுரத்தில் தங்களுக்கு காபி கொண்டு வந்து கொடுத்தார் உதவியாளர். அவரைப் பார்த்து நீங்கள், "இவன் எங்க வெளியில போய் காபி குடிப்பானா... இவனுக்கும் கொண்டு வா" என்றீர்கள்..

உலகத் தலைவனின் அந்த வார்த்தை... என்னை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது..

மீண்டும் ஒரு நாள். என்னிடம்... "ஏம்பா, நான் எழுதிய பாடல்களில் உனக்கு எந்தப் பாடல் பிடித்திருக்கிறது?" என்று நீங்கள் கேட்டபோது, மறக்க முடியுமா திரைப்படத்தில் "காகித ஓடம் கடல் அலை மீது" என்ற பாடல் எனக்கு பிடிக்கும் என்று சொன்னேன். அதற்கு நீங்கள் "அந்தப் பாடல் தான்பா எனக்கும் ரொம்பப் பிடிக்கும்" என்று சொன்னீர்கள்.

ஒரு நண்பன் இடத்தில் பேசுவது போல் என்னிடம் பேசினீர்களே... அன்று இரவு முழுவதும் நான் தூங்காமல் அதையே நினைத்துப் பார்த்தேனே... அப்பப்பா... நானா அது தங்கள் முன்னே... ஒரு முறை தங்களிடம் "நான் கவிதையும் எழுதுவேன்" என்று சொல்லி ஒரு கவிதையை தங்களிடம் படித்துக் காட்டினேன்... "இனிமே நீ கவிதையே எழுதக்கூடாது" என்று சொன்னீர்கள்...

ஐயா இன்று நான் உங்களுக்கு ஒரு கவிதை எழுதுகிறேன்...

"கலைஞர் ஐயாவை கவிதையின் காதலன் என்பதா...!
கட்டுரைகளின் கதாநாயகன் என்பதா...!
கதைகளின் கருவூலம் என்பதா...!
புதினங்களின் புதுமைப்பித்தன் என்பதா...!
நாடகங்களின் நாட்டாமை என்பதா...!
திரைக்கதையின் தீர்க்கதரிசி என்பதா...!
பாடல்களின் பல்லவி என்பதா...!
திருக்குறள் உரையின் திரு உருவமே என்பதா...!
சங்கத் தமிழின் சகாப்தமே என்பதா...!
தொல்காப்பிய பூங்காவின் தென்றல் காற்றே என்பதா...!
தன்னுடைய கரகரத்த குரலில் தமிழை மயக்கியவர் என்பதா
தன்னுடைய வாள்முனை பேச்சில்
வசந்தத்தை தந்தவர் என்பதா...!

எப்படி ஐயா உங்களைப் பற்றி எழுதுவது? நீங்கள் கொள்கை ரீதியாக ஆண்டவன் இல்லை என்று சொன்னாலும் எங்களை ஆண்டவனும் நீங்கள்தான்... நாங்கள் வணங்கும் ஆண்டவனும் நீங்கள் தான்... சில நேரங்களில் நிம்மதி இல்லாமல் இருக்கும்போது குலதெய்வ கோயிலுக்கு சென்று வா என்பார்கள்.

உடனே புறப்படுவேன்... எங்கே..
நீங்கள் ஓய்வில்லாமல் வங்கக் கடலோரம் அண்ணாவின் அருகே தாங்கள் இருக்கும் நினைவிடத்திற்கு..

ஆமாம் அதுதான் எங்களது குலதெய்வ கோயில்..
எத்தனை ஜென்மம் எடுத்தாலும் நாங்கள் வணங்கும் தெய்வம் நீங்களே... ■







## கலைகளின் கதிரவன்

# கலைஞர்

-திரு. டி.ஜி. சத்யஜோதி தியாகராஜன்,
தயாரிப்பாளர்

எங்கள் திருவாரூர் மண் கண்ட தமிழ்மகனுடன் எனக்கான நினைவலைகளைப் பகிர்வதில் மகிழ்கிறேன்.

என்னுடைய தந்தை, பழம்பெரும் திரைப்படத் தயாரிப்பாளர் திரு. வீனஸ் பிக்சர்ஸ் கோவிந்தராஜன் அவர்களும், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களும் திருவாரூர் பள்ளியில் ஒன்றாகப் பயின்ற பால்ய நண்பர்கள். பிற்காலத்திலும் எங்கள் குடும்பத்துடனான நட்பு தொடர்ந்ததுடன், கலை உலகப் பயணத்திலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் அவருடன் இணைந்து பழகும் தருணங்கள் ஏற்பட்டன. சிறு வயது முதலே அவருடைய மேன்மையையும் திறமையையும் பார்த்து வியந்து வளர்ந்தவன் நான் என்பதில் பெருமிதம் கொள்கிறேன், அவர் அன்பில் என் தந்தைக்கு நிகரானவர்.

சில வருடங்களுக்கு முன், பாசமிகு தலைவருக்கு திரையுலகம் சார்பில் எடுத்த பாராட்டு விழாக்குழுவில் நானும் ஒரு அங்கமாக செயல்பட்டதில் மிகவும் பெருமை கொள்கிறேன். மேலும் அவர் பொற்கரங்களால் கலைமாமணி விருது பெற்றதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

இத்தருணத்தில் நன்றியுடனான ஒரு சிறிய நினைவலை எங்கள் "எம்டன் மகன்" திரைப்படம், ஆங்கில தலைப்பென்ற விவாதத்தில், "எம் மகன்" எனப் பெயர் மாற்றமளித்து தணிக்கை குழுவின் ஒப்புதல் பெற ஒரு நொடியில் தீர்வளித்தது எனது மறக்கமுடியாத அனுபவங்களில் ஒன்று.

தமிழுக்கும், தமிழர்களுக்கும் கலைஞர் அவர்கள் ஆற்றிய பணி அளப்பரியது. கலைஞரின் புகழ் ஞாலம் உள்ளவரை தமிழர்களின் நெஞ்சில் வாழும்!

என்றும் நன்றியுடனும், நீங்கா நினைவுடனும்... ■

# மானம் அவன் கேட்ட தாலாட்டு

-திரு. மகிழ் திருமேனி, இயக்குநர்

"வேட்டையாடு விளையாடு", படமாக்கத்தின் இடையில் ஒரு நாள் கௌதம் மேனன் sir-உடன் உரையாடிக் கொண்டிருந்தேன். "கற்க... கற்க, கள்ளம் கற்க", பாடல் உருவாக்க பணிகள் துவங்க இருந்த நேரம். அப்பாடலின் "situation" குறித்தும் theme குறித்தும் நீண்டு கொண்டிருந்தது பேச்சு. என் பதின் வயதில் வாசித்த, இன்றளவும் என் உள்ளத்தில் பசுமரத்தாணி போல் பதிந்துவிட்ட ஒரு கவிதை வரியை அவரிடம் பகிர்ந்து கொண்டேன். மிகச் சிறிய கவிதை அது.

அந்த வரிகளின் வீச்சையும், வீரியத்தையும் கேட்டு கௌதம் சார் சிலாகித்த அந்தத் தருணம் இன்றளவும் எனக்கு ஞாபகம் இருக்கிறது.

சில ஆண்டுகளுக்குப் பின், இன்றைய மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி அவர்கள் கதாநாயகனாக நடித்த "கலகத்தலைவன்" திரைப்படத்தில் அந்த வரிகளை பயன்படுத்தக் கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

வெளியீட்டிற்கு ஓரிரு நாட்களுக்கு முன் குடும்பத்துடன் படம் பார்க்க வந்திருந்த மாண்புமிகு தமிழ்நாடு முதல்வரிடம் அந்த வரிகளைச் சுட்டிக் காட்டி பேசியது என்றென்றைக்கும் மறக்க இயலாத ஞாபகம்.

அந்த வரிகள் இவைதாம்...

மானம் அவன் கேட்ட தாலாட்டு
மரணம் அவன் ஆடிய விளையாட்டு

இதை எழுதியது முத்தமிழறிஞர் கலைஞர். வையம் எங்கிலும் மனிதத்திற்காகவும், நீதிக்காகவும், உரிமைக்காகவும், உண்மைக்காகவும், களமாடும் ஒவ்வொரு போராளியைப் பற்றி வாசிக்கும் பொழுதும், நினைவு கூறும் பொழுதும், என் உள்ளத் திரையில் நிழலாடும் வார்த்தைகள் இவை.

முத்தமிழறிஞரின் எழுத்துப் பணி தனித்துவமானது இரண்டாயிரம் ஆண்டு கால மரபின் நீட்சி மட்டுமல்ல அதன் புத்துருவாக்கமும் கூட.

புதினங்கள் எழுதுவதில் ஆற்றல் பெற்றவர்கள் சிறுகதை தீட்டுவதிலும் அதே திறன் உடையவர்களாக இருப்பதில்லை. சிறுகதை வடிவத்தில் முத்திரை பதித்தவர்கள், திரைக்கதை வடிவத்தின் சூட்சுமங்களை அறிந்தவர்களாக இருப்பதில்லை. திரைக்கதையின் நுணுக்கங்களில் தேர்ச்சி பெற்றவர்கள், வசனங்கள் தீட்டுவதில் தனித்துவம் மிக்கவர்களாக இருப்பது அரிது. வசனம் எழுதும் கலையை கைவரப் பெற்றவர்கள், சிறந்த கவிஞர்களாக விளங்குவதில்லை. மேற்கூறிய அனைத்து இலக்கிய வடிவங்கள் மட்டுமல்லாது, ஒரு இதழியலாளராக, கட்டுரையாளராக, அரசியல் செயற்பாட்டாளராக, முத்தமிழறிஞரின் எழுத்துப் பணியானது பிரமிக்கத்தக்கதும் சாகாவரம் பெற்றதும் மட்டுமல்ல. இன்றளவும் relevance மாறாமல் நம்முடன் உரையாடிக் கொண்டே இருக்கின்றன.

கலைஞர் முத்திரை பதித்த இன்னொரு இலக்கிய வடிவமும் உண்டு. அதுதிரைப்படப்பாடல்கள். இன்னும் அதிகம்பேசப்படவும் எழுதப்படவும் ஆய்வுப் பாங்கில் அணுக வேண்டியவையுமான கலைஞரின் திரைப்பாடல்கள், கவிதானுபவத்தின் உச்சங்களைத் தொட்ட காலக் கண்ணாடிகள்.

கலைஞரின் ஒவ்வொரு திரைப்பாடலின் உருவாக்க வரலாறு, அது படத்தில் இடம் பெறும் பின்புலம் மற்றும் உள்ளடக்கம் முறையாகத் தொகுக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டால் தமிழ்த்திரைத் துறைக்கு மிக முக்கியமானதொரு ஆவணம் கிடைக்கும்.

இக்கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிட்ட கலைஞரின் கவிதை வரிகள் உயிரைப் பணயம் வைத்து களமாடும் ஒவ்வொரு போராளியையும் எனக்கு நினைவூட்டுவது போல் வள்ளுவரின் குறள் ஒன்று உண்டு. அதைப் படிக்கும் போதெல்லாம் எனக்கு கலைஞர் மட்டுமே ஞாபகத்திற்கு வருகிறார்.

அந்த குறள் இது தான்:

"சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது"

அவர் மறைவுக்குப் பின்னரும் - அவருடைய எழுத்துக்களின் வாயிலாக, முத்தமிழறிஞர் தொடர்ந்து அஞ்ஞானத்திற்கும், மண் மூடிப் போன மூட வழக்கங்களுக்கு எதிராகவும், சமூக நீதிக்காகவும் தமிழர் உரிமைக்காகவும் தொடர்ந்து போராடிக் கொண்டே இருக்கிறார். ■





# கைக்கெட்டும் தூரத்தில்
# கலைஞர்

**-திரு. சசிகுமார், நடிகர்**

எழுத்தாளர், பேச்சாளர், திரைக்கதையாளர், வசனகர்த்தா, அரசியல்வாதி என இத்தனை தகுதிகளையும் ஒற்றை வார்த்தையாகச் சுருக்கி அவரைக் கலைஞரென்றார்கள். தமிழ்நாடு வரலாற்றில் ஓர் அரசியல்வாதி கலைஞராக இருந்தாரென்றால் அது அவர் மட்டுமே.

“கலைஞரின் பேச்சைக் கேட்டிருக்கிறாயா?” என்பதுதான் என் இளவயதில் நான் அதிகம் எதிர்நோக்கிய கேள்வி. முதலில் கலைஞரின் எழுத்தைப் பார்த்தேன். “காலாங்காத்தால தண்ணியடிச்சுட்டுப் படுத்திருந்தேன்னா உன்னை மந்திரியாக்குனாலும் ஆக்கிருவாங்க” என்பதை ஒரு திரைப்படத்தின் முதல் வசனமாக வைக்கும் துணிச்சல் இன்றுவரை எவருக்கும் வந்ததில்லை. “பாலைவன ரோஜாக்கள்” என்ற அத்திரைப்பட வசனத்தின் மூலம் பலமுறை கலைஞரின் பேச்சைப் பின் தொடர்ந்திருக்கிறேன். பராசக்தி வசனத்தைத் தொழுதிருக்கிறேன். அவரது ஆட்சியின் கீழ் குடிமகனாக இருந்திருக்கிறேன்.

ஒவ்வொரு முறையும் அவரைப் பார்க்கும் ஆர்வம் இருப்பினும் அவருக்குப் பின் இருந்த உண்மையான ஒளிவட்டங்கள் என் கண்களைக் கூசி விலகச் செய்திருக்கிறது. வெளிச்சத்தை வெளிச்சம் பார்க்க ஒரு விசயமும் நடந்தது. நான் தயாரித்த “பசங்க” திரைப்படம் 2010-ல் மூன்று தேசிய விருதுகளைப் பெற்றது. கலைஞரைச் சந்திக்க வாய்ப்புக் கிடைக்குமா? கதவைத் தட்டலாமா? என்ற எனது வேண்டுகோளுக்கு தலைசாய்த்து, கதவு திறந்தது. கைக்கெட்டும் தூரத்தில் கலைஞர் இருந்தார். பேசினார், சிரித்தார், பாராட்டினார். நானோ கலைஞரைத் தொட்டுவிடும் தூரத்தில் நின்று பார்த்துக் கொண்டே இருந்தேன். அவரது உயரம் அவருக்கே தெரியாத அளவுக்கு வளர்ந்திருந்தாலும் கலைஞராக கலையின் படிக்கட்டு ஓரத்தில் கால் வைத்திருந்த என்னைச் சந்திக்க அனுமதியும், உரையாடும் வாய்ப்பையும் தந்தவர் அவர்.

கலைஞரைச் சந்தித்ததும் அவரது வாழ்த்துகளைப் பெற்றதும் என் வாழ்வில் மறக்க முடியாத நிகழ்வு. மறக்கவே கூடாத மகிழ்வு.

கலையென்பது மக்களுக்கென
உரைத்ததால் அவர் கலைஞர்!

கலைஞருக்கு மலர் தூவும் இவ்விழா மலருக்கு எனது வாழ்த்துகளும்! வணக்கங்களும்! ■







# அவர் மறைவுக்குப் பிறகு, நான் அனாதை..!

-திரு.எம்.எஸ்.பாஸ்கர், நடிகர்



தமிழினத் தலைவர், முத்தமிழறிஞர், டாக்டர் கலைஞர் என எந்தப் பெயரில் அழைக்கப்பட்டாலும், அவர் எனக்கு “அப்பா” என்கிற அடையாளத்துடன் என் மனதில் உயர்ந்து நிற்கிறார். எனது இந்த வாழ்க்கைக்கு அவர் சொன்ன வார்த்தைகளே அடித்தளமாக இருந்தன.

என்னைப் பெற்ற தகப்பனார் முத்துப்பேட்டை சோமு அவர்கள், கலைஞர் அப்பாவுடன் அண்ணன் - தம்பிபோல நெருக்கமாக இருந்தவர். 1972-ஆம் ஆண்டில், நாங்கள் சென்னை வந்த புதிதில், ஒருநாள் கோபாலபுரம் இல்லத்துக்கு என்னையும் அழைத்துச் சென்றார் எனது தகப்பனார்.

அப்போதுதான் முதல்முறையாக கலைஞர் அப்பாவை பார்க்கிறேன். “என் மகன்” என அறிமுகம் செய்தார் அப்பா. “என்ன படிக்கிற தம்பி”, எனக் கேட்ட கலைஞர் அப்பா, “படிக்கிற வாரப் பத்திரிகையைச் சொல்லாத, வகுப்பைச் சொல்லு” எனக் கலகலப்பூட்டினார். நான் “பத்தாவது படிக்கிறேங்கப்பா” என்றேன். அப்போதே அப்பா என்று அழைத்துப் பழகிவிட்டேன்.

முதல் சந்திப்பிலேயே தன் மீதான ஈர்ப்பை ஏற்படுத்தியவர் கலைஞர். அதற்குப் பிறகு நான் அடிக்கடி கோபாலபுரம் வீட்டுக்குச் செல்வேன். நானும் கோபாலபுரம் பள்ளியில் படித்ததால், தமிழரசு அண்ணனுடன் வீட்டுக்குச் சென்றிருக்கிறேன். எனது பள்ளி வயதில் கிடைத்த இப்படியான நெருக்கங்கள் கலைஞர் அப்பா என்கிற உணர்வினைக் கொண்டு வந்தன.

## அப்பா உருவாக்கிய வாய்ப்பு

திரைத்துறையில் நான் டப்பிங் கலைஞராக வருவதற்கு அவரது வசனங்கள்தான் கை கொடுத்தன. அவற்றை உச்சரித்துப் பழகுவது மட்டும்தான் பயிற்சியாக இருந்தன. அது மட்டுமல்ல, திரைப்படங்களில் நடிப்பதற்கான வாய்ப்புகளையும் அவரது வார்த்தைகள்தான் எனக்கு ஏற்படுத்திக் கொடுத்தன.

முதன்முதலில் “சின்னப் பாப்பா பெரிய பாப்பா” தொடரில் “பட்டாபி” என்கிற பாத்திரத்தில் நடித்திருந்தேன். அந்தத் தொடரைப் பார்த்த கலைஞர், அது தொடர்பாக ராதிகா அவர்களுக்கு போன் செய்து பேசுகையில், “அந்தப் பையன் இயல்பா நடிக்கிறாரே” என என்னைக் குறித்துக் கேட்டதுடன், “தொடர்ந்து அவருக்கு வாய்ப்பு கொடுங்க” எனக் கூறியுள்ளார். அதன் பின்னர் எத்தனையோ பாத்திரங்கள் மாறினாலும், நான் மட்டும் அந்தத் தொடரில் இருந்து மாறவே இல்லை. அதற்குக் காரணம் கலைஞர் அப்பாவின் வார்த்தைகள்தான். அந்த வார்த்தைகள்தான் என்னை இந்த உயரத்துக்குக் கொண்டு வந்தன, இப்போதும் வாழ வைத்துக் கொண்டிருக்கின்றன என்றால் மிகையில்லை.

## “ஆண்டவர் லிங்கம்” அப்டேட்

அதன் பின்னர் “செல்வி” சீரியலில் நடித்துக் கொண்டிருந்தேன். அப்போது கலைஞர் அப்பாவின் பிறந்தநாளுக்காக அவரைச் சந்திப்பதற்காக அறிவாலயம் சென்றேன். என்னைப் பார்த்த அண்ணன் துரைமுருகன், “நம்ம சோமு அண்ணன் பையன்

பட்டாபி” என அறிமுகம் செய்தார். உடனே கலைஞர் அப்பா, “நீ பட்டாபி இல்லை, ஆண்டவன் என எனக்குத் தெரியும்” என்றதுடன், “சோமு அண்ணன் பையனா, நம்ம குடும்பம்யா நீ ” என வாஞ்சையுடன் கன்னத்தைத் தட்டிக் கொடுத்தார். எனக்கு என்ன ஆச்சர்யம் என்றால், நான் “செல்வி” சீரியலில் “ஆண்டவர் லிங்கம்” என்கிற கேரக்டரில்தான் நடித்துக் கொண்டிருந்தேன். அதை அவர் அறிந்து வைத்திருந்தார் என்பது மகா வியப்பு.

இந்திய அளவில் முக்கிய அரசியல்வாதி, தலைக்கு மேல் ஆயிரம் பிரச்சினைகள், தவிர முதலமைச்சராக ஆட்சிப் பணி, அரசியல் பணி, இவற்றுக்கு இடையில் ஒரு மனிதர் தொலைக்காட்சித் தொடர்களைப் பார்த்து “அப்டேட்” ஆக இருக்கிறாரே என மிகப் பெரிய ஆச்சர்யமாக இருந்தது. அவரது நினைவாற்றல், “அப்டேட்” ஆக இருக்கும் திறமைக்கு முன்னால் வேறு யாராலும் போட்டி போடவே முடியாது.

## கலைஞன் பொதுவானவன்

2007-ஆம் ஆண்டில் “மொழி” படத்துக்காகச் சிறந்த குணச்சித்திர விருது எனக்கு அறிவிக்கப்பட்டது. அப்போது அவரிடம் வாழ்த்துப் பெறுவதற்காக அறிவாலயத்துக்குச் சந்திக்கச் செல்கிறேன். அவரிடம் பேசுகையில், “இதைப் பார்ப்பதற்கு அப்பா இல்லையே” என வருத்தப்பட்டேன். அதைக் கேட்டதும், “ஏன்யா கலங்குற, உனக்கு அந்த ஸ்தானத்தில் நான் இருக்கேன், கலங்காதே” என ஆற்றுப்படுத்தினார்.

“சிவாஜி” படத்தில் நடித்தவர்களுக்கு விருது வழங்கும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டார் கலைஞர். எல்லோருக்கும் விருது வழங்கியவர் என்னை மட்டும் அருகில் அமர வைத்துக் கொண்டு “வாய்ப்புகள் எப்படி இருக்கு, கவனமாக இருக்கவும்” என அன்போடு உரையாடினார். எவ்வளவோ நடிகர்கள் வந்துருக்காங்க. என்னை மட்டும் உட்காரவச்சி விசாரித்ததால் நான் நெகிழ்ந்து விட்டேன். முக்கியமாக “கட்சியில் எதுவும் சேர்ந்துராத. எல்லா இடத்திலயும் நடிக்க வேண்டி இருக்கும். நீ கலைஞன். கலைஞன் பொதுவானவன்” எனக் கூறினார். அது எனக்கும் அவருக்கும் சேர்த்து சொன்னதுபோல ஒரு “பஞ்ச்” வசனமாக இருந்தது.

அந்த நிகழ்ச்சியின்போது அவர் அரங்கத்துக்கு உள்ளே வரும் நேரத்தில், நான் ஓடிச் சென்று அவரைக் கட்டிப்பிடித்தேன். உடனே பக்கத்தில் இருந்த அதிகாரிகள் பதறினர். நான் உணர்ச்சிவசப்பட்டவனாக, “அப்பாவை மகன் கட்டிப்பிடிப்பதற்கு அனுமதி வாங்க வேண்டுமா” என அதிகாரிகளைக் கேட்டேன். உடனே அப்பா “முத்துப்பேட்டை சோமு அண்ணன் மகன்ல” என்றார். இப்படிப் பல நிகழ்வுகள் பசுமையாக நினைவுகளில் உள்ளன.

## மூன்று தலைமுறை உறவு

அவருடைய வசனங்களை “தென்பாண்டிச் சிங்கம்”, “நியாயத்தராசு” போன்ற திரைப்படங்களில் பேசி நடிக்க வாய்ப்பு கிடைத்தது. அவருடைய வசனங்களைப் பேசினால், தமிழ் தெரியாதவர்களுக்கும் தமிழ் வந்துவிடும். “நியாயத்தராசு” படத்தில் “தண்டிக்கப்பட வேண்டும், பண்ணை முதலாளி பரமானந்தம் தண்டிக்கப்பட வேண்டும்” என்கிற வசனத்தை நான் பேசி நடித்தேன். அதைப் பேசும்போது அடைந்த பெருமைக்கு அளவே இல்லை.

எனக்கு இன்னொரு பெருமையும் மகிழ்ச்சியும் உள்ளது. கலைஞர் அப்பாவின் திரைப்படங்களிலும், அவரது இளவல், நமது முதலமைச்சர் நடித்த “குறிஞ்சிமலர்” நாடகத்திலும், அதன் பின்னர் தம்பி உதயநிதி அவர்களின் திரைப்படங்களிலும் எனக் கலைஞர் அப்பாவுடன் மூன்று தலைமுறை கலைத்துறை உறவு கொண்டவன்.

## மூன்று தந்தைகள்

நான் எங்குப் பேசினாலும் “எனக்கு மூன்று அப்பாக்கள்” என்றுதான் சொல்வேன். என்னைப் பெற்ற தகப்பனார், கலைஞர் அப்பா, சிவாஜி அப்பா என மூன்றுபேர். தமிழைச் சுத்தமாக வாசிக்க, நாளிதழ்களைப் படிக்க வைத்து, அடித்துச் சொல்லிக் கொடுத்தார் தகப்பனார்.

மொழியாலும், எழுத்தாலும் படிக்கச் சொல்லி வழிநடத்தினார் கலைஞர் அப்பா. தனது அசுர நடிப்பால் நடித்துச் சொல்லிக் கொடுத்தார் சிவாஜி அப்பா. முதல் இரண்டு அப்பாக்களை நான் முன்னரே இழந்துவிட்டேன்.

மூன்றாவதாகக் கலைஞர் அப்பாவும் மறைந்தபோதுதான் நான் அனாதையாகிவிட்டதாக உணர்ந்தேன். அவர்களை எனது தகப்பனார்களாக ஏற்றதும், என்னை அவர்கள் மகனாக ஏற்றுக்கொண்டதும் நான் பெற்ற பெறும் பேறாகும்... ■



# கலைஞர் ஒரு காரல்மார்க்ஸ்

-கலைமாமணி திரு.V.பிரபாகர், கதாசிரியர்

கலைஞர் 100...
முத்தமிழறிஞர் கலைஞரே...எங்களின் விதை நெல்!...
தமிழ்த் திரையுலகில் கதை வசனகர்த்தாவாகவும், தென்னிந்திய திரைப்பட எழுத்தாளர்கள் சங்க இணைச் செயலாளராகவும் செயல்படும் எனது வாழ்வின் ஆரம்பப்புள்ளியே முத்தமிழறிஞர் கலைஞரின் எழுத்துக்கள் தான்...

அவர் கவிதையை விதையாக எடுத்துக்கொண்டுதான் என் கலைத்துறை கணக்கைத் துவக்கினேன். எனக்கு மட்டுமல்ல எண்ணற்ற பல படைப்பாளிகளுக்கு அவரே விதை நெல்.

கடலூர் பெரியார் கலைக் கல்லூரியில் மாணவனாக நான் கையெழுத்துப் பிரதிகளில் கிறுக்கிக் கொண்டிருந்த காலம். ஒரு நாள் எனது மூத்த மாணவர் கவிஞர் மன்றவாணன் அவர்கள் எனக்கு அன்புக் கட்டளையிட்டார். கல்லூரி சிறப்புக் கவியரங்கில் நான் கலந்துகொள்ள வேண்டும் என்று சொல்லி எனது பெயரையும் பதிவு செய்துவிட்டார். அதற்கு முன்பு கவியரங்கில் கலந்து கொண்ட அனுபவம் இல்லாத எனக்கு எப்படி ஆரம்பித்து கவிதைகளை எழுதுவது என்றே தெரியாமல் குழம்பிக் கொண்டிருந்தேன். சிறப்பான பல கவிஞர்கள் கலந்துகொள்ளும் கவியரங்கம் என்பதால் உள்ளுக்குள் ஒரு அச்சம் ஏற்பட்டது.

விடிந்தால் கவியரங்க மேடையில் ஏறியாக வேண்டும். எனக்குத் தூக்கம் வரவில்லை. படுப்பதும் எழுந்து நடப்பதுமாய் இருந்தேன். அப்போதைய ஆனந்த விகடன் இதழ் ஒன்று கையில் கிடைத்தது. அதில் விகடன் பொன்விழா ஆண்டுக் கவியரங்கில் கலைஞர் ஐயா தலைமை ஏற்று முழங்கிய கவிதை கிடைத்தது.

நீச்சல் தெரியாதவனுக்கு கடலில் முத்து கிடைத்தது போல் அதைக் கையில் எடுத்து வாசித்தேன். ஒன்று, இரண்டு, மூன்று, பலமுறை என உறங்காமல் கலைஞரின் கவிதைகளை வாசித்தேன். அதிகாலைச் சூரியன் உதிக்க விடிந்தது. எனக்கும் சேர்த்துதான். அந்த அறிவுச்சூரியனின் அடியொற்றி நானும் எனது கவியரங்கக் கவிதையை எழுத ஆரம்பித்தேன். எனக்கு கொடுக்கப்பட்டிருந்த தலைப்பு "பதுக்கல்".



அன்று மாணவனாக நான் வாசித்த கவிதையில், சில வரிகள்.... "எண்ணெயும், சர்க்கரையும் கன்னிமை மாறாமால்தான் கடைக்கு வருகிறது. ஆனால் எங்கோ கற்பிழந்து நமக்கு வருகிறது". அந்த மேடையில் அதிக கைதட்டல் பெற்ற கவிஞன் நான்தான். தொடர்ந்து கலைஞரின் எழுத்துக்களை வாசிக்க ஆரம்பித்தேன். நானும் யோசிக்க ஆரம்பித்தேன். முரசொலி கடிதம் தொடங்கி, பிறர் நூல்களுக்கு அவர் எழுதிய முன்னுரைகள் வரை வாசித்தேன். திரைத்துறையில் ராஜகுமாரி, பராசக்தி தொடங்கி, மனோகரா, உளியின் ஓசை தொடர்ந்து, ஸ்ரீ ராமானுஜர் வரை கலைஞரின் சொல்வீச்சின் ரசிகனாக, இலக்கிய இளவலாக, தொண்டனாக அவரின் ராஜபாட்டையில் பதிக்கப்பட்ட கால் தடங்களைப் பாதையாக ஏற்றுப்பயணம் செய்தேன். எனது பெயரும் திரை எழுத்தாளனாகப் பதிவானது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் "பராசக்தி" திரைப்படத்தில் குணசேகரன் என்ற கதாபாத்திரத்தை உருவாக்கினார். திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர், குடும்பத்தினர் வைத்த அவரின் பெயரை, கலைஞரின் கதாபாத்திரத்தின் தாக்கத்தில் "குணசேகரன்" என்று மாற்றிக்கொண்டார். பிற்காலத்தில் அவர் காவல்துறை உயர் அதிகாரியாக சென்னை மத்தியச் சிறையில் பணிபுரிந்தார். கலைஞர் அங்கு அரசியல் கைதியாக சென்றபோது ஜெயிலராக இருந்த குணசேகரனுக்கு அனைவரும் வணக்கம் சொல்வார்கள். ஆனால், குணசேகரன் தினமும் கலைஞரின் அறைக்குச் சென்று வணக்கம் சொல்வார். அவர் படைத்த கதாபாத்திரத்தை காக்கி உடையில் கண் முன் கண்டவர் கலைஞர். இதை, கலைஞர் அவர்களே முரசொலி நாளிதழில் "தம்பி குணசேகரன் தினமும் வந்து சந்திப்பார்" என்று பதிவு செய்துள்ளார்கள்!

விஜயகாந்த் நடித்த "தென்பாண்டிச் சீமையிலே" என்ற திரைப்படப் பூஜை AVM STUDIO அரங்கில் நடைபெற்றது. மேடையில் கலைஞருக்கு வலது புறத்தில் இயக்கத்தைச் சேர்ந்த இராமநாராயணன், T.ராஜேந்தர் அவர்களும், இடது புறத்தில் அந்த திரைப்படத்திற்கு இசை அமைத்த மாற்று இயக்கத்தைச் சேர்ந்த K.பாக்யராஜ் அவர்களும் அமர்ந்திருந்தார்கள். கலைஞருக்கு இரு பக்கமும் இரு கலைஞர்கள். சிறப்புரை ஆற்றும்போது கலைஞர் அவர்கள் சொன்னார்கள். "இரு வேறு இயக்கங்களைச் சேர்ந்த தம்பிகள் இங்கு ஒன்றாக அமர்ந்திருக்கிறீர்கள். என்றும் நீங்கள் ஒற்றுமையாக இருக்கவேண்டும். கலைத்தாயின் பிள்ளைகளைக் கலைத்தாய் என்ற பெயர் என்றும் இந்தக் கருணாநிதிக்கு வந்துவிடக்கூடாது" என்று ஒரு தாய் போல் கலைத்துறையை அரவணைத்த கலைஞர். அன்று பாசத்துடன் இதயத்தில் இடம் கொடுத்தார்கள். சில ஆண்டுகளுக்குப்பின் முதல்வர், கலைத்துறையினர் ஒன்றாக இல்லம் அமைத்து வாழ பையனூரில் நேசத்துடன் இடம் கொடுத்தார்கள்! எங்களின் சுவாசமும் அவரே!

கலைஞரின் எழுத்துலக விழுதுகளில் ஒருவனாக நானும் விருதுகள் பல பெற்றேன். ஆனால் கலைஞர் ஐயாவின் கரங்களில் விருது பெறவில்லையே என்ற ஏக்கம் இருந்தது. காலம் கனிந்தது. நான் வசனம் எழுதிய "சிவப்பு மழை" திரைப்படத்தின் கின்னஸ் சான்றிதழை, தமிழக முதல்வர் கலைஞர் ஐயாவின் திருக்கரங்களால் பெறும் வாய்ப்பை ஐயா கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் உருவாக்கினார்கள். அந்த சந்தர்ப்பத்திற்காக பல வருடங்கள் காத்திருந்த ஏகலைவன் நான். நாங்கள் இரண்டு மணி நேரத்தில் முதல்வர் இல்லத்தில் இருக்கவேண்டிய சூழல். அணிந்திருந்த உடை அரக்கபரக்க இருந்தது. என் நண்பர் ரெ.குமரப்பா ஒரு சட்டை வாங்கிவந்தார். என் எண்ணத்தின் பிரதிபலிப்பாக அதன் டிசைன் இருந்தது. சிவப்பு சட்டையின் உள்ளே கருப்பு நிறத்தில் வட்டங்களுடன் கருப்பு சிவப்பாய் அமைந்திருந்தது. அன்று தலைவரின் இல்லத்திற்குள் செல்லும்போது தஞ்சை பெரிய கோவிலுக்குள் செல்வது போல் இருந்தது, அவர் சோழ மன்னரின் மறு பிறவி என்று ஸ்ரீ சத்ய சாய்பாபா சொன்னதாக பின்னாளில் படித்தேன்.

அனைவரும் தலைவர் அருகில் சென்றோம், அவரின் மஞ்சள் துண்டிலிருந்து ஒரு மின்னல் என்னைத் தாக்கியது போல உணர்ந்தேன்! கலைஞர் ஐயாவிடம் கவிப்பேரரசு என்னைச் சுட்டிக்காட்டிச் சொன்னார், "நீங்கள் என்றால் தம்பி பிரபாகருக்கு (பிரபாகரனுக்கு) உயிர்" என்று. என்னைப் பார்த்து தலைவர் புன்னகைத்தார். மீண்டும் மின்னல் தாக்கியது. அவரின் வலது புறம் நின்று கின்னஸ் சான்றிதழ் பெற்றேன். நகர மனமின்றி விலகினேன். இடதுபுறம் வந்துவிட்டேன். அனைவரும் சான்றிதழ் பெற்றனர். நான் தலைவரையே பார்த்தபடி நின்றேன். திடீரென என் பக்கம் தலை திருப்பி, தலைவர் அருகே வருமாறு அழைத்தார். ஓடி அருகில் நின்றேன். புகைப்படக்காரரின் முகத்தை ஏறிட்டார் கலைஞர். ஏற்கனவே படம் எடுத்திருந்தாலும் இன்னொரு முறை தலைவரின் கண்ணசைவினால் படம் பிடித்தார் புகைப்படக்காரர். முன்பு எடுத்த படம் கலைஞருக்கு வலது பக்கம். இந்த முறை இடது பக்கம். எனக்கு மட்டும் இரண்டு புகைப்படங்கள். அன்று ஒரு நாள் அதிர்ஷ்டத்தை நம்பினேன். ஆலயங்கள் பல தரிசித்த நான் அறிவாலயத்தை மிக அருகில் தரிசித்த என் வாழ்வின் பொன்னாள்.

காரல்மார்க்ஸ் அவருடைய எண்ணத்தில் தோன்றிய பொதுவுடைமைத் தத்துவங்களையும் தொழிலாளர்கள் நலனுக்கான வரையறைகளையும் எழுதினார். அனைத்தும், உலகம் ஏற்றுக்கொண்ட தொழிலாளர் நலச் சட்டமானது. அதுபோல் கலைஞர் அவர்களின் எண்ணத்தில் தோன்றிய பகுத்தறிவுக் கருத்துக்களையும் மக்கள் நலத்திட்டங்களையும் திரை எழுத்துக்களாக பதித்தார்கள். பிற்காலத்தில் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு, மகளிர் சொத்துரிமை, சமத்துவக்கல்வி என பல திட்டமாகவும் சட்டமாகவும் மாறியது. அந்த அடிப்படையில் கார்ல்மார்க்சையும் கலைஞரையும் ஒன்றாகக் கருதுகிறேன்!...

திரையில் சொன்னதைத் தரையில் சாதித்துக்காட்டியவர் கலைஞர்! எண்ணற்ற சேவைகளைத் தமிழினத்திற்கு செய்த தமிழினத்தலைவர் கலைஞரின் மறுவடிவாக மாண்புமிகு தமிழக முதல்வர் தளபதி ஸ்டாலின் அவர்கள் நம்மைக் காக்கிறார்கள். மக்களாட்சி மாண்பைக் காக்க "திராவிட மாடல்" என்ற ஆயுதத்தை கையில் எடுத்துக் களம் கண்டு போராடுகிறார்கள். அந்த ஆயுதத்தில் இரு சொல் உள்ளது. ஒன்று திராவிடம். திராவிட மொழிகளின் தாய், தமிழ். எனவே அதில் கலைஞர் பெயர் சொல்லும் செம்மொழியாம் தமிழ் உள்ளது. மாடல் என்ற சொல்லில் ஆங்கிலம் உள்ளது. இரு வார்த்தைகளுக்குள் இரு மொழிக்கொள்கை என்ற தத்துவம் உள்ளது. அந்தத் தத்துவம் நிச்சயம் வெற்றிபெறும். நம் முதல்வர் தளபதி அவர்களே நம் எதிர்காலத் தமிழகம். எதிர்கால இந்தியா.

நம் இதய சூரியன் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், நம் இளைய சூரியன் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் சிரம் தாழ்ந்த வணக்கத்தையும் நன்றியையும் பதிவு செய்கிறேன்... ■








## மாபெரும் ஆளுமை

# கலைஞர்

-திரு. கார்த்தி, நடிகர்

"கலைஞர் கருணாநிதி" இந்தக் கலைஞனுக்குத்தான் எத்தனை எத்தனை முகங்கள். கையேடு பத்திரிகை தொடங்கி, திரைத்துறையில் மாபெரும் புகழ்பெற்ற கதை வசனகர்த்தாவாகத் திகழ்ந்து, சட்டமன்ற உறுப்பினர், அமைச்சர், எதிர்கட்சித் தலைவர், முதலமைச்சர் என தனக்கான புதிய புதிய களங்களை உருவாக்கிக் கொண்டே இருந்தவர் கலைஞர்.

எந்த ஒரு பகட்டும் இல்லாத கலைஞரை சிறிய வயதில் எங்கள் வீட்டிலேயே சந்தித்தது இன்னும் நினைவில் உள்ளது.

"பருத்திவீரன்" திரைப்படத்தைப் பார்த்துவிட்டு "என்னயா எல்லோரும் அப்படியே வாழ்ந்திருக்காங்க. ஒரு கிராமத்துக்குள்ள போன மாதிரி இருந்தது. மூணு நாள் எனக்கு தூக்கம் வரல" என அப்பாவிடம் அவர் சொன்னது நான் என் சினிமா வாழ்வில் பெற்ற பெரிய வெகுமதி.

நடிகர் சங்கப் பொறுப்பிற்கு வந்த பிறகு அவரை சந்திக்க சென்றபோது, "என்னயா, உங்க அப்பாவுக்கு என் மேல கோபம் போயிடுச்சா" என்றார். எனக்கு என்ன கோபம் எனப் புரியவில்லை. எங்கள் வீட்டில் நடந்த ஒரு சுப நிகழ்ச்சிக்கு அவர் வர முடியாமல் போனதை எண்ணி அவரே கூறும்போதுதான் புரிந்தது. இதுபோல அவருடைய பல வேலைப்பளுவுக்கு இடையேயும் இப்படி ஒவ்வொருவரிடமும் ஒரு தனிப்பட்ட அணுகுமுறையை கொண்டிருந்த மகத்தான மனிதர்தான் கலைஞர்.

கலைஞரின் சமூக சிந்தனையால் உருவான ஆசியாவிலேயே முதல் கால்நடைப் பல்கலைக்கழகம், இந்தியாவிலேயே முதல் வேளாண் கல்லூரி, சமத்துவபுரம், மாணவர்களுக்கு இலவசப் பேருந்து, உழவர் சந்தை, உழவர்களுக்கு இலவச மின்சாரம் என இன்றும் மக்களுக்கு பயனளிக்கும் எத்தனையோ திட்டங்கள் இருக்கின்றன.

இத்தகைய மாபெரும் பேராளுமையின் கைகளால் சிறந்த நடிகருக்கான தமிழ்நாடு அரசு விருது பெற்றது என் வாழ்நாள் பெருமை. ■



# பாட்டுடைத் தலைவர்

-திரு. வித்யாசாகர், இசையமைப்பாளர்



கலைஞரோடு பாசக்கிளிகள், இறைவன் என்ற இரண்டு படங்களில் பணியாற்றும் வாய்ப்பை இறைவன் கொடுத்தான், எனக்கு.

முதல் படம் பாசக்கிளிகள்,

கலைஞரின் கதை வசனத்தில் உருவாகிற ஒரு படத்திற்கு இசையமைக்கப் போகிறோம் என்கிற செய்தியே என்னை வயலினுக்குள் உட்காரவைத்து வாசிக்கத் தொடங்கியது.

அதனினும் இன்னொரு செய்தி என்னை மறுபடியும் தூக்கி மகிழ்ச்சிக் கடலில் போட்டது. ஆம். பாசக்கிளிகள் படத்தில் இடம் பெறப்போகும் எல்லாப் பாடல்களையும் கலைஞர்தான் எழுதப்போகிறார் என்பதுதான், என்னுடைய தலைமுறைக்கு இது ஆச்சரியமோ மகிழ்ச்சியோ மட்டுமல்ல, இது ஒரு பெருமை.

அந்த நேரத்தில் கலைஞர் தமிழ்நாட்டின் முதலமைச்சர். மூத்த கலைஞர்-முதலமைச்சர் என்ற இரண்டு பௌர்ணமிகளை என் ஒற்றை வானம் எப்படித் தாங்கப் போகிறதோ என்று வியந்திருந்தேன், வியர்த்திருந்தேன்.

எப்படி அந்தப் பெருமகன் நாட்டையும் கவனித்துக் கொண்டு பாட்டையும் கவனிக்கப் போகிறார்? என்ற குதூகலமான கேள்வியும் எனக்குள் கூடாரமிட்டது.

பாசக்கிளிகள் படத்தின் கம்போசிங் இயக்குநர் அமிர்தம் சாரும், இராமநாராயணன் சாரும் வருவாங்க. கலைஞர் வரமாட்டார். கம்போசிங் முடிந்து மெட்டை அனுப்பிவிடுவேன். மறுநாளே பாடல் வரிகள் வந்துவிடும்.

நாளைக்கு எத்தனை மணிக்கு பாடல் ஒலிப்பதிவு எனக் கேட்பார். காலை 7 மணிக்கு என்று நான் சொல்வேன். மறுநாள் 6.45-க்கெல்லாம் பாடல் வந்துவிடும். 7 மணிக்கு அவரிடமிருந்து தொலைபேசி வரும். "பாட்டப் பாடிப் பாத்துட்டீங்களா? சரியா இருக்கா?" என்று கேட்பார்.

நினைத்துப்பாருங்கள். கோட்டையைப் பிடிப்பதற்கு முன்பே தன் திறமையால் கோடம்பாக்கத்தை பிடித்தவர் அவர். இன்றிருக்கும் மூத்த கலைஞர்களுக்கெல்லாம் மூத்த கலைஞர் அவர். அப்படிப்பட்ட அவர், தன்னை ஒரு பாடலாசிரியராக மட்டுமே நினைத்துக்கொண்டு பாடல்வரி மெட்டில் உட்காரவில்லை. "வேறுவரி எழுதிக் கொடுங்கள்" என்று கேட்கக் கூடிய உரிமையை அந்தக் கேள்வியின் மூலம் எனக்குத் தருகிறார்.

இப்படி இரண்டு பாடல்கள் முடிந்தன. மூன்றாவது பாடல் கம்போசிங். படத்தில் பாடலைப் பாடும் பாத்திரம் ஓர் இசை விற்பன்னன். அதனால் இதுவரை அதிகம் பயன்படுத்தாத ஒரு இராகத்தில் பாடல் அமைய வேண்டுமென்று முடிவு செய்து பண்ணினேன்.

மறுநாள் கலைஞரிடமிருந்து பாட்டு வந்தது. பாடிப்பார்த்தேன். பாடல் ஒரு இடம் இடித்தது. பாடலைக் கொண்டு வந்த புரடெக்சன் யூனிட் நண்பரிடம் கொடுத்து வேறு வரிகள் எழுதி வாங்கிட்டு வரச்சொன்னேன். அவர் பயந்து போய் "சார் நீங்களே தலைவரிடம் சொல்லுங்கள்" என்றார். தொலைபேசியில் பேசினேன். மெட்டும் வார்த்தையும் சண்டை போடுதா என்று அவருக்கே உரிய முறையில் கேட்டார். எந்த இடம் சரியில்லையோ பாடலை அந்த இடத்தில் தத்தகாரம் போட்டு பாடி அனுப்புங்கள் என்றார். அனுப்பினேன்.

அடுத்த பத்தாவது நிமிடத்தில் பத்து வரிகளை ஒரே மீட்டரில் எழுதி, இதில் எது தேவையோ எடுத்துக்கொள்ளுங்கள் என்று பேக்சில் அனுப்பிவிட்டார்.

மறுநாள் காலை கூப்பிட்டு "சரி பாட்டு எப்ப பதிவு பண்றீங்க?" என்று கேட்டார். "இரண்டு நாளில்" என்றேன். "ஐயா, இன்னொரு விஷயம்" என்றேன். "சொல்லுங்கள்" என்றார். "இதுவரை யாரும் அதிகம் பண்ணாத ஒரு இராகத்தில் இந்த பாட்ட பண்ணியிருக்கிறோம். இராகம் பேரு பாட்டுல வந்தா நல்லா இருக்கும்" என்றேன். இராகம் பேரைக் கேட்டால் நாசிகா பூசனின்னேன். அப்ப மணி காலை 7. அடுத்த 15 நிமிடத்தில் பாடல் வரிகள் பேக்சில் வந்தன. முழு சரணத்தையும் மாற்றியிருந்தார்.

நானறிவேன் இசை ஞானம் யாவும்
நாசிகாபூசனி நான் பாடும் ராகம்

என்று எதுகை மோனையோடு சிறப்பாக எழுதியிருந்தார். கலைமேல் உள்ள ஆர்வம், அக்கரை எல்லாம் தாண்டி Dedication-D சொல்லுவாங்களே அதை அவரிடம் பார்க்கலாம்.

இன்னொரு அம்சம். எவ்வளவோ முதல்வர்கள் இருந்துள்ளனர். யாரையும் நம்மால் எளிதில் அணுக முடியாது. ஆனால் கலைஞரை மட்டும்தான் அவர் எந்த நிலையில் இருந்தாலும் எளிதில் நம்மால் அணுக முடியும். அவரைப் பற்றி ஏற்கனவே உயர்வான எண்ணம் நமக்குள் இருந்தாலும், தனது பண்பால் தனது உயரத்தைத் தானே கூட்டிவிடுவார்.

கலைஞரைப் பற்றிய எனது கலை அனுபவங்களை பகிர்ந்துகொள்ள வாய்ப்பளித்தமைக்கு நன்றி,

வாழ்க கலைஞர் புகழ்! ■







# சுடரழகர்

-கவிஞர் நெல்லை ஜெயந்தா

சொக்க வைத்த உரையழகன்-தமிழை
சுழல வைத்த திரையழகன்
சிக்க வைத்த விரலழகன்-எம்மை
சிலிர்க்க வைத்த குரலழகன்
வெட்க வைத்த நடையழகன்-தம்மை
விரும்ப வைத்த உடையழகன்
கற்க வைத்த வள்ளுவனை-தெற்கில்
நிற்க வைத்த சிலையழகன்

அம்புலி போல் முகஅழகன்-அறிவு
ஆழியைப் போல் முழுஅழகன்
செம்புலி போல் நிறஅழகன்-எதிலும்
ஜெயித்து நின்ற நெறியழகன்
பைம் பொழில் போல் நாவழகன்-பெரும்
படைகள் கொண்ட மூவழகன்
செம்மொழியாய் நம்மொழிக்கு-பெரும்
சிகரம் தந்த பேரழகன்

திரைமொழியில் தனி அழகன்-அதன்
தித்திப்பில் கனி அழகன்
சிறையறையில் படைப்பழகன்-அங்கும்
சிந்தனையின் பதிப்பழகன்
உரை வென்ற படிப்பழகன்-என்றும்
ஓய்வறியா துடிப்பழகன்
கதை முடியா தொடரழகன்-எங்கள்
கலைஞர் என்னும் சுடரழகன்

வார்த்தைகளில் கரும்பழகன்-சபை
வாதங் களில் குறும்பழகன்
கூர்த்த மதி விரிவழகன்-தமிழ்க்
கூடி நின்ற அறிவழகன்
ஆர்த்த சபை மொழியழகன்-நினைவை
அடுக்கு வதில் தனியழகன்
பார்த்த வரில் அவனழகன்-அவரைப்
பார்த்த பின்பு எவனழகன். ■



AMITABH BACHCHAN

**May 10, 2024**

Respected Hon. Shri Udhayanidhi Stalin ji

On the occasion of the centenary celebrations of the late Muthamizh Arignar Kalaignarji this year, I extend my good wishes.

Sincerely,

Amitabh Bachchan

**AMITABH BACHCHAN**

Shri Udhayanidhi Stalin
Hon'ble Minister for Youth Welfare
and Sports Development
Secretariat
Chennai 600 009

AMB:pd:jalsa

Pratiksha Juhu Mumbai 400 049

# கலைஞரின்
## திரையுலக நினைவலைகள்

வெளியிடுபவர்:
**மரு. இரா. வைத்திநாதன்,** இ.ஆ.ப.,
இயக்குநர்,
செய்தி மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு இணைச் செயலாளர்,
தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009.

**தமிழரசு**
செய்தி மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு




## கலை உலகத் தொடர்பு

"நான், இன்று நேற்றல்ல, 1950 ஆம் ஆண்டிலிருந்தே கலை உலகத்திலே தொடர்பு கொண்டவன். என்றைக்கு அந்தத் தொடர்பு நின்றது என்று யாரும் கணக்கிட முடியாது. காரணம், தொடர்ந்து கொண்டே இருக்கின்ற தொடர்பு, அதனால்தான் இந்தத் தொடர்பு ஆட்சிப் பொறுப்புக்கு வந்தாலும் வராவிட்டாலும் ஆட்சிச் சக்கரத்தை சுழற்றுகின்ற வாய்ப்பு ஏற்பட்டாலும், ஏற்படாவிட்டாலும் அந்த வாய்ப்பை தமிழ்நாட்டு மக்கள் எனக்குத் தந்த காலத்திலும் சரி, தராத காலத்திலும், சரி, அந்த நேரங்களில் நான் என்னுடைய கடமை - ஒரு பொறுப்பு கையிலே கொடுக்கப்பட்டாலும், கொடுக்கப்படாவிட்டாலும் தமிழ்நாட்டு மக்களுக்குப் பணியாற்ற வேண்டும் என்கின்ற பொறுப்பு எனக்குத் தரப்பட்ட ஒன்று என்ற அந்த உணர்வோடு பணியாற்றிக் கொண்டிருக்கிறேன்."

-முத்தமிழறிஞர் கலைஞர்